# ரத்நப்ரபை

# ரத்நப்பிரபை.

இது

கதாஸரித்ஸாகரம் ஸம்ஸ்கிருத முதலான நூல்களிலிருந்து


Mr. N. SRINIVASACHARIAR, B.A., L.T..

*Translator of Tulasi Ramayana*


அவர்களால் எழுதப்பட்டது.


சென்னை திருவல்லிக்கேணி

மத்வ விலாஸ புஸ்தகாலயாதிபதி

பண்டிட் டி. ஆர் கிருஷ்ணசாரியாரால்

பிரசுரிக்கப்பட்டது.

PUBLISHED BY

**Pandit T. R. KRISHNAC... YA,**

PROPRIETOR, MADHVA VILASA BOOK

TRIPLICANE, MADRA





1917




I
ılary
found
er p, Prakritik
In the conversations
le to the personages
original form of
The Buddhist
pleased
labours.

In my researches, I came across these long Indian tales. As I liked them so well I was tempted to give them a shape in the vernacular of the land. The old adage is that if one has any thing sweet it is enjoyed best only in participation with others. It was this adage that led me on to this attempt. I am conscious of my want of resources in Tamil.

I am thankful to Pandit T. R. Krishnacharyar for all the help he rendered to me not only in the preparation of this little book but also in bringing it out. His love of Ancient Indian literature is so well known to the public and of late he has made a new departure in trying to educate the young of this land by publishing translations of ancient classical works. In selecting these tales I have been helped by him in many ways.

In an attempt of this kind, in a short space, drawbacks, of course, there must be. I am conscious of the same, but I have full faith in the public appreciation of the glories of our ancient land.

SOUTH-MADA STREET,
TRIPLICANE,
*February* [1]917.

N. SRINIVASACHARI.

# விஷய அட்டவணை.

# ரத்நப்பிரபை.

இவ்வுலகில் மனிதர்களில் புகழ் ஓங்கி விளங்குபவர் சிலரே. அவர்களிலும் மெய்யன்பினலும் காதலினலும் பிரஸித்தி பெற்றவர் மிகச்சிறுபான்மையோரே. இவரது பெருந்தன்மையைக் கவிகள் பல்வேறு விதங்களாகப் பாடிப் போற்றியிருக்கின்றனர். 'நமது பாரதவர்ஷத்தில் அவ்விதப் புகழ்பெற்ற பெருமான்களில் வத்ஸராஜன் ஒருத்தன்: அவனது உயிர்க்காதலியான வாஸவதத்தை ஒருத்தி. இவ்விருவர்களின் காதலை முதலிற் புகழ் பரக்கப் போற்றிச் சொன்னவர் குணட்டியன் என்னும் மஹான். இக்கதையின் இனிமையை இத்தேசத்தில் ஆண் பெண் அனைவரும் கண்டு உணர்ந்தமையால், அது தேசமெங்கும் பரவியது. இதன் பெருமை வடதேசத்தில் மட்டுமன்றித் தென்னாட்டிலும் முற்காலத்தேயே பரவியிருந்ததென்பதற்கு, திருமங்கைமன்னன் சிறிய திருமடலில், வாஸவதத்தை சரித்திரத்தை எடுத்தாளுதலே சிறந்த சான்றாகும். மஹாகவி காளிதாஸன் தனது மேகஸந்தேசத்தில் தனது தூதுவனான மேகத்திற்கு, 'வத்ஸராஜனும் வாஸவதத்தையுங்கூடி இனிதிருந்தது இந்த ஹைமந்தாள வநத்தில்,' என்று ஓர் இடத்தைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறான். இம்மஹானுடைய பின்

ணர் இந்தக் கதையை ஸோமதேவபட்டன் தமது கதா ஸரித்ஸாகரத்தில் தெளிவுர விரித்துரைத்து இருக்கின்றனர். இது குணாட்டியன் கூறிய கதையேதான். ஆனால், இதில் காலத்தினாற் சிறிது மாறுபாடுகள் ஏற்பட்டிருக்கலாம்.

இங்ஙனம் புகழ்பெற்ற பெற்றோர்க்கு இசைந்த புதல்வன் நரவாஹநதத்தன் என்பவன். இவன் வலிமையும் வீரமும் ஓங்கி வளர வித்யாதர சக்கரவர்த்தியானான். இவன் முதலில் மதனகஞ்சுகை என்னும் மாதுசிரோமணியை மணம்புரிந்தான். பிறகு, இம்மஹான் ரத்நப்பிரபை என்னும் வித்தியாதர ராஜன் செல்வப்பெண்மணியை மணம்புரிந்ததையும், தானும் தன் காதலியுமாக நிகழ்த்திய ஸம்பாஷணைகளையும் கதைகளையும் அடியிற் சொல்லியிருக்கிறது.

---

அந்த வத்ஸராஜனுக்குப் புதல்வன் நரவாஹனதத்தன் என்பவன். அவன் தன் வாலிபப் பருவத்திலேயே தனக்கு மிக்க விருப்பமுள்ள செல்வக் காதலியும் உயிர்க்குயிருமான மதனகஞ்சுகை என்னும் பெண்மணியை மணம்புரிந்து தானும் கோமுகன் முதலான தன்னமைச்சருமாகக் கௌசாம்பி நகரத்தி[illegible]ய தன்னுள்ளத்தின் இஷ்டத்தையெல்லாம் பெற்று இனிது அமர்ந்தனன்.

ஒருகால் அவன் வஸந்தோத்ஸவத்தைக் கண்குளிரக் காணக்கருதித் தன் நந்தவனத்துக்குச் சென்றான். அங்கு இனிய வசந்தத்தின் அழகைக் கண்டு மதித்த[illegible]ல்கள் கும்மாளத்துடன் கூவின. கொடி

தண்டனிட்டனள். இளவரசனும் தன் கண்களை அவள் உருவத்திற்கே பதித்து, அவள் அருகிற் சென்முன். பின்னர், அனைவரும் அங்கு இனிதாக விருக்கவும், அமைச்சனுன கோமுகன் அம்மாதரசை நோக்கி, 'பெண்ணே! நீயார்? இவ்விடம் வந்தது ஏன்?' என்று வினவினுன். மந்திரியின் மாற்றத்தைக்கேட்டு, காதல் மிகக் கொண்ட அம்மாது, நரவாஹனதத்தனது செந்தாமரை முகத்தை அன்பே பொழியும் தன் கடைக்கண்ணுல் நோக்கி, தன் வரலாற்றை விவரித்து உரைத்தனள்.

மூவுலகிலும் புகழ்பரந்த மலையரசு இமவானென்று ஒன்று உண்டு. அதற்கு எத்துணையோ முடிகள்: அவற்றுள் ஒன்று தான், கௌரீநாதனுன ஈசன் இருக்கும் கைலையும் ஒளிவீசும் நவமணிகளால்விளங்கும் ஒரு வெள்ளையான உறைபணியால் ஒளிமிகுந்த அம்மலையின் பரப்பு நீள்வெளியான விசும்பின் பரப்பே போல அளத்தற்கரியது. அம்மாமலையின் தாழ்வரைகளோ, ஈசனருளால் அடைதற்குரிய சித்திகளுக்கும் ஒஷதிகளுக்கும் இருப்பிடமாகும். இயற்கையாக அழகுமிகுந்த வித்தியாதரர் திரள்திரளாகக் கூடும் முடியையுடைய இப்பர்வதம் அமரரது அருமலையையும் தேசழிக்கும். அதன்மீது காஞ்சனசிருங்கம் என்று புகழ்பரந்த பொன்மயமான நகர் ஒன்று உள்ளது. ஒளிமிகுந்த அம்மாநகர் பேரொளி படைத்த சூரியனைப்போல விளங்குகின்றது. அநேக யோஜனைப் பரப்புள்ள அந்நகரில் ஹேமப்பிரபன் என்ற ஒரு வித்யாதர ராஜா உண்டு. அவர் உமாபதியின் நல்லடியார். அவருக்கு மனை

வியர் அநேகருளர். அவர்களுள் சிறந்தவள், அரசருக்கு ஓரினிய காதலியான, அலங்காரப்பிரபை என்பவள். சந்திரனுக்கு ரோகிணியிடத்தில் உள்ள அன்பெல்லாம் இம்மாதரசியின்மீது அரசர்க்குள்ளது. ஒவ்வொரு நாளும் அவ்வரசரும் அவர் காதலியும் அதிகாலையில் எழுந்து மஞ்சனமாடி உமையையும் அவள் சுனை மஹாதேவரையும் பூசனை செய்து, பின்னர் இம்மண்ணுலகை நாடோறும் நாடிப் பேதைப் பார்ப்பனர்க்கு ரத்னங் கலந்த சுவர்ணலக்ஷ மளித்தனர். பிறகு தம்மிலத்திற்கேகி, அறநெறியின் முறை தவறாது அரசின் கடமையைச்செய்து, முறைதவறாத முனியேபோல உண்டும் பருகியும் காலங்கழித்தனர். இவ்வாறு காலஞ் செல்லுகையில், அவ்வரசர் ஒருகால் தமக்கு மகவின்மையைப் பற்றிச் சிந்திக்கலாயினர். இங்ஙனம் மகவின்றி வருந்திய அவரைக்கண்டு, அரசியான அலங்காரப்பிரபை, 'உன் துயரத்திற்குக் காரணமென்ன?' என்று வினவினள். அதுகேட்ட அரசர், 'எனக்கு மற்றைய பேறெல்லாம் உண்டேயாயினும், மக்கட்பேறு ஒன்றில்லையே என்ற அருந்துயரமே என்னை வருத்துகின்றது. நான் முன்னொருகால் மகவின்றி வருந்திய ஸத்துவவான் என்பவரது கதையைக் கேட்டேன். இப்பொழுது அது நினைவிற்கு வரவும் எனக்குப் பெருஞ்சிந்தை உண்டாயிற்று.' என்றனர். 'அக்கதை எவ்விதமானது?' என்று அரசி வினவவே, அதனைச் சுருக்கி அடியில் வருமாறு உரைத்தனர் அரசர்.

---

## ஸத்வசீலன் கதை.

சித்திரகூடமென்னும் மாநகரில், அந்தணர்க்கு அறஞ்செய்யும் பிராமமணவரனென்று பெயர் பூண்ட மன்னவன் ஒருவன் இருந்தான். ஜயங்கொண்ட ஸத்வசீலன் என்பவன் அவனது போர்வீரன். அப்போர்வீரனுக்கு ஒவ்வொரு மாதமும் அவ்வரசன் நூறு பொன் சம்பளம் அளித்து வந்தான். அவ்வீரனுக்கு மக்கள் இல்லை. ஆகையால், மக்களால் உண்டாகும் சந்தோஷத்தை அடையாது, அவ்வீரன் கொடைகள் அளித்தே மனத்திலோர் இன்பமடைந்தான். அதனால், பெருவள்ளலான அவ்வீரனுக்கு அரசன் அளிக்கும் நூறுபொன்னும் போதவேயில்லை. 'அந்தோ! இன்பமடைவோம் என்றால், ஈசன் எனக்கு மக்களை அளிக்கவில்லையே! மக்கள் இல்லாவிடினும், இரந்தவர்க்கு இட எனக்கோர் ஆசையும் தந்தானே! அவ்வாசையைத் தீர்த்திடப் பொருளும் அளித்திலனே! பட்டமரமாகவேனும் நான் பிறக்கவில்லையே! கனத்த கல்லாகவேனும் நான் பிறந்திலனே! இப்புவியில் தானமளிப்போமென்றால் தனமின்றாய்ப் பிறந்து பயன் என்ன?' இவ்விதம் நினைந்து ஏங்கி, ஒருநாள் பூங்காவனத்தில் அலைந்தான் ஸத்வசீலன். இவ்வாறு நெஞ்சம் நொந்து திரியும் அவன், ஈசனருளால், ஒரு புதையலைக் கண்டான். உடனே தனது பணியாளரைக் கூவியழைத்து, தானும் அவருமாகப் பொன்னும் விலையில்லா நவமணிகளும் நிறைந்த அப்புதையலை எடுத்துக்கொண்டு அகத்துக்கு ஏகினன். நெறி தவறாத வள்ளலான அவ்வீரன் அப்பொருளைத்

தானும் அனுபவித்து, தன்பந்துக்களுக்கும் அந்தணர்க்கும் அளித்து, தனக்கு ஆட்பட்டவர்களையும் நன்கு ஆதரித்து, இவ்விதம் இன்பம் மிக எய்தினன்.

இதையெல்லாம் கண்டறிந்த அவன் பங்காளிகள், அரசனிடம் சென்று, ஸத்வசீலன்மீது தம்மனத்திற்கு இசைந்தவாறு கோள்கள் கூறினர். அரசனும் அவனை வரவழைத்தனன். ஸத்வசீலன், அரசனுணையைச் சிரமேற்கொண்டு அரண்மனையையணுகி, அங்குள்ள வாயிற்காவலனது சொல்லுக்கிசைந்து, தோரணவாயிலிற் சற்றுநேரம் நின்றனன். நிற்குங்கால், செயலொன்றுந் தோன்றாது, தன் கையிலிருக்கும் வச்சிரமுஷ்டி என்னும் ஆயுதத்தால் பூமியைத் தோண்டினன். தோண்டியபோதே தோன்றியது அங்கோர் தாம்பிரக்குடம். அக்குடத்திலுள்ள பெரும்புதையலையும் அடைந்தனன். அவ்வரும் பொருளையடையவே, 'எனது நற்செயல்களால் சந்தோஷமடைந்தான் ஈசன். ஆகவே, இப்பொருளை அரசர்க்களித்து அவர்மனதைக் குளிரச்செய்வதற்காகவே எனக்கருளினவன் அவனே.' என்று மனமார எண்ணி, அதனை மண்ணிட்டு மூடினன். பிறகு துவாரபாலகன் கூவவே, அரசனருகிற் சென்றான். அரசனும் அவனை நோக்கி, 'உனக்குப் புதையலகப்பட்டதாக நாம் கேள்வியுற்றோம்; அதனை நமக்குத்தந்திடுக.' என்றியம்பினன். அரசன் கூறிய மொழி கேட்டு, ஸத்வசீலன் தலைவணங்கி, 'அரசர்க்கும் அரசே! அடியேன் தந்திடுவது முதலிற் கிடைத்த புதையலையா? இல்லையேல், இன்றைக்கு அடியேன் அடைந்ததையா?' என்று விண்ணப்பஞ்

செய்தனன். 'இன்றைக்கு நீ அடைந்ததையே நமக்கு இட்டிடுக.' என்று அரசன் கூறவே, அவன் அரண்மனை வாயிலிற்சென்று அங்கு ஒரு மூலையிலிருந்த அப்புதையலை அரசர்க்கு கொடுத்தனன். அந்நிதியை நோக்கிய மன்னவனும் மனமகிழ்ந்து, 'முன் உனக்குண்டான நிதியை நீயே ஆண்டனுபவிக்க.' என்று ஆணையிட்டு, அவனை விட்டிற்கு விடுத்தான். ... தன் நன்னெறியாலும் நன்னடக்கையாலும் பெரியோர் தனக்கிட்ட ஸத்வசீலன் என்ற பெயரைப் பொருளுள்ளதாக்கி, இம்மையில் இன்பங்களையெய்திப்பலவிதமாக முயன்று மகவின்மையை மறந்து இனிதாக விருந்தனன் அவ்வீரன். இதுதான் நான் முன்பு கேட்டகதை. நான் இதை நினைந்துதான் எனக்கு மக்களில்லையென்ற சிந்தையால் விசனமுற்றேன்." என்றான்.

இவ்வாறுரைத்த வித்யாதரராஜனை நோக்கி அலங்காரப்பிரபை, 'ஆமாம், நல்லொழுக்கமுள்ளோர்க்குக் கடவுள் நாளும் உதவிசெய்வார்: ஸத்வசீலனுக்கு இக்கட்டு வந்தபொழுது, இரண்டாவது நிதி அகப்படவில்லையா? அதுபோலவே உமது நல்லொழுக்கத்தின் பயன் உம்மைக் கைவிடாதுகாத்து வேண்டியவற்றையெல்லாம் அளிக்கும். இதற்கு ஓர் உதாரணமாக விக்கிரமதுங்கனது கதையைச் சொல்லுகிறேன்; கேட்க வேணும்' என்றனள்.

## விக்கிரமதுங்கன் கதை.

கடல் சூழ்ந்த இம்மண்ணுலகுக்கு அணியான நகர் ஒன்று, பாடலிபுத்திரமென்று புகழ்பெற்றிருந்தது. அந்நகர் இயற்கையில் ஒளி நிரம்பிய நன்மணிகளால் நாளும் ஒளியோங்கி விளங்கியது. ஒரு காலத்தில் விக்கிரமதுங்கன் என்பவன் அந்நகர்க்கு அரசனாக இருந்தான். அவன், 'இடுமின்' என்று இறைஞ்சுவோரைக் கண்டாற் புறங்காட்டுவானேயல்லாது, பகைவரைக் கண்டாற் புறங்காட்டுவதேயில்லை. அவ்வரசன் வேட்டையாடுவதற்காகக் கானகத்திற்குச் சென்றான். அங்கே வில்வப்பழங்களை ஹோமம் செய்துகொண்டிருந்த அந்தணன் ஒருவனைக் கண்டான். அவனைக் கண்டு செய்திகளைக் கேட்கவேணும் என்று மிகவிருப்பமுள்ளவனாயிருந்தாலும், வேட்டையின் வேட்கையால் அவன் இருந்த இடத்தை விட்டகன்று அரசன் அவன் ஆட்களோடு வெகுதூரம் சென்றான். அவ்விதம் அடர்ந்த காட்டினுள் புகுந்து, அவ்வரசன், துள்ளியோடும் மான்களையும், பதுங்கி ஒளியும் சிங்கங்களையும் சிறுமியர் கந்துகமாடுவதுபோல எளிதிற் குத்திக்குமைத்து வீழ்த்தினான்.

பின்னர் வேட்டையினின்று மீண்டு வந்ததும் அந்தணன் அவ்விடத்தில் அவ்விதமாகவே ஹோமம் வளர்ப்பதைக் கண்டு, அவரை அணுகி நமஸ்கரித்து, 'உம்முடைய பெயர் என்ன? இந்த ஹோமத்தின் பயன் என்ன?' என்று வினவினான். அந்தணன் அரசனை வாழ்த்தி, 'என் பெயர் நாகசருமன்.

இந்த ஹோமத்தினால் அக்கினி தேவன் சந்தோஷ மடைந்தால், இந்நெருப்பில் பொன் வில்வங்கள் உண்டாகும். பிறகு, அக்கினிதேவனே, உதித்தெ ழுந்து, வேண்டிய வரம் அளிப்பார். நான் நீடித்த நாளாய் இந்த ஹோமம் செய்கிறேன். நான் மிகப் பாக்கியவீனன். ஆனதுபற்றியே, அத்தேவன் மனம் குளிர்ந்து எனக்கு வரமளிப்பதில்லை.' என்ற னன். அதுகேட்டுத் தீரனான அவ்வரசன், 'அப் படியானால், என்கையில் ஒரு வில்வத்தைக் கொடுங் கள். இதோ நான் அக்கினியில் இடுகிறேன்; அத் தேவனைத் திருப்தியடையச் செய்கிறேன்.' என்று இயம்பினான். 'ஓயி! நான் எவ்வளவோ விரதங்கள் பூண்டும் தூய்மையடைந்தும் அக்கினியைத் திருப்தி செய்ய முடியவில்லையே! உமக்குத் தூய்மையாது மில்லையே! நீர் அங்ஙனம் செய்வது எப்படி? என்ன?' இவ்விதம் பிராமணன் சொல்ல, 'ஒன்றும் தடைசொல்ல வேண்டாம். வில்வத்தைக் கொடும். இதோ! பாரும், விந்தையை!' என்று மொழிந்த னன் அரசன்.

உடனே அரசனுக்கு வில்வத்தை அந்தணன் அளித்தான். அரசன் அதைக் கைக்கொண்டு,'இந்த வில்வத்தை இட்டவளவிலே திருப்தியடைந்து அக் கினிதேவன் புலப்படாமல் இருந்தால், என் கையி னாலேயே எனது தலையை வெட்டி இவ்வழலிலேயே போட்டிடுவேன்.' என்று உறுதி செய்து கொண்டு, ஹோமம் செய்யத் தொடங்கினான். முதன்முதல் வில் வத்தை இட்டவுடனே, பொன் வில்வப்பழங்களைக் கையில் ஏந்திக் குண்டத்தினின்று அக்கினிதேவன்

குதித்தெழுந்தனன். எழுந்து மலரவிழித்து அரசனை நோக்கி, 'அரசே! நும் வீரத்தையும் உறுதியையும் கண்டுமகிழ்ந்து மிக மெச்சினேன்: உமக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக் கொள்க.' என்று இயம்பினன். அந்தத் தேவன் சொன்னதைக்கேட்ட அரசன் தலை வணங்கி, 'எனக்கு வேண்டிய வரம் ஒன்றுமில்லை. இவ்வந்தணர்க்கு வேண்டியதைக்கொடுத்தருளவேணும்.' என்றான். அரசனது மொழியைக் கேட்டு, அக்கினிதேவன் பெருமகிழ்ச்சியடைந்து, 'இவ்வந்தணன் பெருஞ்செல்வமுடையோன் ஆவன்: நீயும் குறையாத கோசத்தை அடைந்து,பெருவாழ்வு பெற்று வாழ்வாயாக.' என்றுவாழ்த்தி வரம்அளித்தனன்.

இதை எல்லாம் நேரில்நோக்கிய பார்ப்பான் அக்கினியை வணங்கிக், 'கடவுளே! கண்டபடியெல்லாம் ஒழுகும் இவ்வரசன் ஹோமம் செய்தவாறே ஓங்கி எழுந்தது என்? நித்தியமும் நியமத்தையே நாடிய நான் செய்ய எழாதிருந்தது என்?' என்று விண்ணப்பம் செய்தான். வரமளிக்கும் வள்ளலான அக்னியும் சட்டென மறுமொழி கூறினன். 'நான் சட்டென எழுந்து தரிசனம் தராவிடில், இத்திறலுடைய தீரன் தன் தலையையே துண்டித்து ஹோமம் செய்திருப்பான். உறுதியும் திறலும் பூண்டு தடையின்றித் தைரியமாகச் செய்வோர்க்குச் சித்திகள் எல்லாம் விரைவில் உண்டாகு மன்றோ? வேதியனே! உன்னைப்போலத் தாமதமானவர்க்கோ பலன்கள் தாமதமாகக் கிட்டுகின்றன.' என்று இவ்வாறு இயம்பி, அக்கடவுள் கண்ணுக்குப் புலப்ப

டாது மறைந்தனன். உடனே நாகசருமன் என்னும் அப்பார்ப்பனச்சிட்டரும் அரசனிடத்தில் விடை பெற்று, வீட்டிற்குச் சென்று, அரும்பெருஞ் செல்வத்தை அடைந்து, சுகமாக வாழ்ந்தனர். அரசனது தைரியத்தை அவனது ஆட்கள் எல்லோரும் மெச்சினர். பின்னர் இறைவனும் அவன் பெரும் படையும் பாடலிபுத்திரத்தைச் சார்ந்தனர்.

---

## தத்தசர்மன் கதை.

தனது நகரில் விக்கிரமதுங்கன் அமர்ந்திருக்குங் கால் ஒரு சமயத்தில், அவனது பரிசாரகன் ஒருவன், சத்துருஞ்ஜயன் என்பவன், 'பிரபுவே! வேதியச்சிறுவன் ஒருவன் வாயிலில் நிற்கின்றான், அவன் தன்பெயர் தத்தசர்மன் என்கிறான்.' என்றான். 'அவனை அழைத்துவா.' என்று அரசன் ஆணையிடவே, அச்சிறுவனை அழைத்துவந்தனன் பிரதிஹாரி. ஆதரத்துடன் அரசனை வாழ்த்தி வணங்கி ஆசனத்தில் அமர்ந்தனன் அச்சிறுவன். தானும் அரசனும் தனித்திருப்பதுகண்டு, 'இறைவனே! என்னாசிரியரருளால் அரியதோர் சூர்ணமொன்று கண்டறிந்தேன். அதனைத் தாம்பிரத்தில் இட்டவாறே தாம்பிரம் தங்கமாகும். இவ்விதமாக தாம்பிரம்தங்கமாவதைப் பலதடவைகளில் நான் கண்களாரப் பார்த்துமிருக்கிறேன்.' என்று சொன்னான் சிறுவன். அவன் செப்புவதைக்கேட்டுக் கோமகனும்தாம்பிரத் தாலம் ஒன்றைக் கொணர்வித்தான். அதைத் தன் கையிலெடுத்து அதன்மீது தன் சூர்ணத்தை இட்டனன் சிறுவன். சிறுவனிட்ட சூர்ணத்தைக் கண்

ணிற்கு மறைந்துநின்ற இயக்கன் ஒருவன் தாலத்திற் படாது எடுத்துச் சென்றான். அக்கினியின் அருள் பெற்ற அவ்வரசன் இயக்கன் இவ்வாறு செய்ததை கண்டறிந்தனன். சூரணம் தாலத்திற் படவில்லை யாதலால், தாலம் தங்கமாகாது தாம்பிரமாகவே இருந்தது. மும்முறை இவ்விதமாகவே, முதலில் வியப்படைந்த அச்சிறுவன், வியப்புநீங்கிப் பய முற்று, அயர்ந்தான்.

விசனமடைந்து ஏங்கியிருந்த சிறுவனிடமிருந்து மருந்தினை வாங்கி மன்னவன் அக்கலத்தின்மீதிட்ட னன். தேசுமிகுந்த அரசனிட்டதை இயக்கன், தடுக் காது நின்று நகைத்துத், தன் வழியே சென்றான். ஆகையால், அரசனிட்ட அம்மாமருந்து தாலத்தில் தடையின்றிப்படவே, தாலமும் தங்கமாயிற்று. இத் தகைய விந்தையை நோக்கிய சிறுவன் வியப்புடன் கேட்கவே, இயக்கனது செயலையெல்லாம் தான் கண்டவாறு இயம்பினன் வேந்தன். விக்ரமதுங்கன் வேதியச் சிறுவனிடமிருந்து அவ்வித்தையைக் கற்ற னன். அவ்வித்தையை விதிப்படி கற்பித்த அவ் வந்தணனுக்கு அரசன் கடிமணம் செய்வித்தான். காந்தையைக் கைக்கொண்டு வாழ்ந்தனன் அந் தணன். அரசனும், அந்தணனருளாற் குறை வொன்றுமில்லாத கோசத்தைப் பெற்று, வேதியர் க்கு வேண்டியவற்றையெல்லாம் அளித்து, இம்மை யில் இன்பங்கள் பலவெய்தி ஆநந்த மடைந்தனன்.

ஆகையால் தான், நான், 'உறுதியுடன் சட்டெ னச் செய்யும் இயற்கையுடையோர்க்கு—பயத்தி னாலோ சந்தோஷத்தினாலோ நம்மாற்சொல்ல இய

லாது—கடவுள் கருணைகூர்ந்து அவர் வேண்டிய வற்றையெல்லாம் கொடுப்பர்.' என்றே இயம்புவது. உங்களைக்காட்டிலும் திரன் உண்டோ! கொடையாளிதான் இன்னொருவன் உண்டோ? சம்புவைச் செவ்வனே அர்ச்சித்திடின் அவரருளால் அருமைப் புதல்வன் உண்டாவான் என்பதற்கு ஐயமேயில்லை. ஐயனே! விசனப்படவேண்டாம்.' என்றனள் அலங்காரப்ப்ரபை. தன் தேவியின் பெருமை தங்கிய இம்மாற்றத்தைக் கேட்டு, அரசனை ஹேமப்பிரபன் மனத்தில் ஓர் உறுதியும் களிப்புங் கொண்டான். தன் மனத்தில் உண்டான தெளிவையும் உத்ஸாஹத்தையும் கண்டு, இதுவே மங்கலமுண்டாவதற்கு அறிகுறி என்று கருதி, அரசனும் உமாகாந்தரது பேரருளால் நற்புதல்வன் உண்டாவான் என்றுறுதி கொண்டிருந்தான்.

---

## ரத்நப்பிரபையின் உற்பத்தி.

இவ்விதமிருக்க ஒருநாள், மன்னவன் தன் ஸ்த்ரீகளுடன் கூட மஞ்சனமாடி, மஹாதேவனை அர்ச்சித்து ஒன்பதுகோடிப் பொன்னை வேதியர்க்களித்தனன். பிறகு, அரசன், சங்கரனது சன்னிதியை அடைந்து ஆகாரத்தை அகற்றி, அருந்தவம் புரியவாரம்பித்தான். உண்ணாது கொடுந்தவ நிலையையடைந்த அரசன், 'உயிரை மாய்ப்பதோ, உமாபதியின் அருளைப் பெறுவதோ, இரண்டில் ஒன்றே நடக்கவேணும்.' என்று தீர்மானித்துக்கொண்டான். அரிய பெரியதவஞ்செய்து உமாபதியை அவன் இவ்விதம் துதித்தனன்.

"மெய்யன்பினுல் மலர்ந்த பார்வதியினுள்ளிருக்கும் மாயவனே! போற்றி. உலகத்தை ஆக்கி அளித்து அழிக்கும் ஆதிகாரணனே! போற்றி. கௌரீசனே! வான் வெளி ஒளி முதலான அஷ்டமூர்த்தியாய் விளங்கும் ஐயனே! சுத்தமான மானஸத்தில் வாஸஞ் செய்யும் சம்புவே! போற்றி. நித்தியமாய் நிராமயமான சோதியே! போற்றி. நீருருவான நின்மலனே! போற்றி. மாசற்ற மெய்ஞ்ஞானக் கண்ணிற்கே விளங்கும் வெண்மதியே! போற்றி. அற்புதனே! போற்றி. மங்கைபாகனே! போற்றி. பிரமசாரியே! பவனே! போற்றி. இச்சையால் அண்டமெல்லாம் படைக்கும் பாலகனே! சைவவுருவான விமலனே! போற்றி." என்று இவ்வாறு அன்புடன் துதிக்கும் அரசனைக்கண்டு மனம் இரங்கி, உமாபதி, மூன்று நாளாய் உண்ணுதயர்ந்து உறங்கும் அவனது கனவில் தோன்றி, 'அரசே! எழுந்திடுக. உன் ஸந்ததிக்கோர் ஆதாரமான வீரன் உனக்குப்புதல்வன் ஆவான். உமையின் அருளால் உத்தமமான கன்னிகையும் உண்டாவாள். அவள், இனி உங்களுக்கு இறைவனுகப் போகிற, வலிமிகு வீரனுன, நரவாஹனதத்தனுக்குப் பட்டமஹிஷியாவாள்.' என்று மொழிந்து, மறைந்தனர்.

பின்னர், இரவொழிந்து காலையும் வரவே, களிகொண்டு எழுந்தான் ஹேமப்பிரபன். தான்கண்ட கனவையெல்லாம் சொல்லித் தன் மனையாள் அலங்காரப்பிரபாதேவியை அவன் ஆநந்தமுறச்செய்தான். தேவியும் கணவனுக்குத் தன்கனவில் அம்பிகை தோன்றியவாறும் தனக்கு வரம் கிடைத்தவாறும்

இயம்பி, அவளை இன்புறுவித்தனள். பிறகு, அரசன் காலைக்கடன்களை முடித்துப் பெருஞ்சடையுடைய பெருமானைப் போற்றிப் பூசித்துப் பார்ப்பனர்க்குப் பற்பல பரிசுகளும் அளித்துப் பாரணையும் பண்ணினன். அன்று அரசனரண்மனையில் ஓர் விழாவாகவே இருந்தது. நாட்கள் பல கழிந்திடவே, கருக்கொண்டனள் பட்டமஹிஷியான அலங்காரப் பிரபாதேவி. மலர்ந்து மதுவின் மணங்கமழும் வெண்டாமரை மலர்போலிருந்தது தேவியின் முகம். அக்கமலத்தின் நடுவே மதுநுகரும் வண்டிணைபோல விருந்தது அவளது சஞ்சலமான கண்ணிணை. அத்தேஜுறும் திருமுகத்தைக் கண்டு மகிழ்ந்தனன் மன்னவன். கருக்கொண்ட காலமெல்லாம் தேவிக்கு உண்டான உதாரமான தோஹதத்தினலேயே பிறக்கும் புதல்வன் பெரியோனுவான் என்றே தோன்றியது. நல்லதோர் தருணம் வரவும், அவளுக்கு ஓருரும் புதல்வன், குண திசையில் சூரியன் தோன்றியதுபோல், தோன்றினன்.

புதல்வன் பிறந்தவாறே, அவனது இயற்கையொளியால் ஸூதிகாகிருஹமெல்லாம் ஸிந்தூரம் போற் செவ்விய வொளிதங்கியதாயிற்று. அரசனும் பகைவர்க்கெல்லாம் பயம் உண்டுபண்ணும் புதல்வனைப் புண்ணியமான பெயரிட்டு அழைக்கக்கருதி, வச்சிரப்பிரபன் என்று அவனுக்கு நாமகரணஞ் செய்தனன். அப்பாலகன், சுக்கிலபக்ஷத்து வெண்மதி போல, நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகப் பெருகினன். வெண்மதி பெருகுவதெல்லாம் கடல் ஓங்கிப் பொங்குவதற்கே; அவ்வாறே,

அக்கோமகன் திறலோங்கிவளர்வதெல்லாம் வம்சத்தின் வாழ்விற்கே.

பிறகு, சிறிதுகாலத்திற்கெல்லாம் அலங்காரப்பிரபாதேவி மறுபடியும் கருக்கொண்டாள். கருயிராய்த் தளர்வெய்திப் பிறரையேபற்றித் தள்ளாடி நடந்து, சீரிய சுவர்ணாசனத்தில் வீற்றிருக்கும் தேவி அந்தப்புரத்திற்கு ஓர் திலதமாகவே விளங்கினள். தோஹதம் மிகுந்து, தான் கற்றவித்தையாற் பெற்ற பத்மவிமானத்தின்மீது ஏறி விசும்பில் அலைந்து திரிந்தனள். நல்லதோர் நாழிகை வந்ததும் தேவி அழகிய சுந்தரியை ஈன்றனள். அப்பெண் கௌரியின் அருளாற் பிறந்தனள் என்றாற் போதாதோ? அவளது அழகை எடுத்துரைக்கவும் வேணுமோ? அம்மங்கை உதிக்கவே, 'இப்பெண் அரனது ஆரருளால் நரவாஹனதத்தனது மஹிஷியே யாவாள் என்று ஓர் ஆகாசவாணி எழும்பியது. தனக்குப் புத்திரோத்ஸவமானபோது உண்டான திருவிழாவெல்லாம் கொண்டாடினன் கோமான். தன் பெயர் ஹேமப்பிரபனாதால், அதற்கிசைந்தவாறு தன் புதல்விக்கு ரத்நப்பிரபை என்று பெயரும் இட்டான். அப்பாவை பாலபருவத்திலேயே நல்ல வித்தைகள் எல்லாம் கற்று, உலகத்தில் மிகப் பிரசித்தியுடையவளாயினள். பின்னர், அரசன், தன் புதல்வனை வச்சிரப்பிரபன் வீரனுக்குரிய வித்தை எல்லாம்பயின்று தேர்ந்தனன் என்று உணர்ந்து, அவனுக்குக் கடிமணஞ் செய்வித்து, அவனை இளவரசாக்கினன். அரசன், பாராளும் பாரமெல்லாம் புத்திரனுக்கே இட்டு, சிந்தை யெல்லாம் ஒழிந்து தேர்ந்தனன்.

2

ஆனால், தன் மங்கைக்கு மணம் செய்யவேண்டிய விசாரமொன்று அவன்மனத்தைத் துளைத்தது. பிறற்கென்றே பிறந்த தன் பெண்மணி அணிகளெல்லாம் பூண்டு தன்னருகில் இனிதமர்ந்திருக்க, அவளை நோக்கிச் சிந்தையுற்று, அருகில் நிற்கும் தன் மனையாளான அலங்காரப்பிரபாதேவியைப் பார்த்து அரசன் சொன்னான்:—'தேவி! பெண்குழந்தை என்றால் குடிக்கோர் குத்துவிளக்கேயாம். ஆனாலும், இது வென்ன? பார்! கன்னிகை என்றால் எல்லோர்க்கும் பெருந் துக்கமேதான். எத்துணைப் பெரியோனுக்கும் சரி, உலகம் மூன்றிலும் சரி, இத்துக்கம் தவறாது. ஆம் ஆம்; நமது ரத்நப்பிரபை நற்குணமும் நாணமும் தங்கிய நன்மகள்தான். சகல வித்தைகளுங்கற்ற கற்புடைய கன்னிகைதான். இவளுக்கிசைந்த வரன் அகப்படுவதில்லையே! இதுவேதான் என்னை மிக வருத்துகின்றது.' என்று அரசன் இவ்வண்ணம் வருந்தியதைக் கண்டு, அரசி, 'தேவர் எல்லோரும் இவளை, இனி நமக்கு ஓர் அரசாகும் நரவாஹனதத்தனுக்கே உரிய பெண் என்கின்றாரே? அவனுக்கே இவளை உய்த்திடலாகாதா?' என்றனள். அதுகேட்டு, அரசன், 'ஆம், ஆம்; அவன் காமனேதான் இப்புவனியில் அவதாரமெடுத்து வந்தவன். ஆனால் இன்னும் அவன் தேவர்க்குரிய வித்தைகளை எல்லாம் கற்கவில்லையே. நாம் வித்தியாதரர் அன்றோ? அவனும் வித்தியாதரன் ஆகவேண்டாமோ? அவன் மணவாளனாகக் கிடைத்தால், நமது பெண் பாக்கியசாலிதான். ஆனால், நம்வித்தையெல்லாம் கற்கட்டும் என்றே காத்திருக்கின்றேன்.' என்றான்.

தந்தையின் மொழிகள் அருகில் இருந்த மகளின் செவியிற் புகுந்தன. அச்சொற்கள் இயல்பிலே சிறியவையாயினும், அவளது செவியில் மூவுலகையும் மோஹிக்கச் செய்யும் மன்மதமஹாமந்திரமாகவே நுழைந்தன. மதிமயங்கிச் செயல் ஒன்றும் காணுமல், சித்திரத்தில் எழுதிய பெண்பிரதிமைபோலத் திகைத்து இருந்தனள் ரத்நப்பிரபை. ஆயினும், அவள் தன் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு எழுந்து, அன்னையையும் பிதாவையும் அடிபணிந்து, கன்னிமாடத்திற்கு ஏகினள். அங்குச் சென்று சேடியரைத் தம்தம் பணியைச் செய்மின் என்று இயம்பித்தனித்துத் தன் படுக்கையைச் சார்ந்து நித்திரை செய்ய எண்ணினுள். இரவு நீடித்தபோதிலும், உறக்கம் அவள் கண்ணை நாடவில்லை: இறுதியில், சிந்தையுற்று அயர்வினல் உறங்கினுள். அடர்ந்த நித்திரையில் கௌரி அவள் முன்னே தோன்றி "குழந்தாய்! இதோ விடியும் நாள் நல்லதோர் நாள். அன்றைக்கே நீ வத்ஸராஜனது புதல்வனைக் கண்ணுரக் காண்க: ஆகவே, நீ இங்கிருந்து புறப்பட்டு கௌசாம்பி நகர்க்குச் செல்வாயாக. பிறகு, உன் தந்தை உன்னையும் உன் மணுளனையும் இங்கு அழைத்து வந்து, என் கண்மணியே! கல்யாணி! கடிமணம் செய்விப்பான்.' என்றும் இனிது கூறினள். இவ்வாறு கனவு காணவே, அவ்விளம்பாவை, சட்டென வெழுந்து தன் தாயை நாடித்தான் கண்ட கனவெல்லாம் உரைத்தனள். அன்னையும் அன்பு சுரந்து, அவளை, 'அப்படியே செய், அம்மணி!' எனவே, அவளும் தன் வித்தையின் வலிமையால், கோம

கன் பூங்காவனத்தில் இருக்கின்றான்!" என்று அறிந்தாள்.

'இறைவனே! நான்தான் அந்த ரத்நப்பிரபை என்பவள் என்று தெரிந்துகொண்டருளவேணும்: இதோ நான் வந்தடைந்தேன். பின்னர், நிகழ்ந்ததெல்லாம் உமக்கே நன்குதெரியும்.' அமுதினும் இனிய அவள் மொழியைக் கேட்டும் வித்யாதரியான அவளது கண்ணுக்கினிய அமுதவுருவைக் கண்டும் நரவாஹனதத்தன், 'அந்தோ! இப்புலனைந்தும் படைத்தானே பிரமன்; இவ்வுடலெல்லாம் காதுங் கண்ணுமாகப் படைத்திலனே!' என்று படைக்கும் பிரமனைத் தன்னுள்ளே இகழ்ந்தனன். 'வனிதையே! நீயே யென்னை நாடி வரப்பெற்றேனே! எனது பாக்கியமே பாக்கியம்! இன்றே நான் இப்பிறப்பின் பயன் பெற்றேன்.' என்று ஆர்வத்துடன் கூறினன் கோமகன்.

இவ்விதமாகக் காதல்மிகுந்து ஸம்பாஷித்துக் கொண்டிருக்கையில், வித்யாதரப்படை யொன்று விசும்பில் விளங்கக் கண்டனர். 'இதோ வந்தனர் என் தந்தையும் தமையனும்: மற்றும் சுற்றமெல்லாம் வந்தனர்.' என்று ரத்நப்பிரபை சொல்லவே விண்ணிலிருந்து மண்ணி லிறங்கினர் ஹேமப்பிரபனும் அவன் புதல்வனும். அவர் நிலத்தில் நிற்கவே நரவாஹனதத்தனும் எழுந்து நின்று ஆதரத்துடன் நல்வரவு கூறினன். ஒருவர்க்கொருவர் ஆதரத்துடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், வித்யாதரராஜன் வந்தானெனக்கண்டு, வத்ஸராஜன் அங்கு விரைந்து வந்து அதிதிக்குரிய பூசனைகளை அளித்த பின்னர்,

ஹேமப்பிரபன், மேல் ரத்நப்பிரபை சொன்னவற்றை யெல்லாம் உரைத்தனன். 'ஐயா! என் வித்தையினால் என் பெண் இங்குவந்தனள் என்று கண்டு நானும் வந்தேன். வந்தபிறகு எனக்கு மற்றச் செய்திகளெல்லாம் தெரிந்தன. இவர்க்கு இனி சக்ரவர்த்திக்குரிய விமானம் நேரும்; இப்பொழுது எங்களுடன் விமானத்தில் வரவிடுக. சீக்கிரத்தில் உங்கள் இளவரசர் தன்மனைவி ரத்நப்பிரபையுடன் கூடத் திரும்பிவருவர். விடை தருக.' என்று வத்ஸ ராஜனை வேண்டி விடைபெற்று, ஹேமப்பிரபனும் அவன் பிள்ளையும் பெண்ணும் மருகனும் வித்யாதர விமானமேறிச் சென்றனர். நரவாஹனதத்தன் அச் சத்தினுற் தலைவணங்கி இருந்தனன்: அவனது மந்திரியான கோமுகன் முதலானவர்களும் அரசரனுமதி பெற்ற யௌகந்தராயணனும் அவனுடன் சென்றனர். கொஞ்சநேரத்திலேயே அனைவரும் காஞ்சனசிருங்கத்தைச் சேர்ந்தனர்.

---

## ரத்நப்பிரபையின் விவாகம்.

நரவாஹனதத்தன் தன் மாமனுக்குத் தலைநகரும் பொன்மயமானதுமான அப்பெரிய நகரத்தைக் கண்ணுற்றான். அதன் ஒளி எண்திசைகளிலும் பரவியிருந்தது. மருகன் வருகிறானே என்று கைகள் நீட்டி அழைப்பதுபோலிருந்தது, இவர்கட்கு எதிர்ப்பட்ட அந்நகரின் ஒளி. தனது படை விட்டிற்குச் சென்றதும் முறைப்படி, ஆழ்கடல், அரிக்கு இலக்ஷ்மியை அளித்ததுபோல, ரத்நப்பிரபையை

நரவாஹனதத்தனுக்கு அளித்தனன். பின்னும், ஒரிரு ரத்நராசிகளும் பொன்னும் பொருளுமாக வரிசைகளும் விடுத்து, ஊரெங்கும் பொன்மாரியே பொழிந்ததெனப் பரிசுகளும் அளித்தனன். இத்திருமணத் திருவிழாவில் அந்நகர் எல்லாம் இலங்கியாடும் தோரணங்களும் கொடிகளுமாகவே இருந்தமையால், அது அரசனிடத்தில் ஆடைகளையே பரிசாகப் பெற்றதோ என்னலாம்படி விளங்கியது. நரவாஹனதத்தனும் ரத்நப்பிரபையை மணம் புரிந்து மனம் மகிழ்ந்து, தானும் தன் காதலியுமாக அங்குள்ள இனிய சோலைகளிலும், வாவிகள் ஏரிகள் நதிகள் இவற்றின் கரைகளிலும், ஆலயங்களிலும் அலைந்து திரிந்து, அடங்காத ஆநந்தமடைந்தனன். இதுவுமன்றி, தன்காதலியான ரத்நப்பிரபைக்கு பிறப்பிலேயே ஸித்தமான வித்தையின் வலிமையாலுண்டான விமானத்தின்மீதேறி விசும்பில் எங்கும் திரிந்து விநோதங்களையெல்லாம்கண்டு வியப்படைந்தனன்.

இவ்விதமாக வித்தியாதரராஜனது நகரில் தானும் தன் காதலியுமாக வெகுநாட்கள் கழித்துப் பின்னர், யௌகந்தராயணனது சொல்லுக்கிணங்கித் தன் நாட்டிற்குத் திரும்பினன் வத்ஸராஜனது செல்வக்குமரன். மாமன், மருகன் மீண்டும் மண்ணுலக்குச் செல்லுகின்றான் எனக்கேட்டு, மங்கலங்கள் அநேகம் செய்வித்தான். பொன்னும் பொருளும் பட்டாடைகளும் கொண்டு மருகனையும் அவன் அமைச்சரையும் ஆர்வத்துடன் பூசித்துப் போற்றினன். போற்றியும் போதாதெனக்கருதிப் பிள்ளையுடன் தானும்

அவனுடன் பிரயாணமானான். தன் மகளும் அவள் மணாளனும் ஓர் விமானத்திலும், மருகனது பரிவாரம் எல்லாம் வேறு விமானத்திலுமேறிப் பின்படரத் தானும் தன் மகனும் மாட்சிமையுடன் தம் விமானம் ஏறி முன்சென்றான் ஹேமப்பிரபன்.

சிறிதுநேரத்தில் நீள்விசும்பெல்லாம் நிறைய, நினைவிற்கும் எட்டாத அழகுடன் தம் இளவரசனும் மணமகளும் கோலமாக வருவதைக்கண்டனர், கௌசாம்பி நகரத்தவர் எல்லோரும். ஆணும் பெண்ணும் சிறுவரும் சிறுமியரும் பேதையரும் பாலகரும் எல்லோரும் ஆர்வத்துடன் அண்ணாந்து மெய்ம்மறந்து நிற்கத் தன் அன்னை வாஸவதத்தையும் வத்ஸராஜனும் வியப்பினால் வாய்திறந்து ஆநந்தத்தினால் மெய்ம்மறந்து ஆகாயத்தையே நோக்கி நிற்க, வித்தியாதரர் வியப்புடன் களிகூர, நரவாஹனதத்தன் மண்ணில் இறங்கினான். தரையில் இறங்கித் தந்தையையும் தாயையும் தண்டனிட்டனர் மணமகளும் மகனும். மகனும் மருமகளும் தண்டனிடவே களிப்பு மிகுந்து, அரசனும் அரசியும் செயலொன்றுமறியாது தளர்ந்து நின்றனர். பின்னர், இங்ஙனம் உண்டான தம் ஸம்பந்தியைத் தம் பெருமைக்கும் அன்புக்கும் இசைந்தவாறு ஆதரித்துப்போற்றினர். வித்தியாதரராஜனும்அவன் பின்னவரும் பரிசும் வரிசைகளும் விடையும் பெற்று, விமானங்கள் ஏறிச் சென்றனர். பின்பு நரவாஹனதத்தனும் ரத்நப்பிரபையும், மதனமஞ்சுகையும் தோழிகளும் நண்பரும் சூழ்ந்திருக்க, சுகமாக இருந்தனர்.

---

பூலோகத்தில் யாரிடவர்க்குக் கிட்டாத பேறே தான் வித்தியாதரியைப் பெண்டிராகப் பெறுவது. இவ்வணங்கைத் தன் பணிசெய்யும் மனைவியாகப்பெற்ற நரவாஹனதத்தனது பாக்கியமே பாக்கியம். ரத்நப்ரபையும் தானுமாக தாமுகந்தவாறு உல்லாஸமாகப் பலபொழுதுகள் போக்கினர்.

அங்கொரு நாள் காலையில், இளவரசனும் அவன் மனையாளுமாகக் கோலமாக விருக்கையில் கோமுகன் முதலான மந்திரிகள் கோமகனைக் காண வாசலில் வந்தனர். 'ஐயனும் அம்மணியும் அகத்தே இருக்கின்றனர். நீர் போகலாகாது.' என்று வாசலைக்காத்து நின்ற பெண் ஒருத்தி அவரைத் தடுத்தனள். 'அப்படியானால், வந்திருப்பது இன்னவர் என்று உன் இறைவர்க்குத் தெரிவிக்க.' என்று அமைச்சர் அவளை ஏவினர். செய்தியைச் செவியேற்றவாறே, ரத்நப்பிரபை ஆதரத்துடன் அனைவரையும் வரவழைத்தனள். வரவழைத்ததுமன்றி, 'அம்மே! இவர் வரும்பொழுதா தடுப்பது, தடுக்கலாகாது. இனி எப்பொழுதும் இவர் தம்மிஷ்டப்படி வரவேண்டியதுதான். எம்மிறைவர்க்கு நண்பர் என்றால், இவர் அவர்க்கு உடலுக்கும் உடலாய் உயிர்க்கும் உயிரேதான்; வேறல்லர்; அம்மே!' என்று ஆர்வத்துடன் அறைந்தனள்.

பிரபுவே! இச்சமயத்தில் நான் சொல்வது ஒன்று உண்டு: அதனைச் செவிசாத்தி அருளவேணும். பெண்டிரைக் கட்டில் வைத்துக் காப்பது நீதியேதான்; வேறில்லை. அவர்மீது பொருமையினாலாவது மோஹத்தினாலாவது அவரைக்காவலில் வைப்பது

தகாது; அது அறிவின்மையேயாகும். நலமகளைக் காப்பது நல்லொழுக்கமே யன்றி வேறில்லை. வழியினின்று வழுவியமங்கையைப் படைத்த பிரமனுலும் பாதுகாக்கவியலுமோ! செருக்குடன் பெருகியோடும் பேராற்றையும் பாவையையும் தகைந்து தடுப்பதும் இயலுமோ? இந்த விஷயத்தை விளக்கும் கதை ஒன்று உண்டு; சொல்லுகிறேன்; கேட்க வேணும்.

---

## ரத்நாதிபதிகதை.

ஆர்கலியின் நடுவே ரத்நகூடமென்று புகழ்பெற்ற பெருந்திவு ஒன்று உண்டு. முற்காலத்தில் அத்திவுக்கு அரசன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் ரத்நாதிபதி. அப்பெயர் அவனுக்கே தகும். அவன் தேசும் திறலும் மிகவுடையோன், பரம வைஷ்ணவன், அவ்வரசன் புவனியெல்லாம் வெல்ல வேணும் என்றும் உலகத்திலுள்ள ராஜகுமாரிகள் அனைவரையும் அடையவேணும் என்றும் திடமான எண்ணங்கொண்டான். ஆகவே, விஷ்ணுவைக் குறித்துத் தவம் புரிந்தனன். மன்னவனது கொடுந் தவத்தைக் கண்டு, அரியும் அவனுக்கு எதிர்ப்பட்டு 'அரசே! எழுந்திடுக. நான் சொல்லுவதை உணர்ந்தறிக. களிங்க தேசத்தில் முனிசாபம் பூண்ட கந்தர்வன் ஒருவன் இருக்கின்றான். அவன் அச்சாபவசத்தால் ச்வேதரச்மி என்று பெயர்கொண்ட ஒரு பெரு வெள்ளையானையாக இருக்கின்றான். அவன் செம்மையிற் செய்த அறத்தினாலும் என்னிடத்திற் பக்தியி

றும், யானையாக விருந்தபோதிலும் ஆகாயத்திற் செல்லும் சக்தியும் நல்லறிவும் உடையவன். அவனுக்கு நான் கனவில் ஆணையிட்டிருக்கிறேன். அவன் உம்மிடத்திற்கு வந்து, உமக்கு ஆகாயத்திற்செல்லும் வாஹனமாவான். இந்திரன் ஐராவதமேறிச் செல்வதுபோல, நீரும் அந்த யானைமீது ஏறி எந்த எந்த அரசனை எதிர்த்துச் செல்லுகிறீரோ அந்த அந்த அரசன் உமது அமானுஷமான திறலைக்கண்டு நடுங்குவான். நானும், கனவில் அவ்வரசனுக்குத் தோன்றி, அவன் பெண்ணையே உமக்குக் கப்பமாகக் கொடுக்கும்படி கட்டளையிடுகிறேன். இவ்விதமாக, நீர் உலகத்தையெல்லாம் வெல்லுவதுமன்றி, உமது அந்தப்புரமும் அதிகமாகும் உமக்கு எண்பதினாயிரம் பெயர் அரசியர் ஆவர்.' என்று கூறினர். அரசன், இதைக்கேட்டு மகிழ்ந்து, தனது தவத்தை முடித்து மஞ்சனமாடிப்பாரணையும் செய்தனன்.

அடுத்த நாள் காலையில், அழகிய அரிய பெரிய அந்த யானையும் ஆகாயமார்க்கமாய் வந்தது. யானை வரவே, அரயன் அதன்மீதேறி அண்டமெல்லாம் சென்று வேந்தரை எல்லாம் வென்று, அவர்குமரிகளை எல்லாம் கைக்கொண்டான். அரயன் அந்தப்புரத்தில் எண்பதினாயிரம் அரசியர் ஆனார்கள். அவர்களுடன் கூடி ரத்நகூடாதிபன் வெகு உல்லாஸமாக விருந்தனன். தனது அற்புதமான யானையின் சேமத்தை வேண்டித் தினந்தோறும் ஐந்நூறு அந்தணர்களுக்கு அறுசுவை அன்னமிட்டான். இப்படியிருக்கையில் ஒருநாள் தன் வாரணத்தின்மீதேறி

உலகெங்கும் உலாவித்திரிந்து, தனது தீவிற்குத் திரும்பிவந்தான். அத்தீவின் மீது வந்து விண்ணி லிருந்து இறங்கும்போது, எங்கிருந்தோ பாவிக் கழுகு ஒன்று வந்து, தனது வலியமூக்கினால் அவ்வாரணத் தின் மத்தகத்தைக் கொத்தியது. அதுவும் ஈசன் அருளே! அப்பறவையை அரயன் அங்குசத்தால் அடிக்கவே, அது வெருண்டு பறந்தேபோயிற்று. யானை, பட்ட அடி பலமானதால், பாவம்! மதிமயங் கிப் புவனியில் விழுந்தது.

யானை கீழே விழவே, வேந்தன் அதினின்று இறங்கிப் பார்த்தான். யானைசாகவில்லை: தானாக எழுவதும் இல்லை. எழுப்பினாலும் பயன் இல்லை. தீனிதின்பதும் இல்லை. இவ்விதமாக ஒன்று ஒன் றாக ஐந்துநாட்கள் கழிந்தன. விழுந்த யானை எழவும் இல்லை. அரசனோ உண்ணவும் இல்லை உறங்கவும் இல்லை. அவன் பட்ட துக்கத்திற்கோ வரையும் இல்லை கரையும் இல்லை. துரங்கைப் பறிகொடுத்த ஆண்டியே ஆயினன். செயற்பாலது ஒன்றும் அறி யாது, லோகபாலரை உரக்கக்கூவிக் கூறலாயினன். 'எனக்கு மிகுந்த சங்கடம் வந்தது. இதினின்று நான் தப்பும் வகை கூறுமின். இன்றேல், என் தலையையே துண்டித்து நுமக்குப் பலியாக இட்டிடு வன்.' என்று அலறினன். உடனே ஓர் அசரீர வாக்கு உண்டாயிற்று. 'வேந்தே! வேண்டாம் இந்த ஸாஹஸம். கற்புடைய மாது யாரேனும் ஒருத்தி அத்தியைத் தொட்டிடில், அது சட்டென வெழுந் திடும். நும் வாரணம் எழுவதற்கு இதுவேதான் உபாயம். வேறு ஒன்றும் வழியில்லை.' இவ்வாகாய

வாணியைக் கேட்டு வேந்தன் மிகமகிழ்ச்சி யடைந்து தனது செல்வக்காதலியான அமிருதலதை என்பவளை வரவழைத்தான்.

இம்மாதை வெகு ஊற்றத்துடன் வெகு கட்டுங் காவலுஞ்செய்து, இவளது கற்பைக்காத்துவந்தான். இவ்வரசி அத்தியைத் தொட்டபொழுது, அது எழுந்திருக்கவில்லை என்று கண்டு அரசன் தனது மற்றையரசியரையும் தருவித்தனன். அரசியரனைவருந் தொட்டும் அந்தயானை எழவில்லை. அரசியர் எல்லோரும், தமது உண்மை வெளிப்படவே, வெட்கத்தினால் தலை குனிந்து நின்றனர். அரசன், அதனைக் கண்டு மிகநொந்து, பின்னும், நடந்ததை ஒரு பொருட்டாக எண்ணாது, பெருநாடகாரணத் தன் நகரத்திலுள்ள வனிதைகள் அனைவரையும் வரவழைத்து, அவ்வாரணத்தைத் தொடும்படி ஏவினான். அப்படி செய்தும், அந்தயானை எழாததைக் கண்டு 'அந்தோ! ஈதென்ன மாயம்! என் நகரத்தில் கற்புடைய மாது ஒருத்தியேனும் இல்லையா!' என்று அலறி வெட்கமும்பயமும் உற்றான் அரசன்.

---

## சீலவதியின் கதை.

இச்சமயத்தில் தாம்ரலிப்தியிலிருந்து வணிகன் ஒருவன் அங்கு வந்தான். அவன் பெயர் ஹர்ஷகுப்தன். அந்நகரத்தில் நடக்கும் அவ்வதிசயத்தைக் கேட்டு, ஆச்சர்யமும் மகிழ்ச்சியுங் கொண்டு, அவ்வணிகன் அரண்மனையை அணுகினன். அவனுக்கு ஊழிய வேலைசெய்யும் சீலவதி என்று பெயர்பூண்ட

கற்புடையமாது ஒருத்தி இச்செய்திகண்டு, 'நான் இந்த யானையைத் தொடுகிறேன். இதுவரையில் என் கணவனைத்தவிர யாரையும் சிந்தித்தும் அறியேன். இது உண்மையேயானால், யானை எழுந்திடும்.' என்று இயம்பி, வாரணத்தைத் தொட்டனள். அவளது கரம் பட்டவாறே, யானை சட்டென வெழுந்து புற்கவளமுந் தின்னத் தொடங்கியது. அவ்வடிமை தொடவும் ச்வேதரச்மி எழுந்ததைக் கண்டு, தம்மாளத்துடன் குதிகொண்டு எழுந்து அவளை ஆவலிப்புடன் துதித்தனர் அந்நகரத்தவர். 'இத்தகையரே இப்புவியில் அரும் தெய்வமாவர். இவர்பொருட்டே உலகுக்கெல்லாம் க்ஷேமம் உண்டாவது. இன்னாராலேயே இவ்வுலகெல்லாம் ஆவதும் வாழ்வதும் அழிவதும். கற்புடைய இவரே கற்பகமனையர்.' என்று கோலாஹலத்துடன் கூவினர். அரசன் ரத்நாதிபனும் அடங்காமகிழ்ச்சிகொண்டு, அம்மாதின் மாட்சிமையைக் கொண்டாடிப் போற்றி, கற்பிற்சிறந்த அப்பெருமாட்டிக்கு அளவில்லாமணிகளும் மாணிக்கங்களுமாகப் பரிசும் அளித்தனன். அவள் யஜமானனான ஹர்ஷகுப்தனை அன்புடன் ஆதரித்து அரசன் அவனுக்குத் தன் அரண்மனையின் அருகில் அகமொன்றும் அளித்தனன். தனது பெண்டிரை அக்கணமே பரித்தியாகம் செய்து, அவருக்குக் கூறையுஞ் சோறும் மாத்திரமே தந்தொழிந்தனன்.

பின்னர், வேந்தன் தன் உண்டிகழிந்து விடாய் தீர்ந்துத் தனித்திருக்குங்கால், ஹர்ஷகுப்தனது முன்னிலையில், கற்புநிறைந்த சீலவதியை நோக்கிச் சொல்வானாயினன். 'அம்மே! உனது பெற்றவீட்டில் சீல

முள்ள சிறுமியுண்டாயின், அவளை எனக்கு கொடுக்கும்படி செய்வாயாக. அவள் உன்னைப் போலவே கற்புநிறைந்த கட்டழகியாகவே இருப்பாள் என்பது திண்ணமே.' அரசனது ஆர்வச் சொற்கேட்ட அவள் 'வேந்தே! தாம்ரலிப்தியில் என் தங்கை ஒருத்தி உண்டு. அவள் பெயர் ராஜதத்தை. அவள் அழகு மிகுந்தவள். இறையே! இஷ்டமுண்டானால், அவளை மணஞ்செய்து கொள்ளும்' என்றாள் அம்மாதின் மென்மொழி கேட்டு மன்னவன் மகிழ்ந்து மறுநாள் தானும் ஹர்ஷகுப்தனும் சீலவதியுமாக விசும்பிற்செல்லும் வாரணமேறி விரைவிற் தாம்ரலிப்திக்குச் சென்றனன். அங்கு ஹர்ஷகுப்தனது அகத்தில் தங்கியிருந்து, சீலவதியின் தங்கையைத் தான் மணஞ்செய்ய நல்லதோர் தருணம் எப்பொழுது என்று சோதிடர்களை வினவினன். அரசன் அன்றயதினமே நல்லதோர் நாழிகையைக் குறிப்பிடக்கருதினன். தானும் கணிகர்களைக் கேட்டதுமன்றி ராஜதத்தையையும் கேட்டறியுமாறு நியமித்தனன். கணிகர் நக்ஷத்திரங்களை உய்த்துணர்ந்து, 'அரசே! இன்றைக்கு மூன்றுமாதம் கழிந்தபின்னர், நீரும் ராஜதத்தையும் கடிமணஞ் செய்துகொண்டால், நலம். இன்றைக்கே இவளை நீர் வதுவைசெய்துகொண்டால், இச்சிறுமி கற்பிலியாவாள் என்பதற்கு ஐயம் தினையளவும் இல்லை.' என்று அறைந்தனர். அறிஞர் அறையும் அருமதியைக் கேட்டு, அரயன் சிந்திக்கலானன். கண்ணிற்கினிய கன்னிகையைக் கடிமணம் செய்ய இச்சையுண்டானல் அதற்குஇடையூறும் உண்டோ! அன்றியும் அவன் மாட்சிமை மிகுந்த மன்னவன்:

பெண்டிரில்லாது ஒன்றியாயிருக்க ஆற்றகில்லாத வன். ஆகையாலேதான் ஆலோசிக்கலானான். 'சோதிட விசாரமெல்லாம் வீண். ராஜதத்தையை இன்றைக்கே நான் என் மனையாளாக்க வேண்டும். அவளோ சீலவதியின் உடன்பிறந்தவள். அவளுக்கும் செருக்கு உண்டோ! அவள் ஒருநாளும் கற்பிலியாகாள். இம்மட்டோ! ஆழ்கடலின் நடுவே எனக்கோர் சிறுதீவு உண்டு. அதில் மனிசப்பூண்டேனும் இல்லை. அங்கோர் அரண் அமைத்து, அதற்குப் பரிதிகள் நான்கு அமைத்து, காலேனும் நாடாது செய்து, இவளை நான் அதில் அமர்த்திடுவன். அவ்வரணில் ஆடவர் அணுகாவண்ணஞ் செய்து, வனிதைகளையே வேலைக் கமைத்துச் செவ்வனே காத்திடுவன். இங்ஙனம் செய்திடில் இவள் கற்பை இழப்பது எப்படி?'

---

## ராஜதத்தை கதை.

இவ்விதமாக உறுதிகொண்டு, அன்றையதினமே அவளை மணஞ் செய்துகொண்டான். சீலவதியும் தன் தங்கையை உள்ளங்குளிர அரசர்க்கு அளித்தனள்: வணிகன் ஹர்ஷகுப்தன் அவளுக்கு விதிப்படி வரிசைகள் விடுத்தனன். தாமதமின்றி சீலவதியையும் தன் காதலியையும் ச்வேதரச்மி மேலேற்றிக் கொண்டு ரத்நகூடாதிபன் ஆகாயமார்க்கமாக, எல்லோரும் ஆண்ணுந்திருக்கத் தன்நகரம் வந்தடைந்தான். கற்பையே கடைப்பிடித்த சீலவதி தனது நல்லொழுக்கத்தின் பயனால் தங்கைக்கு மன்னவனை மணாளனாக்கினேனென்று மகிழ்ந்தனள்.

உடனே, மன்னன் தனது ஆகாசயானத்தில் ராஜதத்தையை ஏற்றிக்கொண்டு ஆழ்கடலின் நடுவே நாடற்கரிய தீவை அடைந்தனன். அங்கு நாரிகளையே நன்கு அமைத்து, அவர் காவலில் அரசை வைத்தனன். தன்னரசி இனிதிருக்க நான்கு சாலையமைந்த மாளிகை ஒன்று அமைத்தனன். அங்கு வேண்டியவைகளையெல்லாம் விசும்பின் வழியாகவே விடுத்தான். இவ்வாறு தான் நினைத்தபடி நிறைவேற்றி, வேந்தன் இரவெல்லாம் அங்கேயே இருப்பதும், பகலிற் தன்னரசாட்சியைச் செலுத்த யானையேறித் தன் நகருக்குச் செல்வதுமாக இருந்தனன். வேந்தன் இரண்டே இடங்களில் இருப்பது: பகலிற் படை வீடான ரத்நகூடத்திலும், இரவில் அந்தப்புரமான அத்தீவிலும், இங்ஙனம் பலநாட்கள் கழிந்தன.

ஒரு நாள் விடியற்காலையில் அரசன் கெட்ட கனவு கண்டான். கனவு கெட்டதானால் கள்குடித்தால் தீரும் என்று எண்ணித் தானும் அரசியுமாக மங்கலத்திற்காக மது நுகர்ந்தனர். பிறகு, ராஜதத்தை எவ்வளவு தடை சொன்னாலும் கேளாது அவளைத் தனியாகவிட்டு, அரசன் தன் கடமையைக் கழிக்க ரத்நகூடத்திற்கு ஏகினான். வேந்தனுக்கு வீடேது வாசலேது? அவனுக்குத் தன்னரசே எல்லாம். அரசன் புறப்பட்டுச் செல்லவே, தாஸிகள் அனைவரும் தம்கிரிசைகளில் அமர்ந்தனர். சேடியரும் காவலாயிருந்த கன்னிகைகளும் பயமின்றி இஷ்டப்படித் திரிந்தனர். அத்தீவில் அபாயமும் உண்டோ! அரசி ராஜதத்தையோ, செயல் ஒன்றும் காணாது, அரணின் வாசலில் சமுத்திரத்தின்

அழகைப் பார்த்து நின்றாள். இங்ஙனம் இருக்க, அங்கோர் புருஷன் தோன்றினன். அவனோ வெகு விநோதனாகி விளங்கினன். அரசன் அத்தீவிற் செய்த காவலைக் கலைத்திடக் கருதி விதியேதான் வந்தனன்போலும்!

அவனை நோக்கி, 'ஐயா! நீங்கள் யார்? அணுக வொண்ணாத இவ்வரணை அடைந்ததுதான் எப்படி?" என அரசி வினவினள். திடீரென்று தீவிற் றோன்றிய அவனை மதுவினால் மதிமயங்கிய அரசி கேட்கவே, பல்வேறான துன்பங்களால் நொந்த அப்பரதேசி வியப்புடன் விண்ணப்பிப்பானானன். "மங்கையே! என் பெயர் பவனஸேனன். நான் ஜாதியில் வணிகன். எங்கள் ஊர் மதுரை. நான் குழந்தையாய் இருக்கையிலேயே என் பிதா இறந்து போனார். எனக்கு உண்டான செல்வத்தையெல் லாம் பங்காளிகளும் சுற்றத்தாரும் கைப்பற்றிக் கொண்டனர். பணமில்லாதவன் பிணமன்றோ? நான் என் வயிற்றின் கொடுமையால் பரதேசம் சென்று அங்கு ஒருவனை அண்டி ஊழியஞ் செய்து வயிறு வளர்த்தேன். படாதபாடெல்லாம் பட்டு, வாய் ஒடுக்கி வயிறு ஒடுக்கிக் கொஞ்சம் காசு சேர்த்தேன். அதைக்கொண்டு வியாபாரம் செய்து பிழைக்கலாம் என்று தேசாந்திரம் போனேன். பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும். போகும் வழியில் திருடர்கள் எதிர்ப்பட்டு என் பணத்தை எல்லாம் கொள்ளை கொண்டனர். பணம் பறி போகவே என் பிழைப்பும் போயிற்று. பிழைக்க வழியில்லாதவனுக்குப் பிச்சைதான் கதி. நானும்

பிச்சைக்காரருடன் பிச்சைக்காரனாகி ஊரூராகச் சுற்றிச் சஞ்சாரஞ்செய்து இறுதியில்—சொன்னாலும் பெயர் தரும்—கனகக்ஷேத்திரம் என்னும் பட்டணம் போய்ச் சேர்ந்தேன். அவ்வூரில் அரசர் அமைத்த அன்னஸத்திரத்தில் பேதையர்களுடன் கூடிச் சோறு தின்று வயிறு வளர்த்தேன். அங்கே பெருத்த சுரங்கமொன்று உண்டு. என்போல்வார் எல்லோரும் அச்சுரங்கத்துக்குப்போய் அதைத் தோண்டிப் பொன்னும் மாணிக்கங்களுமாகக் கொண்டுவந்தார்கள். ஆனால் சரி; நானும் போனால் எனக்கும் அகப்படாதா என்று அங்குப்போய் வெட்டி வெட்டிப்பார்த்தேன். ஒரு ரத்நமேனும் கிடைக்கவில்லை. ஆம், ஆம், முஷ்டிக்குப்போனாலும் முகபாக்கியம் வேணும். பாக்கியவானுக்குப் பட்ட மரமும் பாலாகப் பொழியும். பாவிக்குப் பொன்னும் மண்ணாகும். நாடெல்லாம் விளங்கியிருக்க நடுச்சாவியானாற்போலப் பிச்சைக்காரரெல்லாம் பாக்கியவந்தராகிக் களிப்புற்றிருக்க நான் ஒருவனே ஏங்கி நின்றேன். இதைக்கண்டு என் மனம் வெதுவெதுப்படைந்து நொந்தது. என் புல்லிய உடம்பைக் கடலிலேயே போடுவது என்று எண்ணிக் கடலுக்கே போனேன். அங்கே போய் உயிரை மாய்க்கத் துணியாது, இக்கட்டையைக் கனலிற் போட்டாலாகாதோ வென்று எண்ணி, என் சிதையை நானே அடுக்கினேன். ஆயினும், விதியை விலக்க வியலுமா?

அத்தருணத்தில் ஜீவதத்தன் என்னும் வணிகன் ஒருவன் அங்கு வந்தான். அவன் என்னைக்

கண்டு அருள் சுரந்து, 'அண்ணே! அது செய்ய வேண்டாம்.' என்று தடுத்து, எனக்குச் சம்பளம் கொடுப்பதாகச்சொல்லித் தன்னுளாக்கினுன். அவன் அப்பொழுது வியாபார நிமித்தமாய்க் கப்பல் ஒன்று திட்டஞ்செய்து சுவர்ணத்வீபத்திற்குப் பிரயாணமாய் இருந்தான். பிறகு, என்னையும் அழைத்துக்கொண்டு கப்பலேறிப்புறப்பட்டான். முதல் ஐந்து நாள் யாத்திரை அநுகூலமாகவேயிருந்தது. ஆருவது நாள் திடீரென்று கறுத்த மேகங்களெல்லாம் எங்கிருந்தோ வந்துகூடின. பின்னர்ப் பொழிந்தது மழையல்ல; கல்மாரிதான். அம்மா! என்ன சொல்வேன்! காற்ருென்று வீசவாரம்பித்தது. அது பேய்க்காற்று. முதலிற் கப்பல் அசைந்தாடியது. அது சிறிது நேரத்திற்கெல்லாம் சுற்றிச் சுழன்று வாயுவேகமனோவேகமாக ஓடியது. பின்னர் நிகழ்ந்தது ஒன்றும் அறியேன். கப்பல் உடைந்தது. நான் ஒரு பலகையைக் கட்டித் தழுவி உயிர் பிழைப்பதற்குத் தடுமாறிக்கொண்டிருந்தேன். பிறகு, காற்றும் மழையும் ஓய்ந்தன. பலகையையும் என்னையும் இப்பேரலைகள் காடுஞ் செடியுமாக இருக்கும் ஓர் தீவின் கரையில் ஒதுக்கின. நான் கரை சேர்ந்து நோக்கவே நான்கு கட்டுகள் அமைந்த இவ்வரண் புலப்பட்டது. கல்லினுட் டேரைக்கும் கருவினுட் குழவிக்கும் கருணை யளிக்கும் கடவுள் அன்ருே எனக்கு இங்ஙனம் அருள் புரிந்தனர் என்றெண்ணித் தேடித் திரிகையில் கண்ணிற்கினிய கண்மணியே! நின்னை நான் கண்ணுற்றேன். கண்ணிணையால் அமுது பொழியும் என்

இன்னமுதே! நின்னைக் காணவே என் கஷ்டமெல்லாம் கைவிட்டோடின".

மங்கைக்கு மதுவின் மதமும் மதனனும் ஒருங்கு கூடினால் அவள் வைபவத்தைச் சொல்லவும் வேணுமோ! அரணில் நெடுநாளாய் அடைபட்டிருந்த அரசி, அவனது ஆச்சரியமான கதையை அவாவுடன் கேட்டு, அவன் மீது அளவற்ற காதல் கொண்டு வெகு உல்லாஸமாகவிருந்தனள். மங்கையரின் மாண்பு, மதுவின் மதம், மோஹம், தனைப்பட்டிருத்தல், யௌவனம் ஆகிய இவற்றில் ஒவ்வொன்றும் கொடுந் தீயேதான். இவை யாவும் ஒருங்குச் சேர்ந்தால் பஞ்சாக்னியேதான். அவற்றின் எதிரில் நல்லொழுக்கமென்பது உலர்ந்த புல்லே ஆகிவிடும். இங்ஙனம் இருந்ததால் நல்லது கெட்டது ஆலோசிக்க இடம் உண்டோ! அரசி தானாய்த் தருவித்த தவறோ இது? அல்ல; விதியின் வழக்கால் வந்ததே!

இவ்வாறு இருக்கையில் ரத்நாதிபதி இரத்நகூடத்தினின்று, அவாவுடன் அரசியின் கதி என்ன ஆயிற்றோவென்று அய்யங்கொண்டு ஆகாய மார்க்கமாய் வந்து சேர்ந்தனன். வந்து மாளிகையில் நுழையவே, ராஜதத்தை அவ்வணிகனுடன் இருப்பதைக் கண்டான். வணிகன் உடனே உள்நடுக்கங் கொண்டு, அரசன் காலில் விழ்ந்து புரண்டு தன் பிழையைச் சொல்லிக் கெஞ்சினன். அரசன் கோபங் கொண்டு சீறி அவனைக் கொலை செய்யாததுமன்றி மனம் பதறாது அமைதியாக விருந்தனன். மதுவினால் மதிமயங்கித் தள்ளாடி நடந்து தன்னடியில் விழுந்து பெரும் பயத்தினால் பேசவியலாது பேதை

விழிவிழிக்கும் தன் பெண்டிரையும் பார்த்தான். கோபமேகொள்ளாது இரக்கம் மிகுந்து, 'மடமை மிகுந்த மங்கைக்கு மதமும் மதனனும் உண்டானல் கேட்கவேண்டுமா? அவள் ஒழுக்கத்தையும் யோசிக்கவும் வேண்டுமா! மேலும் கடைகெட்ட மூளியை மூடிவைத்தால் மாத்திரம் நல்லவள் ஆவாளோ? பெரும் புசலடிக்கையில் விளக்கைக் கைகொண்டு மறைத்தால் நிற்குமோ? அந்தோ! முன்னறிந்த சோதிடர் சொன்னதை நான் மதிக்கவில்லை. அதன் பயனன்றோ இது! ஆப்தவாக்கியத்தை மீறினல் வரும் பயன் மிகக் கொடியதுதான். அதை விலக்கல் இயலாது. ஆகா! சீலவதியின் உடன்பிறந்தவள் அன்றோ இவள் என்று எண்ணினேனே! என் புத்தியே புத்தி! சீலவதி நல்லொழுக்கமுடையவளானல் இவளும் அப்படியே இருப்பாளா? அமுதமும் ஆலாலமும் ஒரே கடலில்தான் உண்டானவை. அதனல் இரண்டும் ஒன்றேயாகுமோ? அமுது அமுதுதான்; விஷம் விஷந்தான். மனிதன் தன்னுலியன்ற மட்டில்தானே செய்யலாம்: அவன் புத்திக்கு எட்டாத விதியின் விலாஸத்தையும் தடுக்கவும் முடியுமோ?' என்று தன்னுள்ளே ஓர்ந்துணர்ந்து கோபமே உறாது சாந்தமாக விருந்தனன்.

பின்னர், அரசன் வணிகனை அழைத்து அவன் வரலாற்றையெல்லாம் செவியுற்றான். அவன் கதையைக்கேட்டு, விதியன்றோ இத்துணை செய்தது என்று தேர்ந்து அவனைத்தண்டியாது விட்டுவிட்டனன். வணிகனும் கடலில் ஒரு மரக்கலம் செல்லுவதைக் கண்டு, தன் பலகையின் மீதேறிச் சென்றனன்.

கடலிற் சிறிதுதூரம் செல்லவே பலகை கவிழ்ந்து தடுமாறித் தண்ணீரில் விழுந்தனன். ஐயோ! என்றலறிக் கூவினன். அப்போது அம்மரக்கலத்தின் அதிபதியான குரோதவர்மன் என்று பெயருள்ள பெரும் வியாபாரி ஒருவன் அவனைக் கடலினின்று எடுத்துத் தன் பணியாளனுக்கு அழைத்துச் சென்றனன். ஒவ்வொருவனும் ஈசன் இட்ட வழக்காகவே இருந்தன்றோ அவனவன் செய்யவேண்டியவையெல்லாம் செய்வான். இது மனிதனுக்கு மாத்திரமல்ல. புல்லும் பூண்டும் கல்லும் மண்ணுங் கூடக் கடவுளருளின்படியேதான் செல்லவேண்டும். தன் பெண்டிரைப் பிழைசெய்யத் தூண்டின வணிகன் தடுமாறித் தண்ணீரில் விழுந்ததே அவனுக்குத் தகுந்த சிக்ஷைதான் என்று எண்ணி நின்றான் அரசன்.

பிறகு ரத்நாதிபதி தன் மனையாளையும் அவள் பரிஜனங்களையும் தனது யானை ச்வேதரச்மியின் மீது ஏற்றிக்கொண்டு ரத்நகூடம் போய்ச் சேர்ந்தான். அங்குச் சென்று சீற்றம் சிறிதும் இல்லாது அவளைச் சீலவதியின் வசத்தில் ஒப்பிவித்து, அவளுக்கும் தன் அமைச்சர்களுக்கும் நடந்தவற்றை எல்லாம் நடந்தவாறு இயம்பினன். தான் அனுபவித்த துன்பமெல்லாம் எடுத்துரைத்து, 'அந்தோ! நான் சேமமே வேண்டித் தீவினை பெருக்கிச் சிற்றின்பத்தையே நாடி நின்றேன். எண்ணிறந்த பாடெல்லாம் பட்டேன். இனி யான் படுவதில்லை. சிற்றின்பங்களைத் தேடித்திரிந்தேன் எத்தனையோ நாளாய். தேர்ந்தொழிந்தேன் இவையெல்லாம் பழுதானவை

என்றே. இனி அங்ஙனம் படுவதில்லை. இதுகாறும் நான் இப்பாசத்தில் பட்டதெல்லாம் போதும். வாடினேன்; வருந்தினேன். இனி வனத்தையே நாடி ஹரியையே அடைவேன் சரணாக. இனியான் தேடுவேன் துயரறுக்கும் தூயதோர் பதவியை. அந்தோ! நான் இனிப்படுவதில்லை இப்பவகிணற்றில்.' என்று மெய்யுருகி அலறினன் அரசன். வைராக்கியம் மிகுந்தமையால் மந்திரிகளும் சீலவதியும் எவ்வளவு நல்வார்த்தையும் ஆறுதலும் சொல்லினும் அவன் கேட்கவில்லை. பிறகு, இல்லறவாழ்க்கையைத் துறக்க உறுதிகொண்டு, தனது கோசத்திற் செம்பாதியை நல்லொழுக்கமுள்ள சீலவதிக்கும் விஞ்சியதை வேதியர்க்கும் அளித்தனன். நன்னெறியும் நற்குணமும் மிகுந்த பாபபஞ்ஜனர் என்னும் பார்பனச் சிட்டருக்குத் தனது நாட்டை முறைப்படி தானமாக ஈந்து ஆகாய மார்க்கமாகத் தபோவனத்திற்குச் செல்லலாம் என்று தனது யானை ச்வேதரச்மியைக் கொண்டுவரச் சொன்னான்.

அரசன் எதிரிற் கொண்டுவந்தபோதே அவ்வாரணம் தன் தேகத்தைத் துறந்து, கழுத்திற் பூணும் காதிற்குண்டலமும், தோளில் வளையும் பூண்ட ஓர் அழகிய விண்ணவனாய்த் தோன்றியது. அரசன் வியப்பு மிகுந்து சற்றுத் திகைத்து நின்று பின்னர், 'நீங்கள் யார்? இது என்ன ?' என்று வினவினான். அத்தேவபுருஷன் கூறுகிறான். 'வேந்தே நாங்கள் இருவர் கந்தர்வர்: சகோதரர்: மலயபர்வதத்தில் வாஸமாய் இருந்தோம். நான் ஸோமப்பிரபன்: இவன் பெயர் தேவப்பிரபன்: இவன் என்

தமையனாகவிருந்தான். என் தமயனுக்கு ஒரே தாரந் தான். அவள் அவனுக்கு உயிர்க்கும் உயிரானவள். அவள் பெயர் ராஜவதி. அவளை எப்பொழுதும் தன்னுடன் கூடவே வைத்திருப்பான் என் அண்ணன். ஒரு சமயத்தில் என் தமையனும் மதனியும் என்னை அழைத்துக்கொண்டு ஸித்தவாஸமென்னும் தலத்திற்குப் போனார்கள். அங்கு கேசவனது கோயிலினுள்ளே சென்று அத்தேவனைப் பூஜித்தோம். பின்னர், அப்பிரபுவை வலம்வந்து அவ்வரியின் சன்னதியில் நின்று, அவர் புகழைப் பாடினோம். என் மதனி ராஜவதீதேவி செவிக்கு இனிப்பாகப் பாடுவதைக்கேட்டு, எங்களை அணுகிக் கண்ணிமைப்பதை யொழித்து ராஜவதீதேவியையே பார்த்து நின்றான் ஸித்தன் ஒருவன். அதுகண்டு என் தமையன் மனம் கலங்கிப் பொறாமைகொண்டு சீறி, 'என்னடா! ஸித்தனாய் இருந்தும் காதல் கொண்டு பிறர் மனைவியைப் பார்த்து நிற்கிறாய்?' என்று கூவினன். உடனே அந்த ஸித்தன் சினங் கொண்டு, 'ஓயி! துஷ்டா! மூடா! நான் காதல் கொண்டா இவளைக் கண்ணுற்றேன்? பாட்டு மிக வாச்சரியமாகப் பாடியதால் அன்றோ பார்த்தது! என் மேல் வீணிற் பொறாமைகொண்ட நீ மானிடனாகவும் இப்பொறாமை யுடையவனாகவுமே பிறக்கக்கடவாய். இவளும் உன்னைப்போலவே மனிசியாகப் பிறந்து உனக்கே பெண்டிராவாள். இவளை இன்னும் ஒருவன் காதலிப்பதை உன் கண்ணாரக்காணுவாயாக!' என்று சபித்தான். நான் அப்பொழுது மிகவும் சிறுவன். ஆதலால், பின்வருவதைச் சற்

றேனும் சிந்திக்காது, சாபத்தின் கொடுமையை மாத்திரம் கண்டு, என் கையிலிருந்த வெள்ளை வர்ணம் பூசின மண்யானையால் அவனை அடித்தேன். உடனே, அவனுக்கு என் மீதிற் சினம் உண்டாகி, 'பைதலே! என்னை வெள்ளையானை கொண்டல்லவா அடித்தாய்! அதுவே சரி. நீ மண்ணுலகில் ஓர் வெள்ளையானையாகவே பிறக்கக்கடவாய்.' என்று என்னையும் சபித்தனன். இதை எல்லாம் கண்டு என் தமையன் தேவப்பிரபன் நடு நடுங்கி அந்த ஸித்தனது காலில் விழுந்து தண்டனிட்டு இறைஞ்சினன். அவன் கெஞ்சுவதைக்கண்டு கருணை கூர்ந்து, எங்களது சாபத்தின் முடிவைக் கூறினன். 'அப்பா! நீ மானவனாய்ப் பிறப்பினும், ஹரியின் அருளால், மஹாவாரணமாகப் பிறக்கும் இவனையே உனது வாஹனமாக அடைவாய். இவனும் எல்லா யானைகளையும் போலிராது தெய்வத் தன்மை பூண்டிருப்பான். உனக்கு எண்பதினாயிரம் பெயர் அரசியர் இருப்பர். நீ பெருநாடுகாண அவர்கள் எல்லோரும் கற்பிலிகள் என்றே கண்டுகொள்வாய். பிறகு, மனுஷியாகப் பிறக்கும் இவளை மணம் புரிவாய். இவள் காதல் மிகுந்து கற்பையிழப்பதை உன் கண்ணாரக்காண்பாய். பின்னர், இல்லறவாழ்க்கையில் ஆசைநீங்கி, பார்ப்பானுக்கு உன் அரசையளித்து அரணியத்திற்கு ஏகுவாய். அப்பா! தேவப்பிரபா! அப்போது இவன் முதலில் சாபம் நீங்கி வாரணத்தின் சரீரத்தைத் துறப்பான். பிறகு, நீயும் இதோ நிற்கும் உன் மனையாளும் சாபம் நீங்கி உங்களது இயற்கையான உருவை அடைவீர்கள்.'

'இப்படி ஸித்தன் கூறியவாறு சாபத்தினின்று மீண்டவர்களேதான் நாம் மூவரும். முற்பிறப்பில் நாம் செய்த வினையின் பயனை இம்மையில் அனுபவித்தோம். ஈசன் அருளால் இன்றைக்கு நமது சாபம் நீங்கியது.' இவ்வண்ணம் ஸோமப்பிரபன் சொல்லவே, ரத்நாதிபன் என்னும் அரசனுக்குத் தனது ஜாதி நினைவுக்கு வந்து, 'ஆம், ஆம், நான் தான் அந்த தேவப்பிரபன் என்பவன். ராஜதத்தை என்னும் இவள் தான் உண்மையில் ராஜவதீ: இவள் தான் எனது பத்தினி.' என்று சொல்லி, தானும் அவளுமாக அவ்வுடலம் துறந்தனர். ஒரு நொடியில், ஊரெல்லாம் பார்த்திருக்க மூவரும் கந்தர்வராகி, ஆகாயத்தில் எழும்பித் தமது இருப்பிடமான மலயாசலம் சென்றனர். சீலவதி தனது நல்லொழுக்கத்தின் மஹிமையினால் மஹாபாக்கியமடைந்து, தாம்ரலிப்தி நகர்க்குச் சென்று, தனது நல்லொழுக்கத்தினின்று வழுவாது பெருவாழ்வு வாழ்ந்தனள்.

யாரானாலும் சரி; எவ்வூரிலும் சரி; எப்பொழுதும்சரி; மங்கையரின் கற்பைக் கட்டிக்காத்தலியலாது. குலமகளின் கற்பைக் காப்பது அவளுக்கே இயற்கையில் உண்டாகும் கசடற்ற நல்லொழுக்கமே. பொறுமைகொண்டு அவளைக் காப்பதென்பதோ பயனற்றது. காப்பவனுக்கு அது அரும் பெரும் துன்பத்தையே உண்டாக்கும். அது இம்மட்டோ; பிறருடன் தீராப் பகையை விளைவிக்கும். இதுவுமின்றிக் கட்டும் காவலுமிருந்தால் மங்கையர்க்குக் காதல் மிகுந்து கட்டைக் குலைக்க ஆவல்மிகும்.

இவையெல்லாம் நன்குணர்ந்து, பாவைதன்னைப் பாதுகாக்கப் பல்வகையாக முயலாதிருமின், உலகத்திரே!

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை."

நம்மால் ரக்ஷிக்க முடியாதது ஈசன் அருளால் நன்னரே ரக்ஷிக்கப்படும். நம்மால் இயன்றமட்டில் ரக்ஷிக்கப்படினும், ஈசன் எதிரானல், அது கெட்டே யொழியும்.

சொற்சுவையும் பொருட்செறிவும் பொருந்திய இவ்வினிய கதையைத் தன் காதலி ரத்நப்பிரபை சொல்லக் கேட்டு, நரவாஹனதத்தன் மிக்க மகிழ்ச்சி யடைந்தான். மதிசேர் மந்திரிகளும் செவிகளாறக் கேட்டுச் செவ்வனே சந்தோஷித்தனர்.

[மற்றொரு நாள் மந்திரி கோமுகன் ரத்நப்பிரபா தேவி சொன்னதைக் கேட்டுச் சரிதான்; கற்புடைய மாதர் அரியவர்தான். அவர் மனம் கட்டில் அடங்காது மிக்கச் சஞ்சலமானது.' என்று இயம்பி இனிய கதைகள் பல எடுத்துரைத்து, மாதரை நம்பலாகாது என்று தெளிவுற உணர்த்துவானாயினன்].

---

## விக்கிரமாதித்தன் கதை.

கோமுகன் சொல்லிய கதையைக்கேட்டு இளவரசன் மகிழ்ந்ததைக் கண்டு பொறுமை கொண்டு சொல்வானாயினன் மருபூதி என்னும்மந்திரி.

'அண்ணலே! பாவையர் எல்லாம் சஞ்சலமானவர்தானா? இலர். அவர் உள்ளூற உகந்திடில், தம்

மனவலிமையால் உறுதிகொண்டு, மஹாகஷ்ட மானவற்றையும் செய்யவல்லவர். காசுக்கே காதல் கொள்ளும் வேசியரே தாம் நேசித்தவரைக் கைவிடாது நண்ணுவர். விலைமாதரே இப்படி மனவுறுதியுள்ளவரானல், குலமாதரைக் குறித்துக் கேட்கவும் வேணுமோ? மாதர்மனவுறுதியை இகழலாகாது. இதோ ஒரு கதை சொல்லுகிறேன்; தேவரீர் அதனைச் செவிசார்த்தியருளல்வேண்டும்.

பாடலீபுரத்தில் விக்கிரமாதித்தன் என்று ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு இசைந்த நண்பர் இருவர் இருந்தனர். இருவரும் அவனைப்போலவே வேந்தர்தாம். அவர்களில் ஒருவன் ஹயபதி என்பவன். அவனுக்குத் துரகங்கள் அநேகம் உண்டு. மற்றொருவன் கஜபதி என்பவன். அவனுக்கு யானைகள் மிகுதியாகவிருந்தன. இந்த நண்பர் இருவர் தவிர அவனுக்குப் பகைவன் ஒருவன் உண்டு. அவன் நரசிங்கன் என்று நான்கு திக்கிலும் புகழ் பரந்தவன். அவனுக்குப் பதாதிகளே படையாகவிருந்தனர். அவனைக் கண்டு பொறுமை கொண்டு, மானத்தையே பெருமையாகக் கொண்ட விக்கிரமாதித்தனுக்குத் தனது நண்பர் இருவரது துணைவலியால் அகமும் ஆணவமும் மிகுந்தன. இவை மீறியெழுந்தபோதே, முன்பின் யோசியாது வெட்டெனச் சபதம் ஒன்று கூறினன். "ஆ!!! அப்போது சொல்லுவேன் இவன் செய்தி. நரபதியல்லவோ இவன்! எனது பாணரும் கவிஞரும் நான் செல்லும் வழியே நின்று, 'இறைவ, இதோ நிற்கின்றான் நும்மடிமை.' என்று என்னை

திரில் இவனைக் கொணரும்போது என்கைவரிசை யைக் காணலாம். அப்போதல்லவா என்வெற்றி வெளிப்படுவது." இவ்வண்ணம் சபதம் கூறியது மன்றி, தன்நண்பர் அச்வபதி கஜபதி இவ்விருவரை யும் கூட்டிக்கொண்டு தேர், யானை, புரவி இவற்றின் பெருவெள்ளங்கள் பின்படர நரசிங்கனது நாட்டை யடைந்து தகைந்து, வலிய போர் புரிவானுனன். எண்ணிற்கடங்காத அரசரும் வீரரும் சூரருமாய்க் கூடித் தன்படைவீட்டை முற்றுகையிட்டுத் தகைவ தைக்கண்டு, நரசிங்கனும் தனது படையைச்சேர்த்து எதிர் நின்று போர் புரிந்தனன். இங்ஙனம் ரத கஜதுரகங்களோடு கூடிய விக்கிரமாதித்தனுக்கும் ஆட் களையே படையாக்கொண்ட நரசிங்கனுக்கும் நடந்த போர் மேதினியெல்லாம் புகழ்பெற்றது. அன்றி யும் நால்வகைப்படைகளில் மூவகைகளைக்கூடி ஒரு வனும் ஆட்களையே நம்பி வேறொருவனுமாய்ப் போர் செய்ததால், அப்போர் எல்லோரும் வியக்கத் தக்கதாகவே இருந்தது. விலங்குகளையே போரில் உபயோகிப்பது வெற்றிக்குக் காரணமாகாது. ஆகை யாற் சிறுகச் சிறுக விக்கிரமாதித்தனது படை முறி பட்டு இறுதியில் நாசமாயிற்று. நரசிங்கனுக்குக் கோடிக்கணக்கான ஆட்படை இருந்தமையால், அவனே வெற்றியடைந்தான்.

தோல்வியடைந்த விக்கிரமாதித்தன் தன்படை விடான பாடலீபுறத்திற்குச் சென்றுன். செத்தமாட் டை உண்ணிகள் விடுவது போல அவனை விட்டுக் கழன்றனர் அவனது நண்பர் இருவரும். நரசிங்கன் வெற்றி பெற்றுத் தார்பூண்டு தன்படையெல்லாம்

யின் படை, நாடெல்லாம் மகிழ்ந்து போற்ற, வந்திகளும் பாணரும் துதிபாடத் தன்படை வீடான பிரதிஷ்டானத்தை யடைந்தான். சபதஞ் செய்து வீரப்போர்புரிந்த விக்கிரமாதித்தன் தன் எண்ணம் நிறைவேறாதது கண்டு, 'எனது பகைவன் வலியவன். அவனைச் சத்திரத்தால் வெல்லவியலாவிடினும், யுக்தியாலும் மதியாலும் வெல்லல் வேண்டும். மதியால் வெல்ல முயன்று பயன்படாமற்போனால் பலரும் என்னை ஏசுவர். அப்படி எனினும், நான் விடுவதில்லை' என்று ஆலோசித்துத் தன்னரசைத் தகுந்த மந்திரிகளின் வசம் ஒப்பிவித்தான். தனது ராச்சியபாரத்தை நீத்து ஒருவர்க்கும் தெரியாது நகரத்தினின்று வெளிப்பட்டான். அவனது முக்கிய மந்திரிகளில், புத்திவரன் என்னும் ஒருவன் மாத்திரமே அவனுடன் இருந்தனன். சற்குலத்திற் பிறந்த சிற்றரசரின் குமரர் நூறுபெயர்கள் அவனுக்கு மெய்க்காவலராயிருந்தனர். அரசனும் அவனது வீரர்களில் இருவரும் தனி வியாபாரிகளைப்போல வேஷம்பூண்டு நரசிங்கனது நகரினுட் புகுந்தனர்.

---

## மதனமாலை கதை.

அவ்வூரில் விலைமாது ஒருத்தி. அவள் பெயர் மதனமாலை. அவள்வீடோ மன்னவனது மாளிகைபோல இருந்தது. அந்த வீடு போய்ச் சேர்ந்தனர் அரசனும் அவன்பின்னவரும். அம் மாளிகைக்கு நான்கு புறத்திலும் ஓங்கி உயர்ந்த மதில்கள் எழுப்பியிருந்தன. அவற்றின்மீது எண்ணிறந்த கொடிகள் கட்டியிருந்தன. அக்கொடி

களின் சிறெம்பரம் காற்றில் அலைந்து இலங்கியாடு வதைக்கண்டால், வெள்ளைநிறந்த கைகள்கொண்டு ரஸிகரை அம்மாளிகை ஆர்வத்துடன் அழைப்பது போலிருந்தது. அதன் கீழ்த்திசையிற்றான் தோரணவாசல். அதில் யாவரும் நுழையாவண்ணம் இருபதினாயிரம் பதாதிகள் அதனை அல்லும் பகலும் பாதுகாத்துவந்தனர். மற்றை மூன்று திசைகளிலும் மூன்று வாசற்கள் இருந்தன. ஒவ்வொன்றிலும் பதினாயிரம் வீரர்கள் போர்க்கருவிகளுடன் நின்று காத்தனர். விக்கிரமாதித்தனும் அவனது பின்னவரும் பணியாளருடன் சொல்லி, அவர்களுடன் உள்ளே பிரவேசித்தனர். அம்மாளிகையின் அகத்தே சென்றாலோ, அதன் அழகைச் சொல்லலியலாது. கொட்டிலிற் கட்டியுள்ள அரும்பெரும் பரிகள்தான் எத்தனை! அவற்றின் அழகும் ஆணவமுந்தான் என்னே! இப்பரிகள் ஒருபால், மற்றொருபால் கூட்டங்கூட்டமாகக் கட்டியிருக்கும் வாரணங்கள். நெருங்கக் கட்டியபடியால் ஒன்றுக்கொன்று தலையால் முட்டிக்கொண்டு இடிமுழக்கம் போல முழக்கும். பின்னொருபால் போர்கருவிகள் வைக்குஞ்சாலை. அங்கு வில்லும், வேலும் ஈட்டியும் வாலாவும், கத்தியும், கரவாளமும், வாளும், கோடாலியும், கேடயமும், கவசமும், இன்னும் சொல்லவொண்ணாதவைகளுமாக ஒன்றன்மீது ஒன்றாய்க் குவித்திருந்தன. அவற்றைப் பார்க்கப்பார்க்க அவர்நெஞ்சம் பதைத்து எழுந்தது. அங்கொருபாற் பொன்னும், முத்தும், பவளமும், வச்சிரமும், மரகதமும், மாணிக்கமுமாய் மின்னற்போல விளங்கியது.

இதுவேதான் கோசகிருகம். இதன் ஒருபக்கத்தில் பணியாளர் பலர் கூட்டங்களாகக்கூடிக் கும்மாளத்துடன் கூச்சலிட்டு நின்றனர். வேறொருபால் வந்திகள் கூட்டங்களாகக்கூடிக் கோலாகலத்துடன் அம்மாதைக்கொண்டாடி நின்றனர். அங்கொருபால், மத்தளம் கொட்டுவோரும், சங்கு ஊதுவோரும், வாச்சியங்கள் முழங்குவோரும், கீதங்கள் பாடுவோருமாகப் பல்லோரும் கோலாஹலத்துடன் கொந்தளித்து நின்றனர். இவ்வழகிய எழுகட்டுமாளிகையின் அழகைப்பார்த்துக்கொண்டே வணிகனும் அவன் பரிஜனங்களும் மதனமாலையின் வாஸபவனத்தை யடைந்தனர். அது ஓர் உன்னதமான மாளிகை. ஆழ்ந்தது வேசியர் மனம் என்று அனைவர்க்கும் விளங்குமே. அப்படியே அவள், தனது தாஸிகள் அரசன் வரும்போது பாக்கியமனைத்தையும் பார்த்துவருகிறான் என்று சொல்லவே, வருகிறவன் நாடோடி அல்லவென்று அறிந்தாள். ஆகவே, மிக வணக்கத்துடன் எதிர்கொண்டு வந்து தண்டமிட்டனள். விநயமும், அறிவும், சந்தோஷமும் வெளிப்படுமாறு மொழிந்து, மாளிகைக்கு அரசனை அழைத்துச்சென்று, மன்னவர்க்கே உரிய உயர்ந்த ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்தனள். அரசன் அவ்வனிதையின் வடிவழகைக் கண்டு மனம்பூரித்திடினும், தனது உண்மையை வெளியிடாமலே, அவளுக்கு இசைந்தவாறு பேசி, அவளை மனம் குளிரச்செய்தான்.

பிறகு, அம்மெல்லியல் அரசனுக்கு மஞ்சனம் செய்வித்தனள். அவளது இஷ்டத்திற்கு இணங்கி

அரசன் குங்குமமப்பிக் குளிர்சாந்தும் பூசிக்கொண்டு பூவும் பூண்டுக் கோடியும் கட்டிக்கொண்டனன். அவளது நியமனத்தாற் பணியாளர் வேந்தனுக்கு அறுசுவை அன்னமிட்டனர். பின்னர், மதனமாலை அரசனது ஆட்களுக்குப் பரிசுகள் அளித்து, அன்னமிட்டு, அவர் விடாய்தீர்த்துக்கொள்ள விடுதியும் அளித்தனள். கண்ணுரக்கண்டவாறே காதல் கொண்டமையால் தானும் அரசனுக்கு ஆட்பட்டனள்.

அரசன் அவளுடன் கூட உண்பதும் பருகுவதுமாய் இருந்தனன். அவ்வண்ணமிருந்தமையால் ஒருநாள் அவளுக்கு அரசனிடத்து ஆசைமிகுந்தது. தான் இன்னுனென்று எவர்க்கும் தெரியாமலே சக்கிரவர்த்தியின் வழக்கபடி வாழ்வுடன் பலபொழுதுகள் போக்கினன். வறுமையால் வருந்தியவர்கட்கெல்லாம் தன்னிஷ்டப்படி கைகூசாது கண்டவற்றை எல்லாம் கொடையாக வளித்தனன். மதனமாலை, காசுக்கே ஆசை கொள்ளும் வேசியாயினும், நேசமிக்கு வேந்தன்மீது வேட்கையால் அவன் வேண்டியவற்றை எல்லாம் ஈந்தனள். ‘கையிற் பணமுண்டானுல் பேசும்; கடனுனல் புறத்தே போம்.’ என்று பிறரைச் சொல்லும் பாவையேயாயினும், அவள் தன் செல்வத்தையும் உடலையும் உயிரையும் தான் உகந்தவனுக்கே இட்டு, ‘உய்ந்தேன்’ என்றே எண்ணினள். அவனிடத்திற் காதல் மிகுந்தமையால், அத்தேசத்து அரசனுன நரசிங்கன் அவள்மீது ஆசை கொண்டு அவாவுடன் அவளை அணுகிய போதெல்

லாம் பல்வேறுன ஸமாதனங்கள் சொல்லி, அவனை அகற்றினள். இவ்வண்ணம் அவ்வனிதை அவனுக்கு வெகுகாலம் உசாத்துணையாகவிருந்து நாளும் நாநாவிதமாக உதவினள். வேந்தன் அவள்பணி கொண்டு தன்னுள்ளே ஆராய்ந்து தன் அமைச்சன் புத்திவரனை அழைத்து ரஹஸ்யமாக அவனுடன் ஆலோசிப்பானுனன்.

'அப்பா! வாரவிலாஸினி பணத்தையே எண்ணுவள். பணமில்லாதவனைப் பிணமென்றே எண்ணித் தூர விலகுவள். அவளுக்குக் காதல் என்பது கனவிலும் கிடையாது. அவள் வகைவகையான வஞ்சகத்தையே விச்சையாகக் கொண்டவள். பேராசையையே இவ்வுருவாகப் படைத்திட்டனன் பிரமன். அவள் யாசகர்க்கு எள்ளளவும் ஈவதே இல்லை. இவ்வகை வேசியிலும் வேசியே இம்மதனமாலை. இவளோ என்மீது காதற் கொண்டமையால் நான் தன் செல்வத்தை எல்லாம் செலவிட்டாலும் மனம் சிணுங்குவதில்லை. நாளும் நவநீதியும் சொரிந்திட்டு, அன்பினுல் எனக்கோர் இன்பமும் தந்து ஆநந்தமுறுகின்றனள். இவளுக்கு என்னுல் மாறுதவி செய்ய இயலாது: செல்வம் சிறிதும் இல்லை. வாக்கினுல் வரனளிப்போமென்றுலோ, அது ஒருநாளும் முடிவுபெருது. இஃதிவ்வாறிருக்க, நான், செயல் ஒன்றுமறியாது' மயங்குகின்றேன்.

இவ்வண்ணம் இறைவன் இயம்பியதைச் செவியேற்றுச் செப்பினன் அமைச்சன். 'வேந்தே! தாங்கள் இஃது உகந்திடில், ஒன்று செய்யலாம். ஒரு சமயத்திற் பிரபஞ்சபுத்தி என்னும் துறவி நுமக்கு

விலையில்லாத மாணிக்கங்கள் அனேகம் காணிக்கை யாக வளித்தனனே. திருவுள்ளமுண்டானால் அவற் றிற் சிலவற்றை இவளுக்குப்பரிசாக ஈயலாம்.'

தனது இனிய நண்பன் இவ்வண்ணம் உறைக் கக்கேட்டு கோவும் மறுமொழி கூறுலானாயினன்: 'ஐயா! அவை அனைத்தையும் அளித்திடினும் இவள் செய்த பேருதவிக்குக் கைமாறு ஆகுமோ? ஆகாது. நான் இஃது இயம்பியதால் இவள் செய்த உதவி எவ்வளவென்று தெரியவில்லையா?'

'இறைவ! அந்தச் சன்னியாசியினால் ஆகாதது ஒன்றுமிலது. தங்களுக்கு இவள் தொண்டு செய் தாள் என்னும் பெருமைக்கும் உண்டோ அளவு? இச்செய்தியை அத்துறவியினிடம் இயம்பலாகாதா?" என்றனன் புத்திவரன்.

மந்திரி மொழிந்ததைக்கேட்டு, மன்னவன் ஒரு கதை சொல்லத் தொடங்கினன் :—

பண்டு ஒருகால் பாடலிபுரத்திற் பிக்ஷு ஒரு வன் என் ஆஸ்தானமண்டபத்திற்கு அடிக்கடி வரு வது உண்டு. அவன்பெயர் பிரஞ்சபுத்தி. அவன் ஒவ் வொரு நாளும் ஒரு செப்புச் சிமிழ் கையிற்கொண்டு வந்தான். அதை எனக்களித்தனன். நானும் அதை பொக்குஷக்காரனிடத்துத் தந்தேன். பிறகு, அந்த பிக்ஷு ஓராண்டுகாலம் வருவதும் போவது மாகவே இருந்தும் சிமிழ்கள் பொக்குஷத்திலேயே இருந்தன. பின்னர் ஒருநாள் துறவி செப்புச் சிமி ழைக் கொணர்ந்து என்கையிற் கொடுக்கவே, அது கை தவறிக்கீழே வீழ்ந்து உடைந்தது. அதினின்று அனற்போல அழகிய ரத்தினம் ஒன்று வெளிப்பட்

டது. உள்ளுரை இதயம் இனையதென்று தெரிந்தால் தெள்ளியதோர் தேர்ச்சியுண்டாகுமல்லவா? ஆங்கே அச்சிமிழ்களின் உள்ளுரை பொருள் தெரியவே, அவற்றை எல்லாம் திறந்து அவற்றினுள்ளே இருந்த மாணிக்கங்களை எல்லாம் கைக்கொண்டேன். பிறகு, பிரபஞ்சபுத்தியைக் கேட்டேன். ' ஏன் ஐயா! எனக்கு இம்மாத்திரம் மாணிக்கங்களை நாளும் ஈந்து, என்னை நீர் நண்ணுவது?' அத்துறவி அங்கிருந்தவர் அனைவரையும் அகன்று செல்லும்படி ஆணையிட்டு, என்னுடன் ரஹஸியத்தில் இயம்பினன்: 'வரும் கிருஷ்ண சதுர்தசி யன்றைக்குப் பொழுது சாயவே இந்நகரின் புறத்தேயுள்ள மயானத்தில் நான் செய்யவேண்டிய விரதம் (விச்சை) ஒன்று உண்டு. அங்கு நீ எனக்கு உதவியாய், வீரனே! ஏகுக. வீரன் உதவி புரிந்திடில் இடையூறின்றி இனிதே அமைந்திடும் ஸித்தியெல்லாம். இறைவனே! இதுவேதான் என் முறை.' துறவியின் இம்முறையிட்டைக் கேட்டு இணங்கினேன் நானும் அதற்கு. முறை தலைக்கட்டியது கண்டு உள்ளம் மகிழ்ந்து சென்றனன் சிரமணன். சென்றபின் சிறிது நாட்களில் கிருஷ்ண சதுர்தசி நெறுங்கவே என் நினைவிற்கு வந்தது சன்னியாசிக்கு நான் அளித்த வாக்கு.

அற்றை நாள் கடனெல்லாம் முடித்து இரவு எப்பொழுது வரும் என்று எதிர்பார்த்திருந்தேன். மாலைப்பொழுது வரவே முறைப்படி தெய்வத்தைத் தொழுது உணவும் உண்டு உட்கார்ந்திருக்கையில் விதிவசத்தால் அயர்ந்து உறங்குவானேனேன். ஆங்கு

என் கனவிற் தோன்றினர் கருடன் மீது ஏறும் இறைவர். பூவிற் பிறந்த மங்கையைத் தன் பக்கத்தே வைத்துப் பக்தவத்ஸலன் நின்றார் என்முன்னே. நின்று நோக்கி நியமித்தனர் என்னை. 'பிள்ளாய்! பிரபஞ்சபுத்தி என்னும் பெயர் உண்மையானதே. அது அவனுக்கு உரியதே. அவன் உலகத்தோரைத் திருப்தி செய்வதிற் றேர்ந்தவன். குழந்தாய்! உன்னைச் சுடலைக்கு அழைத்துச்சென்று தன் தெய்வத்திற்கு ஓர் பலியாகச் செய்யக்கருதி யிருக்கின்றான். ஆகையால், இனி நீ அவன் சொல்வதைக்கேளாதே. அவன் உன்னைப் பலிக்கொடுப்பதாக வெண்ணி ஏதேனும் செய்யச் சொன்னால், முன்பு நீ யதைச் செய்யாமல் அவனையே செய்து காட்டும்படி சொல். பின்பு நீ அங்ஙனமே செய்வதாய் வாக்குமளித்திடு. பிறகு, அவன் உன்னைக் கொல்ல எண்ணியவாறே நீ அவனைக் கொன்றுவிடு. உன்னைப்பலி கொடுத்து அவன் அடையக்கருதும் ஸித்தியை நீயே அடைந்திடு.' இவ்வண்ணம் இனிது கூறி விஷ்ணு வியனுலகம் ஏகவே, நான் கண்விழித்துச் சிந்திப்போனுயினேன். 'வலியமாயாவியாகிற இவன் கொல்லுதற்குரியவன் என அரியின் அருளால் அல்லவோ உணர்ந்தேன்.' என்று எண்ணித்தெளிந்து அந்நள் ளிரவைக் கழித்தேன். பிறகு, என் வாளைக்கையில் ஏந்தி ஏகாகியாக அம்மயானம் ஏகினேன். அங்கு அத்துறவி பாங்கான மண்டலம் ஒன்று அமைத்து, மஞ்சளும், குங்குமமும், பொன்னும் பொருளும், சந்தனமும் கொண்டு பூசனை புரிந்து நின்றான். கபடம் மிகுந்த அவ்விழிஞன் என்னைக்கண்டு உள்

ளங்குளிர்ந்து புன்முறுவல்பூத்துப் பணித்தனன். 'அரசே! கண்கள் இரண்டையும் செவ்வனே மூடி அங்கமெல்லாம் தரையிற்படுமாறு ஸாஷ்டாங்கமாய்த் தண்டனிடும். ஐயா! தண்டனிட்டக்கால் சிந்தையெல்லாம் சிதைந்திடும். பின்னும் ஐயனே! அரும்பெரும் ஸித்தியெல்லாம் எனக்கேயன்றி உமக்கும் கைகூடும்.' இவ்வளவும் கேட்டு, 'அப்படியானால் சரி. துறவியே! முன்பு நீரே தண்டனிட்டு எனக்கு அம்முறையைக் கசடறக்கற்பித்தால் நான் அங்ஙனமே தண்டனிடுவேன்.' என்றேன். அது கேட்டு அகமகிழ்ந்த அம்மூடச் சிரமணன் பாங்காகத் தண்டனிட்டான். சட்டென என் வாளை ஓங்கி வலியவெட்டி அவன் தலையைத் துண்டித்தேன். வெட்டென வானத்திலோர் வாணி உண்டாயிற்று. 'அரசே! போற்றி! இந்நிலவுலகுக்கு ஓர் நன்மை செய்தீர். நன்னர்ச் செய்தீர். பாவி இவன் பிக்ஷுவாய்ப் பலதீமைகள் செய்தனன். தன் கோவைக் கொலைசெய்ய வெண்ணினன். இவன் சிரத்தைச் சிதைத்ததனால் நும்புகழ் பொங்கியது. வேந்தனைத் தான் பலிகொடுத்து வானிற்செல்லும் விச்சை பெறக் கருதியவன் இக்கொடும்பாவி. இவன் தலையைத் துண்டித்த உமக்கே அப்பெறற்கரிய பெரும் ஸித்தி உண்டாகக் கடவது. நான் வேண்டியபடி யெல்லாம் வேஷம்பூண்டு அண்டமெல்லாம் அலைந்து திரியும் தனுதிபன் (செல்வப்பெருக்குடைய செம்மல்). இன்னும் நீர் ஒரு நல்ல வரனை வேண்டிக்கொள்ளும். நான் உமது வீரத்தைக் கண்டு மனம் மகிழ்ந்ததால் அதையும் அளிக்கின்

றேன்.' இங்ஙனம் இயம்பி என்முன்னே நின்றனர் தேவர் ஒருவர். உடனே நான் தண்டனிட்டு, 'எந்தாய்! எப்பொழுது நான் நல்ல வரம் ஒன்று வேண்டித் தம்மைத் தியானஞ் செய்கிறேனே அப்பொழுது நீர் எனக்கு எதிர்ப்பட்டு அவ்வரம் அளித்தருளவேண்டும்' என்று விண்ணப்பம் செய்தேன். அது கேட்டு அத்தேவரும் சந்தோஷமடைந்து, 'அப்படியே யாகுக.' என்று அறைந்து, தன் வழியே சென்றனர். பிறகு, புதிதாகக் கிடைத்த ஸித்தியின் உதவியோடு நான் அரண்மனைக்குச் சென்றேன். அப்பா! புத்திவரனே! உனக்கு இப்பொழுது நான் என் கதையையும் சொன்னேன். எனக்குக் குபேரன் அளிக்கும் வரனைக்கொண்டு மதனமாலைக்குக் கைமாறு செய்ய வேண்டுமென்று எண்ணுகின்றேன். ஆகையால், புத்திவரனே! நீ பாடலீபுரத்திற்கு மீண்டும் செல்க. அங்குச் சென்று எனக்கு மெய்க்காவலாக ஏற்படுத்திய சிற்றரசரின் குமரர்க்கெல்லாம் மாறு வேஷம் போட்டு, இங்கு அழைத்து வருக. அவர்கள் இங்கு வந்தவாறே, நான் மீண்டு அவர்களுடன் பாடலீபுரம் செல்வன். இவ்வண்ணம் தன் மந்திரிக்குக் கட்டளையிட்டு, அவனையும் தன் பணியாளரையும் விடை கொடுத்து அனுப்பினன். அந்நாள் நடாத்த வேண்டியவையெல்லாம் முடியவே, அன்றிரவை அம்மாதுடன் கழித்தனன் அரசன் விக்கிரமாதித்தன். அன்றிரவெல்லாம் 'எத்துணையோ உதவிய இம்மாதரசியினின்று நீங்கி என் செய்கேன் நான்' என்று ஏங்கிக் கண்துயிலாது துயரடைந்தனன் அரசன். மதன

மாலையோ தன் மணாளன் மனமிழந்து மயங்குவதைக்கண்டு, 'இதெல்லாம் நல்லதல்ல. ஏதோ பெரும் துயர் வரும்' என்று வருந்திக் கண்ணீரைத் தன் கைகளால் இறைத்து விழித்திருந்தனள். மறுநாள் அரசன் காலைக்கடன்களை முடித்து, ஏகாகியாக ஜபஞ் செய்யவேண்டுமென்று ஜபமாலையைக்கொண்டு பூஜாக்கிரஹத்தை அடைந்தான்.

அங்குச்சென்று விச்ரவஸின் புதல்வனை குபேரனைச் சிந்தித்தான். அத்தேவனும் அவன் முன்னே தோன்றினன். தேவன் தோன்றியவாறே,'பிரபுவே! முன்னர் அடியேன் வேண்டும்போது ஒரு வரம் அளிக்கவேண்டும்' என்று கோரினேன். தேவரீரும் அருள்புரிந்து, 'அப்படியே ஆகட்டும்.' என்று வாக்களித்தீர். இப்போது நான் அந்தவரம் இன்னது என்று விண்ணப்பம் செய்கிறேன். அதனைத் தந்தருளல் வேண்டும். பொன்மயமான ஐந்து புருஷர்களை அளிக்கவேண்டும். அவரது சரீரத்தை வெட்டி வெட்டி எடுத்தாலும் அது குறைவுறாது வளர்ந்து பெருகி நிறைந்தே இருக்கவேண்டும்.' என்றனன். இவ்விண்ணப்பத்தைச் செவிசார்த்திக் களிப்புடன், 'அப்படியே ஆகுக.' என்று இயம்பி மறைந்தனர் அத்தேவும். உடனே உயர்ந்து அழகிய புருஷவுருவங்கொண்ட ஐந்து தங்கப் பிரதிமைகள் அந்தப் பூஜாகாரத்தில் நிற்கக் கண்டான் அரசன். உடனே தான் மந்திரியுடன் சொன்னவற்றை நினைந்து தன் விச்சையின் வலிமையினால் விசும்பில் எழும்பிப் பாடலீபுரத்திற்கு ஏகினன் விக்ரமாதித்தன்.

தனது நகரத்தை அரசன் அடைந்தவாறே குடிகளும் அமைச்சரும் அவனைப் புகழ்ந்து போற்றினர். காணமற்போன கணவனைக் கண்டோம் என்று கும்மாளங்கொண்டு மகிழ்தனர் அரசியரும் அந்தப்புரத்தி லுள்ளோரும். அரசன் செங்கோல் செலுத்த ஆரம்பித்துத் தன் கிரிசைகளையே குறியாகக் கொண்டிருந்தாலும், தன் பகைவனது பட்டணத்தையே நினைந்திருப்பான்.

'இது இவ்வண்ணம் நிகழ பிரதிஷ்டான நகரத்தில் அரசன் மதனமாலையின் இல்லத்தினின்று அகன்று செல்லவே அங்கு நடந்ததுதான் என்ன?

'ஆகா! என்நாதன் பூஜாகாரத்திற் சென்று வெகு நேரமாயிற்றே இன்னும் வரவில்லையே! இது என்ன?" என்று மனம் உருகி நெஞ்சு பதைப்பப் பூஜாகாரத்தினுள் புகுந்தனள் மதனமாலை. நுழைந்து தேடியும் அவர் புலப்படவில்லை. கூவி யழைத்தனள். அவளது ஆர்வச் சொற்கேட்டும் அவன் வரவில்லை. அவன் இல்லையேயாயினும் ஓங்கி உயர்ந்த ஐந்து பொன் பரதிமைகள் மாத்திரம் நின்றன. அவள் மணாளன் மாயமாய் மறைந்ததையும் இப்பிரதிமைகளையும் காணவே, அவள் சிந்திப்பாளானாள். 'அந்தோ! நான் காதலித்த கண்ணாளன் கந்தர்வனோ, வித்தியாதரனோ? அப்பாங்கனை புண்ணியன் தன் பாவையை இப்புருஷர்க்குப் பங்கிட்டு,விசும்பில் எழும்பியே சென்றான். என் செய்கேன் இவரை நான்? இவர் எனக்கு ஓர் பெரும்பாரம் ஆவர். இவரை நான் வேண்டேன்' என்று எண்ணித் தனது ஊழியக் காரரையெல்லாம் பலமுறைகள் கேட்ட

னள். மாளிகையின் புறம் சென்று கண்டவற்றை யெல்லாம், 'என் கண்ணாளன் எங்கே?' என்று கேட்டு அலைந்தனள். இவ்வினாவுக்கு விடையளிப்பார் எவரும் இலர். கோலமணிமேடையிலும், கோயிலிலும், தோட்டத்திலும், துறவுகளிலும், அட்டாலத்திலும்! அரணிலும், கூடத்திலும், வாசலிலும், வீதியிலும் தேடித்திரிந்து சிந்தை சிதறி, வேந்தே! என்னரசே! கண்மணியே! கண்ணாளா! என் இன்னமுதே! என்னுயிரே! என்றலறி, அகங்கரைந்து கண்ணீர்மல்கி மிக்க வாடினள் அவ்வாணுதல். உண்ணுது பருகாது, உறங்காது தன் உள்ளத்துவந்த உத்தமனையே நெஞ்சுருகிக் கண்பனிப்பக் கூவியழைத்தும் அவன் வாராதது கண்டு, 'அவர்க்கே என்னுயிரையும் உய்த்திடுவேன்.' என்றே உருதி கொண்டனள்.

அம்மாதுசிரோமணி படும் பெருந்துயர் கண்டு அவளது சேடியரெல்லோரும் அவளைச் சார்ந்து, 'தேவி! நும்மணாளர் மனம்போன போக்கெல்லா முடைய மாட்சிமை தங்கிய விண்ணவரே யன்றி வேறில்லை. நீங்கள் அவர்க்கு இவ்வண்ணம் ஆட்பட்டிருப்பதை நோக்கி எப்பொழுதேனும் மீண்டும் வந்து சேருவார். துயரப்படுவதினால் பயன் என்னை? அவரோ மரித்தாரல்லர். நீங்கள் கொண்ட தீராக் காதலோ அவர்க்குத் தெரிந்தே யிருக்கும். அவர் திடீரென்று மறைந்ததற்குக் காரணம் என்னவோ காணவியலாது. விண்ணவர் விந்தை மண்ணவர்க்குத் தெரியுமா? மனத்தைத் தேற்றிக்கொண்டு கடவுளை நம்பியிருந்தால் நும்கணவனை மீண்டும் நீர் காணலாம்.' என்று ஆர்வத்துடன் ஆறுதல் இயம்

பினர். தன்னுயிர்க்குயிரான சேடிமார் எல்லாம் ஆர்வத்துடன் அறையும் இன்மொழி கேட்டுத் தெளிந்து தேர்ச்சி யடைந்து, சபதம் ஒன்று கூறினள். 'இன்றுமுதல் ஆறுமாதங்களுக்குள் என்னுருயிரான மணாளன் மீண்டும் தர்சனம் அளிக்காவிடில், நான் என் செல்வத்தை யெல்லாம் செலவழித்து, நெருப்பில் வீழ்ந்து, என்னுயிரையும யானே மாய்த்துக் கொள்வேன்.' இவ்விதமாய்ச் சபதம் செய்து தனக்கு இயற்கையான பாவனைகளை யெல்லாம் ஒடுக்கித் தானும் அடங்கினள்.

பிறகு, ஒவ்வொருநாளும் தானங்கள் அளிப்பதும், சிந்தைக்கினிய தன் மணாளனைத் தியானிப்பதுமாய் இருந்தனள். ஒருநாள் தங்கப்பிரதிமைகளுள் ஒன்றின் இருகரங்களையும் வெட்டி வேதியர்க்கு அளித்தனள். மறுநாட் காலையிற் போய்ப் பார்க்கும்பொழுது கைகள் இரண்டும் முன் போலவே இருந்தன. 'ஓகோ! இக்கைகள் இரவில் முளைத்தன.' என்று எண்ணிக் கொண்டனள். பிறகு, மற்றப் பிரதிமைகளின் கைகளையும் வெட்டி அந்தணர்க்கு ஈந்தனள். அவைகளும் முளைத்தெழுந்தன. இதனால் அவள் அவை அக்ஷயங்கள் என்று கண்டு, ஒவ்வொரு நாளும் வந்த வேதியர்க்கெல்லாம் அவரவர் ஓதிய வேதங்களைக் கேட்டறிந்து, வேதம் ஒன்றிற்கு ஒரு கை வீதம் பரிசு கொடுத்தனள். சிறிது காலத்திலேயே இவள் அளிக்கும் கொடைகளின் புகழ் திசை எல்லாம் பரவியது. பாடலீபுரத்திலிருந்த பார்ப்பனச் சிட்டர் ஒருவர், 'மதனமாலை என்பவள் பெரும் பரிசளிக்கும்

பெருமாட்டி.' என்று கர்ணபரம்பரையாய் கேட்டு, அவள் மாளிகைக்குச் சென்றனர்.

இவ்வந்தணர் செல்வமென்பதைச் சிறிதும் அறிந்திலர்; வறுமை என்பது எப்பொழுதும் அகலாது இவரிடத்தே குடிகொண்டது. இலக்ஷ்மி இவரைக் கண்ணெடுத்துப் பாராவிடினும் ஸரஸ்வதியின் பரிபூரண கடாக்ஷம் பெற்றவர். ஆகையால், நீடித்த நாளாய் இவரது நெடு நிழற்போல் நின்ற நல்குரவு ஒழிந்திடுமென்று எண்ணியே விரைந்து சென்றனர். விரைந்து சென்ற விடாயாலும் மாளிகையினது மாட்சிமையின் காட்சியாலும் அவர் மயர்வெய்தி நின்றனர். மதனமாலையின் தோரண வாசலில் காவலாளர் வேதியரை நோக்கித் தலை வணங்கி, 'அகத்தே செல்க' என்றனர். அந்தணரை அகத்தே செல்லச் செய்து, தமது தேவிக்கும் 'வேதியர் வந்தனர்.' என்று தெரிவித்தனர். மதனமாலை பூசுரரைக் கண்டெழுந்து தரையில் வீழ்ந்து தண்டனிட்டுப் பூவும் பூசனையும் ஆர்வத்துடன் அளித்து, அவர் ஓதிய நான்மறைகட்குப் பரிசாக தங்கப் புருஷர்களின் கரங்களைச் சமர்ப்பித்தனள். கொடை யளிக்கும் கோமகளைக் கண் குளிரப் பார்த்தனர் பார்ப்பனச்சிட்டர். நோற்ற நோன்புகளினாலும் தன்னுயிர்க்குயிரான மணாளனைப் பிரிந்ததினாலும் அவள் உடல் முழுவதும் வாடி உயிர் காவலிட்டு வெளிர்த்திருந்தது. செய்திகேட்பதின் சபலம் என்பது அந்தணர்க்கு எப்பொழுதும் உள்ளதேயாம். ஆகையால், அந்தச்சிட்டர் அவள் நிலையைநோக்கி அதற்குக் காரணம் என்னவென்று

அங்குள்ளோரை வினவினர். அவளது பணியாளர் அவளது வரலாற்றை எல்லாம் நடந்தவாறு சொல்லி இறுதியில் அவளது கொடும் சபதத்தையும் எடுத்துரைத்தனர். 'இத்துணை யழகிய மாதரசிக்கு இத்துணைத் துயரமா? இதென்ன உலகியற்கை?' என்று பெரும் விசனங் கொண்டனர் வேதியர். சொலற்கரிய செல்வம் கிடைத்ததே என்று குதித்து எழும் களிப்பு ஒருபாலும் அரும் பெரும் கொடையளிக்கும் கோமகளின் நிலைகண்டெழும் விசனம் மறுபாலும் அவரது மனத்தை அலக்க, அவர் அம்மாளிகையினின்று வெளிப்பட்டனர். வெளியில் வந்து, இரண்டு ஒட்டகங்களைத் திட்டஞ் செய்து தனக்குக் கிடைத்த தங்கக்கரங்களை அவற்றின்மீது ஏற்றிக்கொண்டு பாடலீபுரம் சேர்ந்தனர் அந்தணர்.

செல்லும் வழியில் அபாயமின்றி வீடுசேர்ந்ததும், 'நானும் என் செல்வமும் சேமத்துடன் வீடு சேர்ந்தது அரசன் செங்கோல் செலுத்துவதனால் அல்லவோ?' என்று நினைந்து அரசனைக் காண விரும்பினர். சிறிது நேரத்தில் அரசன் சன்னதியை அடைந்து—அந்தணர்க்கு உள்ள வினவின்றியே விடையளிக்கும் இயல்பிற்கு இசைந்தவாறு—வரலாற்றை எல்லாம் சொல்வாராயினர். 'வேந்தர் வேந்தே! நான் நும் நகரில் இருக்கும் ஓர் அந்தணன். வருமையால் நீடித்த நாளாய்த் துயரடைந்து பொருளைத் தேடிச் சென்றேன். செல்வதைத் தேடித்திரிந்து தென்னாட்டை அடைந்தேன். அந்நாட்டில் நரசிங்கனென்னும் அரசனது பண்டைவீடான

பிரதிஷ்டான நகர் சென்றேன். இரந்தவர்க்கீயும் வள்ளல் எவரேனும் அவ்வூரில் உளரோவென்று அலைந்து திரிந்தேன். பெருங்கொடை யளிக்கும் பெருமாட்டி என்றனர்; அவள் பெயர் மதனமாலை. அவள் ஒரு விலைமாது. நான் அவளது மாளிகைக்குப் போனேன். அவளுடன் கூடி வாழ்ந்தவர் தெய்வத்தன்மை தங்கியவராம் ஒருவர். அவர் அவளுக்கு அக்ஷயமான ஐந்து தங்கப் புருஷப் பிரதிமைகளை ஈந்து காணமற்போனாராம். அவரது பிரிவாற்றாமையாலே அம்மாதரசி படும் துயரத்தை நான் என்னவென்று இயம்புவேன். அவள் இவ்வுலக வாழ்க்கையை விஷத்தினால் உண்டாகும் திராவேதனை என்றே எண்ணுகின்றனள். இம்மெய்யைப் பொய்யென்றே இகழ்கின்றனள். உண்ணும் உணவை வீணாயாஸம் என்று விட்டொழிந்தனள். சீவிதம் ஓர் யமயாதனை என்று வெறுத்து உயிர் துறந்து விடுவள். ஆனால், அவளது சேடியரும் தோழிமாரும் படாதபாடெல்லாம் பட்டு, அவளுக்கு ஆறுதல் கூறினராம். நெஞ்சம் நொந்து தளர்வெய்தி இறப்பதற்கே எண்ணிய அவள் தன் அன்னையர் ஆர்வச் சொற்கேட்டுத் தெளிந்து, சபதம் ஒன்று செய்தனளாம். அது என்னவென்றாலோ, 'ஆறுமாதத்திற்குள் என் மணாளனை நான் காணவிடில், பாங்கற்ற என்பாவி உடலை நான் பேரழலிற் போட்டுப் பொசுக்குவேன்.' என்பதேயாம். இவ்வண்ணம் கொடுஞ் சபதம் செய்து பிறகு, 'அந்தோ ! எனக்கு இம்மையில் இத்தீராத்துயர் வந்ததே ! என் இறையை இழந்திட்ட இழிதகையாள் இனி என் செய்

கேன்! மறுபிறப்பிலேனும் இத்துயர் உருது இருப் பேனே!' என்று எண்ணி, ஒவ்வொருநாளும் அரும் பெரும் கொடைகள் அளிக்கின்ருள். வேந் தே! நான் அவளைக் கண்டேன். தளர்வெய்தித் தள்ளாடி நடக்கின்ருள். உண்பதும் இல்லை! நீரும் பருகுவதில்லை. அங்கமெல்லாம் கரைந்து மெலிந்து ஒளியோங்கிய மேனியேயாய் நிற்கின்ருள். அவளது மெலிந்துநீண்ட கரத்தினின்று தானநீர் அல்லும் பகலும் பெருகியோடுகின்றது. அவளது முகத்தில் மைவண்ண நறும்குழல்கள் வண்டினங்கள்போல மொய்த்திருக்கின்றன. நான் என் சொல்வேன். அவள் நிலை கண்டவர் தம் மனத்தைக் குமைத்து விடும். நல்லதோர் யானைப்பிடிக்குத் தளிர் இளம் வயதில் மதம் பிடித்தால் அதன் நிலையேதான் அவள் நிலையும்.

ஆனுல்,இருவர்க்கும் வாசியுண்டு.யானைப்பிடிக்கு வெறியினுல் வந்தமாறுதல். இவளுக்கோ மிகுந்த காதலாலும் பிரிவாற்ருமையாலும் வந்த மாறுதல். இவளைக் காதலியாகக் கொண்ட மணுளனை இகழத் தான்வேண்டும்; ஒருகால் அவனைப் புகழவுந்தான் வேண்டும். அவன் பிரிவினுலல்லவோ இவள் இங் ஙனம் உயிரிழப்பது. நான் நான்கு வேதங்கள் ஓதி னவன் என்று இப்பெருமாட்டி கண்டு எனக்கு நான்கு புருஷர்களது கரங்களை அளித்தனள், வேதம் ஒன்றிற்கு ஒவ்வொன்ருகக் கணக்கிட்டு. அவற்றை என் குடும்ப ஸம்ரக்ஷணத்திற்கு எய்ப் பினுல் வைப்பாய்ச் செய்து, எனக்குரிய அறங்களை முறைப்படி செய்து என் வாணுளைக் கழிக்க

எண்ணுகிறேன். இறைவ! என்னை நீ காத்தருள் வாயக.'

இவ்விதமாகத் தன்னெதிரில் நின்று அந்தணர் அறைந்த மொழிகளைச் செவியேற்று மனம் குன்ருது, முகம் வாடாது, காத்துக்கொண்டது மன்றி அவர் உரைத்து ஒழிந்த உடனே, தன்னுயிர்க்காதலிக்கே தன் மனத்தை இழந்து, மொழியாது மௌனமாக விருந்தனன் வேந்தன் விக்கிரமாதித்தன். சட்டெனைக் காவலனை அழைத்து அந்தணர்க்கு வேண்டிய உதவி செய்ய ஆணையிட்டான். பிறகு, 'ஆகா! அவளது காதலன்ருே காதல்! கண்ணுரக்கண்டால் அல்லது அது கழிவதில்லை! ஐயோ! தன்னுயிரைப் புல்லாக வெண்ணினளே! என்னுருயிர்க்கண்மணி சபதம் செய்தனளே! அதன் முடிவு நெறுங்கிய தன்ருே! இச்சமயத்தில் நான் கிட்ட நின்று உதவினுலன்ருே என் அன்பு பயன்படும்? இனித் தாமதிக்கலாகாது.' என்று ஓர்ந்துணர்ந்து தன் அரசை அமைச்சர்பால் ஒப்புவித்துச் சட்டெனத் தான் ஆகாய யானமேறி விரைந்து சென்ருன். பிரதிஷ்டானநகரத்தில் தன் காதலியின் இல்லத்திற் புகுந்தான்.

ஆதரத்துடன் உள்ளே சென்று நோக்கினன் தன்னின்னுயிர்ச் செல்வியை. மாசற்ற வெண்ணிலவே என்ன ஆடை பூண்டு நிற்கின்றனள். தனது செல்வத்தை எல்லாம் கல்வியிற் சிறந்தவர்க்கே காணிக்கையாக இடுகின்றனள். ஒவ்வொரு நாளும் அவள் உடல் கரைந்து மெலிந்து ஒடுங்கியது! கண்ணிற்கினிய மேனிதான் விளங்கியது. இங்ஙனமே

சில நாட்கள் இருந்தால் அவளது பெயர் மாத்திரமே விஞ்சும். [ஆம், ஆம், தேய்ப்பிறையில் வெண்மதியும் தனது கலைகளைச் சுரர்க்கே இட்டுக் குறைந்து, இறுதியில் பர்வகாலத்தில் மறைந்து போவதுண்டு.]

'இனி நான் இம்மையில் என்னிறைவனைக் காணுவதில்லை.' என்று அவள் தனது ஊக்கத்தைக் கைவிட்டனள். இப்படியிருக்க அவளது காதலன் திடீரென்று தோன்றினன். அடர்ப்புண்டு இறப்பதற்கே எண்ணிய ஏழைக்கு அரும் அமுதம் கிட்டியதுபோல அவனது நல்வரவு அவளுக்குத் தோன்றியது. ஆயினும், கிட்டாததோர் இன்னமுது அவள் கண்ணிற்குத் திடீரென்று கிட்டியதால், திடுக்கிட்டுச் சற்றுத் திகைத்து நின்றாள். பிறகு, 'அந்தோ! கண்ணிற்கெட்டியது கைக்கெட்டாது போமோ? ஆகா! என் பாக்கியம் எப்படியோ! மீண்டும் அகன்றிடுவானோ என் நாதன்?' என்று பெரும் பயங்கொண்டு, அவனை விடாது பற்றல் வேண்டுமென்று, அவனது கண்டத்தைத் தன்னிரு கரங்களாலும் இறுகக்கட்டித் தழுவினள். இங்ஙனம் கட்டிச் சற்று நேரம் மூச்சுவிடாது நின்று, தன் கண்களைத் திரவிழித்து அவனை நோக்கிய பின்னர், ஒருவாறாக மூச்செறிந்து, 'ஈரம் இரக்கம உண்டோ உனக்கு? நான் ஒருபாவமும் அறியேன். என்னைத் திடீரென்று விட்டு ஓடினாயே!' என்று துக்கம் தொண்டையில் அடைத்திட விக்கி விக்கி நெக்குருகிக் கண்ணும் கண்ணீருமாய் நாத்தடுமாறி இயம்பினள். 'சொல்லுகிறேன் வா. இங்கு எல்லோரும் இருக்கை

யில் ஒன்றும் இயம்பவொண்ணுது. ரஹஸியத்தில் நாம் இருவருமாக இருக்கையிற் சொல்லவேண்டியது.' என்று சொல்லினன் அவன். அவளது பரிஜனமெல்லாம், 'ஓகோ! நம் தேவியின் மணுளன் வந்தனன்! வந்தனன்!' என்று ஆவலிப்புடன் கூச்சலிட்டிருக்கையில், அவளை அழைத்துச் சென்றனன் வேந்தன்.

அவளைத்தனியாக அழைத்துச் சென்று, தான் உண்மையில் இன்னுன் என்பதையும் தன் வரலாற்றையும், நரசிங்கன் என்னும் அரசனை மதியினுல் வெல்லக்கருதி அவனை நண்ணியவாறும், பிரபஞ்ச புத்தியைப் பலிகொடுத்து விசும்பிற் செல்லற்குரிய விச்சையை அடைந்தவாறும், குபேரனது அருளால் வரம் பெற்றவாறும், பெற்றவரத்தைப் பயன்படச் செய்தவாறும், வேதியர் வரலாற்றை இயம்பியவாறும், அவளது சபதம் இன்னதென்று உணர்ந்து தான் அவளிடம் வந்தவாறும் எடுத்துறைத்து, இறுதியில் மொழிவாஞயினன். என் செல்வி! நரசிங்கன் என்னும் இவ்வீரன் வலிமிகுந்தவன். இவனைப் படைகளால் வெல்லலரிது. ஆளுக்கு ஆள் எதிர்நின்று பொருதலில் அவனே விஞ்சுவான். இவன் மண்ணில் நடப்பவன், நான் விண்ணிற் பறக்கும் விச்சை கற்கினும் இவனை வெல்லலியலாது ஒழிந்தேன். தருமம் தவறிப் போர் புரிவோமென்ருல் அது அரசர்க்குத் தகாது. ஆனுல்,இவனை என் வாயிலில் நிறுத்தி என் பாணரைக்கொண்டு, இவன் என் அடிமை என்று சொல்லிவிப்பதாய் நான் சபதஞ் செய்தேன்.

அச்சபதத்தை மெய்யாக்க, என்செல்வி! நீ உதவி செய்வாயாக'.

அரசனுடன் இவ்விதம் கலந்து பேசியதே தனது நற்பாக்கியமென்று எண்ணித் தனது பணியாளரை அழைத்துக் கட்டளையிட்டனள் அவ் விலைமாது. 'கேண்மின்! அரசர் நரசிங்கதேவர் வந்தால் நீவிர் எல்லோரும் கண்ணிமையாது வாசலைக் காக்கவேண்டும். பின்னும், இறைவ! நரசிங்கனென்னும் வேந்தன் நம்மிடத்தில் அன்பும் ஆதரமும் பூண்டவன்! என்று, அவன் வரும்பொழுது, அடிக்கடி பலமுறைகள் கூறுக. நீவிர் இவ்வண்ணம் அறைவதைக் கண்டு வியந்து, 'இங்கு இருப்பது எவர்?' என்று அவன் வினவினால், 'இங்கு இருப்பது விக்கிரமாதித்தர்.' என்று கூறுக. இவ்வாறு கட்டளையிட்டுப் பிரதிஹாரியை அழைத்து, 'இனி நரசிங்கநராதிபர் வந்தால், வாசலிற்தடைசெய்ய வேண்டாம்.' என்று ஆணையிட்டனள். பிறகு, தன் பிராணநாதன் வந்த மகிழ்ச்சியினால் அவள் மனம் பொங்கியது; மாசற்ற சுகமடைந்தாள். ஒவ்வொரு நாளும் மேன்மேலும் அவள் அளிக்கும் கொடைகள் மிகுந்தன.

உலகெல்லாம் புகழ்ந்தனர் மதனமாலை செய்த தானங்களை. அரசன் நரசிங்கன், அம்மாதின் மஹிமையையும் அவளுக்குரிய தங்கப் புருஷர்களையும், அவரால் உண்டாகும் அக்ஷயமான பொருளையும் எல்லோரும் எடுத்துரைக்கக் கேட்டு, வியப்புற்று, தான் நேரில் அவள் இல்லத்திற்குச் சென்று பார்ப்பதற்கு அவாவுடன் ஏகினன். அவள்

மாளிகைக்கு அரசர் முன்னர் வந்தால், அகத்தே போகவொட்டாது வாசற்காவலர் தடுப்பதுண்டு. இப்பொழுதோ, திளையளவேனும் தடை இல்லாது அரசன் உள்ளே சென்றனன். ஆனால், இரண்டாவது வாசலைக் கடந்து செல்லுகையில், ‘இறைவ! நரசிங்கன் நும்மடியான் அன்புடையான்.’ என்று பாணர் உரக்கக் கூச்சலிட்டனர். அவர் கும்மாளங் கொண்டு கூச்சலிடுவது கண்டு, ‘ஐயன்மீர்! இங்கு இருப்பவர் எவர்?’ என வெகுண்டு வினவினன் வேந்தன். விக்கிரமாதித்தன்தான் இங்கு அகத்தே இருப்பது என்று கண்டு, நொடிப்பொழுது திகைத்து நின்று, பின்னர், தன்னுள்ளே உவந்து உணர்ந்தான். ‘ஆகோ! இவன் முன்னரே இவ்வண்ணம் செய்விப்பதாகச் சபதம் செய்யவில்லையா? இப்பொழுது அவ்வண்ணஞ் செய்தேவிட்டான். நானே அல்லவா வலிய வந்து அவன் சபதத்தைத் தலைக்கட்டி வைத்தேன். அச்சோ! இவன் மிக்க வலிமை பூண்டவன்தான். அந்தோ! இன்றைக்கு என்னை இவ்விதமாக வென்றானே! அவன் ஒருவன்தான் இருக்கிறான். என் கையிலும் சிக்கினன். இவனோடு நான் பொருது இவன் உயிரை உண்ணலாம் என்றால், அதுவும் கூடாதே. அகத்திற்கு வந்த அதிதியை அடர்ப்பது அரசர்க்கு ஆகாது. ஆனாலும், உள்ளே நுழைந்து பார்ப்போம்.’ என்று எண்ணி அம்மாளிகையின் அகத்தே நரசிங்கன் சென்றான். பாணர் எல்லாம் பின்படரப் பிரவேசித்த தன்பகைவனைப் புன்முறுவல்பூத்து வியப்புடன் நோக்கினன் விக்கிரமாதித்தன். பிறகு, மன்னவர் இருவரும்

ஒருவர்க்கொருவர் கழுத்தைத் தழுவிக் கட்டிக் கொண்டனர். சிறிது நேரத்திற் கெல்லாம் சித்திராஸனத்தில் உட்கார்ந்து சேமம் விசாரிக்கக் கருதி, அருகிலிருக்கும் மதனமாலையை வினவினர். மொழிகள் ஒன்றன் பின் ஒன்ருகப் பெருகுகையில் நரசிங்கன், 'இந்தத் தங்கபுருஷர்கள் எப்படி கிடைத்தனர்?' என்று கேட்கவே விக்கிரமாதித்தன் தான் இழிதகையனை சிரமணனைக் கொன்றதையும் வித்தேச்வரனது இன்னருளால் ஆகாசகமனம் கற்றதையும் பின்னும் பாவைக்குப் பாக்கியமளிக்கக் குபேரனையே போற்றி அழியாத பொன் புருஷர்கள் ஐவரை அடைந்ததையும் மற்றும் தன் சரிதையை எல்லாம் இயம்பினன். அற்புதமான அக்கதையெல்லாம்கேட்டு, 'விக்கிரமன் வலியன், சான்ருேன், விதியனைத்தும் தோய்ந்த வித்தகன், சதுரன், விண்ணில் உலாவும் உத்தமன்' என்று உணர்ந்து, அவனது நட்பை நண்ணினன் நரசிங்கன். விக்கிரமாதித்தனைத் தனது நண்பனுக்கித் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று முறைப்படி விருந்தும் வரிசைகளும் அளித்தனன். தன் நண்பனது வரிசைகளைப் பெற்று மீண்டும் மதனமாலை மாளிகைக்கு வந்தனன் விக்கிரமாதித்தன்.

தனது திறலால் அரும் சபதத்தை நிறைவேற்றித் தன் அணிநகரை அடையக் கருதினன் விக்கிரமாதித்தன். அவனின்றித் தனித்திருக்க வொண்ணுத அவ்வாணுதன் மங்கை மதனமாலையும் பாடலீபுத்திரத்திற்கே செல்லக்கருதிச் செல்வத்தையும் மாளிகையையும் வேதியர்க்கே அளித்திட்டனள்.

அவனை யல்லால் வேறொருவரையும் அறியாத அம்மாதரசை அழைத்துக்கொண்டு, அணிதேர் புரவி யாட்பெரும்படையொடு, பாடலீபுத்திரரத்திற்கு ஏகினன் விக்ரமாதித்தன். இயற்பகையுடையோன் என்று எண்ணின நரசிங்கன் அம்மன்னனுக்கு உயிர்த்துணைவனாயினன். விக்ரமாதித்தன் இப்பேறு பெற்றது மதனமாலையின் பேருதவியாலன்றோ! வேசியற்கு இயற்கையான ஆசையைத்துறந்து, அன்பையே கடைப்பிடித்துக் கைமாறின்றித் தன்னாலியன்ற உதவிசெய்த அப்பெண்மணியைத் தன்னுள்ளத்து உவந்து பாராட்டினன் அரசன். மதனமாலையும் அரசனும் வெகுகாலம் சுகமாக வாழ்ந்தனர்.

அண்ணலே! இங்ஙனம் நான் சொல்லிய கதையினால் வேசியர் ஆயினும், உண்மையான காதல் உண்டானால் உறுதியுடனே நெறியாக ஒழுகுவர் என்று தெளிவுரத் தோன்றவில்லையா?

மருபூதி என்னும் மந்திரி எடுத்துரைத்த இவ்வினிய கதையைக் கேட்டு, நரவாஹனதத்தன் என்னும் இளவரசனும், புகழ்பரந்த வித்தியாதரர் குலத்திற்பிறந்த ரத்நப்பிரபை என்னும் மணமகளும் மனம் குளிர்ந்து மகிழ்ந்தனர்.

உ

## ரூபசிகையின் கதை.

மருபூதி சொன்னதைக் கேட்டு, சேனுபதியான ஹரிசிகன், 'ஆம், உண்மைதான்; மங்கையர்க்குத் தம் மணுளரேதான் தெய்வம். போற்றிப்பணி செய்தற்குரியவர் மங்கையர்க்கு மணுளர் அல்லால் வேறெவரும் இல்லை. இதைத் தெளிவுற உணர்த்த யான் இதோ ஒரு கதை சொல்லுகிறேன். அது மற்றைக் கதைகளைக் காட்டிலும் எவ்வளவு விசித்திரமானதோ நீங்களே கேட்டுணர்மின்.' என்றனன்.

இம்மண்ணுலகிற்கு ஓர் திலதம் போன்றது வர்த்தமானபுரம் என்பது. அதற்கு வீரபுஜன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் நீதிவித்தகன். அவன் மனுவின் முறைதவருது செங்கோல் செலுத்தி வந்தான். அவன் அந்தப்புரத்தில் அரசியர் நூறுபெயர்கள். இத்தனை பெண்டிர் இருந்தும், தனுவின்றித் துணையில்லான் மனுவென்ற நீதியான் மகவின்றிவருந்தினுன். அந்நூறு பெயர்களிலும் மிகச்சிறந்தவள் ஒருத்தி. அவள்பெயர் குணவரை. அவள் அரசனுக்கு இன்னுயிரினும் இனிய காதலி. செவ்வியிளம் சிறுவன் அவளது மணிவயிறு வாய்த்திலனுல் வருந்தினன் அரசன். வருந்தியவேந்தன் சுருதவர்த்தனன் என்னும் மருத்துவனை வரவழைத்து, 'ஐயா! மக்கட்பேறு எனக்கில்லை. எனக்குச் சந்தானம் உண்டாவதற்கு மருந்து ஒன்று உண்டாயின், அருள்புரிந்து அதனை அளித்திடுக.' என்று இறைஞ்சினன். அவ்வுரை

கேட்டு அம்மருத்துவன் அருள் சுரந்த உவகையனாய், 'உமக்கு இனிதளிக்கும் செவ்வியிளஞ் சிறுவர்களைத் தருகின்றேன். இறைவ! நீர் தேவர் உவக்கும் காட்டுச் செம்மறி ஆடு ஒன்றைத் தருவிக்க.' என்றான். மருத்துவனது மொழிகேட்டு, மன்னவன் மனிசரை விடுத்து, அவன் குறித்த செம்மறி ஆட்டைக் கொணர்வித்தான். அச்சாகத்தை அரசரது மடப்பளியில் தவசியரிடம் தந்து, அரசியர்க்கு ஓர் இனிய ரஸாயனம் செய்வித்தான் வைத்தியன்.

அரசன் தேவபூஜைக்காகச் சென்றிருக்கையில் அரசியரை ஓரிடத்திற் கூடிவருமாறு கோரினன் சிருதவர்த்தனன். குணவரை ஒருத்தி மாத்திரம் அரசனுடன் சென்றமையால் அவ்விடத்தில் வர இயலவில்லை. மற்றை மங்கையர் எல்லோரும் கூடினர். வைத்தியன் அந்தரஸாயனத்தைக் கொணர்வித்தனன். குணவரை வரவில்லை என்பதைக் கவனியாது, அவன் அந்த ரஸாயனத்துடன் அற்புதமான சூரணம் ஒன்றைக் கலந்து, மருந்து யாவற்றையும் அங்கு இருந்தவர்கட்கே ஸமமாகப் பகிர்ந்து கொடுத்தொழிந்தனன். இவ்வண்ணம் நிகழ்ந்த ஒரு நொடிப்பொழுதிற்கெல்லாம் அரசனும் அரசியும் அங்குவந்தனர். வந்து வைத்தியன் செய்ததைக்கேட்டு, ரஸாயனம் மிகுதியிலாது செலவழிந்ததைக்கண்டு, அரசன் 'அச்சோ! என்ன வைத்தியரே! எவளுக்காக இந்த மஹாப்பிரயத்தினமெல்லாம் செய்தோமோ, அவளையே மறந்துவிட்டீரே! என இயம்புவானாயினன். இவ்வுறை கேட்டதும் வைத்தியன் மௌனம்குன்றாது, முகம்

சிணுங்காது இருப்பதுகண்டு, அரசன் வியப்புற்றுத் தவசிகளை வினவினன். 'என்னடா! தவசி! அந்த ஆட்டில் ஏதாவது மிகுதி இல்லையா? ஏன் அடா!' என்று அமர்ந்து கம்பீரமான ஹும்காரத் தொனியுடன் அரசன் ஆணை இடுவதுகேட்டு, தவசிகள் நடுநடுங்கி, உரை தடுமாறி, 'ஆண்டே! ஊன் ஒன்றும் இல்லை. கொம்புகள் தான். நாங்கள் ஒன்றும் அறியோம்; இதோ! கொம்புகளைக் கொணர்ந்திட்டோம்.' என்று, அக்கொம்புகளை அரசன் அடியில்வைத்துத் தரையில் விழுந்து தண்டனிட்டு எழுந்து தலை குனிந்து நின்றனர். வைத்தியன் அதுகண்டு தினையளவும் பதற்றமில்லாது, 'ஆனாற் சரி; அது மெத்த மேலானது. கொம்பைக் குழம்பாக்கி ரஸாயனம் செய்தால் மிகவும் உத்தமமே!' என்று கம்பீரமாக இனிதுரைத்துத் தவசிகளுக்கு ரஸாயனம் செய்யும் வகையைக் கற்பித்தான். ரஸாயனம் சித்தமாகவே அதிற் சூரணத்தைக் குழைத்துக் குணவராதேவிக்குத் தந்தனன்.

பின்னர், சிறிது காலத்தில் அரசனது தொண்ணூற்றொன்பது தாரங்களும் சூலாகிப் பருவம் வந்தபோது சுந்தரமான புதல்வரைப் பெற்றனர். பட்டமஹிஷியான பெருமாட்டிக்குணவராதேவி பின்னர்க் கருக்கொண்டமையால், இறுதியிற் பாங்கான மகாபுருஷலக்ஷணங்கள் அமைந்த ஆண் மகவைப் பெற்றனள். ஆண்மகவு தன்னருமைக் காதலியின் மணிவயிறு வாய்த்ததனால், வேந்தன் வேட்கை தீர விழா ஒன்று நடத்தினன். சிருங்கத்தின் ரஸத்தினால் உண்டானவன் ஆதலால், வீரபுஜன் தன் புதல்

வனுக்குச் சிருங்கபுஜனென்று பெயரும் இட்டான். மன்னனது மக்கள் நூறுபெயர்களில் இவனும் ஒருவனாக வளர்ந்தான். அம்மக்களில் இவன் பிறப்பிற் பின்னவனேயாயினும், சீர்மையிற் சிறந்து குணங்களில் முன்னவனேயாகி விளங்கினான். அவன் அழகில் மன்மதன்; வில்லும் வாளியும் கையில் எடுத்துவிட்டால் அர்ச்சுனனே; வலிவீரரில் பீமனே தான் அவன்.

ஜகமெங்கும் சக்களத்திச் சக்களத்தியே. சக்களத்திப் போருக்கு முக்காலத்தும் இல்லை முடிவு. வேந்தன் வீரபுஜனேதான்: ஆனாலும், அவன் மாதரெல்லாம் குணவரைக்குக் குணநிதியான குமாரன் இருக்கக் கண்டு ஆராப்பொருமை பூண்டனர். மாச்சரியங்கொண்ட மங்கையருள் அயசோலேகை என்று ஒருத்தி. புத்தியிற் சிறந்த இப்பெண்மணி மற்றை அரசியர் தொண்ணூற்றெண்மரையும் ஒருங்கு சேர்த்து யோசித்து, நடந்ததை ஒருவரும் ஒருபொழுதும் வெளியிடப்படாதென ஆணையும் இட்டனள். அவ்வாலோசனையைப் புறம்பே போகச் செய்தால் தானே பழி சுமப்பதாய் அவ்வரசியரில் ஒவ்வொருத்தியும் தன் இஷ்ட தேவதையின் பெயரை உணர்த்திச் சபதம் செய்தனள். இவையெல்லாம் நன்னர் நடாத்திய அயசோலேகை, பின்னர், தனக்கு ஏதோ பெருநோய் வந்ததாய்ப் பாசாங்கு பண்ணித் தன்னில்லத்தில் இருந்தாள். அரசன் அகத்தில் நிகழ்ந்ததை அறிந்திலன். தான் அரண்மனைக்குச் செல்லுகையில், அம்மங்கை அயசோலேகாதேவியின் மாளிகையிற் புகுந்தனன்.

கூடத்திற் செல்லவே, அங்குட்கார்ந்திருந்த கோமகளைக் கண்டான். 'கண்ணே! என்ன? பெண்ணே! என்ன?' எனத்திடுக்கிட்டு வியப்புடன் விசாரிப்பாளுன். நோயால் வருந்திச் சொல்லெழாது தழதழத்துத் தீனமாக, 'ஆர்யபுத்திரா! குடிக்குக் கொடுங்கேடு வந்ததே! இதை எப்படி தான் பொறுக்கிறீர்களோ! காற்றும் அடியாதபடி ஊரெல்லாம் காக்கும் பெருங்காவலரான தங்களாலேயே காப்பாற்றிக்கொள்ள முடியவில்லையே! ஆ! என்னமோ! வேலி பயிரை அழிக்கிறது! கன்னிமாடத்தைக் காக்கும் காவலன்! பேர் ஸுரக்ஷிதன்! கண்டுத்தீரே! அவன் தான் உங்கள் குணவரை கூவியழைக்குங் காதலன். பேடியரைக் காவலாக வைத்துக் காக்கும் கன்னிமாடத்தில் இவன் ஒருவனே! நும் பட்ட மஹிஷி பாங்காய்ப் பணிகொள்ளும் இவனே பயன்பெற்றான். இச்செய்தி அந்தப்புரமெல்லாம் கோஷிக்கின்றதே!' என்றனள் அயசோலேகை. தன் பெண்டீர் இவ்வண்ணம் இயம்பியதைச்செவியேற்ற ராஜன் சற்றுத் திடுக்கிட்டுத் தனக்கு உண்டான கலக்கத்தை வெளியிடாது தன்னுள்ளே ஆலோசித்து, அரண்மனையில் அரசி ஒவ்வொருத்தியையும் முறையே வினவினன். இவ்விஷயத்தைக் குறித்து முன்னமே ரஹஸ்யத்தில் தகுந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால், மற்றை அரசி ஒவ்வொருத்தியும் இவள் சொன்ன மாற்றத்தையே தினையளவும் மாறுபடாது மொழிந்தனள்.

தேசுற்ற மன்னவன், மாசற்ற மதியுள்ளவனாதலால், சிறிதேனும் சினங்கொள்ளாது சிந்திப்பானு

றான். 'இவ்விருவர்களும் நல்லவர்களே. இவர்கள் இவ்வண்ணம் செய்திருக்கமாட்டார்கள். பழியோ வந்திருக்கிறது. ஊர்வாயை அடக்க ஒருவராலும் இயலாது. இது விஷயத்திற் பதறி ஒன்றும் செய்யலாகாது. செய்யாமலும் இருப்பது நலமன்று. இதற்கு இச்சமயம் யுக்தியாகப் பரிஹாரஞ் செய்து, இதன் முடிவுதான் என்னவென்று பொறுமையுடன் காத்திருந்து காணவேண்டும். பொறுத்தவர் பூமியாள்வார் என்பது உண்மையே.' இவ்விதமாய் மனத்தில் உறுதி செய்துகொண்டு, மறுநாள் கொலுமண்டபத்தில் வீற்றிருக்கையில் அந்தப்புரக் காவலன் ஸுரக்ஷிதனை வரவழைத்தான். அவன் தன் எதிரில் வரவே மிக்கக்கோபங்கொண்டு தன் புருவங்களை நெறித்து உதடுகள் துடிப்ப, 'அடா! பாவி! நீ பிரமஹத்தி செய்தாய் என்று நமக்குத் தெரிந்தது. இனி நீ தேசங்கள் எங்குஞ் சென்று புண்ணிய தீர்த்தங்கள் எல்லாவற்றிலும் நீராடி நின் பாவத்தைப் போக்கினால் அல்லது நம் கண் முன்னே வரலாகாது. துஷ்டா! துர்முகா! பாவி! தொலைந்து போ!' என்று உரக்கக் கூச்சலிட்டான். அடியான் அவ்வுரை கேட்டு மதி மயங்கி, 'ஐயனே! நான் ஒரு பாவமும் அறியேனே! பிரமஹத்தியா! எனக்கு ஒன்றும் தெரியாதே! ஆகா! தெய்வமே! பழியா! நான் ஒன்றுமறியேனே!' என்று பலவாறாகப் பயித்தியங் கொண்டவனைப் போலப் பிதற்றுவதைக்கண்டு அரசன், 'அடா! மூடா! பிடிவாதம் வேண்டாம். உன் முரட்டுத்தனத்தை விடு. பாவத்தின் பற்றை அறுக்கும் காச்மீர

தேசத்திற்குப் போடா. அங்கே அந்த விஜய க்ஷேத்திரம் இருக்கிறது தெரியுமா? அங்குப் புனித மான நந்திக்ஷேத்திரம் என்னும் ஓர் தலமும் உண்டு. இன்னும் அத்தேசத்திலேயே கொஞ்சந் தூரஞ் சென்றால் வாராஹம் என்று ஓர் தலமும் உண்டு. இன்னும் செல்லச்செல்ல அடுத்தடுத்துத் தொடர்ந்து எத்துணையோ புண்ணியத் தலங்கள் உண்டடா. இத்தலங்களெல்லாம் சக்கிரத்தைக் கையிலேந்திய பரமன் உகந்தவையடா! இவை யெல்லாம் மிகப் புனிதமானவை. இன்னும் சென்றாயேல், அங்கோர் இனிய தேசமுண்டு. அதுதான் விதஸ்தை என்பது. அங்கு அகன்று அழகாக ஓடுகின்றாள் அம்பா ஜான்ஹவீ. அம்மட்டோ! இத்தேசத்தையும் கடந்து, போ. அங்கே! உள்ளது மடவக்ஷேத்திரம். இன்னும் பல திவ்யத்தலங்களை நாடிச் சென்று வடக்கே போ. போகப் போகப் புனலும் புதரும் காடுமாக விருக்கும். விடாது இவ்வற்றை யெல்லாம் கடந்தே சென்றால் பைம்பொழில் சூழ் மானஸத்திற்குச் செல்வாய். அங்கெல்லாம் போய் நீராடி உன் பாவத்தைத் தீரத்துலைத்துத் திரும்பி வந்தால் நீ என் கண் முன்னே நிற்கலாம்.' என்றனன் அரசன். தீர்த்த யாத்திரையின் பெருமையைத் தீரவெடுத்துரைத்தனனே யானாலும் நன்னெறியுள்ள ஸுரக்ஷிதனுக்கு அரசனது மாற்றங்கள் நாராசங்களைப்போ லிருந்தன. அவ்வெவ்வுரை கேட்டு, அவன் மதியிழந்து சிறிதுநேரம் மரம்போல் நின்று, பின்னர் தன் விதியை நொந்து வெளியே போனான்.

நன்றியறிவுள்ள தனது வேலைக்காரனை இவ்விதம் யுக்தியால் அகற்றித் தன் அருமைக் காதலியை யணுகினான் வேநதன். தன்னையே தஞ்சமாய் நாடின மங்கையன்றோ அவள்! அவள் மீதுள்ள அன்பு அவன் மனத்தை முற்றும் கவர்ந்தது. மதியை மயக்கி மனிதனை மிருகமாக்கும் கோபம் ஒருபால் அவன் மனத்தைக் கலக்கியது. புவனியெல்லாம் ஆளும் அரசனாதலால், தான் ஆலோசியாது ஏதேனும் கடுமையைச் செய்துவிட்டால் செங்கோல் தவறுமே என்னும் பயம் ஒருபால் அவன் மனத்தை யசைத்தது. மனம் இவ்வண்ணம் வருந்தியதனால் அவன் மெய் நடுங்கி நடை தடுமாறியது. உயிருக்குத் துணிந்து போர் செய்யும் வீரனாதால், அவன் எப்படியோ உறுதிகொண்டு குணவரை குடிகொண்ட கோல மண்டபத்தை அடைந்தான். தன் பிராண நாதன் பாங்கற்றுப் பதறி நடப்பதையும், அவன் அழகு மாறி நிற்பதையும் மெய்வருந்தி கண்டு, கலக்கமுற்று, 'ஆர்யபுத்திரா! என்ன இன்று தங்களுக்கு விசனம் வந்தது!' என்று பணிவுடன் கேட்டனள் மஹிஷி.

மண்ணையாளும் மன்னவர்க்குத் தெரியாத வித்தகமா?' 'அவர்க்கு இல்லாத விண்ணணமா? அவர் பண்ணுகிறதெல்லாம் பாசாங்கு. சொல்லுவதெல்லாம் மோசம். நெஞ்சினால் நினைப்பதெல்லாம் வஞ்சகம். அவர் தொழிலேதான் இது. அதிலும் வீரபுஜன் அரசர்க்கும் அரசு. இவர் வஞ்சகத்துக்கும், உண்டோ ஈடு? அரசி ஆதரத்துடன் கேட்ட வினா

வுக்கு அரசன் அவளது மனத்தை மயக்குமாறு சரசமான குரலுடன், “இன்றைக்கு என்னிடத்திற்கு வந்தார் யாரோ ஒருவர்; மஹாஞானி,யாகிய அவர் ‘ஓயீ! ராஜா! கொஞ்ச காலத்திற்கு உம்முடைய தேவி குணவரையைப் பூமியின் கீழே சுரங்கத்தில் வைக்க வேண்டும்; நீரும் சிறிது காலம் பிரமசாரியாக இருக்க வேண்டும்; இல்லாவிடில், நீர் உமது அரசை இழக்க வேண்டிவரும்; உமது தேவிக்கும் உம்முயிர்க்கும் நாசமுண்டாகும்.’ என்று சொன்னார். நான் அவரைப்பற்றி முன்பின் விசாரிக்கு முன்னமே மறைந்துவிட்டார் அம்மஹான். இதை எண்ணி எண்ணிப் பதைக்கின்றது என் பேதை நெஞ்சம்” என்று இயம்பினன். தன் கணவனே தனக்குக் கதி என்று நினைத்துத் தன்னுயிரையும் உடலையும் மறந்தவள் அம்மாது. பயமும் அன்புங்கூடி அவளது மெல்லிய மனத்தை மலைக்கச் செய்தன. ஆயினும், அவள் கனம் பொருந்திய கோமகளாதலால், தைரியங் குன்றாது, ‘பிராணநாதா! அப்படியானால், என்னை இந்த க்ஷணமே சுரங்கத்தில் இடலாகாதா? என் உயிரைக் கொடுத்தேனும் தங்களுக்கு ஹிதம் உண்டானால், நான் பெரும் பேறு பெறுவேனே! எனக்கு மரணம் வந்தாலும் வரலாம்; தீங்கள் மனத்திற்குக் குறை ஒன்றும் கூடாது. தாங்கள் துன்பப் படலாகாது. கணவன் சொற் கேளாவிட்டால், நற்கதி உண்டோ இம்மையிலும் மறுமையிலும் மாதர்க்கு. கணவனையல்லால் அவர்கட்கு வேறு தெய்வமில்லை. எனக்குக் கணவனே தான் கதி.’

என்றனள் மஹரிஷி. கல்லையும் கரைத்துருக்கும் இம்மொழியைக்கேட்டு, அரசன் கண்களில் நீர் ஆறுகப் பெருகியது. துக்கம் தொண்டையை அடைத்துவிட்டமையாற் சொல்லெழாது மெய் நடுங்கிச் சிந்திப்பானானன். 'அந்தோ! இவளை இழிஞை என்று எண்ணுவது அரும்பாவமே. அந்த ஸுரக்ஷிதனும் ஒன்றும் அறியான். அவன்பேரிற் பழி சாட்டுவதும் பாவமே. ஐயோ! நான் அவனைப் பாவி என்றதும் அவன் முகம்வாடி அங்கங்கரைந்து என் முன்னே நின்றனே! நான் அவன் நிலையை என் கண்ணாரக் கண்டேனே! பழி படைத்தேனே! பாவமே! அந்தோ! பாவியேன் என் செய்கேன்! படைத்த பழியை அனுபவிக்கத்தான் வேண்டும். ஆனாலும் செய்ததை அழித்தல் இயலாது. இப்பழியின் உண்மைதான் என்னவோ காணவேண்டும்.' என இவ்வண்ணம் சிந்தித்து மனத்தைத் திடஞ்செய்து கண்ணும் கண்ணீருமாக, 'ஆனால், இங்கேயே இப்பொழுதே சுரங்கமொன்று செய்யும்படி விடை தந்திடுக' என்று பணிவுடன் அரசியை வினவினன் அரசன்.

'அப்படியே ஆகுக.' என்று அவள் விடைகொடுக்கவே, அந்தப் புரத்திலேயே அப்பொழுதே சுரங்கமொன்று செய்வித்தான் மன்னவன். தன் மனையாள் மாட்சிமையுடன் குடிகொள்வதற்கு ஏற்பப் பூமியின் அகத்தில் மாளிகை ஒன்றை அமைப்பித்தனன். அம்மாளிகையிற் குணவரையைக் குடியிருக்கச் செய்தான். இதை எல்லாம்பார்த்து, 'எனது அன்னைக்கு என்னமோ கெடுதிவந்தது.' என்

றெண்ணி உண்மையை அறியாது விசனமுற்ற அவனது செல்வக்குமரன் சிருங்கபுஜன் கேட்டதற்கு அரசன் அவளுக்குச் சொன்னபடியே சொல்லி, அவனை அமைதியாக இருக்கச் செய்தான். மாசொன்றுமில்லாத அம்மங்கையர்க்கரசி 'கணவனது சுகமே செயற்பாலது' என்றெண்ணினதனால் அவள் அச்சுரங்கத்திற் சுகமாகவிருந்து அதை சுவர்க்கமாய்க் கொண்டனள். ஆம்; கற்புடையவர்க்குத் தமக்கென்று ஒரு சுகம் உண்டோ? இல்லை; கணவன் அடையும் சுகந்தான் அவர்க்கும் சுகம்.

இவ்வளவும் செய்வித்தவள் அயசோலேகை என்னும் பெருமாட்டி. அரசரைக் கொண்டு இத்துணை செய்வித்தும் அவளுக்குப் பொறுமை போகவில்லை. அவள் புதல்வன் பெயர் நிர்வாஸபுஜன். அவள் அவனைத் தனியாக வழைத்து, 'அப்பா! நமக்கு இடருக இருந்த குணவரையைக் குழியில் வைத்தல் ஆய்விட்டது. தேளை நசுக்கினாற் போதாது; அதன் கொடுக்கையும் நசுக்கல் வேண்டும். பாம்புக்குட்டியை வீட்டில் வைத்திருக்கலாகாது. அவள் வயிற்றிற் பிறந்த இந்தச் சிருங்கபுஜனை ஏதாவது பண்ணி மெள்ள ஊரைவிட்டு விரட்டி விட்டால் நல்லது. பீடை ஒழியும்; அடா! அப்பா! நீயும் உன் அண்ணன் தம்பிமார்களுமாகக் கூடி இதற்கோர் வழி தேடவேண்டும்.' என அன்போடும் உரைப்பாளானாள். தாயின் இத்தேனனைய மொழியைக் கேட்டுச் சந்தோஷமடைந்தான் நிர்வாஸபுஜன். மேலும் அந்தத் தாயின் வயிற்றில் வாழ்ந்து அவள்பாலை உண்டு வளர்ந்தவனன்றோ இவன்! தீபத்தில் ஏற்றின

தீவட்டி! இதில் ஆச்சரியம் சிறிதும் இல்லை. மாதாவின் மதிக்கு இணங்கி, இக்கற்புதல்வன் தன் ஸகோதரர் அனைவரையும் ஒருங்கு சேர்த்துச் சிந்திப்பானான். இவனுக்கு உண்டான மாச்சரியம் இவன் தாயின் பாலுடன் கலந்து வந்து இவனையும் வளர்த்துத் தானும் வளர்ந்தது.

ஒருநாள் கோமக்கள் நூற்றுவருங்கூடி அஸ்திரப்பயிற்சி செய்து கொண்டிருக்கையில் பருத்த கொக்கு ஒன்று மாளிகையின் மீது இனிதமர்ந்திருப்பதைக் கண்டனர். அது உண்மையான கொக்கன்று: கொக்காக மாறுவேஷம் பூண்டவன் யாரோ ஒருவன். அந்தக் கொக்கின் அற்புத உருவைக்கண்டு வியந்து ஒருவர்க்கொருவர் பேசிக் கொண்டிருந்தனர் சிறுவர். அச்சமயத்தில் அவ்வழியேசென்ற க்ஷபணகஞானி ஒருவர் அக்கொக்கையும் அலர்ந்து மலர்ந்த விழிகளுடன் வியந்து நிற்கும் வாலிபரையும் நோக்கி, 'ஐயன்மீர்! கோமக்களே! இது கொக்கன்று: கொக்கு வேஷம் பூண்ட ஓர் அசுரன். இவன் பெயர் அக்நிசிகன்; இவன் இவ்வேஷம் பூண்டு ஊர் ஊராகச் சென்று பலரையும் நாசஞ் செய்து செல்கிறான். நீங்கள் ஒன்று செய்யுங்கள். உங்கள் கையிலிருக்கும் வாளியால் இவனை அடித்துக் கொல்லுங்கள். ஊரைப்பிடித்த பீடை பரிஹாரமாகும்.' என்றனர். க்ஷபணகர் சொன்னதைக் கேட்டு மூத்தோர் தொண்ணூற்றொன்பது பெயர்களும் வாளிகளை விடுத்தனர். ஒரு வாளியேனும் அம்மாயக் கொக்கின் மீது படவில்லை. அது கண்டு அக்ஷபணகர், 'ஐயன்மீர்! இதோ

நிற்கிறானே உங்கள் பின்னவன் அவன் தவறாது
கொக்கைக் கொன்றே தீருவான். அவன் கையில்
தந்த வில் ஒன்றைக் கொடுங்கள்.' என்று
கூறினார்.

சன்னியாசி சொற்கேட்டு, மோசக்காரனான
நிர்வாஸபுஜனுக்குத் தன் அன்னை சொல்லிய யோ
சனை நினைவுக்கு வந்தது. மாதாவின் வாக்கியத்தைப்
பரிபாலனஞ் செய்யும் பாங்கான அப்புதல்வன்,
'ஆ! இந்தப் பைதல் சிருங்கபுஜனை ஊரைவிட்டு ஓட்
டத் தருணம் வாய்த்தது.' என்று எண்ணித் தன்
கையில் இருந்த அவனது தந்தையின் தநுவையும்
சரத்தையும் அவன் கையிற் கொடுத்தான். தம்பி
குடியைத் தரைமட்டமாக்க கருதிய அவன், 'இது
வோ தங்கத்தாற் செய்த சரம். இதைக் கொண்டு
இவன் அடித்தால், இது கொக்கின் உடம்பிற் செல்
லும். பிறகு, கொக்கு சரத்துடன் பறந்தோடிப்
போனால், சரத்தைத் தேடவேண்டும். இல்லையோ,
கொக்கைக் கொன்று சரம் கீழே விழுந்தாலும் தேட
வேண்டும். சரம் காணாமற்போனால், இவன் ஊரை விட்
டுத் தொலைந்தான். சரம் இல்லாமல் இவன் வீட்டிற்
குள் நுழையவும் வாய்க்குமோ?' என்று எண்ணி
னான். கெடுவான் கேடு நினைப்பான். இவ்விதமாகக்
கெட்ட எண்ணங்கொண்டு, 'இதோ அப்பா அம்பும்
வில்லும்! கொக்கைக் கொல்லடா.' என்று பறபறப்
புடன் சிருங்கபுஜன் கையிற் கொடுக்கவே, அவனும்
அதைத் தன் கரத்திற்கொண்டவாறே, வலிய வாங்கி
இழுத்து, முஷ்டியும் திருஷ்டியும் ஒன்றுபட நிறுத்
திப் பதறாது நின்று வாளியை விடுத்தனன். அந்த

வாளி பொன்னாலமைந்தது; முனையில் ரத்ந மிழைத்தது; மிகக் கூரியது. அவன் அதை வலிமையுடன் விடுத்தனன். விடுத்த வாளி கொக்கின் உடம்பிற் சுருக்கெனத் தைத்தது. வாளி தைக்கவே வேகத்துடன் பறந்து சென்றது கொக்கு. அதன் உடம்பிலிருந்து சொட்டிய உதிரபிந்துக்கள் அது சென்ற திசையைச் செவ்வனே காட்டின. இதை எல்லாம் விவரித்தெழுத இந்நேரம் ஆயிற்றே தவிர, இங்ஙனம் நடந்ததெல்லாம் கண்ணிமைப் பொழுதிலேயே நிகழ்ந்தன.

இவ்வண்ணம் நிகழவே, 'தாம் எல்லோரும் செய்ய வியலாததை இவ்வளவு எளிதிற் செய்தானே! இவனல்லவோ வீரன்?' என்று சிறிதும் சிந்தியாத மூர்க்கனான நிர்வாஸயுஜனும், அவன் கண்ணிமைப்பதிற் காட்டிய குறிப்பையே கடைப்பிடித்த மற்றை மூடர்களும் ஒன்று சேர்ந்து, 'அடே! கொண்டுவாடா எங்கள் தந்தையின் தங்கவாளியை! இல்லையேல் இதோ! உன் கண் முன்னேயே எங்கள் உயிரை விட்டுவிடுகிறோம். தெரியுமா! எங்கள் தகப்பன் செய்தி? தன் வாளி இவ்விதமாகிவிட்டது அவருக்குத் தெரிந்தால் எங்களை வீட்டிலிருந்தா வெருட்டுவர்! ஊரிலிருந்தே வெருட்டிவிடுவர். அவருக்குக் கோபம் வந்தால் அவரை நம்ப முடியாது. அப்பா! உனக்கு என்ன தெரியும் அவர் செய்தி? பழுதை என்று மிதிக்கவும் முடியாது; பாம்பென்று தாண்டவும் முடியாதே! ஏ! அப்பா! கொண்டுவாடா எங்கள் வாளியை.' என்று கூச்சலிட்டுக் கூவி அவனைப் பிடித்திழுத்து அலைத்தனர்.

இது வீரக்குமரர் செய்யும் காரியமன்று. வஞ்சகஞ் செய்யக் கருதும் பேதமைப் பேடியர்க்கே உரியது. இதனைக் கண்டு வியந்து வீரனை சிருங்கபுஜன் ஆறுதல்கூறி அவரைத் தேற்றக் கருதி, 'தைரியத்தைக் கைவிடன்மின். தீரமாயே இருக்க உங்களுக்குப் பயம் என்ன? உங்கள் பேதைமையை ஒழித்திடுக. இதோ! நான் போய் அந்தர் சரத்தைக் கொணர்ந்துவிடுவேன். அந்தக் கெட்ட ராக்ஷஸன் உயிரைப் போக்கி வாளியையும் கொணர்ந்திடுவன்.' என்று பதற்றமில்லாமல் பாங்காகப் பதில் உரைத்துத் தன் வில்லையும் வாளியையும் சட்டென வெடுத்துச் சென்றான். கொக்கு பறந்து சென்ற திசையை நோக்கிப் புவினியிற் சொட்டிய அதன் இரத்தத் துளிகளையே குறிப்பாகக்கொண்டு வாயுவின் வேகத்துடன் விரைந்து சென்றான். மற்றைய ராஜகுமாரர் எல்லோரும், 'தொலைந்தான் நம்பகைவன்.' என்று பெருமகிழ்ச்சிகொண்டு கும்மாளத்துடன் தமது அன்னையரையடைந்து ஆராத அவாவுடன் அவர் அடைந்த வெற்றியைப் புனைந்துரைத்தனர்.

பாலகன் பயமின்றிச் சென்று பெருங்கானகம் ஒன்றை அடைந்தான். அப்பேரடவியில் வழிதடுமாறித் தேடித் திரிகையில் இனிய பெரியபுரம் ஒன்றைக் கண்டான். பசிதாகம் இவற்றால் வருந்திக் கால்கள் நோவ நடந்து வழியும் இழந்த அச்சிறுவனுக்கு அந்நகர் அரும்பெரும் போகமனைத்திற்கும் இருப்பிடமான போகவதியாகவே தோன்றியது. நன்மையைக் கடைபிடித்து அறத்தையே செய்து ஏங்கிக் கிடந்த நின்மலனை புண்ணியனுக்கு நித்தியபதம் கிடைத்

தால் நினைவுக்கும் எட்டாத ஆநந்தம் ஒன்று உண்டாகுமே, அவ்வித வாநந்தமேதான் அவனுக்கு அந்நகரைக் கண்டவாறே உதித்தது. வீட்டை விட்டு வந்த விசனத்தினாலும், காலோடு தலைவரையில் உண்டான நோவினாலும், காணக் கிடைக்காத நகரைக் கண்ட வியப்பினாலும் சோர்ந்து அங்கோர் மரத்தினடியில் இளைப்பாறினான். அம்மரத்தினடியில் அவன் அமர்ந்த அரை நொடிக்கெல்லாம், கண்ணிற்கு அமுதான கன்னிகை ஒருத்தி அவனை அணுகி வரக்கண்டான்.

அவன் அயர்ந்துறங்கக் கருதியது ஒரு பூஞ்சோலையில். சொல்லுக்கடங்காத அச்சோலையின் இனிய அழகு ஒரு பால், அவன் உடம்பை ஒடித்திடும் அயர்வு ஒரு பால், மற்றொரு பால் பிரமனது படைப்புத் தொழிலின் மேன்மை யெல்லாம் தோன்றுமாறு தன்னருகில் அன்னம்போல நடந்துவரும் அணங்கின் அற்புதமான வடிவழகுமாகி அவனைக் குமைத்தன. அவளைச் சேர்ந்திருப்பது அமுதமேபோல அயர்வில்லாச் சுகமளிக்கும். அவளைப் பிரிவதோ கொடும் நஞ்சைப்போலச் சட்டென உயிரை ஒழிக்கும். அம்மெல்லியல் பைய நடந்து இவன் அருகில் நின்று, தனது குளிர்ந்த கடாக்ஷத்தினால் இவன் மீது அன்பும் அருளும் பொழிந்தனள். தனது மென்மலர்கள் போன்ற கண்களால் இவன்மீது தேனையே பொழியும் அப்பாவையை நோக்கித் தாமதமின்றி மொழிகள் வெளிவர வினவுவானாயினன் நரேந்திரனின் நற்புதல்வன். 'இந்நகரின் பெயர் என்ன? இந்நகர் யாருடையது?" அவள்

இவனது மொழியைக் கேட்டு மகிழ்வதைக் கண்டு, 'மைவிழியாய்? யாவள் நீ? இங்கு நீ வந்ததேன்? இவை எல்லாம் எனக்குச் சொல்லுக.' என்று மன்னவன் மைந்தன் வினவியது கேட்டு, வெட்கத்தினால் ஒரு பக்கமாய்த் திரும்பித் தரையை நோக்கி நின்று இனிய குரலுடன் கம்பீரமாக, 'செல்வமனைத்திற்கும் இருப்பிடமான இந்த நகரம் தூமபுரம் என்பது. இதில் அக்நிசிகன் என்று ஒரு ராக்ஷஸ ராஜன் இருக்கிறான். அவனுக்குத் தகுந்த குமரிதான் நான்; ரூபசிகை என்பெயர். உமது அற்புதமான வடிவழகைக் கண்டு என் மனம் நிலைகொள்ளாது இங்கு வந்தேன். இப்பொழுது என் வினவுக்கு விடையளித்தருள்க. நீவிர் யார்? இங்கு வந்தது எந்த நிமித்தமாக.' என்று கேட்டனள். இவ்வுரையைக் கேட்டு, சிருங்கபுஜன், தான் இன்னான் என்பதையும் தன் தகப்பன் இன்னான் என்பதையும், சரத்தைத் தேடி வந்ததையும் மற்றுமுள்ள வரலாற்றனைத்தையும் விவரித்துத் தெளிவுறச் சொன்னான். இவனது வரலாற்றை நன்கு அறிந்து, ஆவலுடன் அப்பாவை இவனை நோக்கி, 'மூன்று உலகிலும் உமக்கு ஈடான வில்லாளி இல்லை என்பது நிச்சயமே. நீர் ஒருவனே தான் அந்தப் பெரிய அம்பினால் கொக்குருவங்கொண்ட என் தந்தையை அடித்தீர். அந்தத் தங்க அம்பை நான், வீட்டில் விளையாடித் திரிகையில் கண்டு, எடுத்து வைத்திருக்கிறேன். என் தந்தைக்கு உண்டான இரணத்தை விசல்யகரணி முதலான அருமருந்துகளில் தேர்ந்த மஹாதம்ஷ்ட்ரன் என்னும் மந்திரி ஆற்றிவிட்

டான்: இதோ! உள்ளே போய் என் தந்தைக்குத் தெரிவித்துத் திரும்பி வந்து உம்மையும் அழைத்துச் செல்கிறேன். ஆர்யபுத்திர! தங்களை நான் நோக்கியபோதே என்னைத் தங்களுக்கு அளித்து விட்டேன்.' என்று இயம்பி, சிருங்கபுஜனை விட்டு, மின்னற்போல விரைவிற்சென்று தன் தகப்பனை அணுகினள் ரூபசிகை. 'அப்பா! வெளியில் ஒருவர் வந்திருக்கிறார்: அவர் பெயர் சிருங்கபுஜன்: அவர் ராஜ குமாரர். அண்ணா! அவர் அழகு தான் என்ன! அவரது குலமும் சீலமும் எப்படிப்பட்டவை! அவரது வயதோ இளம் வயது. அண்ணா! அவர் குணந்தான் என்ன சொல்வேன்! எந்த விதத்திற் பார்த்தாலும் அவரைப் போன்றவர் ஒருவரும் எங்கும் இரார். அண்ணா! எனக்குச் செவ்வையாய்த் தெரியும். அவர் மனிதப் பிறப்பினர் அல்லரே யல்லர். யாரோ ஒரு பெரிய தேவரே. அவர் எனக்குக் கணவனாகாமற்போனால், என்னுயிரை விட்டுவிடுவேன். அதைப் பற்றிச் சந்தேகிக்கல் வேண்டாம். இது நிச்சயம்.' என்றனள். இதைச் செவியேற்ற ராக்ஷஸராஜன் கைகால்களை உதறிக்கொண்டு, பதறிப் பேரவாவுடன் தன்பெண் பேசியதைப் பார்த்துச் சிறிது மனம் மகிழ்ந்து பெண்ணைத் தன்னருகில் அழைத்து, 'அம்மா! பெண்ணே மனிதர் நமக்கு ஆகாரமானவர். ஆனாலும் சரி; உனக்கு அப்படியே செய்யவேண்டும் என்ற பிடிவாதமுண்டானால் இருக்கட்டும். நீ போய் அந்த ராஜகுமாரனை அழைத்து வந்து எனக்குக் காட்டு; பார்ப்போம்.' என்று ஒருவாறு இணங்கிப் பேசவே,

ரூபசிகை மனோவேகமாகச் சிருங்கபுஜன் அருகிற் சார்ந்தனள். சார்ந்ததும், நடந்தவற்றை யெல்லாம் அடங்காத ஆத்தரத்துடன் தன் கண்களினாலும் அங்கங்களினாலும் சொற்களினாலும் சட்டெனவெளி யிட்டு அவனைப் பரபரப்புடன் அழைத்துக்கொண்டு தன் தந்தையினிடம் சேர்ந்தனள். மெல்லியல் அவனை இழுத்து வருவதையும், அவன் வடிவழகை யும், தன்பெண்ணின் சொல்லற்கரிய அவாவையும் காணவே, இரக்கமில்லாமல் உயிரை ஒழிப்பதினால் அக்நிசிகன் யென்று பெயர்பெற்ற அவ்வரக்கனது மனது இளகியது. ஆகையால், அவன் மனிதரிடத்து உண்டான இயற்பகையை மறந்து, மரியாதையுடன் அவனை ஆதரித்தான். இதையெல்லாம் கண்ட சிறு வன் வெட்கத்தினாற் றலைகுனிந்து நிற்க, அரக்கன் உரக்கச் சொல்வானானன். 'ராஜபுத்திரா! இந்த ரூப சிகை என் பெண். இவளை நான் உனக்குத் தருகி றேன். நீ ஒன்று செய்யவேண்டும். என்னாணையை ஒருநாளும் தவறாது நடக்கவேண்டும்.'

அரக்கன் இங்ஙனம் அறைவதுகேட்டு, 'நல்லது அப்படியே செய்கிறேன். உங்கள் ஆணையை ஒரு பொழுதும் மீறுகிறதில்லை.' என்றனன் இளஞ்செம் மல். 'அப்படியானல் சரி, ஸ்நாநகிரஹத்திற்குப் போய் மஞ்சனமாடி வா' என்று ஏவினன். அக்நி சிகன், பிறகு, பெண்ணை நோக்கித்திரும்பி, 'அம்மா! ரூபசிகையே! நீயும்போய் உனது உடன் பிறந்தோர் எல்லோரையும், சீக்கிரம் அழைத்து வா.' என்று விடை யளித்தனன். அவ்வரக்கனது ஆணைக் கிசைந்து சிறுவனும் சிறுமியும் அவன் சன்

னதியைவிட்டு வெளியே சென்றனர். வெளியே செல்கையில் ஆலோசனையும் நல்ல மதியுமுள்ள ரூபசிகை சிருங்கபுஜனை நோக்கி, 'ஆர்யபுத்திரா! எனக்கு ஸகோதரிகள் நூறுபெயர்கள். நாங்கள் எல்லோரும் உருவில் ஒன்றேதான். எங்கள் ஆடைகளிலும் ஆபரணங்களிலும் தினையளவும் வித்தியாஸம் இராது. ஒவ்வொருத்திக்கும் கழுத்தில் ஒரே விதமான பொன் கொடியேதான் இருக்கும். எங்களுடைய தந்தை உங்களை 'ஒருவிதமாக மோசம் செய்ய எண்ணி இருக்கிறார். என் இன்னமுதே! நீங்கள் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். எங்கள் தந்தை, ஸகோதரிகளான எங்களையெல்லாம் ஒரே இடத்தில் ஒன்றாகச் சேர்ந்து நிற்கும்படி செய்து, உங்களை வரைவழைத்து எங்கள் எதிரில் நிறுத்தி, 'இவர்களில் உன் உயிர்க் காதலியை அறிந்து காட்டுக' என்று சொல்வார். அவரது கள்ளத்தை நான் கண்டுகொண்டேன். இல்லாவிடில், அவர் எங்களெல்லோரையும் இவ்விதமாகக் கூட்டுவதற்குக் காரணம் வேறு என்னதான் இருக்கும்? அப்பொழுது பெண்ணை வரிப்பதற்குரிய வநமாலை ஒன்றை உங்களுக்குக் கொடுப்பார். நான் இதோ என் கண்டத்திலிருக்கும் பொற்கொடியை இப்படி என் தலையில் அணிந்திருப்பேன். என் கண்மணியே! என்னுயிர்க்காதலரே! இதனையே அடையாளமாய்க் கொண்டு, என்னைக் கண்டறிந்து என் கழுத்தில் இடும் அந்த வநமாலையை. என் தந்தை கேவலம் சோற்றால் எடுத்தச் சுவர். அவர் உண்ணுவதும் பருகுவதும் உறங்குவதுமே

யாகி இச்சரீர வழக்கிலே ஈடுபட்டவர் ; குறிப்பறிய மாட்டாதவர். அவருக்கு விவேகம் குறைவுதான். ஆகையால், பெற்ற பெண்ணுன என் விஷயத்திலேயே இராக்ஷஸத்தனத்தைக் காட்டுகிருர். என்ன பண்ணலாம்; அவரோடு பிறந்த குணம் எங்கே போகும். ஜாதி ஒளிக்குமோ ? சதகுப்பைநாற்றம் போகுமோ? இன்னும் உங்களை மோசம் செய்ய என்னென்னவோ சொல்லுவார். நீங்கள் அதை ஒப்புக்கொண்டு, ‘ ஆம், அப்படியே ஆகட்டும்’ என்று சொல்லவேண்டும். அதற்கு மேல் நடக்கவேண்டியதெல்லாம் எனக்குத் தெரியும். பாம்பின் கால் பாம்புக்குத் தெரியாதா? என்று ஆர்வத்துடன் சொல்லிவிட்டு உடன்பிறந்தோர் இருக்கு மிடத்திற்குச் சென்ருள். சிருங்க புஜனும், ‘நீ சொல்லுகிற வழியே சரி’. என்று சொல்லி நீராடுவதற்குப் போனுன். ஸ்நானகிரஹத்தில் சேடிமார் அனைவருங்கூடி சிருங்கபுஜனுக்குப் பணிவிடைகள் செய்தனர். அவனும் தனது பெரும் விடாய் தீர நீராடினுன். நீராடிப் பட்டாடை யுடுத்து அக்நிசிகன் இருக்கும் கோல மண்டபத்திற்குச் சென்ருன்.

அங்கு இனிதாய் அமர்ந்திருக்கும் தமது தகப்பன் அருகில், அவனிடத்திலுண்டான பயம், பக்தி, விச்வாஸம் என்னும் மூன்றிலும் கட்டுண்டு, மரியாதையுடன் நின்றனர் ரூபசிகையும் அவளது உடன் பிறந்த பெண்மணிகளும். சிருங்கபுஜன் தன்னை அணுகிவரவே அக்நிசிகன். ‘இதோ! இந்த வநமாலையை வாங்கிக்கொள். இங்கிருக்கும் பெண்களில்உன்னைக் காதலித்தவள் எவளோ, அவளைக்

கண்டு, அவள் கழுத்தில் இடு இம்மாலையை' என்ருன். தன் கழுத்திலிருக்கும் பொற்கொடியைத் தனது தலையில் அடையாளமாய் அணிவதாய் இதற்கு முன்னேலேயே ரூபசிகை சொல்லி யிருந்தாளல்லவா? ஆகையால், அந்த வேந்தர் மைந்தன் அவளை எளிதிற்கண்டு, அவள் கழுத்தில் அம்மாலையை இட்டான். மங்கையர் மத்தியில் மணக்கோலத்துடன் மணமகளைக் கைக்கொண்டு நிற்கும் சிருங்கபுஜனை நோக்கி, 'சரி நாளை இந்நேரம் உங்களுக்குக் கடிமணம் செய்விக்கிறேன்.' என்று கம்பீரமாக மொழிந்தனன் அக்நிசிகன். பிறகு, தன் மக்களை விடைகொடுத்து அனுப்பி, அவர்கள் தன் மாளிகையினின்று வெளிப்படும் வரையிற் காத்திருந்து, கோமகனைக் கூவியழைத்து, 'இதோ! இந்த மாடுகள் இரண்டையும் ஓட்டிக்கொள்; ஊருக்கு வெளியிற்போ; அங்குக் குப்பலாகக் கண்ணிற்படும் உனக்கு எள்ளு. அது நூறு கரிசை எள் இருக்கும். அங்கிருக்கிற பூமியைச் செவ்வையாய் உழுது அந்த எள்ளை எல்லாம் விரைத்துவிடு. ஜாக்கிரதை; எள் இறைந்து போகும்.' என்று தாழ்ந்த குரலுடன் ஒவ்வொரு வார்த்தையாய் இயம்பினன். அவனது சொற்கள் மெல்லியவையே யாயினும் அவன் சொன்ன மாதிரியைக் கண்டால், அவன் ஆணையை மீறினல் மிக வருத்தமே வரும் என்பது தோன்றும். இதனை நன்கு உணர்ந்த சிருங்கபுஜன், 'இதுவும் இப்படியா!' என்றுமனம் குன்றினன். ஆனலும், தனது தைரியத்தைத் தவிறவிடாது வெளியே சென்ருன். செல்லுங்கால், 'இதை நான் செய்யாவிடில் ரூபசிகைக்கு நஷ்டம் நேரிடும்.'

என்று நினைத்தான். இவ்வாறு நினைத்தவளவிலேயே ரூபசிகை அவனருகில் வந்தனள். 'பெரியோன் பெற்ற பெருமானே! நீங்கள் மனத்தில்விசாரப்படாதிருங்கள். இஃது ஒன்றும் பெரியதல்ல. இதற்காகத் தினையளவும் சிந்தை வேண்டாம். நீங்கள் அந்த இடத்திற்குப் போங்கள். நான் இந்தக்காரியத்தை ஒரே நொடியில் என் மாயையினால் செய்துவிடுகிறேன்.' என்று கோமகனுக்கு ஆறுதல் உரைத்து மின்னற்போல மறைந்தனள். அரசனது அருமைப் புதல்வன் அவளது ஆர்வச்சொற்கேட்டு மகிழ்ந்து, அந்த இடத்திற்சென்று நோக்கினன். அங்கு இருந்தது எள்ளுக்குப்பலல்ல. அது ஓர் பருத்தபர்வதம். அதன் பக்கத்திலுள்ள பூமியோ, அநாதிகாலமாய்த் தரிசு. தன்னையும் நினைந்து எதிரில் நிற்கும் குப்பலையும் நோக்கும் சிறுவன் இட்டகால் இட்டகைகளாயினன். 'என்செய்கேன்! இதுவும் ஒருவிதிதான்.' என்று பெருமூச்சுடன் மெள்ளமெள்ள உழுது விரைக்கத்தொடங்கினன். தொடங்கிய வாறே, அங்குள்ள பூமியெல்லாம்தீர உழுது செவ்வனே எள்ளும் விரைக்கப்பட்டிருப்பதை நோக்கினான். 'ஆகா! இதென்ன மாயை! ஈதென்ன ஆச்சரியம்! இதை எல்லாம் என்காதலியன்றோ செய்தனள்!' என்று வியந்து வாய்திறந்து நின்றனன். சற்றுநேரத்திற்கெல்லாம்வியப்பு நீங்கியது. அவன் மனத்தில் களிப்புண்டாகித் தான்செய்ததை அக்நிசிகனிடம் சொல்ல வேண்டும்என்ற அவாவுடன் திரும்பிச் சென்றான்.

இங்ஙனம் நடந்ததைக்கேட்டு ராக்ஷஸன் மனத்திற் சீற்றமுற்றுக் கடுமையான குரலுடன்,

'எள்ளுவிரைத்ததனுல் எனக்காவதென்ன? விரைத்த எள்ளைச் சேர்த்து எடுத்துக் குப்பலாகக் குவி!' என்று கூவினன். அவ்வஞ்சகனது கொடும் சொற்கேட்டு மீண்டுவந்து ரூபசிகையினிடத்தில் நிகழ்ந்ததைச் சொன்னன். அவனும், 'ஆகா! அப்படியா?' என்று சற்று வியப்புடன் கூறித் தன் மாயையால் எண்ணிறகடங்காத எறும்புகளை உண்டாக்கி எள்ளை எடுத்து ஒன்ருய்ச் சேர்க்கும்படி ஏவினள். ஒரு நொடிப்பொழுதில் இறைந்து கிடந்த எள்ளெல்லாம் ஓர் குப்பலாகக் குவிக்கப்பட்டன. சொல்லுக்கு எட்டாச் சுருக்குடன் காரியம் முடிந்தது கண்டு மகிழ்ந்து, மறுபடியும் அரக்கனைச் சார்ந்து 'ஐயா! எள்ளைக் குவித்தாயிற்று.' என விண்ணப்பித்தனன் சிருங்கபுஜன்.

இரக்கமொன்றுமில்லாத அரக்கனன்ருே அக்நிசிகன்? அதிலும் வஞ்சகமும் இச்சகமும் மிகுந்தவன். இம்மட்டோ! அவன் பெரும் மூர்க்கன். அதிலும், 'அடா! நாம் என்னசெய்தும் இந்தப் புழுபோன்றவைதலிடத்தில் அவை பயன்படவில்லையா? பார்ப்போம்!' என்ற எண்ணத்தால் அவனுக்கு ஆக்கிரஹம் பொங்குகிறது. இனி அவனது சூதும்வாதும் எத்தனையோ. அவற்றைச் சொல்லல் இயலுமா! அத்தனையும் தன்னுள்ளடக்கித் தன் பெண்ணின் மணுளன் செய்ததை மிக மெச்சினவன்போல முக மலர்ச்சி காட்டி அதற்கேற்றவாறு குறிப்புங் குரலுங் கொண்டு, "ஆனுல், மெத்த சந்தோஷம். இன்னும் ஒன்றே தான் உள்ளது. இதோ! ஓர் அரைநாழிகை வழிதூரத்தில் சூன்யமான சிவாலயம் ஒன்று இருக்

கிறது. இங்கேயேதான்; அது இந்த ஊருக்குத் தெற்கே. அப்பா! அது இதோ தெரிகின்றதே இந்தக் காட்டு நடுவேதான் இருக்கிறது. அதில் இருப்பவன் எனக்கு ஒரே ஒரு தம்பிதான். எனக்கு உயிருக்கு உயிரானவன். அவன் பெயர் தூமசிகன். அவன் அந்த ஆலயத்தில் இருக்கிறான். இப்பொழுதே நீ புறப்பட்டு அங்குப் போ. போய், கோயிலின் கோபுர வாசலிலேயே நின்று கூப்பிட்டு, 'ஓயி! தூமசிகனே! உன்னையும் உன் சேவகரையும் அழைத்துச் செல்வதற்காக உன் தமையன் அக்நிசிகனிட மிருந்து வந்த தூதன் நான். நாளை அவன் பெண் ரூபசிகைக்குக் கல்யாணம் நடக்கிறது. சட்டென வரவேண்டும்.' என்று மாத்திரம் சொல்லி, அங்கு நில்லாது சட்டெனத் திரும்பிச் சீக்கிரத்தில் இங்கு வந்துசேர். இவ்வளவுதான். நாளைப் பொழுது விடியவும் என் குழந்தை ரூபசிகைக்கும் உனக்கும் கல்யாணம்." 'என இனிதாய் இயம்பினன்.

இச்சொற்களை உள்ளபடியே ரூபசிகைக்குச் சொன்னான் சிருங்கபுஜன். தன் பிராணநாதன் பரபரப்புடன் பணித்ததை உகந்து கேட்டுச் சற்று நேரம் மௌனமாகயிருந்து பின்னர், 'நீங்கள் இப்பொழுதே போகலாம். இதோ நிற்கிறதே இந்தக் குதிரையின் மீதிலேயே ஏறிச் செல்லவேண்டும். இது விரைவாய் ஓடும். அவ்வாலயத்திற்குச் சென்று சிவபிரானை ஆதரத்துடன் தண்டனிடுங்கள். உடனே, தடையும் தாமதமும் இல்லாமல் தூமசிகனிடத்தில் எங்கள் தகப்பன் அழைக்கிறதாகத் தெரிவித்து என் தந்தையின் சொற்களை அப்படியே

சொல்லுங்கள். சொன்னபிறகு, சட்டெனக் குதிரை யேறி மீண்டு வரவேண்டும். வருங்கால், அடிக்கடி பின்னர் திரும்பிப் பார்த்துக்கொண்டே வரவேண்டும். அப்போது தூமசிகன் உங்கள் பின்னால் விரைந்துவருவது கண்ணிற்குப்புலப்பட்டால், இதோ! இந்த மண்ணைப் பின்னால் எறிந்துவிடுக. இதைத் தாண்டி வரமாட்டான். வந்தால், உங்களுக்கும் அவனுக்கும் நடுவே விழும்படி இந்தத் தண்ணியைத் தெளித்துவிடுக. இதற்கும் மீண்டு மறுபடியும் பின்னாலேயே வருவானேயாகில், இதோ! இந்த முட்களை முன்போலவே பின்னால் வீசி எறிந்துவிடுக. இதைத் தாண்டி அவன் வரமாட்டான். ஆனால், ஒருகால் அவன் வந்துவிட்டால் இந்த நெருப்பைப்போடுங்கள் உங்கள் பின்னால். இதை அவன் தப்பி வருவதே இல்லை. தாங்கள் தவக்கமும் தடையுமின்றி வெற்றியுடன் வந்து சேரலாம். உங்களுக்குத் தடை ஒன்றும் நேராது. இப்பொழுதே செல்லுங்கள்: இஃது எனது குதிரையே தான். மெத்த ஸாதுவானது; நீங்கள் இதன் மீதேறிச் செல்லுங்கள். நீங்கள் இவ்விதம் தடையின்றி வந்தபிறகு தான் என் வித்தையின் வலிமை வெளிப்படும்.' என்று ஆர்வத்துடன் உரைத்தனள். அவளது சொற்களைக் கவனத்துடன் ஏற்று அவள் ஈந்த மண் முதலானவற்றையும் கைக்கொண்டு, அவளது குதிரையின் மீதேறிச் சீக்கிரத்தில் சிவாலயத்தைச் சேர்ந்தான். அங்கு அரனுமாதேவி கூடிய பாதிவடிவினருடன் வலது புறத்தில் விநயகனையும் கண்டு தேறி, ஆர்வத்துடன் அவரைத் தண்டனிட்டு, அக்நிசிகனிடமிருந்து தான் கொணர்ந்த செய்தி

யைத் தூமசிகனுக்கு உரைத்தனன். செய்தியைக் கூறிச் சட்டெனத்திரும்பிக் குதிரையின் மீதேறி விரைந்து வந்தனன். வருகையில், ஒரு நொடிக்கெல்லாம் தன் பின்னுற்றிரும்பிப் பார்த்தான். தன் தலையைத் திருப்புமுன்னே தன் பின்னுல் தூமசிகன் விரைந்து வருவதைக் கண்டான். அவனைக் கண்டவுடனே தன் பின்னுல் மண்ணை எறிந்தான். உடனே அவ்வரசனுக்கும் இவனுக்கும் நடுவில் ஓர் பெருமலையுண்டாயிற்று. விடாப்பிடியுள்ளவனுக்கு கல்லென்ன மலையென்ன? கையாலும் காலாலும் புராண்டிக் கஷ்டங்கள் பலபட்டு, அம்மலையைத் தாண்டி வந்தான் அரக்கன். அரக்கன் அணுகுவதைக் கண்டு தண்ணீரை எறிந்தான் கோமகன். அந்நீர்த்துளிகள் பூமியிற் படுமுன்னே அரக்கனுக்கும் அவனுக்கும் நடுவில் பேரலைகளும் ஆரவாரமும் கொண்டு உதித்தது அங்கோர் ஆறு. ஆற்றைக் கண்டு சற்றும் தடைபடாது தூமசிகன் அந்நதியைத் தாண்டிவந்தான். 'ஆகா! அரக்கனைத்தடுப்பது அரியது.' என்று அறிந்து, தன்னரையில் இருந்த முட்களை அள்ளி எறிந்தனன். முள்ளை அவன் முன்னுல் எறியவே, செடியும் கொடியும் புனலும் புதருமாக அடர்ந்த காடு ஒன்று உண்டாயிற்று. 'ஏது! இவன் இதைத் தப்பி வருவதில்லை.' என்று எண்ணித் தன் குதிரையைத் தட்டி விட்டு விரைந்து சென்ருன் சிருங்கபுஜன். சிறிது தூரம் சென்று தன் பின்னே பார்க்கத் தூமசிகன் குதித்துக் கொம்மாளத்துடன் வருகிறதைக் கண்ணுற்ருன். 'ஓகோ! இவன் செய்தி இப்படியா!' என்று எண்ணித் தன்வசத்திலிருந்த நெரு

ப்பையும் வாரி இறைத்தான். அந்நெருப்பும் பேரழலாகி அங்குள்ள மரங்களை செடிகள் புற்பூண்டுகள் எல்லாவற்றையும் பொசுக்கிப் பெருஞ்சுவாலை கொண்டு கொழுந்துகள் விட்டு எரிந்தது. பார்த்தான் ராக்ஷஸன். 'என்னடா! முற்காலத்திற் காண்டாவநம் பற்றியெரிந்தது என்று சொல்வார்கள். அது எனக்குத் தெரியாது. இதோ எரிகிறதே இப்படிதான் அதுவும் எரிந்திருக்கவேண்டும்.' என்று எண்ணித் திகைத்தான். அங்கேயே நின்று நெருப்பு எரிகிறதைக் கண்டு, 'வேண்டாம் எனக்கு இந்த வினை வியாபாரம்.' என்று மனங் குன்றி முகம் சுண்டித் திரும்பித் தன்னிடம் போய்ச் சேர்ந்தான் தூமசிகன்

ரூபசிகை என்னும் மங்கையின் மாயையைக் கண்டு மயங்கி மனந்தளர்ந்து திரும்புங்கால், தனக்கு இயற்கையில் உண்டான ஆகாசகமனத்தையும் இழந்து, பயத்தினாற் றள்ளாடிநடந்து தன்னில்லஞ் சேர்ந்தான் ராக்ஷஸன். பின்னர், தன் பின்னாற் பார்த்துத் தன் பகைவன் வராதது கண்டு பயம் நீங்கி மகிழ்ச்சி கொண்டு தூமபுரம் வந்து சேர்ந்தான் சிருங்கபுஜன். கவலை ஒழிந்து மனமகிழ்ந்து தன் காதலியைக் கண்டு நடந்ததை யெல்லாம் நன்குரைத்தனன். வெற்றிக்கெல்லாம் முதற்காரணமான பரியைத் தன் பாரியையிடம் ஒப்புவித்து, அக்நிசிகன் அருகே சென்று, 'ஐயா! நான் உமது தம்பி தூமசிகனை யழைத்தேன்.' என்றான். இதைக்கேட்டு அக்நிசிகன் வியந்து பரபரப்புடன், 'அப்பா! நீ அங்கே போனது உண்மையே யானால், அதற்கு அறிகுறியாகச் சிவபிரானிடத்து நீ கண்டது ஏதேனும்

ஒன்று உண்டாயின் சொல்லுக' என்றான். 'ஆம் ஆம்! உண்டு. அவ்வாலயத்திற் கோயில்கொண்ட பெருமானுக்கு இடப்புறத்தில் அம்பிகையும் வலது புறத்திற் பிள்ளையாரும் இருக்கின்றனர்.' என்றான் சிறுவன். சிறுவனது சொல்லைக் கேட்டுத் திகைத்து அயர்ந்தான் அக்நிசிகன். சிறிது நேரத்தில் தனக் குண்டான மயக்கம் தெளியவே, 'என்ன! என் தம்பி இவனை விழுங்க முடியவில்லையே! இவன் மனிசனே? அல்ல. யாரோ ஒரு தேவன்தான்; நிச்சயம். அப்படியானால் என் வயிற்றிற் பிறந்த பெண்ணுக்கு இவன் தகுந்த கணவனேதான்.' என்று எண்ணித் திர ஆலோசித்து, சிருங்கபுஜனை ரூபசிகையினிடத்து அனுப்பினான். பாவம்! அந்தரங்கமாய் நடந்த கபட மான செய்திகளை அவன் அறியான். 'நீ ரூபசி கையிடம்போகலாம்.' என்று அப்பொல்லாவரக்கன் சொன்னதைக் கேட்டு, 'இப்பிறவியின் பயனெல் லாம் பெற்றேன். இம்மைக்கு இன்பம் பெற்றேன்.' என்று தன் பாக்கியத்தைப் புகழ்ந்து பரபரப்புடன் ஏகினான் கோமகன். நாளை வதுவை என்று நாள் நாட்டிவைத்திருக்கையில் மணமகனுக்கு உண்டா கும் அவாவும் மனத்தின்பதைப்பும் அவனுக்குத் தான் தெரியும். அவ்விதப் பேரவாவுடன் அவ ளோடு அன்றிரவெல்லாம் குடிப்பதும் தின்னுவது மாய்ச் சுகித்திருந்தான். மறுநாள் காலையில் அக்நி சிகன் தன் பெண் ரூபசிகையை ராஜகுமாரனை சிருங்கபுஜனுக்கு அக்நி சாக்ஷியாக அளித்தனன். பிறகு, வெகுகாலமாய்த் தன் வித்தைகளின் வலி மையினால் தான் அடைந்த செல்வத்தையும் பொன்

னையும் சித்திகளையும் அவளுக்கு வரிசைகளாய் அளித்தனன்.

அக்நிசிகன் போன்றராக்ஷஸன் எங்கே? அவன் பெண் எங்கே? அவள் மானிடமகனுக்கு மனையாளாவதெங்கே? இதுவும் நடந்ததே! இவை செம்மையில் அவன் செய்த நற்கர்மத்தின் பயனேயாம். இரக்க மில்லாத அவ்வரக்கன் பெண்ணைக் கைக்கொண்ட அக்கோமகனைச் சேருடன்கூடிய தாமரையைக் கவ்விச் செல்லும் ராஜஹம்ஸம் என்றே சொல்லலாம். தானும், தானகவே தன்னை நண்ணிய பெண்மணியுமாய்க் கூடிக்குலாவி, அரக்கன் அநேககாலமாய் மாயவித்தைகளினல் அடைந்த செல்வத்தை எல்லாம் ஆண்டு அநுபவித்தனன். இவ்விதமாகநாட்கள் பலசெல்லவே, 'போவோம் நாம் இருவரும் வர்த்தமானபுரத்திற்கு; என் கண்மணியே! அதுதான் நமக்குச் சொந்தமான நகரம். அதிலிருந்து என்னை இவ்விதமாய் நீங்கள் நிறுத்தியிருப்பது என் மனத்திற்குக் கொஞ்சமேனும் ஸமாதானமாய் இருக்கவில்லை. இனிநான் அதைப் பொறுத்திருக்க முடியாது. என்னைப் போல்வாருக்கு மானமேதான் பிராணன். உனக்கு உனது பிறந்த ஊரை விடுவதென்றால் கஷ்டந்தான். ஆனாலும்,என்பொருட்டே நீ இந்த ஊரை விடக்கடவாய். இச்செய்தியை உன் பிதாவுக்குச சொல்லுக. அந்தத் தங்கச் சரத்தையும் எடுத்துக்கொள்க. நாம் நமது நகர்க்குப் புறப்படுவோம்.' என்றனன். அவளும் அது கேட்டு, 'ஆர்யபுத்திர! தாங்கள் இடும் கட்டளையைத்தவிர எனக்குச் செய்யவேண்டியது வேறென்

றும் உண்டோ? எனக்கு என்று பிறந்த பூமி யுண்டோ? உற்றார், உறவின்முறையார் முதலியன வெல்லாம் எனக்கு நீங்களே தான். கணவனையல் லாற் கன்னிகையர்க்குக் கதியில்லை. இச்செய்தியை என் தந்தைக்குத் தெரிவிக்கலாகாது. அவர் நம்மை விடமாட்டார். அவர் வெகு கோபக்காரர். ஆகை யால், நாம் இருவரும் அவருக்குத் தெரியாமலே போகவேண்டும். பிறகு, பரிஜனங்களிட மிருந்து நாம் போய்விட்டோமென்று கண்டு, நமக்குப் பின் னால் நம்மைத் தேடிவருவாரேயாகில், அதைப்பற்றி விசாரம் எள்ளளவும் வேண்டாம். நான் அவரை என் மாயையினால் மோஹிக்கச் செய்கிறேன். என் தந்தை ஊனிற் பருத்தவரே யானாலும் புத்தி யிற் சூன்யமானவர்.' என்றனள். அரக்கியேயா னாலும் அவளது இனிய சொல்லைக்கேட்டு, அவ ளது கற்பையும் அன்பையும் கண்டு பெருமகிழ்ச்சி யடைந்தனன் சிருங்கபுஜன். மறுநாள் அவள் ராஜ்யங்கள் பொறுமான இரத்தினங்களையும் ஆடை களையும் அணிகளையும் ஓர் மூட்டையாகக் கட்டிக் கொணர்ந்தனள். அவளை தன் கையில் அழகிய அத்தங்கவாளியை எடுத்து வந்தனள். இவற்றை எல்லாம் கைக்கொண்டு அம்மாது சிரோமணியின் சரவேகம் என்று பெயர் பெற்ற பெரும்பரியின் மீதேறி வேலைக்காரர்களை வஞ்சித்துத் தோட்டத் தில் உலாவுவது போல் வர்த்தமானபுரத்தை நோக்கி இருவரும் பிரயாணமானார்கள்.

பெண்ணும் மருகனும் மிகத் தூரஞ்சென்றபிறகு தான் அக்நிசிகனுக்கு இது நடந்தது தெரியவந்தது.

உடனே அவன் விசும்பில் எழும்பி அவர் பின்னால் வேகமாகச் சென்றான். ஆகாயத்தில் அவன் வெகு தூரத்தில் வரும் ஆரவாரத்தைக் கேட்டு உணர்ந்து வழியிற் செல்லும்போதே அவள் சொல்லுகிறாள். 'ஆர்யபுத்திர! நம்மைத்தகைந்து திருப்பிக்கொண்டு போக என் தந்தை வருகிறார். நீங்களும் குதிரையும் இங்கே இருங்கள். ஸந்தேஹம் தினையளவும் வேண்டாம். இதோ பாருங்கள் நான் அவரை ஏமாற்றி விடுகிறேன். அந்த வேடிக்கையைச் சற்று பாருங்கள். நான் என்னுடைய வித்தையினால் குதிரையையும் உங்களையும் மூடிவிடுகிறேன். அவர் உங்களை ஒருபொழுதும் பார்க்கமுடியாது.' என்று சொல்லிக் குதிரையினின்று கீழே இறங்கினாள் ரூபசிகை.

கீழ் இறங்கியவாறே, அவள் உருவில் ஓர் ஆண்பிள்ளை ஆயினாள். அவள் நல்லதோர் வாலிபனாகி, அங்கிருந்த ஒரு விரகுவெட்டியைநோக்கி, 'அண்ணே! இங்கு ஓர் பெரிய ராக்ஷஸன் வருகிறான். நீ சற்று நேரம் சும்மா யிரு. உன்கோடாலியை என்னிடம் கொடு.' என்றுசொல்லித் தன்கையிற் கோடாலியை எடுத்துக் கட்டை பிளந்து நின்றாள். இதைக் கண்டு சிருங்கபுஜன் நகைகொண்டு நிற்கையில், அவ்விடம் வந்துசேர்ந்தான் அக்நிசிகன். அவன் சிறிது நேரம் அங்குமிங்கும் பார்த்து விரகுவெட்டியொருவன் அங்கே நிற்கக் கண்டு, ஆகாயத்தினின்று தரையிற் குதித்துக் கேட்பானாயினன். பாவம்! ரோஷமிகுந்த ராக்ஷஸன்: பின்னும் மூடன். 'என்ன, ஐயே! இவ்வழியே போனார்களே ஒரு ஆண்பிள்ளை

யும் ஒரு பெண்பிள்ளையும் நீ கண்டாயா?’ என்றனன். இவ்வினவைக் கேட்டுக் கோடாலியைக் குத்திட்டு வைத்து நெற்றிவேர்வை நிலத்திற் சொட்ட நின்ற அவ்விரகுவெட்டி (ஆண்வேஷம் பூண்டபெண்ணான ரூபசிகை) ‘நாங்கள் இருவரும்காலை முதல்இங்கேயே தான் இருக்கிறோம். கட்டைகளைப் பிளந்து பிளந்து எங்கள் கண்கள் சுற்றுகின்றன. நாங்கள் ஒருவரையும் காணவில்லை. ராக்ஷஸருக்கெல்லாம் ராசாவாம். அவர் பெயர் அக்நிசிகராம். அவர் இன்றைக்குத் தான் கைலாஸம் சேர்ந்தாராம். அவருக்குக் கொள்ளிபோடக் கட்டை வேணுமாம். என்னகட்டை என்னகட்டை! பிளக்கிறோம்; பிளக்கிறோம்; மாளாவேயில்லை இம்மாயக்கட்டை!’ என்று அமைதியாக விடை கூறினன். இவ்வுரை கேட்டுப் புத்தியினனான அவ்வரக்கன், ‘ஆகா! எனக்கு என்னமோ ஆபத்து வந்தது. இனி என் பெண்ணால் எனக்காவது என்?’ என்று செவ்வனே சிந்தித்து, ‘வீட்டகமே சென்று என் பரிஜனங்களையே கேட்டு, உண்மையை அறியவேண்டும்.’ என்று உறுதிகொண்டு, விரைவில் வீடுபோய்ச் சேர்ந்தனன். அவன் பெண்ணோ தன் மனமார நகைத்துத் தன் கணவனைக் கூடி முன்போலவே குதிரையேறிப் பிரயாணமானாள்.

இவை எல்லாம் நிகழ்ந்த ஒரு நாழிகைக்குப்பின் திரும்பி வந்தான் அக்நிசிகன். இவன் தன்னில்லம் சென்று, ‘என்ன? நான் உயிருடன் இருப்பது உண்மைதானா?’ என வினவினான். அங்குள்ள பரிஜனங்களுக்கு நகைப்பு உள்ளடங்காது வெளி

வந்தும் இவனிடத்திற்கொண்ட பயத்தினால் அதை எப்படியோ அடக்கி, 'ஐயனே! தங்களுக்குக் குறை யொன்றும் இல்லை.' என்றனர். அவ்வுரை கேட்டு 'அடா! புத்தி மோசம் போனேனே! காலம் கழிந் ததே!' என்று எண்ணி ஆதுரனாக அவா அவனுள் ளடங்காது மீறியெழ, ஆகாயமார்க்கமாய் அஹங் காரம் பொங்கிக் கொதிக்க விரைந்து வந்தான் அச்நி சிகன். அரக்கன் ஆகாயத்தில் வரும் கொடுங் கோஷத்தைக் கேட்டு, 'ஐயன் வந்தான்.' என உணர்ந்து பரியினின்று பூமியில் இறங்கி முன் தன் காதலனை மறைத்து, அவ்வழியில் வந்தவன் போலவே கொணர்ந்த ஓலை ஒன்றைத் தன் கையிற் கொண்டு ஆறுருவம்பூண்டு நின்ற னள் அவனது பெண். இவையெல்லாம் கண் ணிமைப் பொழுதிலேயே நிகழ்ந்தன. வழியிற் கையும் ஓலையுமாய்ச் செய்தி கொண்டேகும் கூலிக் காரனாகி நிற்குமவனை நோக்கி, முன் போலவே, 'அண்ணே! யாராவது ஒரு ஆண்பிள்ளை ஒருபெண் ணுடன் இவ்வழியே போவதைக் கண்டாயா? என வினவினான். ஆண்வேஷம் கொண்ட அப் பெண் நீண்ட பெருமூச்சுடன் இதயம் பதைக்க, 'அந்தோ! ஓலையை எடுத்துக் கடல் தெரிக்க ஓடி வருகிறேன். என் கண்களிரண்டும் சுற்றிச் சுழல் கின்றன; என் தலைசுற்றி மதிமயங்குகிறது. நான் வழியில் ஒருவரையும் காணவில்லையே! நான் என் செய்வேன்! என்ன வேகமாக ஓடியும் ஊர் வரவில் லையே! ஆகா! ஐயன் அக்நிசிகன் போரிற் பகைவ னால் அடிப்பட்டு மண்ணைக்கவ்வி விழுந்தான். அவன்

உயிர் கொஞ்சம் மிருந்திருக்கையில் தன் வீட்டை யும், வாசலையும், நாட்டையும், நகரத்தையும, மற்று முள்ள எல்லாவற்றை விடச்சிறந்த, அவனது அரு மைத்தம்பி தூமசிகனேயும் நினைந்து ஏங்கித் தவித்து 'அப்பா! இந்த ஓலையை—எனக்கு ஒரே அருமைத் தம்பி தானடா—அவனிடம் கொண்டு சேரடா!' என்று கண்ணுங் கண்ணீருமாய்க் கொடுத்தானே. என்னுயிர்போனாலும் போகட்டும். அண்ணன் உயி ரோடிருக்கும்போதே தம்பியை அவனிடம் போகச் சொல்லவேணுமென்று என் உயிரையும் உடலையும் மறந்து பறந்து ஓடிவந்தேனே! ஐயோ! தான் உயிரு டன் இருக்கும்போதே ராஜ்யத்தைத் தன் தம்பி க்கு ஒப்புவிக்கவேணுமென்று ஐயன் ஏங்கித் தவித் தானே!' என்றனள்.

இம்மொழிகேட்டு அக்நிசிகன் 'ஐயோ! நான் இங்கு கல்லைப்போல நிற்கிறேனே! நான் போரில் அடிபட்டுச் சாகக் கிடப்பதாய்ச் சொல்லுகிறானே! நான் உயிருடன் இருப்பது உண்மைதானா? அல் லது உண்மையில் அக்நிசிகன் என்பது நான்தானா? இதென்ன மாயம்!தெரியவில்லையே! நான் இருக்கை யிலேயே சாவது எப்படி? இது என்னமோ! பிரமன் படைப்பில் ஓர் மாயம்! இல்லை பிரமன் சிருஷ்டியே நெறிகெட்டுத் தடுமாறியதோ! இருக்கட்டும். வீட் டிற்கேபோய்த்திரவிசாரித்து நிஜம் இன்னதென்று கண்டறிதல்வேண்டும்.' என்று ஆலோசித்துத் தூம புரத்திற்கு மீண்டுஞ் சென்றான். தன் வீட்டிற்குச் சென்று தன் பணியாளரை வரவழைத்துத் தன் சந்தேகத்தை வெளியிட்டான். காட்டில் ஓலை

கொணர்ந்தவன் சொன்னவை எல்லாம் பொய்யே எனதையும், தன்னைக்கண்டு ஊரார் சிரிப்பதையும் பார்த்து விசனமுற்று, 'சீச்சீ! இந்தப் பேய்ப்பெண்ணைத் தேடித்திரிந்தல்லவா எனக்கு இந்த அவமானம் வந்தது. இந்தச் சனி தொலைந்தாற் பீடைவிட்டது' என்று மனம் வெருண்டு தன்பெண்ணை மறந்தே ஒழிந்தான். தன் கணவனுக்காகத் தன்னைப்பெற்ற தகப்பனையும் மாயையால் மயக்கின மங்கையான ரூபசிகை தன் கணவனை மறுபடியும் கூடினள். ஆம்; ஆம்; கற்புடைய மங்கையர்க்குத் தம் மணவாளரேதான் எல்லாம்: வேறொன்றும் அவர் அறியார்.

பிறகு, சிருங்கபுஜன் ரூபசிகையுடன் கூடி அந்த ஆச்சரியமான குதிரை மீதேறி வெகு சீக்கிரத்தில் வர்த்தமானபுரம் போய்ச் சேர்ந்தான். தனது செல்வப்புதல்வன் பெண்ணரசியுடன்கூட வருகின்றான் எனச் செய்தி கேட்டு, தகப்பன் வீரபுஜன் அவனை எதிர்கொண்டு சென்றனன். தன் பிள்ளை பாங்கான பாவையுடன் ஒளியோங்கி விளங்குவதைக்கண்டு, கண்ணனே தான் ஸத்தியபாமையுடன் வருகிறான் என்றே எண்ணி மகிழ்ந்தான். தனது மருமகளைக் கண்டு, தனக்குப் புதிதாக ராஜ்யலக்ஷ்மி வந்தாள் என்று எண்ணிக் கோமகன் களிப்பு கொண்டான். முன்னறி தெய்வமான தன் பிதாவைக் கண்டவாறே, சிருங்கபுஜன் தன் மனையாளுடன் பூமியில் இறங்கித் தன் தந்தையின் அடியில் ஸாஷ்டாங்கமாகத் தண்டனிட்டான். அரசன் தன் மகனும் மருமகளும் தண்டனிடுவதைக் கண்டு, அன்பும் ஆதரமும் கரை

புரள, உரோமம் சிலிர்ப்ப, மெய்நடுங்கி நின்று அவனை அள்ளி எடுத்து, அவனது அணிசேர்மார்வம் தன் மார்வத்திடை அழுந்தத் தழுவினன். வீரபுஜனது கண்களினின்று பெருகிய ஆநந்த பாஷ்பத்தினால் அவனை அதுவரையிற் பொசுக்கிய பேரழற்போன்ற துன்பம் நனைந்து அணைந்து ஒழிந்தது, அரும் பெரும் துயரப்பட்டுத் திரும்பிவந்த செல்வனுக்கு அக் கண்ணீரே மங்கல ஸ்நாநமாயிற்று. பிறகு, வீரபுஜன் தன் குமரனை நகரத்துக்கு அழைத்துச் செல்லுகையில் விழாவொன்று வழங்கினன். விழாவொலியும் வேதவொலியுமாய்த் தன் மகனை மாளிகைக்கு அழைத்துச் சென்று 'அப்பா! இதுவரையில் எங்கே போனாய்.' எனக் கேட்டான். குமரனும் தன் வரலாற்றை ஆதிமுதல் அதுவரையில் நிகழ்ந்தபடி இயம்பினன்.

பிறகு, நிர்வாஸபுஜன் முதலான அவனது ஸஹோதரர்களை வரவழைத்து அவர்கள் முன்பில் தங்கவாளியைத் தந்தையினிடம் தந்தான். வீரபுஜன் அதைக்கண்டு அதன் வரலாற்றையும் கேட்டு, மற்றைப்பிள்ளைகள் எல்லாரும் இவ்விதமானவர் என்று கண்டு, அவர்களை வெறுத்து, சிருங்கபுஜன் ஒருவனே தான் தன் பிள்ளை என்று எண்ணினன். இங்ஙனம் நடந்ததைக் கண்டு, புத்தியில் மிகுந்த அரசன், 'ஓகோ! பகை மிகுந்து இச்சகோதரர் எல்லோருங்கூடி, இவனை ஊரிலிருந்து விரட்டி விட்டனர். இவர் சிருங்கபுஜனுக்கு உடன் பிறந்தோர் அல்லர்: பகைவரேதான். பாவிகள் குற்றமொன்றுமில்லாத இக்குலமகனைத் துறத்தி விட்டனர். ஆம்;

ஆம்: இப்படியே தான் இவர்கள் தாய்மார் எல்லோ ருங்கூடி இவன் தாயான என் பிராண நாயகியையும் துறத்தி யிருக்கவேண்டும். குணவரை குற்றமற்ற வள் தான். இப்பாவிகள் வீணாய் அவள்மீது குற்றஞ் சாட்டி இருத்தல்வேண்டும்.' இதன் உண்மையை ரகசியமாகத்தான் காணவேண்டும்.' என்று எண் ணித் தன் மனத்திற் றீர்மானஞ்செய்தான் அரசன். அன்று பகலை வழக்கப்படி போக்கி, இரவில் உண் மையைக்காண விருப்பங் கொண்டு, அயசோலேகை யின் மாளிகைக்குச் சென்றான். அரசன் தன்னில் லத்திற்கு வந்தது கண்டு, அவளும் மிக்கக் களிப்பு டன் அவனை ஆதரித்தனள். அவள் கள்ளைப் பருகு மாறு அரசன் செய்வித்தான். அரசனுடன் உல் லாஸமாக விருக்கையிலேயே அவள் மதிமயங்கி தான் பருகிய மதுவினாலாகிய மயக்கத்தினால் அயர் ந்து வாயில் வந்தபடியெல்லாம் பேசத் தொடங்கி, அரசன் விழித்திருக்கையிலேயே, 'நான் குணவரை யின்மீது வீணாய்ப் பொய்க்குற்றங்களைச் சாட்டா மற்போனால், அரசர் இன்றைக்கு என் வீட்டிற்கு வருவாரா?' என்று பிதற்றினள். அரசன் அவ ளது சொற்கேட்டு, 'இவள் துஷ்டை; இவளது எண்ணங்கெட்டது.' என்று கோபத்துடன் எழுந்து வெளியே சென்றான். உடனே தனது மாளிகைக் குச் சென்று, பெரியோர்களை அழைத்து, 'ஐயன் மீர்! நீவிர் எல்லோரும் குணவரையைப் பூமியின் மீது அழைத்து வந்து, அவளுக்கு மங்கலஸ்நானஞ் செய்வித்து,அவளை என்னிடம் அழைத்து வருமின். அவளுக்குக் கேடுவராது அவளைச் சேமமாய்ப் பூமிக்

குள் வசிப்பிக்கும்படி சொன்ன சான்றோர் இட்ட காலவரை, இன்றையதினம், இந்நொடி வரையிற் றூன்.' என்று வேண்டினான். அரசனது ஆர்வச் சொற்கேட்டு அப்பெரியோர்கள், 'அப்படியாயின் சரி.' என்று சொல்லி, அப்பொழுதே அவளை அழைத்து வந்து மஞ்சனமாட்டி, அரசனருகிற் கொணர்ந்தனர். உற்ற காதலர் பிரிவுற்றுத் துன்பப்படுவது, ஆழ்ந்து அகன்ற அலைகடலில் அவர்கள் வீழ்ந்து துன்பப்படுவதை ஒக்கும். அவ்விதக் கடலில் வீழ்ந்து படமுடியாத துயருற்ற இருவர் கரையேறி ஒன்றுசேர்ந்தால், எண்ணற்கரிய ஆநந்த முண்டாகுமே, அவ்விதவாநந்தத்தையே தான் அடைந்தனர் அரசனும் அரசியும். எத்துணைதான் ஒருவரையொருவர் கட்டித்தழுவிக் கொண்டாலும் தீராது அவரது அவா. ஆனாலும், அந்த இரவைஎப் படியோ போக்கினர் இருவரும். அரசன் ஆராத மகிழ்ச்சியுடன் தன் தேவிக்கு அவளது குமரன் சிருங்கபுஜனது வரலாற்றை எல்லாம் சொன்னான்.

இது இப்படியிருக்க மறுநாட் காலையில் விழித்துக் கொண்டனள் அயசோலேகை. அவள் அரசன் தன் பக்கத்தில் இல்லை எனக்கண்டு தான் ஏதோ வாய்தவறிச் சொல்லியதாக எண்ணி, அரும் விசனமடைந்தாள். மறுநாட்காலையில் அரசன் தன் பிள்ளையையும் ரூபசிகையையும் குணவரையினிடத் திற்கு வரவழைத்தான். அம்மகனும், தன் தாய் பூமியின் அடியில் இருந்து மீண்டும் வந்தனள் என்றறிந்து, மிக்கக் களிப்புடன் வந்து, தன் மனையாளுடன் தன் அன்னையையும் பிதாவையும் தண்டனிட்

டான். நீடித்த நாளாய்க் காணப்படாதவனும் பல துன்பங்கள் பட்டு மீண்டவனுமான தன் பிள்ளையைக் கண்டது தானே அவளுக்கு ஓர் விழாவாயிற்று. தன் செல்வனது மானத்தையும் உயிரையும் காத்துத் தன்னையும் அவனுக்கு உதவிய உத்தமியான மருமகளைக்கண்டது முன்னே தோன்றிய விழாவினும் பெரியதோர் விழாவே ஆயிற்று. பிறகு அரசன், 'அப்பா! என் கண்ணே! உன் கதையை எல்லாம் உன்னன்னைக்குச் சொல்.' என்றான். அவனது மைந்தனும் அவனதுஆணைக்கு இசைந்து, தன் கதையையும் ரூபசிகை செய்த பேருதவியையும் விவரமாகத் தன் தாய்க்குச்சொன்னான். தன் புதல்வனது அற்புதமான சரிதையைக்கேட்டு மனம் மகிழ்ந்து, 'குழந்தாய்! உனக்காக இந்த ரூபசிகை எதைத்தான் பேணிச்செய்யவில்லை? தன்பெற்றாரை விடவில்லையா? உற்றாரையும் உரவினரையும் விடவில்லையா? தன் ஊரை விடவில்லையா? இவற்றைக்காட்டிலும் ஒருவர்க்கு உயர்ந்தவை வேறொன்றுண்டோ? இவற்றை யெல்லாம் உனக்கென்றே விட்டனளே! அவளது சரிதையைப் பார்க்கினும் விசித்திரமானதோ மேலானதோ வேறொன்றில்லை. கடவுள் அருளால் உனக்கென்றே உண்டான தேவதையே இவள். உனக்கென்றே தான் இவள் இம்மண்ணுலகை நாடினள். பதிவிரதைகட்கெல்லாம் முதன்மையான மங்கை இவளே தான்.' என்று முகமன் கூறினள். அரசி குணவரை இவ்விதமாகப் போற்றிப் புகழக்கண்டு அரசன், 'நன்கு உரைத்தாய். நீ சொல்வதெல்லாம்

உண்மையே தான்.' என்று அரசிக்கு முகமன் கூறினன். தாயின் இனிய மொழிகேட்டுச் சிருங்கபுஜன் மகிழ்ந்து நின்றான். 'நான் என் கடமையை அன்றோ செய்தேன். இப்பெரியோர் என்னைப் புகழ்கின்றனரே! என் செய்கேன்.' என்று யோசித்த வண்ணம் புதிதாய் வந்த மருமகள் தலை குனிந்து நின்றனள். இங்கு இவர்கள் இவ்வாறு இருக்கையில், அயசோலேகையின் பொய்யைக்கேட்டு அரசன் ஊரிலிருந்து துறத்தின கன்னிமாடத்துக் காவலனான ஸுரக்ஷித்ன், தீர்த்தங்கள் எல்லாம் திரிந்து மூழ்கிப் புனிதனாகி, திரும்பி வந்தான்.

'ஆண்டவனே! ஸுரக்ஷிதன் வந்தான்.' என வாயிற் காவலன் சொல்லவே, அரசன் அவனை வரவழைத்து அவனிட மிருந்த உண்மையைக் கண்டு, இதுதான் ஸமயம்.' என்று எண்ணி, அவனை ஆர்வத்துடன் பூஜித்தான். பிறகு, அவனைக்கொண்டே மற்றெல்லா அரசியரையும் வரவழைத்து, அவனை நோக்கி, 'ஓயீ! இவர்கள் எல்லோரையும் பூமியின் அடியிலிருக்கும் சுரங்கத்திற்கு அழைத்துச் செல்லுக.' என்று சினங்கொண்டு கூவினன். துராலோசனையும் தீமையும் மிகுந்த அவ்வரசியர் எல்லோரும் அரசன் அறைந்ததைக் கேட்டு, உள்ளத்தில் நடுக்கங்கொண்டு உரைதடுமாறி, கைகால் விதிர்விதிர்த்து நிற்பதைக் கண்டு, பெருமாட்டியான குணவராதேவி அரசன் அடியில் விழ்ந்து தண்டனிட்டு, 'என் ஈசனே! பயத்தினால் நடுங்கி, நிற்கவொண்ணாது ஏங்கி நிற்கும் இவரை நான் பார்த்து ஸஹிக்க முடியவில்லை. இவரை இத்தண்டனையி

லிருந்து விடுவிக்க வேண்டுகிறேன்.' என்று மனமுருகக் கெஞ்சினாள். தீங்கு செய்தவர்க்குச் சான்றோர் அருள்கூர்ந்து நன்மை செய்வதையே பதிலாகக்கொள்வர். அரசன் அவ்வுத்தமியின் சொல்லுக்கிணங்கி, 'போமின்!' என்று ஆணையிடவே, வெட்கத்தினால் தலை குனிந்து அவரவர் தன் தன் இல்லத்திற்கு ஏகினர். 'ஐயோ! எனது கதி இப்படியாயிற்றே! சக்களத்தி கையில் எனக்கு உயிர்ப்பிச்சையல்லவா கிடைத்தது!' என்று ஒவ்வொருத்தியும் தத்தனக்குள்ளே எண்ணினள். இப்பிச்சை புகாமலே இருக்க மனம் மாத்திரம் வரவில்லை. இவர்க்கு உயிரேதான் தனம்; மானம் தனமல்ல. 'மானமழிந்த பின் வாழாமை முன்னினிது.' என்பது சான்றோர்க்கேயல்லாது இத்தகையர்க்கு அன்று. தனது மஹிஷி துணைவரை இத்தகைய பெருந்தன்மையும் அருளும் பூண்ட புண்ணியவதி என்று செவ்வனே உணர்ந்த அங்கரபதி 'ஆகா! எனது பாக்கியமே பாக்கியம். இத்தகைய பெருமாட்டியை எனக்குப் பெண்டிராகப் பெற்றேனே! இவளன்றோ எனக்கு உயிர்த்துணையான காதலி!' என்று அக மகிழ்ச்சி யடைந்தான்,

பிறகு, நிர்வாஸபுஜனையும் அவன் கூட்டாளிகளான தனது மற்றைக் குமரரையும் வரவழைத்து, 'இவரைக் கோபங்கொண்டு சிறி சிக்ஷிக்கலாகாது: யுக்தியாய நாட்டைவிட்டு அகற்றல் வேண்டும்.' என்று தன்னுள்ளே உன்னி உறுதிகொண்டு, 'ஐயன்மீர்! வழியிற்செல்லும் வணிகனை நீவிர் குற்றம் ஒன்றுமில்லாது கொலைசெய்திட்டீர்.' எனத்தெரிய வரு

கிறது. ஆகையால், நீவிர் புண்ணிய தீர்த்தங்க ளைத் தேடிச் சென்று, அவற்றில் நீராடிப் பரிசுத்த ராகி மீண்டும் வருவீர்களாக. இனி என் முன்னே நில்லற்க.' என்று கட்டளை யிட்டனன். இவ்வாணை யைக் கேட்டு மிக்க வருத்தமுற்ற அக்கோமக்கள் எல்லோரும் அவ்வரசனிடத்தில் நல்வார்த்தைகள் எத்துணையோ சொல்லினும், அவ்வரசன் அவற் றைச் சிறிதும் மதிக்கவில்லை. அரசாளும் இறைவனை மனம் வெருண்டு சினம் மிகுந்து விடாப்பிடிகொண் டால், யார் எவ்வளவு சொல்லினும் பயன்படாது. அரசனாணைக்கு எதிரில்லையென் நன்குணர்ந்து நாண த்தினாற் றலைகுனிந்து, தன் ஸகோதரர் எல்லோ ரும் செல்வதைக் கண்டு, சிருங்கபுஜன் அருள் சுரந்து, தன் கண்களில் மாரியாய் நீர் புலப்பட, 'எந்தாய்! என்மீது கருணைகூர்ந்து, இவரது இப்பிழையைப் பொருத்தருளல் வேண்டும்!' என்று அரசனது அடியில் வீழ்ந்து கதறி யழுதான். 'முன்னொருகால் யசோதையின் வயிற்றிற் பிறந்த சிறுவன் கன்மலை யெடுத்துக் கல்மாரி காத்தானே, அவனேதான் இம்மையில் என்மகனாகி இப்புவியின் பாரமனைத் தையும் தாங்கவல்லவனாய்த் தோன்றினன்.' இவன் அந்த ஹரியேதான். ஆம்; அதற்கு ஐயமே இல்லை. ஏனெனில், இவனது எண்ணமும் இச்சையும் இன்னவையென்று ஒருபொழுதும் விளங்க வில் லையே! இவன் கொண்ட பகைதான் இத்தகையது என்று காணமுடியுமோ! முடியாது. இம்மட்டோ! தன் பகைவரையும் பாதுகாக்கும் புண்ணியன ன்றோ இவன்! இவன் வாய்மையிற் குன்றுதவன்!'

என்று அரசன் எண்ணி, அவனை வியப்பும் அன்புங்கொண்டு வெகுமதித்து, அருங் குற்றவாளிகளான தனது மற்றைக் குமாரரை மன்னித்தொழிந்தனன். கள்ளம் மிகுந்த அவ்விருவரும் சிருங்கபுஜனைத் தமக்கு உயிரளித்த உத்தமனாகவே எண்ணினர். தம்மரசர் குலத்தில் நிகழ்ந்த இந்தக் கோலாஹலத்தையெல்லாம் கண்ட குடிகளெல்லாம் குணவரை பெற்ற இக்குமாரனது குணத்தைப் புகழ்ந்து போற்றிக் கொண்டாடினர். தேனையுடைய பூவைத் தேனீக்கள் நாடும்: குணமுள்ள கோமகனை குடிகள் நாடும். சிருங்கபுஜனது நற்குணங்களை உகந்து அவனிடத்தில் ஆறாத அன்பு பூண்டனர் குடிகள்.

பிறப்பிற்பின்னவனானாலும் குணத்தில் முன்னவனான தன்குமாரன் சிருங்கபுஜனுக்கு வேந்தன் நல்லதோர் நாளில் பட்டாபிஷேகஞ் செய்வித்தான். இவனது இயற்கைச் சிறப்பினால் இவன் ஏறிய சிங்காதனமும் இவன் சூடியமுடியும் சிறப்புற்றன. முடிசூடும்விழா முடிந்த பின்னர், சில காலம் இனிதாக விருந்தான் இளவரசன். பிறகு, தன் தந்தையின் ஆணையைப் பெற்று ஆட்பெரும் படையைக் கூட்டிக்கொண்டு திக்விஜயஞ் செய்யப் புறப்பட்டான் செம்மல். இவனது ஸத்யமே ஜயிக்கவல்லது. அத்துடன் இவனது புயவலிமையும் வீரமும் சேர்ந்தால் தனது கூடாரை இவன் வெல்லுவான் என்பதற்கும் ஐயமுண்டோ? சிறிது காலத்திலேயே தனது வலிமையால் பகையரசரையெல்லாம் அடர்த்து, அவரது மணிமுடிகள் தன் காலில் அணியப் பெற்று, திசைகள் பத்திலும் தன் புகழைப்பண்ணை

கட்டிவளருமாறு விதைத்துத் தன் தேசும் திறமும் முன்னே செல்லப் பின்னால் தனது நகரம்வந்தடைந் தான்கோற்றவனது குலமகன். திக்குக்களிலெல்லாம் தன் கொடியை நாட்டித் திரும்பிவந்த தன் மகனைப் புவனி ஆளும் அரசனாக்கினான். அவனுக்குத் துரோகஞ்செய்து பயன் ஒன்றும் பெறாது மானம் இழந்த அவன் ஸஹோதரர் எல்லோரும் அவனடியைப் பணிந்து அவனை தம்மரசன் என்று உணர்ந்து அவன் இட்டவேலைகளை யெல்லாம் செய்தனர். செழித்துக் கொழிக்கும் ஏராளமான இராச்சியத்தின் பாக்கியத்தை யெல்லாம் அனுபவித்தான் சிருங்கபுஜன். தனது நல்லொழுக்கத்தினாலும் பணிவிடைகளினாலும் தனது தாய்தந்தையருடைய கவலைகளை நீக்கி, அவர்களைச் சுகம் பெறச் செய்து, அவரது வாழ்த்தைப் பெற்றான். மனிதன் இம்மையிற் கோரும் இன்பத்தை எல்லாம் பெற்றுத் தன் செல்வத்தை அவன் நல்வேதியர்க்குச் சிரத்தையுடன் அளித்தனன். அழகும், கற்பும், பணிவும் நிறைந்த ரூபசிகை, தன் கணவனுக்கு இசைந்தவாறு நடந்து, தன் மாமனையும் மாமியையும் தான் பூசிக்க வேண்டிய முறைப்படி பூசித்தனள். துணைவரையும் அவளது பணிவிடையைப் பெற்று அவளைப் பெரு வாழ்த்து வாழ்த்தினள்.

இவ்விதமாய் ஹரிசிகன் சொன்ன இனிய கதையைக்கேட்டு, யாவரும், ‘அப்பா! நல்லகதை சொன்னாய்.’ என்று சந்தோஷித்தனர். ரத்நப்பிரபையும் அக்கதை நல்லதென்று மெச்சி, ரூபசிகையின் பெருமையைப் புகழ்ந்தாள். உடனே யாவரும் எழுந்து

அவரவர் இல்லத்திற்குச் செல்லவே, நரவாஹநதத்தன் தன் தந்தையின் மாளிகைக்குச் சென்று, அன்று செய்யவேண்டிய கடன்களைசெய்து, அந்திவேளையில் கீதவாத்யங்களை நன்றாய் அனுபவித்து, அன்று இரவைத் தன் மாளிகையில் தனது மனையாளுடன் போக்கினன்.

---

## மருபூதி கதை.

மறுநாள் காலையில் நரவாஹநதத்தன் ரத்நப்பிரபையினுடைய மாளிகையில் இருக்கையில், கோமுகன் முதலான மந்திரிகள் அவனை அணுகினர். ஆனால், மருபூதி மாத்திரம் சற்றுத் தாமதமாய் வந்தான். அவன், காலையில் எழுந்தவாறே, ஆசைதீரக் கள்ளைக் குடித்துத் தன் சிண்டில் பூமாலையை அணிந்து வாய்நிறைய வெற்றிலையைக் குதப்பி, தலை சுற்றிச் சுழல, கண்கள் இரத்தம்போற் சிவந்து அலரவிழித்திருக்க, நாப்புரளாது உரைதடுமாற, அங்கமெல்லாம் சந்தணம் மணம்வீசத் தள்ளாடி நடந்து வந்தான். இக்கோலத்துடன் வரும் அந்த ரஸிகனைக்கண்டு எல்லோரும் நகைத்தனர். அவன் நிலையைக்கண்டு முகமலர்ந்து சந்தோஷத்துடன் கோமுகன், ‘என்ன? ஐயா! நீர் யௌகந்தராயணன் மகனாயிருந்தும், உமக்கு நீதி இன்னதென்று தெரியவில்லையே. காலையிற் கள்ளைக்குடித்தீர். மதுவினால் மதியிழந்து மன்னவன் மாளிகைக்கு வந்தீர்!’ என்று கூவினன். கள் குடித்து மதிபோன அவ்வினையனுக்குக் கோபமும் வந்தது. அக்குடியன் கள்

ளின் வெறி பூண்டு 'இடு...ணியா ஷொள்ள
ரே...ப்ரபு ஷொன்னுத்தகுங்...எங்கப்பன் ஷொ
ண்ணு இடு நீ ஆடு ரா...நீயா சொன்ன. என்னே
பேசுடா! ஷொள்ரே!' என விக்கிப் பிதற்றினன்.
இவ்வாறு மதியில்லாது குழறிப்பேசும் அந்த விண்
ணணக்காரனைக் கண்டு நகைத்துக் கோமுகன்,
'என்ன? ஐயா! இவ்விதமாய் மான மரியாதை இழ
ந்தவர்களைப் பெரியோர் நேரிற் கண்டிப்பார்களா?
அவர் பக்கத்திலிருப்பவரே அவர்பொருட்டு நீதி
யைச் சொல்லவேண்டும். நானும் குலமகனேயா
னுல்,நீயும் நல்லமைச்சனேயானுல், சொல் : பார்ப்
போம்! உனக்கு என்ன? கொம்புகள் இருக்கின்ற
னவா? இல்லையே!' என்றனன். அதுகேட்டு, 'ஐயா!
கோமுகரே! உமக்கென்ன காளைமுகமோ! இல்லை ;
அம் முகந்தான் முளைக்குமோ? நான் கெட்டவன்
தான். நீர் ஒன்றும் வாழவில்லை. உமக்கும் அடக்கம்
ஒன்றும் இல்லை. நீரும் காளையும் பிறப்பில் ஒரு
சாதிதான்! வழக்கில்ஒருசாதிதான்!' என்று அக்குடி
யன் கூவினுன். அக்குடிகாரனுை மருபூதி நெரித்து
நின்று அடக்கமின்றிக் கூச்சலிட்டதைக் கேட்டு
எல்லோரும் கொல்லலென்று நகைக்கக், கோமுகன்,
'இவன் மருபூதி. இவனே பாலைவனத்திற் கண்டெடு
த்த நன்மணி. இந்த நன்மணியை வைரங்கூடத்
துளைக்காது. இதற்குக் குணத்தைப் புகட்டவும்
முடியுமோ! முடியவே முடியாது. உண்மையான புரு
ஷரத்நமேயானுல், அதனை வச்சிரங்கொண்டு எளி
திற் துளைத்து (குண) நூலைப் புகட்டலாம். இது
அவ்விதமானதன்றே! இதற்குக் குணத்தை புகட்டு

வது கங்கைக்கு மணலால் அணைகட்டுகிறதேயாம். அது என்னவெனச் சொல்லுகிறேன் சற்று சாவதானமாய்க் கேளுங்கள்.

---

## தபோதத்தன் கதை.

பிரதிஷ்டான நகரத்தில் தபோதத்தனென்று ஒரு பார்ப்பனன் இருந்தார். அவரை அவர் தகப்பனுர் எவ்வளவு சிறுவயதிலே கஷ்டப்படுத்தியும், அவர் வாசித்தவரல்லர். விளையும் பயிர் முளையிலேயே தெரியும். சிறுவயதிற் கற்காதது கண்டு, உற்ருர், உரவுமுறையார், ஊரார் எல்லோரும் அவரை இகழ்ந்தனர். 'ஐயோ! நம்மை எல்லோரும் இகழ்கின்ருரே.' என்று உணர்ந்து, அவருக்கு மனம் நொந்து வித்தை வந்தெய்தும் பொருட்டுத் தவஞ் செய்யக் கங்காதீரத்திற்குச் சென்றனர் அவ்வந்தணர். அநுதாபமும் விடாப்பிடியும் உள்ளவன் எவனே அவன் நினைத்த காரியத்தை கண்டிப்பாய் விரைவில் செய்தல் இயல்பு. அங்ஙனமே, அவ்வந்தணர் கொடுந்தவம் புரிந்தனர். அவர் தவஞ் செய்யத் தொடங்கவே, 'ஐயோ! அந்தணன் தவஞ் செய்கின்ருனே! நமக்கு என்ன வருமோ!' என்று சிறிது காலத்திலேயே இந்திரனுக்குப் பெரும் பயமுண்டாயிற்று. ஆகையால், அவர் தவத்தைக் குலைத்திடக் கருதித் தானே ஒரு வேதியன்வேஷம் பூண்டு, பாகீரதியின் கரைக்கு வந்து சேர்ந்தான். தவஞ்செய்யும் அப்பார்ப்பனரருகில் நின்று, கரையில் இருக்கும் மணலை அள்ளி அள்ளி, நுரையும் அலையும் சுழலுமாக ஓடும் கங்கையில் எறிந்

தான். இந்த வேடிக்கை வெகு நேரமாக நடப்பதைக்கண்ட தபோதத்தருக்கு வியப்புண்டாயிற்று. அவ்வியப்பு, அவர் எத்துணையோ முயன்று உள்ளடக்கியும், அடங்காது அவரது மௌனத்தைக்கெடுக்கவே, 'என்ன? ஐயா! வேதியரே! உமக்குக் களைப்பு ஒன்றுமில்லையா? எத்துணையோ நாழிகைகளாக மண்ணை அள்ளி அள்ளி இறைக்கிறீரே! மெத்தச் சந்தோஷமாகச் செய்கிறீரே!' என்றனர். மண்ணை இறைக்கும் வேதியரோ, தாவதர் சொல்லுவதைச் சிறிதும் கவனியாது, தன் காரியத்தில் மேன்மேலும் அவாவுடன் முயன்றனர். இறுதியில், தாவதர் அவரை கட்டாயப்படுத்திக் கேட்டதற்கிணங்கி, 'ஆமாம்; தவத்தைக் கெடுக்கத் தருணம் வந்தது.' என்றெண்ணிய அம்மாயவேதியர், 'ஐயா! பிராணிகள் எல்லாம் கங்கையை எளிதில் தாண்டவேண்டும் என்றுதான் நான் கங்கைக்கு அணை கட்டுகிறேன்.' என்றனர். அது கேட்டு, வியப்பும் வெறுப்பும் மிகுந்து தபோதத்தர், 'என்னடா! மூர்க்கா! ஆழ்ந்து அகன்று அலைகளுடன் ஓடுங் கங்கைக்கு மணலால் அணைகட்ட எப்பொழுதாவது முடியுமாடா!' என்று கூவினர். விண்ணையாளும் வேந்தனன்றோ மண்ணிற் பார்ப்பானாக வந்திருக்கிறான். ஆகையால், அவன் பேசுவதற்கும் தடையுண்டோ? ஆகவே தபோதத்தர் கூவியதைக் கேட்டு, 'ஓகோ! அப்படியா! ஐயா! நீர் சுவடி எடுத்தது உண்டோ? வாசித்தது உண்டோ? வரையேடு கண்ணுற் கண்டதுண்டோ? பள்ளிக்குப் போனதுண்டோ? பாடம் படித்ததுண்டோ? இவை எல்லாம்

செய்தாலன்றோ வித்தை வருவது. அந்த வித்தையைப் பட்டிணியும் பாரணையும் நோம்பும் கொண்டு அடையலாமென்று முயல்கின்றீரே. அது உமக்குக் கிட்டுமோ. அது, குதிரைக்குக் கொம்பு முளைத்தால், அப்போது உமக்குக் கிட்டும். ஏன்? ஐயா! முயற் கொம்பைத்தேடி அலைகின்றீர். சுவரிலல்லவா சித்திரம் எழுதுவது; நீர் ஆகாசத்தில் எழுதுகின்றீரே! ஏடும் எழுத்தாணியும் இல்லாமலும், வாய் திறந்து எழுத்தைச் சொல்லாமலும் மழைக்கேனும் பள்ளியில் ஒதுங்காமலும், தவத்தினாலும் நோன்பினாலும் வித்தை வருமேயாகில், இவ்வுலகத்தில் எவனாவது எப்பொழுதாவது பள்ளியிற் படிப்பானா!' என்று மறுமொழி கூறினன்.

பிராமணனுருவங்கொண்ட இந்திரன் இவ்விதம் சொல்லுவதைக்கேட்டு, தபோதத்தர் தன் மனதிற் றிர விசாரித்து, 'ஆம்: இவர் சொல்வது உண்மையேதான்.' என்று உணர்ந்து தன் தவத்தைத் தவிர்த்துத் தன்னூருக்குத் திரும்பினர். நல்ல மாட்டிற்கு ஒரு சூடு: நல்ல பெண்டிர்க்கு ஒரு வார்த்தை. புத்தியுள்ளவனுக்கு இவ்விதமாய் எளிதில் உண்மையைப் புகட்டலாம். நமது மருபூதியோ துர்ப்புத்தியே மிகுந்தவன்: இத்தகையனுக்கு நல்ல மதி சொன்னால், அவனுக்குப் பெரும் கோபமே தான் உண்டாகும்.

---

## விருபசர்மாவின் கதை.

இப்படி கோமுகன் சொல்வதைக்கேட்டு அங்குள்ளோர் திகைத்து நிற்க, ஹரிசிகன், 'ஆம்,

உண்மைதான், குறிப்பறியும்புத்தியுடையோனுக்கு மதியை எளிதிற் புகட்டலாம். இந்த விஷயத்தைக் குறித்து எனக்கும் ஒரு கதை தெரியும்; சொல்லுகிறேன்; சற்றுத் தயவு செய்து கேட்க.' என்று பறபறப்புடன் இயம்பினான்.

முன்னொருகாலத்தில் வாரானஸீயில் பிராமணர் ஒருவர் இருந்தார். அவர் மிகப் பெரியவர்: அவர் பெயர் விரூபசர்மா: அவர் மிக்கக் குரூபி: அவருக்குப் பாக்கியமே யில்லை அவருக்கு ஒரு விதத்திலா குறை; எல்லா விதத்திலுந்தான் குறைவு. அவர், 'ஐயோ! நமக்கு உருவம் அவலக்ஷணமாக விருக்கிறதே. சுந்தரமான உருவந்தான் இல்லையே எனின் எனக்குப் பணந்தான் உண்டோ? அதுவும் இல்லையே! கையிற் பணமில்லாதவன் பிணமன்றோ?' என்று மனங்குன்றி எல்லாவற்றையும் வெறுத்து, வீட்டை விட்டுக் காடு சென்று, கொடுந்தவம் செய்து, இவ்விரண்டையும் பெறவேண்டுமென்று தீர்மானித்தார்.

ஆசையும் ஊக்கமும் உள்ளவன் உரங்காண். ஆகையால், அந்த அந்தணர் தடையும் தாமதமுமின்றிக் கொடுந்தவம் புரிந்தனர். உடனே, இந்திரன், 'குரூபி பகுசேஷ்டிதன் அல்லவா? அக்குரூபி தவம் புரிகிறானே! அதிலும் இது தவமென்றால் தவமா! அரும் தவமாயிற்றே! எனக்கு என்ன நேரிடுமோ! தெரியவில்லையே!' என்று நடுங்கித் தன் நிலையைக் காப்பாற்றிக் கொள்ளக் கருதி, பசியால் வருந்தி இளைத்த ஒரு பேய் நரியின் உருவம் பூண்டு, தவம் புரியும் அவ்வந்தணர் எதிரில் தோன்றினான். தவநிலையில் மௌனமாகவிருந்த விரூபசர்மா

தன்னெதிரில் நிற்கும் உண்ணி பிடித்த அப்பேபதை நரியைநோக்கி, உள்ளத்தில்நகையொடு, 'ஈதென்ன! பிரமன் இவ்விதமான ஜெந்துவையும் படைக்கிருனே. மனிசரும் தமது வினைப்பயனுல் இவ்விதமான இழிந்த உருவத்துடன் பிறக்கிருர்களே! நான் இவ்விதமாகப் பிறக்காமல் மனிசனுக்வேனும் பிறந்தேனல்லவா! இதுவே நலம். விதிவரைந்த எழுத்தை அழிக்கலியலுமா? அது யாராலும் முடியாதே என்று மெள்ள மெள்ள மனத்தின் உறுதி தவறவே, தவத்தைவிட்டு வீடுபோய்ச் சேர்ந்தனர் விரூபசர்மா.

இறைவனே! நல்லறிவுடையவர்களே, இவ்விதமாகவே, எளிதில் உபாயஞ்செய்து கேட்டிலிருந்து திருப்பலாம். புத்தி குறைந்த மூர்க்கரைத் தம் பிடிப்பிடியினின்று விடுவிக்க முடியவே முடியாது.

இவ்வாறு ஹரிசிகன் கதைசொல்லும்போது ஆவலுடன் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தான் கோமுகன். கதை முடிந்தவுடனே அவனை மிகச் சினங்கொண்டு நோக்கினுன் மருபூதி. பாவம்! குடித்து மதியிழந்தவன்: தனக்கு உண்டான கொடுங் கோபத்தை அடக்கமுடியாமல் கூச்சலுடன், 'இந்தக் கோமுகனுக்கு வலிமை நாவிலேதான்: இவனுக்குக் கையில் பலமுண்டானுற் தெரியாதா? கையினுல் ஆகாத கபோதிக்கு வாய்தான்கதி. அவன் தலைக்கத்தான் வேண்டும். வீரமில்லாமையால் பயங்கொண்ட பேடிக்கும் பெண்ணுக்கும் கதி ஏது? கைக்காரனுனல் தெரியாதோ!' என்று கூவினுன். கூச்சலிட்டதுமன்றி சண்டைக்கும் ஆயத்தமானுன். இவ்

விதமாய் நிகழ்ந்ததை எல்லாம் பார்த்திருந்த இளவரசன், 'ஓகோ! சண்டைமுற்றிவிடும்; இனி இதனை வளரவிடலாகாது.' என்றுஆலோசித்தான். பிரபுவான நரவாஹநதத்தன் மருபூதியைஅணுகி, அவன்மீதுபையத்தன்கையை வைத்து அவனுக்குச் சமாதானமுண்டாக நல்வார்த்தைகள் சொல்லி, அவனை விடுத்தனன். அமைதியுடன் அவன் தன் வீட்டிற்குப் போனன் எனக் கண்டு, தன் நண்பரையும் அமைச்சரையும் அனுப்பித் தானும் காதலியுடன் தன்னகத்தினுட் சென்று அங்காளைவழக்கப்படி இனிதாகப் போக்கினன்.

மறுநாட் காலையில் வழக்கப்படிநண்பரெல்லோருங் கூடியிருக்கையில், இயற்கையில் இனிமை மிகுந்த பெருமாட்டியான ரத்நப்பிரபை, 'ஆர்யபுத்திரா! நுமது பாக்கியமே பாக்கியம். இவர்கள் உங்களுக்கு அமைச்சராக ஏற்பட்டிருக்கிறார்களே! உங்கட்கும் இவர்கட்கும் உண்டான நட்பு நீர் பிறந்தது முதல் உண்டானதல்லவா? இத்தகைய நட்பு ஒருபோதும் நீங்காது. இவரும் அரும்பேறு பெற்றவர்களேதான். இவ்வித நேசமுள்ள இறைவர்க்குச் சேவகம் பூண்டாரன்றோ! நீங்கள் இப்பிரியாநட்புடன் கூடியது நீங்கள் செம்மையிற் செய்த அறத்தின் அரும் பயனே தான்.' என்று ஆதரத்துடன் முகமன் கூறினள். அரசி இவ்வாறு இயம்பியதைக்கேட்டு, மருபூதிவெட்கத்தினல் தலைகுனிந்துநிற்கவே நரவாஹநதத்தனது நர்ம விளையாட்டுத்தோழனான வஸந்தகனது குமாரன் தபந்தகன்'ஆம்,அம்மா! எங்களது நல்லறத்தின் பயனே தான் இவ்விறைவர் எங்களுக்கு நேர்ந்

தது. இவர் எங்களுக்கு இறைவர்மாத்திரமேயல்ல எங்கட்கு மற்றெல்லாம்இவர்தான். அம்மா! இதனைக் குறித்து நான் ஒரு கதை சொல்லுகிறேன்: கேட்க வேண்டும்.' என்று மிக்கப் பணிவுடன் இயம்பினன்.

## விநயசீலன் கதை.

அம்மா! விலாஸபுரமென்று ஒரு பெரிய சிவ க்ஷேத்திர முண்டு. அந்நகரத்தில் விநயசீலன் என்று ஓர் அரசன் இருந்தான். அந்தப் பெயர் அவனுக்கே தகும். அவனுக்கு உயிர்க்குயிரும் உடலுக்குடலுமான மஹிஷி ஒருத்தி இருந்தனள். அவள் பெயர் கமலப்பிரபை. அரசன் அவளுடன் வெகு காலம் சிற்றின்பத்தில் மூழ்கி யிருந்தான். காலஞ் செல்லவே, அரசனுக்குவிருத்தாப்பியம் வந்தமையால் அவனது வடிவழகெல்லாம் அழிந்து ஒழிந்தது. இவ்விதமாகத் தான் அழகு மாறி யிருப்பதைக் கண்டு, அரசன் மிக்கத் துக்கமடைந்தான். தன் முகத்தைக் கண்ணாடியிற் கண்டு, 'ஐயோ! அலர்ந்து பூத்தத் தாமரையின் மீதுபனி பெய்ந்தாற் றுபோதெல்லாம் நரைத்திருப்பது போல நரைத்துத் தேசிழந்த என் முகத்தை அரசிக்குக் காண்பிப்பது எப்படி? சீ! இவ்வளவு தானா? என்னழகெல்லாம்? இப்படி கிடை கெட்டிருப்பதைக் காட்டிலும் மரணமடைவதே நலம்.' என்றிவ்விதமாய்த் தன்னுள்ளே ஆலோசித்துத் தன் ஸபையைச் சார்ந்தான்.

ஸபையில் அவன் இனிதாக அமர்ந்து, தருணசந்திரன் என்னும் தனது வைத்தியனை ஆதரத்துடன் அழைத்து, 'ஐயா! வைத்தியரே! உமக்கு நம்மிடத்தில் எவ்வளவோ அன்புதானே! நாள் தோறும்

நமது க்ஷேமத்தைக் கண்டுகொள்கிறீரே. இதோ பாரும்; எனக்குண்டான இந்தக் கிழத்தன்மையை மாற்ற யுக்தி ஏதாவது உண்டா?' என்று வினவினான். வைத்தியன் பெயர் தருணசந்திரன். தருணனான சந்திரன் கோணலானவன். அப்பெயருக்கு இயந்தபடி வைத்தியனும் குரும்புக்காரன்தான். கள்ளமும் குரும்பும் உள்ளவனானதாற் றன்னுள்ளே, 'இந்த அரசன் மிக்க மூர்க்கன். இவனிடத்திலிருந்து நான் அடையவேண்டியதை எல்லாம் பற்றிக்கொள்ளவேண்டும்.' என்று அவன் ஆலோசித்து, அரசனை நோக்கி, 'இதோ! பார்க்க. இந்தமருந்தைத் தாங்கள் எட்டுமாத காலத்திற்குப் பூமியினடியில் ஓர் சுரங்கத்திலிருந்து உபயோகித்தால் நுமது கிழத்தனம் ஒழிந்து விடும்.' என்றான். வைத்தியன் சொற்கேட்டு, 'ஓகோ! இது நல்லது தான்.' என்று மனம் மகிழ்ந்து, அந்த க்ஷணமே சுரங்கமொன்று செய்வித்தான் வேந்தன். சிற்றின்பத்திற் சிக்கிய மூர்க்கருக்கு கண்கூடாய்ப்பட்டது கேடெனினும் தெரியுமா?"நல்லது இது கெட்டது இன்னது;'என்று பகுத்தறிய அவர்கட்குப் புத்திதான் உண்டோ?

'வேந்தர்வேந்தே! நமது முன்னோர்க்குள்ள வலிமையும் உறுதியும் எவ்வளவு? அவர்களுக்கு உள்ள சமமும் தமமுந்தான் எத்துணையன? அந்த யுகத்தில் அவர்களுக்கு உண்டான ஸித்திகள் எத்துணையவோ! இம்மட்டோ! தமது மஹிமையால் அவர்கள் கண்டுணர்ந்த ரஸாயனங்களோ எத்திரமானவை! இக்காலத்தில் இவற்றுள் ஒன்றையேனும் ஒருவனேனும் கண்டதும் இல்லை: கேட்டதுமில்லை. இறைவ

னே! அவ்வித உதவிகளில் இக்காலத்தில் ஒன்றேனும் இல்லையே! அவ்வித மருந்துகள் சிறிதேனும் முறை தவறினாலும் சரி; கெடுதல் நேரிட்டாலும் சரி; அவை அனுகூலம் செய்யாமற் போவதுமேயன்றி, மிக்கத் தீங்கை விளைவிக்குமே! இத்தகைய அருமருந்துகளை இக்கொடிய காலத்தில் உபயோகிக்கலாகுமா?' என்றிவ்விதமாய் மந்திரிகளெல்லோரும் எவ்வளவோ சொல்லியும் அவனது கல்லான புத்திக்கு ஒன்றும் புகட்ட முடியவில்லை. அரசனது மனம் சிற்றின்பத்தில் ஆழ்ந்தது. ஆகவே, அவர்கள் எடுத்துரைத்தமதி அவனது மனத்தை அணுகவே இல்லை. அந்தோ இழிஞர் அல்லவோ இவ்விதமான ஆசைகொண்டு கூடாரைக் கூடித் திரிந்து கெட்டுக் குட்டிச் சுவராகுபவர்? ஆகா! ஈசனருளால் இறந்த காலம் திரும்பவும் வருமோ? வரவே வராதே! இங்ஙனம் கண்ணிருக்கையிற் குருடர் ஆவரும் உண்டா? வேண்டாம்! எம்மரசே! வேண்டாம்!' என்று கூச்சலிட்டு அமைச்சர் கதறியதுங்கூட அம்மூர்க்கனது செவியிற் படவில்லை. இன்பத்தில் ஆசை என்னும் பெருவெள்ளமன்றோ அவனைப் புறட்டிக் கொண்டோடுவது? பெருமை, செல்வம், அதிகாரம், ஆணவம், உலகவழக்கில் அவர், மூர்க்கரது நட்பு ஆகிய இவற்றுள் ஒவ்வொன்றும் ஒருவனைக் கெடுத்து அருநரகுக்கு ஆளாக்கவல்லது. இவை அனைத்திற்கும் குடியிருப்பான இவ்வரசனைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமா?

வைத்தியன் சொல்லவும், சுரங்கம் ஏற்படவும், அரசன் நுழையவுமாய்க் காரியம் நிகழ்ந்தது. 'அர

சன் ஒருவன் மாத்திரமே சுரங்கத்தில் இருக்க வேண்டியது. அரசர்க்குரிய பணியாளராவது இலக்ஷணங்களாவது இருக்கக்கூடாது. தானும் தனது வேலைக்காரன் ஒருவனுமாகிய இருவரே அரசனுக்கு வேண்டியவற்றை எல்லாம் செயல்வேண்டும். தாமிருவர் தவிர மற்றெவரும் சுரங்கத்தினுட்செல்லவாவது அரசனை அணுகவாவது கூடாது.' என்று மருத்துவன் திட்டஞ் செய்திருந்தமையால், அவனும் அவனது பரிசாரகனும் மாத்திரமே அரசனுக்கு வேண்டியவற்றை எல்லாம் செய்தனர். தன் வேலைக்காரனுடன் மருத்துவன் சுரங்கத்திற்குள் செல்வதும், அரசனுக்கு மருந்துகொடுப்பதும், ஆகாரமளிப்பதும் அவனுக்குப் பணிகள் செய்வதும், வெளியில் வருவதுமாய் இருந்தனன். அஞ்ஞானமிகுந்த அரசனோ பூமியினடியில் இருளடைந்த சுரங்கத்தில் ஒன்றியாகவே தன் செங்கோலுக்குரிய பெருமையை எல்லாம் இழந்து, மாயையின் மயக்கிற்பட்ட அஞ்ஞானி உலகவழக்கில் அழுந்தி இருப்பது போல, இருந்தனன்.

இவ்வாறு மாதங்கள் ஆறு கழிந்தன. வைத்தியன் அரசனது கிழத்தனம் அதிகமானதைக் கண்டான். 'ஓகோ! இப்படியா செய்தி!' என்று எண்ணி அந்த இழிஞன தீயோன் அரசனைப் போல உருவும் மேனியும் உள்ள வாலிபன் ஒருவனைக் கண்டுபிடித்து, 'வா! ஐயா! உன்னை ராஜாவாக்குகிறேன்! நீ மாத்திரம் சும்மா இருக்கவேண்டும்!' என்று அவனுக்கு ரஹஸியமாகச் சொல்லித் திட்டஞ்செய்தான். பிறகு, சுரங்கத்தினுள் சென்று

அரசன் அயர்ந்து தூங்குவதைக் கண்டான். தூங்கும் அரசனை சப்தமில்லாமற் கொலை செய்து சுரங்கத்தின் ஒரு மூலையில் எடுத்துச் சென்று, அந்த அவனது சவத்தைப் பாதிஇராத்திரிப் பொழுதுவரையில் மூடிவைத்தான். நடுநிசியிற் பிணத்தை எடுத்து வெளியே சென்று அங்கோர் பாழுங் கிணற்றில் எறிந்தனன். இதைச் செய்த பொழுதே தான் நிட்டம்செய்து வைத்திருந்த வாலிபனை வழி தெரியாமல் அழைத்துச்சென்று அவனை உள்ளே வைத்துச்சுரங்கத்தின் வாயிலை அழுந்த மூடி வெடியற் காலையில் வெளியில் வந்தான். அப்பா! இந்த மனிதஜன்மம் பொல்லாதுதானடா! அதிலும் முழு மூர்க்கனது தீய குணத்திற்கும் செய்கைக்கும் கேட்கவேண்டுமா! அவ்விதமான இந்த வைத்தியனுக்கு வேளையும் வாய்த்துச் சமயமும் நேர்ந்ததல்லவா! அவன் செய்யமாட்டானு? இதுவும் செய்வன்; இன்னமும் செய்வன். அவன் செய்யும் ஸாஹஸத்திற்குக் கணக்குண்டோ! வழக்குண்டோ!

பிறகு, நகரத்திலுள்ள பெரியோரையும், குடிகளிற் சிலரையும், அமைச்சர் முதலான ராஜாங்கத்தினரையும் ஒருங்கு சேர்த்து, அச்சபை நடுவே நின்று,‘ கனவான்களே! ஐயன்மீர்! ஆறு மாதத்திலேயே விருத்தாப்பியத்தை நீக்கி நமது அரசரை வாலிபராய்ச் செய்துவிட்டேன். இன்னும் நான் குறித்த கெடுவிற்கு இரண்டு மாதங்கள் இருக்கின்றன. இவ்விரண்டு மாத காலத்தில் இப்பொழுது அவருக்கு உண்டான உருமாறிவிடும். ஆகையால், உங்களுக்கு விருப்பமுண்டானல், தூரமாக நின்று,

நீங்கள் அவரது கண்ணிற்படலாம்.' என்று கூறிச் சுரங்கத்தின் வாசலைத் துறந்தான். சபையாகக் கூடியிருந்தவர் எல்லோரும் சுரங்கத்தின் வாசலிலிருந்து உள்ளே பார்த்தார்கள். அவரை வாசலில் நிறுத்தி வைத்தியன் சும்மாயிருக்கவில்லை. அவர்களில் ஒவ்வொருவனையும் கையைப் பிடித்து அழைத்து முன்னே நிறுத்தி, 'அவன் இன்னவன்; அவனது ஸ்திதி கதிகள் இன்னவை; அவன் அரசர்க்கு இன்ன வேலைக்காரன்.' என்று எல்லாவற்றையும் விவரமாய் அப்புது அரசர்க்கு வரலாற்றை அறிவித்தான். இதில் அவன் செய்த சூது அரசரது அந்தப் புரத்தையுந்தான் பற்றியது. அங்குள்ள அரசியரும் அரசர் வாலிபரானதைப் பார்த்தவர்கள்தான்! மற்றைய இரண்டு மாதத்திற்குள் உள்ளிருந்த வாலிபனுக்கு அந்த இராச்சியத்தின் ஸகல சங்கதிகளையும் சொல்லிவைத்தான். அவ்வாறு சொல்லி வைத்ததில் அவ்வைத்தியன் ஒரு பெயர் விட்டு இருப்பானு! ஊர் விட்டிருப்பானு! அந்தப்புரத்துப் பெயர்களிலும் சரிதைகளிலும் மறந்திருப்பானு!! இல்லவே இல்லை! பிறகு, எட்டுமாதமும் ஆகிக் குறித்த கெடுவும் வரவே, சுரங்கத்து வாயிலைத் துறந்து, இரண்டு மாதமாக நடந்தபோஷணையினுல் பெருத்த அந்த வாலிபனை வெளியே கொணர்ந்து, 'அப்பா! வந்தார்! ஐயா! உங்கள் அரசர் முதுமை நீங்கி வாலிபராக!' என்று தன் தலையிலிருந்து ஏதோ பெரும் சுமையை இறக்கினவன்போல் பேசினுன். வெகு காலம் காணுமற் போன கணவனைக் கண்ட குலமகள்போல அவனை அன்புடன் ஆதரித்தது

பிரஜை. இது எல்லாம் உலகின் அரும் விந்தையிற் பெரியது ஒன்றேதான் இது! அன்று முதல் அந்தப் பொய் யரசன் அநுபவித்த இன்பந்தான் என்ன சொல்வேன்! என்ன ஸ்நாநம்! என்ன சந்தனம்! என்ன பட்டாடை! என்ன போகம்!! என்ன சுகம்!!! என்ன சாப்பாடு! இத்துணையும் அவன் அநுபவித்துக் கொண்டு, செங்கோலும் செவ்வனே செலுத்தித் தன் மந்திரிகளுடன் கூடி இனிதாகவே இருந்தான் வெகுகாலம். அவன் இயல்பாக இளமைப் பருவம் பூண்டவன். அதிலும் பிச்சைக்காரனாக விருந்து, திடீரென்று ராஜாவானவன். அந்தச் சந்தோஷமும் பூரிப்புங் கூடியதுடன் அவனுக்கு அதிகாரமும் ஜனங்களுடைய அன்பும் சேர்ந்தது. ஆதலால், அவன் தேஹம் ஆநந்தத்தாற் பூரித்துப் பொங்கி அழகேயாகி வளர்ந்தது. இம்மட்டோ! அவன் எல்லோருடன் கூடிப்பழகும் இயல்பினன் என்னும் விஷயம் சொல்லுக்கு அடங்காதது. ஆகையால், தன் அன்புவலையிற் சிக்கின குடிகளையும் அரசி கமலப்பிரபையையும் செவ்வனே அவன் சந்தோஷமடைவித்தான். இந்த அரசர் வெகு நல்லவர். 'ஒருவனுக்கு ஒரு நல்ல பொருள் அகப்பட்டால் அதைத்தன் இஷ்டமித்திரபந்துக்களுடன் அநுபவிப்பதே சுகம்.' என்னும் உண்மையை உணர்ந்தவர். ஆதலாற்றனது மித்திரர்களுடன் தான் ஸமமாகவே செல்வத்தை அநுபவித்தார். பாவியான வைத்தியசந்திரன் என்னுமொருவனையும் தனக்குப் பிராணசிநேஹிதனான பத்மதர்சனன் என்னும் மொருவனையும் தனக்குச் சமானமாய்

பாராட்டினர். கிராமங்கள், ஆராமங்கள், கோட்டைகள், கொத்தளங்கள், மாடமாளிகை, ஆட்டம்பாட்டம், ஆடை ஆபரணம் முதலிய சகல ராஜலக்ஷணங்களிலும் தன்னைப்போலவே அவர்களை ஆக்கி, அதற்குத் தக்கபடி அவர்களை ஆதரித்துப் பாராட்டினன். ஆனால், தருணசந்திரன் என்பவன் தன்னை இந்த நல்ல ஸ்திதிக்குக் கொண்டு வந்தவனானபோதிலும், ஸத்தியமும் தர்மமுமில்லாத கெட்ட ராஜதுரோகியானதால், அவ்வைத்தியனை மாத்திரம் தன்னருகில் வரவிடுவதில்லை. ஊரில் எல்லோரையும் போல அவனும் ஒருவன் எனப் பாவித்தான்.

பாம்பின் கால் பாம்பிற்குத் தெரியாதா? என்ன? ராஜவைத்தியனும் இலேசானவன் அல்ல. ஆணினும் ஆணல்லவா அவன்! ஆகையினல் அவன், 'இருக்கட்டும்; இருக்கட்டும்; யானைக்கு ஒருகாலம் வந்தாற் பூனைக்கு ஒருகாலம் வராதா? பார்ப்போம்!' என்று கருதிச் சமயம் பார்த்திருந்தான்.

தருணசந்திரன் ஒரு நாள் அரசன் தனித்திருப்பதைக்கண்டு, அடேய்! பைதலே! உனக்கு இப்போது தெரியவில்லையோடா! உன்னை இந்த ஸ்திதிக்கு கொணர்ந்தவன் நான் அல்லவாடா? என்னை நீ மறந்தாய் அல்லவாடா! இருக்கட்டும்! ஜாக்ரதை! பார்த்துக்கொள்வோம்; போ!' என்று தணிந்த குரலுடன் அரசனது கொடல் நடுங்குமாறு சொன்னன். பூர்வ ஜன்மத்தில் அடுத்த ஜன்மம் அரசனவதற்குரிய பெருந்தவத்தை செய்து யோகாப்பியாசத்தால் தேகத்தியாகம் செய்தவனும் முக்காலங்களை அறிந்துகொண்டவும் சிறிதும் அச்ச

பூரூத அந்த வாலிப அரசன், இக்கொடிய சொற் கேட்டு 'அடே போடா! முட்டாளே! ஒருவன் செய்ய வாவது! ஒருவன் ஆகவாவது. என்னடா! எல்லாம் ஈசன் செயல். நாம் கொடுத்து வைக்கவேண்டும்!! நீயாவது செய்யவாவது! நானுவது ஆகவாவதுடா! போடா! முட்டாளே!! போ!! போ!!" என்று அமை தியுடனும் வெருப்புடனும் வேதாந்த மோதினன். பிறகு, வைத்தியனை வெறித்துப்பார்த்து, 'அப்பா நீ ஒன்றும் முறைக்காதே! எனக்கு இவையா வும் என் தவத்தினல் வந்தவை. நீ செய்தது ஒன் றும் இல்லை. நான் சொல்வது மெய்யோ பொய்யோ வெனக் கொஞ்ச காலத்திலேயே, வேண்டுமா னல், நீயே உன் கண்ணுர என் வலிமையைக்காண லாம். அதிற் சந்தேகம் சிறிதும் வேண்டாம்.' என்று பின்னும் அவ்வரசன் கூறினன். இதைக் கேட்டு வைத்தியன் தன்னுடம்பைக் குருக்கிக் கொண்டு, 'ஏய்! ஆண்டே!! என்றனன். 'இருக்கட் டும்; என்னமோ! இவன் செருக்கென்பதே இல்லா தவன்போலப் பேசுகிருனே! வெகு தீரனகவே சொல்லுகிருனே! இவனையும் இவன்பேச்சையும் பார்த்தால் பெரிய ஞானியாகவே தோன்றுகிறதே! ஈதென்ன!! இவனை எதிற்பதிற் பயனில்லை. இவ னது ரஹஸியத்தைக் காப்பாற்றி என்னுடைய பிராணனையும் காத்துக்கொள்வதே நலம். ஆகை யால், இவனுடன் நேசம் பாராட்டி இவனை அண்டி யே நமது காரியத்தைச் சாதித்துக்கொள்ளல் வேண் டும். அதுவும் தவிர, இவன் என்னமோ என் கண் ணெதிரிலேயே காண்பிப்பதாய்ச் சொல்லுகிருனே,

அதுதான் என்னவோ பார்ப்போம்.' என்று தன்னுள்ளே தீர ஆலோசித்து வாய்திரவாது தன்னுள்ளிருப்பதை எவ்விதச் சாடையாலும் வெளிவிடாது அமைதியாக விருந்தான் அவ்வைத்தியன்.

இதற்குப்பிறகு கழிந்தன பல நாட்கள். ஒரு நாள் கிழத்தனத்தை ஒழித்துச்சிறுவனான அவ்வரசன் உல்லாஸமாக நாடெல்லாம் அலைந்து திரியக் கருதி, தனது இஷ்டமித்திரர்களை எல்லாம் கூட்டிக்கொண்டு தனது அந்தரங்க நண்பர் எல்லோரும் தனக்குப்பணிகள் செய்யப்பெற்றுப் பிரயாணப்பட்டான். நாடெல்லாம் சுற்றி, நகரங்களை எல்லாம் நாடி, அங்கங்குள்ள பிரஜைகள் களிப்புகொள்ள விழாக்கள் அநுபவித்து, இறுதியில் தானும் தன் நண்பரும் ஆட்களும் பெரும்படையுடன் ஓர் ஆற்றங்கரையை அணுகினர். ஆழ்ந்து அகன்று அமைதியாக ஓடும் நின்மலமான அவ்வாற்றின் நடுவே செல்லும் ஐந்து பொற்றாமரைப் பூக்களைக் கண்டனர் உடனே, அரசன் தனது ஆட்களை அழைத்து 'அதோ பாருங்கள். ஐந்து தாமரைப்பூக்கள் தண்ணீரிற் செல்லுகின்றன; தெரிகிறதா? அப்பூக்களை இப்போதே இங்கு எடுத்து வருக.' என்று கட்டளை இட்டான். அவர்களும், அரசனுணையைச் சிரமேற்கொண்டு, அவற்றை சட்டெனக் கொணர்ந்து, அரசனுக்கு அளித்தனர். அவற்றை அரசன் தன்கையில் வாங்கி, ரத்நபரீக்ஷகன் ரத்நபரீக்ஷை செய்வதுபோலக் குறிப்பாக நோக்கி, 'அப்பா! தருணசந்திரனே! சற்று இங்குவா!' என்று தன்னருகில் இருந்த வைத்தியனை அழைத்து,

'இந்த நதியின் கரையே போ. இந்த நதி உற்பத்தியாகும் இடம் வரையில் வேண்டுமானாலும் சென்று இந்தப் பூக்கள் விளையும் இடத்தைத்தேடிக் கண்டுகொள்க. அதன் உண்மையைக் கண்டுகொண்டு திரும்பி வா. இதன் உண்மையைத் தெரிந்து கொள்ள எனக்கு மிக அவா உண்டாயிருக்கிறது. இவையோ அற்புதமான பத்மங்கள். இவைதான் எங்கு முளைக்கின்றனவோ!! இதைக்கண்டு கொள்ள நீ ஒருவனே தான் தகுந்தவன். அதற்கு வேண்டிய யுக்தியும் புத்தியும் உனக்குத்தான் உண்டு. அதுவுமின்றி, உன்னைப்போல எனக்கு இஷ்டமித்திரன் இல்லை." என்று ஆர்வத்துடன் கள்ளனுக்கு இயற்கையான இனிமையுடன் கூறினன்.

வைத்தியனது வஞ்சகத்திற்கும் விஞ்சியது அரசனது வஞ்சகம். இனி தான் ஒன்றும் சொல்லவியலாது, வைத்தியன் அரசனது சொற்படியே நடக்க வேண்டுமென்றே கண்டுகொண்டான். ஆகையால், அரசன் சொன்னபொழுதே அவ்விடமிருந்து அகன்றுப்புறப்பட்டு,அவன் காட்டிய வழியேசென்றான். வைத்தியனை நெடுவழியே போகும்படி விடுத்து, அரசன் தன் நகர்க்குச் சென்றான். ஆற்றின் கரை வழியாய்ப் போகப் போகப் புதுமைகளைப் பார்த்து, அங்கோரி சிவாலயத்தை யடைந்தான். அது ஆற்றங்கரையில் இருந்தது. அவ்வாலயத்தின் எதிரே தண்ணீரின் ஓரத்தில் ஆலமரம் ஒன்று இருந்தது. அது மிகப்பெரியது. அதன் கிளைகள் வெகுதூரம் பரவி இருந்தன. அதன் வேர்களோ பூமியில் ஆழ்ந்து ஆலயத்திலும் ஆற்றிலும் பரவிஇருந்தன.

அம்மரத்தினின்று இறங்கிய எண்ணிறந்த பெருத்த விழுதுகளோ மஹா ஸ்தம்பங்களாகி நின்று அம்மரத்தின் கிளைகளைத் தாங்கின. அம்மரம் தழைத்துப் பழுத்திருந்தது. அதன் பச்சையான இலைகள் மரகதம்போற் படர்ந்திருக்க அவற்றின் நடுவே பதித்த இரத்தினங்கள் போல விளங்கின அதன் செவ்விய பழங்கள். அதில் அடர்ந்திருந்த பறவைகள், புழுக்கள், ஊர்வன இவற்றின் எண்களும் விதங்களும் அளவுக்கு எட்டாதவை. மரங்களுக்கெல்லாம் மன்னவனே தான் ஆலமரம். அழகு மிகுந்த அம்மரத்தின் நடுவே உயர்ந்த ஒரு கிளையினின்று ஆற்றுத்தண்ணீர்க்கு மேலே தொங்கியது ஒரு மனிதனெலும்பு. (Skeleton) அந்தக்கரங்கத்தைக் கண்டு, 'ஆகா! இதென்ன ஆச்சரியம்? அழகும் ஆனந்தமும், பொழியும் இம்மரத்திற்கு இது ஒரு திருஷ்டியேதான்! இவ்வுலகில் நலம் என்பது இல்லையே! எவ்வளவு நன்றாக விருந்தாலும் அதற்கு ஏதேனும் ஒரு குறைவாவது ஒரு அவலக்ஷணமாவது இல்லாமல் இருக்கிறதில்லை. சுத்த நின்மல வஸ்து ஈசன் ஒருவனே. அருகில் இருக்கும் ஆலயம் இதையன்றோ உணர்த்துகின்றது. இவ்வுலக வழக்கைப் போலப் படர்ந்து வேரூன்றிய இது எவ்வளவு நல்லதே ஆயினும், அதற்கு ஒரு மாசேனும் இல்லாமல் தீராது என்று உணர்த்துகின்றது. ஆகா! அப்படியா! பார்ப்போம்!' என்று எண்ணங்கொண்டு அண்ணாந்து நோக்கித் தன்னிரு கரங்களையும் பின்னால் நீட்டிக் கழுத்தும் ஒரு காலும் முன்னே செல்லப்பின்னே சென்றான் வைத்தியன்.

சென்றவன் தண்ணீரின் கரையில்நின்று, தன் கண்களை நெரித்துக் கிளையிலிருந்து தாழ்ந்து இலங்கும் கங்காளத்தை உற்றுப் பார்த்து வாய்திரந்து தன் கால்விரல்களின் மீதே நின்றான்.

இவ்விதமாக வெகு நேரம் நின்று நோக்கிய பிறகு, 'இது இங்கேயே தொங்குகிறதே! இது ஓடிப் போகாது; பின்னால் பார்ப்போம்; நமக்கோ வழி நடந்த விடாய் மிகுதியாக விருக்கிறது.' என்று எண்ணித் தண்ணீரில் இறங்கி நீராடித் தூய ஆடையுடுத்து ஆலயத்தினுட் புகுந்து அரனையும் சேவித்தான். நிர்ஜனமான இடத்தில் தனியாக விருக்கும் ஆலயத்தின் நடுவே கோலமாக இருக்கும் உமாகாந்தனைக் கண்ணாரத்தர்சித்துத் தன் கைகளை இறுகக் கட்டி, இறைவனை மூன்று வலம் வந்து, அவர் எதிரில் தரையில் விழ்ந்து, தண்டனிட்டுச் சிரமேற் கூப்பிய கைகளுடன் மூன்றுகண்களுள்ள முதல்வனைத் துதித்தனன். கொடும்பாவியான இவனையும் இவ்விதமாக்கியதல்லவா அவ்வாலயமும்!! இத்தகைய ஆலயத்தின் மஹிமையை மனத்தால் ஊஹிக்க வேண்டியதே. அதன் மஹிமை மனத்திற் கௌரவத்தை உண்டுபண்ணும். மனத்தைக் கவர அழகு வேண்டும். இவ்வாலயம் இருந்த இடத்தின் இனிய அமைப்பும் அது தனியாக இருந்ததும் சோலைகளின் நடுவே அது ஒளிந்திருந்ததும் அதன் எதிரிலுள்ள அகன்ற ஆலமரமும் அம்மரத்தின் குடை நிழற் கீழ் ஓடிய ஆறும் அச்சமயத்தில் நின்மலமாயிருந்த நீள்வெளியும் வழிநடந்து விடாயுடன் வந்து நீராடிய அவ்விழிஞனைச் சுத்தி செய்து ஈசன்

பால் அன்புறச் செய்தன. இயற்கையிற் கொடிய ஞன அவ்வைத்திய தருணசந்திரனே, தான் செய்த கொடுந் தொழில் பயன்படவில்லையே என்று ரோஷங்கொண்டான். அவன் அரசனை நாடித் தனது ரோஷத்துக்குத் தக்கவாறு செய்யக்கருதி ஞன். அரசன் தாமரையைத் தேடிப்போவெனவே, இதுதான் ஸமயம் என்று எண்ணி வந்தான். வரும் வழியிற் தான்கண்ட அற்புதக் காக்ஷிகளாலும் தனக்கு உண்டான வியப்பினலும் தளர்ந்து தனது தீய எண்ணத்தைச் சற்று மறந்தான். இங்கு வந்து பொழிலையும் புனலையும் கோயிலையும் கண்டு மஞ் சனமாடிப் புரமூன்றையும் எரித்த பரமனையும் தெரிசிக்கவே, அதனைமுற்றும் மறந்தொழிந்தான்.

இவ்வாறு மாசற்ற மனத்தனாய் ஆலயத்தி னின்று வெளிவந்து, ஆலமரத்தினடியில் இளைப் பாறக் கருதிச் சற்று உட்கார்ந்தான். அதுவரை யில் நின்மலமாய் இருந்த ஆகாயம் திடீரென்று கறுத்தது. பலமான காற்று ஒன்று உண்டாகிப் பக்கத்திலிருந்த மரங்கள் எல்லாம் தலை சுற்றி யாடும்படி செய்தது. பறவைகள் தாது நிலைகுலை ந்து வெருண்டு ஓடிவந்து ஆலமரத்தைச் சார்ந்தன. இப்படியிருக்கையில், படபடவென்று தூற்றல் உண்டாயிற்று. பிறகு, அது கொஞ்ச நேரத் திலே பெரிய மழையாயிற்று. ஆலமரத்தின்மீது விழுந்த நீர்த்துளிகள், அதன் அடர்ந்த இலைகளிற் தடைபட்டு, மழை ஆரம்பித்துச் சிறிது நேரமான பிறகுதான் கீழே விழ வாரம்பித்தன. வானில் இவ் விந்தையெல்லாம் நடக்கும்பொழுது, மரத்தினடி

யில் உட்கார்ந்திருந்த வைத்தியன் தருணசந்திரன் அம்மரத்தின் கிளையிலிருந்து தொங்கிய மனிதனது எலும்புக்கூட்டையே குறிப்பாகப் பார்த்து,‘ இது என்ன விந்தை! இது மனிதரில்லாத இடமல்லவா! இது சிவனாரது கோயிலல்லவா! இங்கே வந்தவன் தான் யாரோ! எதிரில் தொங்குகிறதே இக் கரங்கம்! இதென்ன ஆச்சரியம்! இது மனித னது கங்காளமேதான். இதற்கு மேற்றோல் மாத் திரம் இல்லை! ஆகா! கண் இரண்டுகளா இக் குழிகள்! இம்மனிதன் சாகுங்கால் வயது முதிர்ந் தவனாகத்தான் இருக்கவேண்டும்! ஐயோ' இவன் தானாய்ச் சாகவே யில்லை! இவனையாரோ பாவி! வெகு ஜாக்கிருதையுடன் கொலை செய்திருக்கிறான். அக்கொலையால் தன்பகையோ வஞ்சகமோ தீரா மல் தோலை எல்லாம் உரித்து, மனிதரில்லாத இவ் விடத்தில் ஒருவரும் அணுகாதபடி ஆற்றின்மீது இருக்கும் கிளையிற் கட்டி இருக்கிறான்! கொலையுண் டவன் யாரோ! என் கொலை செய்தானோ! செய்த வன் இங்குக் கொணர்ந்து கட்டுவானேன்? ஆகா! கட்டி வெகு காலமாச்சுதடோ!! பார்? பார்! காற் றிலும் மழையிலும் அடிபட்டு அதன்மீதிற் பாசியும் படர்ந்திருக்கிறது. இந்தப் பாசியால் இது எலும்பும் சதையுமுள்ள' மனிதனேதான் தொங்குவது போல இருக்கிறது. ஏய் அப்பா! பாழ்க்கண்ணும் திறந்த வாயும் பற்களும்! இதுஎன்னடா!' என இவ் வாறு வெகு விதமாக ஆலோசித்து வெளியில் நடந் ததையெல்லாம் காணவேயில்லை. பொழிந்தமழை யின் துளிகள் ஆலின் இலைகளில் தடைபட்டுக் கரங்

கத்தின்மீது விழுந்தன. விழுந்த துளிகள் அதன் மீது வழிந்து கீழேஆற்றிற் சொட்டின. கரங்கத்தையே பார்த்திருந்த வைத்தியன் அதன்மீது வழிந்த நீரையும் அந்நீர் கீழே சொட்டியதையும் பார்த்தான். அக்கரங்கத்தினின்று சொட்டிய துளி ஒவ்வொன்றும் ஆற்றின் நீரிற் படவே ஒரு தங்கத்தாமரைப் பூவாயிற்று. அப்படி நீரில் விழுந்த துளிகளெல்லாம் அற்புதப் பூவாகி அவ்விடம் விட்டு நகர்ந்து சென்றன. சற்று நேரத்தில் ஆற்றில் வெகுதூரம் வரையில் தங்கப்பூக்கள் ஒன்றின் பின் ஒன்ருய் ஒழுங்காய்ப்போயின. 'அச்சோ! ஈதென்ன ! ஓகோ! விந்தையோ விந்தை! இது என்னடா ! இதென்ன ஈசனதுமாயை ஐயோ! இங்கு யாருமில்லையே! கேட்போமென்ருல் ஒருவனும் இல்லையே ! ஆகா ! இதென்ன ஈசன் செயல்!!! என்னவோ!!! ஒருவனும் இல்லையே! யாருக்குத்தான் தெரியும் அவன் ரஹசியம்!!! அவன் உண்டு பண்ணும்வை மிக்க அதிசயமானவை!' என்று வியப்பினுற் கத்திக் கூச்சலிட்டுக் குதித்து ஆடினுன். சிறிது நேரத்துக் கெல்லாம் உடலம் நொந்து ஆடவியலாது வியப்பினுல் வாய் திறந்து மரத்தினடியில் அமர்ந்தான். அவன் சிறிது அமரவே, அவன் மனம் நிலைகொண்டது. உடனே அவனுக்குத் தன் கதை நினைவுக்கு வந்தது.

உடனே, 'இதுதான் ! இதுதான் !! அந்தத் தாமரைப்பூக்கள் விளையுமிடமடா ! ஆம்; ஆம்' என்று கண்டு கொண்டான். இதனுல் அரசனும் அவன் வஞ்சகமும் மனத்திற் குடி

கொண்டன. ஆகவே, 'அப்படியா! இக்கரங்கத்தை அவிழ்த்துத் தண்ணீரிற் போட்டு விடுகிறேன். வீணில், பாவி கட்டினேனே. இங்கே தொங்குவானேன்? இதைத்தண்ணீரிற் போட்டால் எனக்குப் புண்ணியமே உண்டாகலாம். இல்லையேல் இத்தண்ணீரிற் தாமரைப் பூக்கள் தான் உண்டாகட்டுமே! எப்படியானாலும் சரி; இதைத் தண்ணியில் தள்ள வேண்டியதுதான்.' என்று எண்ணி மரத்தின்மேல் ஏறிக்கரங்கத்தைத் தண்ணியில் தள்ளினான். பிறகு, அந்நாளை அங்கேயே கழித்து, 'அப்பா! என் காரியம் முடிந்ததடா!' என்று மனத்திற் கவலை நீங்கித்தனது ஊருக்குத் திரும்பினான். பிறகு ஐந்து ஆறு தினங்களில் விலாஸபுரத்தை அடைந்தான். அடைந்து தன் வீட்டிற்குப் போகாமல் தனது உடம்பெல்லாம் வேர்வை சொட்ட மண்ணும் புழுதியுமாய்க் கிழத்தனமில்லாத அவ்வரசனைச் சார்ந்தான்.

வெகு காலமாயிற்று இவன் தேசம் விட்டுப் போய். ஆகையால், இவன் நிறங்குலைந்து உருமாறியிருந்தான். பசியும் பட்டினியும் பட்டு, இவன் உடம்பு இளைத்திருந்தது. அதுவுமன்றித் தாடியும் மீசையும் வளர்ந்திருந்தன. ஆகையால், வாசற்காப்போன் இவனை உள்ளே போகவிடாமற் றடுத்தான். பிறகு, அரசனது ஆணையைப்பெற்று, இவனை உள்ளே போகவிட்டான். உள்ளே சென்று அரசனது அடியில் வீழ்ந்து தண்டனிட்டுக் கைகட்டி வாயைப் பொத்திப்பணிவுடன் தலை குனிந்து நின்றான். அரசன் சேமம் விசாரித்ததற்குச் சட்டென மறுமொழி

கூறித், தன் கதையை விவரித்துக் கூறினன் வைத்தியன்.

மருத்துவன் பேசத் தொடங்கவே, அரசன் அங்கிருந்தவர்களை அனுப்பிவிட்டுத் தானும் அவனும் மாத்திரமே தனித்திருப்பது கண்டு, 'அப்பா! நண்பனே! தங்கத்தாமரை உற்பத்தியாகும் இடத்தைக்கண்டாயா? அங்குள்ள உத்தமமான தலத்தையும் கண்டாயா? அங்கோர் ஆலமரம் ஒன்று உண்டு; அதனைப்பார்த்தாயோ? அதிற் தொங்கும் கரங்கமே தான் முன்பிறப்பில் எனது சரீரம். இது உனக்கு நன்ருகத் தெரிந்திருக்கட்டும். முன்னர், நான் அத்தலத்தில் உண்ணுமல் உரங்காமற் தலைகீழாக நின்று கொடுந்தவம் புரிந்தேன். கொடுந்தவத்தினுல் மெலிந்து ஒட்டி உலர்ந்த என் சரீரத்தை அங்கேயே நீக்கிவிட்டேன். அத்தவத்தின் மஹிமையால், அக்கரங்கத்தின் மீது பொழியும் மழைத்துளிகள் கீழேவிழுந்து அப்பொற்ருமரைகள் உண்டாகின்றன. அங்கிருந்த என் கரங்கத்தை நீ தண்ணீரிற் போட்டாயல்லவா? அதுவேசரி: எனக்கு மிக நன்மையேதான் செய்தாய். எனக்கு நீ மிக்க இனிய நண்பனல்லவா? ஆனதினுற்ருன், நீ அப்படி செய்தாய். முன்பிறப்பில் நீ எனக்கு இனிய நண்பன் தான். இதோ வெளியில் இருக்கிருனே இந்த வைத்தியசந்திரனும், இன்னும் இந்த பத்மதர்சனனும் இவ்விருவரும் முன்ஜந்மத்தில் எனக்கு நண்பர்கள் தான். அப்பா! என் நண்பனே! என் தவத்தின் பெருமை இன்னதென்று உனக்கு இப்பொழுதாவது தெரிந்ததா? நான்

எனது முன்பிறப்பையும் இந்தப்பிறப்பையும் அறிந்திருப்பதும், நான் நீசனாய் இருந்து அரசனானதும், எனக்கு இவ்வுலக வழக்கிலும் விண்ணுலகவழக்கிலும் உண்டான பேரறிவும், இப்பெருஞ் செல்வமும், மற்றும் எல்லாமும் நான் பயின்ற நற்றவத்தின் அரும்பயனே தான். பார்த்தாயா? நான் எவ்வளவு யுக்தியாக இவை எல்லாவற்றையும் உன் கண்ணாரக்காண்பித்தேன். இதுபோதுமா? நீ தண்ணிரிற் போட்டகரங்கத்தை எவ்வளவு அடையாளங்களுடன் நான்சொன்னேன் உனக்கு. இதை நன்றாக யோசித்துப் பார். நீ ஏதோ எனக்கு இந்த ராச்சியத்தைக் கொடுத்ததாக ஆணவத்துடன் பேசுகிறாயே அதைத் தீர மறந்து ஒழித்து விடு. வேண்டாம் இச்செருக்கும் ஆணவமும். அண்ணே! வீண் ஆசையை ஒழித்து விடு. நான் இப்படி சொல்லவும் நீகேழ்க்கவும் வேண்டுமா என்று உன் மனத்தில் வருத்தம் வேண்டாம். வேண்டாம். இச்செய்தியை ஒழித்து விடு. அப்பா! துள்ளிய மாடு பொதி சுமக்கும்; தெரிந்து கொள்க. முன் வினைப் பயனாலேயே ஒருவனுக்கு நன்மையோ தீமையோ உண்டாகும். ஒருவனும ஒருவனுக்கும் செய்வது ஒன்றும் இல்லை. ஒருவன் கொடுப்பவன் ஒருவன் அடைபவன் என்பது வீண் வார்த்தை. கருவின் உள்ளிருக்கும்முதலே ஒரு பிராணி, தனது வினைப்பயனை அனுபவிக்கிறது.' என்று வார்த்தை வார்த்தையாய் மெதுவாகத் தாழ்ந்த குரலுடன் உரைத்தான்.

இதையெல்லாம் கவனமாகவே கேட்டான் வைத்தியன் தருணசந்திரன். அவனுக்கு பதில்

ஒன்றும் தோன்றவில்லை. என்ன செய்வான் அவன்? அவன் கற்றவித்தை எல்லாம் மிகக் கொஞ்சம். அவனுக்கு இயற்கையில் உள்ளது வஞ்சகம்; உலக வழக்கில் அவன் கற்றது மோசம். அவனால் இயன்றமட்டில் செய்தான். அது இவன் விஷயத்தில் உண்மையே யாயிற்று, முன் பிறப்பும் வினையும் வினைப்பயனும் தலை கீழாக நிற்பதும், தவழும், உடலை விடுவதும், தூரத்திலிருப்பதைக் காண்பதும், இவை எல்லாம் அவன் புத்திக்கு எட்டாதவை. தனக்கு இயன்ற வரையிற்றானே ஒருவன் செய்யலாம் கிட்டாதாயின் வெட்டென மறக்க வேண்டியதுதானே. இதன் உண்மையைச் செவ்வனே கண்டு கொண்டமையால், அரசன் சொன்னவை எல்லாம் உண்மைதான் என்று நம்பினன் வைத்தியன். ஆனால், ஏதோ பெரும்பேறு உண்டாகும் என்று படாத பாடெல்லாம் பட்டு, இறுதியில்தான் செய்ததெல்லாம் பயன்படாமற் போனதுமன்றி செய்ததையும் தீர மறப்பதென்றால் மனத்தில் மிக்கக் கஷ்டமாகத்தான் இருக்கும். அவ்வித எண்ணத்தை விட்ட போதிலும், அது மறுபடியும் எப்பொழுதேனும் நினைவுக்கு வந்து மனத்தை வருத்தும். நமது வைத்தியன் அவ்வித மனவருத்தம் ஒரு நாளும் படவே இல்லை. 'ஐயோ! நான் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினேனே! அதெல்லாம் வீணாயிற்றே!' என்று ஒரு பொழுதும் நினைக்கவுமில்லை. திருடன் பொருளை இழந்தாலும் தன் முயற்சிவீணானாலும் அதைக் குறித்து வீணாக விசாரப்படுவதில்

லேயே! தருணசந்திரன், தனக்கு அரசன்நியமித்த வேலையைச் செய்து அதற்கு உண்டான சம்பளத்தைப் பெற்று சந்தோஷமாகத் தன் நாட்களைக் கழித்தனன். வாலிபமடைந்த அந்த மன்னவனும் வைத்தியனுக்குப் பெருஞ் செல்வம் அளித்தான். அவனும் தன்னிஷ்டபடி தனக்கு உண்டான செல்வத்தைச் செலவழித்தான்.

அரசன் தனது செல்வத்தை இஷ்டமித்திரருக்கும் பந்துக்களுக்கும் அளித்துத் தானும் அனுபவித்தான். அவனுக்கு ராச்சியங் கிடைத்தவகை இன்னது என்று அறியாத அவனது அரசியரையும் பிரஜைகளையும் தனது அன்பினாலும் செங்கோன்மையினாலும் வசமாகச் செய்து கொண்டு பெருவாழ்வு வாழ்ந்தான். இவ்வாறு, யுக்தியும் புத்தியும் அன்பும் உள்ளவனுக்கு வினைப்பயனால் நன்மை உண்டானால், அதற்குத் தீங்கும் வருமோ?

அம்மா! ஆதலால் தான் நான், 'இவ்வுலகில் ஒருவனுக்கு உண்டாகும் நன்மை அல்லது தீமை என்பது வினைப்பயனால் உண்டாகிறது.' என்று சொல்லுகிறேன். இறைவனே! தாங்கள் எம்மை ஆளும் அரசானது எங்கள் பாக்கியமே தான்; நாங்கள் கொடுத்து வைத்திருந்தோம்.

தபந்தகன்' சொன்ன இந்த விநோதமான கதையைக் கேட்டு, நரவாஹநதத்தனும் அவன் காந்தையும் மிக்கச் சந்தோஷம் அடைந்தனர். பிறகு, நரவாஹநதத்தன் மஞ்சனமாடச் சென்றான். மஞ்சன மாடித் தன் கடன்களைக் கழித்து அன்னையையும் பிதாவையும் அணுகினான். அவருடன்

கூடிப் பகலைப்போக்கி, அவ்விரவைத் தன் காந்தையுடன் கழித்தனன்.

மற்றொருநாள் காலையில் இளவரசனும் ரத்நப்பிரபையும் தம் மாளிகையில் மந்திரிகளுடன் கூடி இனிதாக ஸம்பாஷித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது திடீரென்று மாளிகையின் வெளியில் யாரோ ஒரு புருஷனது புலம்பலைக் கேட்டனர். உடனே, நரவாஹநதத்தன், 'இது என்ன?' என்று தன் பக்கத்திலிருந்தவரையும் வேலைக்காரர்களையும் விசாரிக்கையில், சேடிகள் எல்லோரும் ஓடிவந்து, "ஐயனே! நமது கஞ்சுகி தர்மகிரி குரல்விட்டு அழுகின்றான். அவனது நண்பனும் ஒருவன்: இப்பொழுது தான் தீர்த்தயாத்திரை செய்து திரும்பி வந்தானும்; வந்தவன் ஒரு மூடன்; துக்கச் செய்தி சொன்னால் வேளையும் சமயமும் இடமும் பார்த்தல்லவா சொல்லவேண்டும்? அவனுக்கு அது தெரியாது; இங்கு வந்து, 'தேசாந்தரம் போன உன் அண்ணன் கைலாஸமடைந்தான்.' என்றனன். அவன்தான் சொன்னாலும், இவன் அரசர்மாளிகையில் அழலாமா? என்ன பண்ணுவான்? பாவம்! சாவுசெய்தி கேட்டு எல்லாவற்றையும் மறந்து கதறி அழுதான். உடனே அவனருகிலிருந்தவர்கள் எல்லோரும், 'என்ன! இவன் அழக்கூடாத இடத்தில் அழுகிறானே!' என்று கண்ணுங் கண்ணீருமாகக் கதறி நின்ற அவனைப் பிடித்து, அவன் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்." என்றனர். தாம் சொல்வது தம்மிளவரசர்க்கு இஷ்டமாய் இருக்கும் என்று சேடியர் எண்ணினர். அதற்கேற்ப

இளவரசனும், 'ஐயோ! பாவம்! திடீரென்று துக்கம் வந்ததே! அவன் என்ன செய்வான்?' என்று பல தடவைகள் சொல்லிக் கஞ்சுகியின் பேரில் மிக்க அருள் கூர்ந்தான். அவனருகில் இருந்த மெல்லியல் ரத்நப்பிரபையும் மனத்தில் விசனத்துடன் அருள் சுரந்து, 'ஆம்; உற்ருர் உரவுமுறையார் பிரிந்துசென்ருல் நமக்கு உண்டாகும் துக்கம் மிகப்பெரியதுதான். நாம் அத்துக்கம் படவேண்டியதுதான். அதை நீக்க வழியில்லையே! என்ன செய்யலாம். நம்மைப் படைத்த பிரமன் அப்படியல்லவா செய்தான். மூப்பும் சாவும் இல்லாமல் இருக்கலாகாதா? இல்லையே! வரும் விதி வந்தேதீரும். நாமும் துக்கப் படத்தான் வேண்டும்; பட்டாற் பயனில்லை. மாண்டார் வரமாட்டார் எனத்தெரியும். அவ்வாறு தெரிந்தும் துக்கம் நம்மை விடுகிறதில்லையே. இதுதான் உலகமாயை என்பது.' என்று மனமுருகிச் சொன்னுள்.

இவ்வுரையைக் கேட்டு மருபூதி, 'அம்மணி! மூப்பும் சாவும் இல்லாமலிருப்பது மனிதர்க்கு உண்டோ? இல்லையே.' என்று சொல்லிப் பின் வரும் கதையைக் கூறினுன்.

---

## சிராயுவின் கதை.

சிராயு என்று ஒரு நகரம் இருந்தது. அதில் சிராயு வென்று ஒரு வேந்தன் இருந்தான். முற்காலத்தில் அந்நகரம் செல்வமனைத்திற்கும் இருப்பிடமாயிருந்தது. அந்நகரின் அரசன் அச்செல்வத்தை முற்றுமடைந்து பெருவாழ்வு வாழ்ந்தான். அவ்

வரசனுக்கு ஒரு மந்திரி இருந்தான். அவன் ஒரு போதிஸத்வனது குமரன். அவன் நாகார்ஜுனன் என்னும் பெயருடையவன்; வெகு சீலமும் நற்குண முமுடையவன். கொடைகள் அளிப்பதில் அம் மந்திரிக்கு மிக்க விருப்பம். அவன் கருணையும் உலகவழக்கிற் பயிற்சியும் தேற்சியும் உள்ளவன். அவனுக்கு வேர்கள், விரைகள், கொடிகள், இலை கள், மூலிகைகள் முதலியனவெல்லாம் நன்குய்த் தெரியும். இவற்றைக் கொண்டு ரஸாயநங்கள் செய் வதில் மிகத் தேர்ந்தவன். ஆகையால், ஓர் அற்புத மான ரஸாயநஞ் செய்து, அதைத் தானும் உட் கொண்டு, தன்னரசனுக்கும் ஈந்தான். அந்த ரஸாயநத்தை உண்டமையால், அவ்விருவரும் மூப் பில்லாமல் சிரஜீவி யானார்கள்.

அம்மந்திரிக்குப் பிள்ளைகள் அநேகர் இருந்த னர். ஒரு சமயத்தில் அவனது பிள்ளைகளில் ஒருத் தன் நோயாற் பிராணனை இழந்தான். மந்திரிக்குத் தன்பிள்ளைகள் தன்னுயிரினும் இனியவர். ஆகை யால், அவனுக்குத் தாங்கமுடியாத துக்கமுண்டா யிற்று. உடனே அவன், 'ஐயோ! பிள்ளைகள் செத்தால் உலகத்தவர் படும் துக்கம் இவ்வா ருனதா?' என்று உணர்ந்து, தன்போல்வரான மானிடவர் எல்லோரும் படும் இவ்வரும் பெருந் துக் கத்தைத் தொலைக்கக் கருதி, தான் செய்த தவம் ஈந்த அரியகொடைகள் இவைகளின் வலிமையால் உயர்ந்த அமுதம் செய்யத் தொடங்கினன். அதில் சேர்க்கவேண்டிய ஒரு மூலிகைக் கிடைக்காமற் காலத்தை எதிர்பார்த்திருந்தான்.

அவன் இவ்வாறு காலம் வரவேணுமென்று காத்திருக்கையில், இந்திரனுக்கு இச்செய்தி தெரிந்தது. தேவதேவனுன இந்திரன், மண்ணுலகில் நடக்கும் இவ்விந்தையைக் கண்டு நடுங்கி கலங்குலைந்து, தனது ஆட்களான தேவர்களை அனுப்பி அசுவினி தேவரை வரவழைத்து இவ்வாறு கூறினன் :— “ஐயன்மீர் ! மண்ணுலகில் மானிடவர் எல்லோரும் அமரராகும் வகை வந்திட்டது. ஆகையால், நீவிர் இப்போதே தடையும் தாமதமு மின்றி அங்குச் செல்க. நீங்கள் நாகார்ஜுனனை நேரிற் கண்டு, ‘ என்னடா ? அப்பா! நீ நீதியெல்லாம் அறிந்த மந்திரியல்லவா ? நீயே இவ்விதமாக விதியை விலக்கத் தொடங்கினுய் ! இது நியாயமா ? என்ன்? நீ படைக்கும் பிரமனையே வெல்லத் தொடங்கினுயே ! மனிதர் எல்லோரும் மரிப்பவர் என்றுதானே அவர் படைத்தார் ? நீ, எப்படியோ மூவாமருந்தினைத் தேடி, மானிடவரை அமரராக்குகின்றுயே ! இருக்கட்டும். நீ இப்படி செய்தால், மனிதருக்கும் அமரருக்கும் பேதம் என்ன ? ஜகத்திற்கும் சுவர்கத்திற்கும் பேதம் இருக்கவேண்டும் என்று கருதியேயல்லவா தேவர் வேறு, மனிதர் வேறு, என்று பிரமன் படைத்தது ? உலகத்தின் க்ஷேமத்திற்கல்லவா வரையும் கரையும் ஏற்பட்டிருக்கின்றன. யாகங்கள் செய்து பூசனை செய்யவேண்டியவர் ஒருவர் என்றும் அப்பூசனையைப் பெறவேண்டியவர் வேறொருவர் என்றுமல்லவோ ஏற்பட்டிருக்கிறது ? இதை எல்லாம் நன்கு உணர்ந்து நம்முடைய ஆணைக்கு இணங்கி, நீ இப்பொழுது செய்யும் முயற்சியை விட்டு

ஒழித்திடு. இல்லையேல், முப்பத்துமுக்கோடித் தேவர்களுக்கும் ஒரேவாருகக் கோப முண்டாகும். அவர்கள் உன்னைச் சபித்திடுவர். நீ சிறிதேனும் சந்தேகப்படவேண்டாம். உன்னைச் சபித்தே தீர்வார். நீ உன்மகன் செத்ததுக்கத்திலைல்லவா இவ்விதம் செய்யத்தொடங்கிஞய்? அவன் சுவர்க்கத்தில் இருக்கிருன். இம்மண்ணுலகில் வாழ்வு ஒரு வாழ்வா? உண்பதும் உரங்ுவதுந்தானே இவ் வாழ்வு? இங்குள்ள சுகமெல்லாம் சுகமா? முன்னம் சுகமாய்த் தோன்றுவதெல்லாம் பின்னுற் பெருந் துக்கமேதானன்ருே? சுவர்க்கத்தில் வாழ்வும் சுகமும் எப்படிப்பட்டவை தெரியுமா? அச்சுகத்திற்கு அயர்வே இல்லை.' என்று நான் சொன்னதாக இந்த வார்த்தைகளை அவ்வைத்தியனுடன் சொல்லுக." என்று தேவேந்திரன், அவர்க்கு எடுத்துரைத்து, விடைகொடுத்து அவரை அனுப்பினன்.

இந்திரனது உரைகேட்டு, அசுவினி தேவர் இருவரும் விண்ணிலிருந்து மண்ணில் இறங்கி நாகார்ஜுனனது வீடு வந்து சேர்ந்தனர். அவ்விருவரும் வரவே, நீதியெல்லாம் அறிந்த நாகார்ஜுனன் அவர்க்கு நல்வரவு கூறி, அவரது அடி பணிந்தான். வீட்டிற்கு வந்த பெரியோரைக் கொண்டாட வேண்டிய முறைப்படி அவர்களது கால்களைத் தழுவிக் கழுவி அவர்களைப் பூவுங்கொண்டு பூசித்தான். பின்னர் அவரது பெருமைக்குத் தக்கபடி ஆசனங்கள் அளித்து, அவரை இனிதாக வீற்றிருக்கச் செய்து, வந்ததற்குக் காரணம் என்னவென்று விஞவினன். அவ்விருவரும், தம்பெருமைக்கு இசை

ந்தவாறு அவன் ஆர்வத்துடன் செய்த பூசனையைப் பெற்றுத், தாம் இன்னவர் என்பதையும் தாம் வந்த காரணத்தையும் செவ்வனே சொல்லி, இந்திரன் அவனுக்கு அனுப்பிய செய்தியைச் சிறிதும் தவறாது தெளிவுற விளம்பினர். செய்தி சொல்லி முடிந்த பிறகு, 'ஓயீ! நாகார்ஜுனனு! உன் மகன் விண்ணுலகிற் தேவரோடு தேவனாக இருக்கின்றான். நாங்கள் இம் மண்ணுலகில் மாந்தரைப் பார்த்ததில்லையா? இவரது இயல்பும் இலக்ஷணமும் நாங்கள் கண்டறியாதனவா? அங்கு உன்பிள்ளை இப்படியா இருக்கிறான்! பார்த்தவர்களுக்கு அல்லவோ தெரியும் அவன் நிலைமை?" என்று, அவன் மனத்தைக் கவருமாறு தேவர்க்குள்ள சாமர்த்தியமும் வலிமையும் பெருமையும் கள்ளமும் தோன்றுமாறும், அவர்கட்குள்ள பொறாமையும் பயமுந் தோன்றாதவாறும் மிக்கக் கம்பீரமாய்த் தேனினும், இனிய குரலுடன் மொழிந்தனர்.

இவற்றையெல்லாம் செவியேற்ற மதிசேர் நாகார்ஜுனன், "ஆகா சுபமானதைச் சட்டெனச் செய்யவேண்டும் என்பர் சான்றோர். அதையன்றோ மறந்து மோசம்போனேன். தாமதம் விஷமாகும் என்பது உண்மையேதான். இனி நான் என் செய்கேன்?" என்று மதிமயங்கினான். அவன் மந்திரியானதால், வழக்கெல்லாம் தெரிந்த வித்தகனே தான். ஆகையால், 'ஆமாம், இது எங்கும் உள்ளதே தான். உலகுக்கு உபகாரம் என்று உள்ளூர உணர்ந்து ஒருவன் ஒருகாரியத்தைச் செய்யத் தொடங்குகிறது; அவனது முயற்சி பயன் அடைந்

தால் நமக்கு நஷ்டம் வருமே என்று வலியவர் எண்ணிப் பயப்படுகிறது. அவன் முயற்சியைத் தடை செய்ய நயமும், பயமும், ஆசையும் அவனுக்கு அவர்கள் காட்டுகிறது. நன்மைசெய்ய முயன்றவன் எளியவனுவது; அவன் அவர்களது பெருமைக்கும், நல்வார்த்தைக்கும், அவர்கள் காட்டும் நயத்திற்கும், பயத்திர்க்கும், ஆசைக்கும் உட்படிவது. தனது சிறுமையைக் கண்டு தனது முயற்சியை அவன் விடுவது; இவை யாவும் உலக வழக்கே தான். எளியாரை வலியார் அடிப்பதும், வலியவரே நியாயவாதிகள் ஆவதும், இம்மண்ணுலகில் உள்ளவையேதான்; நான் மந்திரியாக விருந்து இவ்விதமாய் எத்தனையோ தடவைகளில் நல்ல முயற்சிகளைத் தடை செய்தேன். அவை எனக்கோ அரசாட்சிக்கோ தீமையாகின்றன என்பதற்காகவே அவற்றை முடிவு பெருதபடி ஒழித்திருக்கிறேன். ஒருவன் பெரியவனுகி உலகையாள்வது என்பது இதுவேதான். முன்னரே உண்டாயிருக்கும் வரைகரைகளை காப்பதே தான் செங்கோலுடையவனுக்குக் கடமை. மன்னவன் உலகமரியாதையை யழியாது பாதுகாப்பதற்கு வேண்டிய உபாயங்களை எல்லாம் மந்திரிதான் செய்யவேண்டும். நான்செய்த நயமெல்லாம் நீதியே தான் ஒரு இராச்சியம் எவ்வாறு அமைந்துள்ளதோ அவ்வாறேதான் உலகமும் அமைந்துள்ளது. எனது இராச்சியத்தின் நன்மைக்கு நான் செய்யும் முயற்சியைக் கெடுக்க எனக்கு விரோதியாக ஒருவன் எற்படுவது போலவே, தேவராஜ்யத்தின் நன்மைக்குப் பாடுபடும் இந்திரனுக்கு விரோதமான கார்யத்தைச்

செய்ய நான் முயன்றேன். எனது எதிரியை எவ்வித உபாயங்களைச் செய்து நான் அடக்குவேனோ அவ்விதஉபாயங்களையேதான் இந்திரனும்செய்கின்றான். நான் என் செய்கேன்? 'தன் வினை தன்னைச்சுடும்.' என்று தன்னுள்ளே ஆராய்ந்து ஆலோசித்துத் தேறுதல் செய்துகொண்டபோதிலும், தான் பட்ட பாடெல்லாம் விருதாவே என்று விசனங்கொண்டான். 'இருக்கட்டும், நான் இந்திரன்சொற்படி செய்யாதொழியின் தேவர்கள் எல்லோரும் கிறக, இவ்விரு அசுவினிதேவரே என்னைச் சபிக்கமாட்டாரோ? கிடக்கிறது; எனக்கு இந்தப் பெருமுயற்சி தான் ஏன்? ஊரைக் கட்டுவான் ஏன்? படலைச் சாத்துவான் ஏன்? என் மகன்தான் யாருக்கும் கிட்டாத பதவியை அடைந்திருக்கிறானே! இது போதாதோ எனக்கு? இன்னும் வேண்டுமோ? அடா! அப்பா! அமுதைக் கொணர்தலும், அருமருந்தைச் செய்தலும், உலகத்தில் எல்லோர்க்கும் பகர்ந்திடலும், என்று மிவை என்ன! எளிதில் நடக்கிற காரியமா? போகட்டும் சனி! உலகத்தைச் சீராக்கவா! அது எங்கே!' என்று யோசித்து மனம் தளர்ந்து அத்தேவரைப் பார்த்து, 'எந்தாய்! அடியேன் இந்திரனாணையை என் தலையால் வணங்கிச் செய்கிறேன். அமுதம் செய்து அனைவர்க்கும் அளிக்கும் முயற்சியை மாய்த்திட்டேன். தேவரீர் இன்னும் ஐந்து நாள்கள் கழிந்து வந்தால், என் மருந்து நடந்தே யிருக்கும். மண்ணவர் எல்லோரும் அமரரே ஆகியிருப்பார். மானிடவர்க்குமூப்பும் இராது; மரணமும் வராது.' என்று பணிவுடன்

விண்ணப்பஞ் செய்தது மல்லாது தன்னில்லத்தில் வெகு ஜாக்கிருதையாக வைத்திருந்த அம்மாமருந்தைக்கொணர்ந்தான். 'ஐயோ! பாவம்! அனேகமாய் ஸித்தமான இது உலகுக்கு அரும் பெரும் பேறளிக்கும். இது உண்டானால், எல்லோரும் எவ்வளவோ ஆநந்தமடைவார்; ஆமாம். கைக்கெட்டினதுதான் வாய்க்கு எட்டவில்லையே! தொலையட்டும் இது.' என்று பூமியில் குழி ஒன்று தோண்டி அம்மாமருந்தை அதிற் கொட்டி மண்ணிட்டு மூடினான்.

அசுவினிதேவர், அவன் மருந்தைத் தரையிற் கொட்டியதைத்தமது கண்களாரக் கண்டு, 'அப்பா! வந்த காரியம் முடிந்ததடா.' என்று கவலை நீங்கிக் களிப்புடன் அவனிடத்தில் விடைபெற்று மீண்டும் விண்ணுலகுக்கு ஏகினர். இந்திரனது சன்னதியை யடைந்து, நடந்ததையெல்லாம் விவரமாக வியம்பினர். அவர் நடந்ததைச் சொல்லவே, இந்திரன் பேராநந்தங்கொண்டு குதித்தெழுந்தனன்.

இது இங்ஙனம் நிற்க, மண்ணுலகில் இன்னும் ஒரு விசேஷம் நடந்தது. சிராயு என்னும் அரசன் தன்புதல்வன் ஜீவஹரன் என்பவனை இளவரசாக்கினன். ராஜகுமாரனை இளவரசாகச் செய்யவேண்டிய முறைப்படி எல்லாவற்றையும் செய்து, அதற்காக அரசன் ஓர் பெரும் விழாவும் கொண்டாடினன். ராஜகுமாரன் அவ்விழாவை யெல்லாம் அனுபவித்து மிக்கக் களிப்புடன் தலையில் முடியும் மார்பில் மாலையும் அரையிற்பட்டாடையுமாய் அவனது அன்னையின் மாளிகைக்குச் சென்று, அவளை ஸாஷ்டாங்கமாய்த் தண்டனிட்டான். தன்னை ஆர்வத்துடன்

தண்டனிடும் தனது நற்புதல்வனைக் கண்டு, அரசி தனபராதேவி, 'அப்பா! என் கண்ணே! நீ இளவரசனானதற்குச் சந்தோஷப்படாதே. உன் சந்தோஷமெல்லாம் வீண். இளவரசன் சந்தோஷப்படுவது ஒரு காரணத்தைப்பற்றியே. 'நான் இப்பொழுது இளவரசனானேன். இதற்கடுத்தபடி சிறிது காலத்திலேயே அரசனது பெரும்பதவியை அடையலாம்.' என்றல்லவோ இளவரசர் ஒவ்வொருவரும் சந்தோஷப்படுவது? அப்பதவி, என்ன தவஞ்செய்தாலும் சரி எத்துணைத் தவம்செய்தாலும் சரி, உனக்குக் கிட்டாது. நமது ராச்சியத்தில் எத்துணைப்பெயர் இளவரசர் ஆனார்கள்? அவர்கட்கு வரவென்ன செலவென்ன? உன் தந்தைக்குப் பிள்ளைகளோ எத்துணைப் பெயர் இருந்தார்கள்: அவர் அனைவரும் தம் வழியே போயினார்கள். இத்துணைப் பிள்ளைகளிலும் இளவரசரிலும் ஒருவனுக்காவது ராஜபதவி யுண்டோ? இல்லை. நமது நகரில் இளவரசனாவது பெரும் எச்சுக்கன்றோ இடம்? உனக்குத்தெரியாது. நாகார்ஜுனன் என்று ஒருத்தன் இருக்கிறானே! அவன், என்னமோ ஒருரஸாயனஞ்செய்து, அதனை அரசருக்குக்கொடுத்தான். அம்மா மருந்தை உட்கொண்டால், மூப்பில்லையாம்: உட்கொண்டவன் இறப்பதும்இல்லையாம். நமது வேந்தர் அம்மருந்தை உட்கொண்டு வருஷங்கள் எண்ணூறு ஆயின. இத்துணை நாளாய் அவர்க்கு அசைவும் இல்லை; அழிவுமில்லை. இம்மட்டோ! அவர்க்குப்பிணி பசி மூப்புத்துன்பம் இவை ஒன்றுமில்லை. இன்னும் அவர் எத்துணை நூற்றாண்டுகள் தான் இவ்வாறாகவே, என்றும் பதினாறு

கவே, இருப்பாரோ தெரியவும் இல்லை. அவரோ சிராயு; அவர் பிள்ளைகளோ அற்பமான ஆயுளையுடையவர்கள். இப்படியிருக்க, நமது இளவரசர்க்குக் குறைவு ஒன்றுமில்லை. ஒருபிள்ளை இளவரசனாய் முடிசூடுவதும், அவன் சிறிதுகாலம் இருப்பதும், அடுத்தவன் இளவரசாவதும், சாவதுமாய் நீடித்த நாளாய் நடந்து வருகிறது. இவ்விதமாய் எவ்வளவு காலத்திற்குத்தான் நடக்குமோ? இது எவ்விதமாகி முடியுமோ சொல்லவேமுடியாது, இது நம்மையெல்லாம் படைத்த பகவானுக்கேதான் தெரியும்.' என்று மனமுருகிச் சொன்னாள்.

உலகத்தில் இளவரசன், தனக்குஏதோ பெரும் பதவி வந்ததாகவும் கொஞ்சகாலத்தில் ராஜாவாவதாகவும் தான் ராஜாவானால் யாரும் செய்யாத அற்புதங்களைச் செய்வதாகவும், எண்ணுவது இயல்பே. இவ்விதமான எண்ணங்களுடன் பட்டாபிஷேகக் கோலம் பூண்டு ஊர்வலம் வந்து நாடும் நகரமும் தன்னைக் கொண்டாடுவதைக் கண்குளிரக்கண்டவன் தனது பெருமையை யுணர்ந்து மகிழ்ச்சியால் மெய்மறந்திருப்பது நியாயமே. இந்த நிலைமையில் தான் ஜீவஹரன் தன் அன்னையைத் தண்டனிட வந்தான். அன்னையைத் தண்டனிட்டால், அவள் தன் புதல்வனை, அவன் மார்வம் தன் மார்வத்திடையழுந்தத் தழுவி, உச்சிமோந்து, பெருவாழ்த்து வாழ்த்துவதுதான் வழக்கமாய் உற்றது. அப்படியேதான் நடக்கும் என்றே எண்ணினான் ஜீவஹரன். அப்படி நடக்காததுமின்றி விபரீதமானதல்லவா நடந்தது. 'பெண்டிரைத் தேடிப்போன இடத்திற்

பேய் பிடித்தது' என்று சொல்வதுண்டு. அவ்வண்ணமே ஜீவஹாரனுக்கும் நிகழ்ந்தது.

தன் புதல்வன் உள்ளூர அயர்ந்து ஏங்கிநிற்பதைக்கண்டு, அரசி நெஞ்சுருகி, 'குழந்தாய்! உனக்கு இராச்சியம் வேண்டுமேயானால், நான் சொல்லும் உபாயத்தைச் செய்க. நமது மந்திரி நாகார்ஜுனன் ஒவ்வொரு நாளும் ஓமஞ்செய்து அக்கினியை திருப்தி செய்கிறான். பிறகு, அக்கினியின் அருகினின்று எழுந்து தான் தானங்கள் வழங்கும் வள்ளலென வெளிப்படுத்த, 'யாசகர்காள்! வாருங்கள் எவர் எவர்க்கு எதேது வேண்டுமோ அதையெல்லாம் தந்திடுவன்' என்று கூச்சலிட்டுக் கூப்பிடுகிறான். நீ அந்தவேளையில் அவனெதிரில் நின்று உனக்கு அவனது தலை வேண்டுமென்று கேள். அவன் சத்தியம் தவறாதவன். தான் அளித்த வாக்கைத் தவறவிட மாட்டான். தனது தலையை உனக்குத் தந்து இறந்து போவான். தனது அருமை அமைச்சனை இழந்த துக்கத்தினால் அரசர் தனது உயிரைத் துறந்து விடுவர். இல்லையேல், இல்லறவாட்கையைத் துறந்து கானகமே செல்வர். இப்படியானால், உனக்கு இராச்சியம் கிடைக்கும். வேறு உபாயம் எத்துணை செய்திடினும், உனக்கு இராச்சியம் கிட்டாது.' என்றனள். தன் தாயின் இவ்வுரை கேட்டு, கோமகன் மிக்க ஊக்கமடைந்தான்.

ஆசை மிகக் கொடியது. ஆசையிலும் பல வகைகள் உண்டு. பாராளுவதற்காக உண்டாகும் பேராசைக்கு அளவு இல்லை. அவ்வாசையின் கொடுமையால், ஒருவன் செய்யும் தீங்குகளுக்கும்

கொலை களவு முதலானவற்றிற்கும் அளவும் இல்லை, எண்ணும் இல்லை. இளவரசனுக்கு அன்னையின் உபதேசம் நல்லதென்றே தோன்றியது.

மறுநாள் நாகார்ஜுனன், ஓமம் செய்து, தனது உண்டி கழிக்கும் பொருட்டு எழுந்து செல்லும் தருணமாக விருந்தது; அச்சமயத்தில் ஜீவஹரன் அவனருகிற் சென்றான். நாகார்ஜுனன் தன் வழக்கப்படி யாசகர்களைக் கூவியழைத்து, அவர்கட்கு வேண்டியவற்றை எல்லாம் அளிப்பதாய் கோஷித்தான். உடனே, இளவரசன், உள்ளே சென்று, அவனது தலையை வேண்டினான்.

மந்திரி சிறுவனது அவ்வெவ்வுரைகேட்டு ஆச்சரியப்பட்டு 'ஐயனே! குழந்தாய்! அச்சோ! என் தலையைக்கொண்டு நீ என்ன செய்வாய்? எலும்புந்தோலும் நரம்புமான இத்தலை உனக்கு என்ன உபயோகமாகும்? உனக்கு ஏதேனும் உபயோகமுண்டானால், என் தலையை வெட்டி எடுத்துக் கொள்க.' என்று மிகப்பணிவுடன் கூறி, மந்திரி அவனுக்குத் தன் கழுத்தைக் காட்டினான். உடனே இளவரசன் தனது வாளால் அவன் கழுத்தை வெட்டினான். அக்கழுத்தோ அற்புதமான ரஸாயநத்தின் வலிமையை யடைந்தது. அது வாளுக்கு அசையுமா? வாளேதான் துண்டுதுண்டாக முறிந்தது. 'சீ! சீ! இந்த வாள் வெகு நாளாய்த் துருப் பிடித்தது. இது போனாற் போகட்டும். இதோ! இந்த வாள் நல்லது; கெட்டியானது.' என்று ஒவ்வொருவாளாக அனேகம் வாட்கள் முறிந்தன. மந்திரியினிடத்தில் வரம் வாங்கியும், தன்னால் கழுத்தை வெட்ட இய

லாததுகண்டு வியப்பும் விசனமும் கொண்டு இள வரசன் நிற்க, அரசன் சிராயு அங்குவிரைந்து வந்தான். வருகையிலேயே, 'மந்திரி! கழுத்தைக் காட்ட வேண்டாம்!' என்று கூவிக்கொண்டே வந்தான். அரசன் தன்னருகில் வந்து நிற்கவே, மந்திரி அவனை நோக்கி, 'பிரபுவே! எனக்கு என்பிறவிகளெல்லாம், உள்ளங்கை நெல்லிகனி போல, நன்னர் விளங்குகின்றன. இதுவரையில் எனக்குப் பிறவிகள் தொண்ணூற்று ஒன்பது ஆயின. அவற்றுள் ஒவ்வொன்றிலும் என் தலையை பலிதான் கொடுத்தேன். இப்போது எனது நூறுவது பிறவியிலும் நான் என் தலையைக் கொடுக்கத்தான் வேண்டும். நான் கொடையளிப்பதாகச் சொல்லி, இதுவரையில் என் சொற்றவரவில்லை. இப்பொழுதும் என்சொற்றவரவேண்டாம். என் இறையே! என்னைத்தடுக்க வேண்டாம். என்னை அண்டிவந்த யாசகன் தனது வேண்டுகோள் பயன்படாது மனம் நொந்து திரும்பிச் சென்றான் என்னும் பேச்சு எனது செவிகளிற் படவேண்டாம். இப்பொழுது என் தலையை வேண்டியவன் தங்களது புதல்வனேதான். அவனுக்கு என் தலையைத் தந்திடுவன். தங்களது திருமுகத்தைக் காணக்கருதியே, நான் இவ்வளவு தாமதம் செய்தேன்.' என்று இயம்பி தன்னில்லத்தினுள்ளே சென்று தன்பெட்டியைத்திறந்து அதிலிருந்து சூர்ணமொன்றைக்கொணர்ந்து, அதனைக் கோமகனது வாளிற் பூசினான்.

சூர்ணத்தைத் தடவிய பிறகு கோமகன் ஓங்கி வெட்டவே, நாகார்ஜுனனது தலை கழுத்துனின்றும்,

தண்டினின்று தாமரை விழுவதுபோலத், தெறித்து விழுந்தது. மந்திரியின் தலை தரையில் விழவே, அங்குள்ளோர் அனைவரும், ‘ஹா! ஹா! ஐயோ! ஐயோ!’ என்று அலறினர். அரசன் இக்கொடுமையைக் கண்டு, தன்னுயிரைத் தானே மாய்த்திடத் தொடங்கவே, திடீரென்று ஒரு ஆகாய வாணி யுண்டாகி, ‘ஐயா! அரசே! ஸாஹஸம் வேண்டாம். உமது நண்பன் நாகார்ஜுனன் இனிப் பிறப்பதில்லை. அவனது பாக்கியவசத்தினால் அவன் புத்தன் பெற்ற பெரும் பேற்றை யடைந்தான்.’ என்று இயம்பியது. இச்செய்தி கேட்டதினாலும் தனது கையில் வாள் நிலையாமையைக் கண்டதனாலும், சிராயு, தன் செல்வத்தையும் ராச்சியத்தையும் துறந்து, துறவியாகிக் கானகத்திற்குச் சென்றான்.

சிராயு, நெடுங்கானகத்தை அடைந்து வெகுகாலம் கொடுந்தவம் செய்து, பிறகு பெரும் பதவியை யடைந்தான். அவனது குமாரன், தன் அன்னையின் சொற்கேட்டு அரசனான சிலநாட்களில் மந்திரி நாகார்ஜுனனது பிள்ளைகள் தமது தந்தையைக் கொன்ற அரசனிடம் த்வேஷம் பாராட்டி இராச்சியத்தில் ஓர் கொடுங்கலகம் உண்டுபண்ணி அவ்வரசனை கொன்றுவிட்டார்கள். பிள்ளை மறித்தசோகத்தினால் அவனுடைய தாயும் இருதயம் வெடித்து இறந்துபோனாள். துர்மார்க்கத்தில் போகிறவர்களுக்கு சேமம் ஏது? சிராயுவின் மற்றொரு ராணியின் வயிற்றில் பிறந்த சதாயு என்பவனை மந்திரிபுத்திரர்கள் அரசனாக்கினார்கள்.

இதுதான் பிதாவுக்குத் தீங்கு நினைத்ததற்கும் தன் அன்னையான மங்கையின் மதியைகெட்டதற்கும் ஜீவஹரராஜன் பெற்ற பலன். ஆகையினாலேதான், இஃதறிந்த பெரியோர், 'பெண்புத்திப் பிரளயத்தை உண்டாக்கும்' என்கிறார்கள். பின்னர், நாகார்ஜுனனது பிள்ளைகளின் பெருதவியினால் அரசனான அச்சிறுவன் ஒருவன்தான் அவ்வரசகுலத்தில் விஞ்சினன்.

அம்மா! உற்றவர் சாவதினால் மற்றவர்க்கு உண்டாகும் துக்கம் இப்பொழுது உண்டானதா? அநாதியாக உள்ளதே தான் இந்தத் துக்கம். மண்டையுள்ள வரையிற் சளி விடாது. அம்மா! என்றைக்கு, இந்த ஸம்ஸாரம் உண்டாயிற்றோ அன்றைக்கு உண்டானதுதான் இத் க்கம். இது இந்த ஸம்ஸாரம் உள்ளவரை யுள்ளது, அம்மா! ஈசன் அருளுண்டானாற் போகும் இத்துக்கம். பாவி நாகார்ஜுனன் மனிதர்களை எல்லாம் மரணமில்லாதவர்களாகச் செய்ய முயன்றதை தேவர்கள் பொருக்கவில்லை. அதனால் அவனும் மாய்ந்தான்.

இவ்வுலகவாழ்வு துக்கம்நிறைந்தது; அநித்தியமானது. இவ்வுலகினை ஆக்கிபளிக்கும் ஈசனுடைய கருத்துக்கு எதிராய் எவனாலும் எவ்வித பிரயத்தினங்களினாலும் எதுவும் செய்ய முடியாதன்றோ? இவ்வுலகில் அனைத்தும் கடவுளது கையடக்கமேதான்.

இக்கதை முடிந்தவுடனே நரவாஹநதத்தனும், ரத்நப்பிரபையும் புன்னகைகொண்டு எழுந்து சென்று அந்நாளுக்குரிய சடங்குகளை வழக்கப்படி செய்து சுகமாயிருந்தனர்.

## நரவாஹனதத்தன் வேட்டையாடுதல்.

அன்றிரவு அயர்ந்துறங்கிக் கனயிருள் அகன்று கதிரவன் எழுமுன்னே எழுந்தனன் இளவரசன். கண்துயின்ற தன் கணவன் பள்ளியெழுந்து செல்லவே, ரத்நப்பிரபை திடுக்கிட்டு நடுங்கினள். எழுந்த அவ்வீரன் வேட்டைக்குரிய ஆடையும் ஆயுதமும் பூண்டு வந்து அவள்முன்னே நின்றான். வேட்டை இன்னது என்று அறியாத அவ்வித்தியாதரி, கணவனைப் பிரியும் துக்கமேயன்றி, அறியாமையாலுண்டாகும் அரும் துயரமுமடைந்தனள். இவ்வாறு தளர்வெய்திய தன் செல்வக்காதலியை மென்மொழிகளாற் றேற்றித் தைரியமுறச்செய்து தாமதமின்றித் திரும்பி வருவதாக வாக்களித்து வெளியே சென்றான் இளவரசன்.

வெளியே சென்று வேந்தனும் தன் நண்பரும் அமைச்சரும் இருக்குமிடம் சேர்ந்தான். பின்னர், பூபாலனும் இளவரசனும் அமைச்சரும் பரிகளின் மீது ஏறித் தம் ஆட்பெரும்படையெல்லாம் முன்செல்ல, தாரை தம்பட்டம் முதலான பலவகை வாத்தியங்கள் முழங்க வநத்திற்குச் சென்றனர். அங்கு வேட்டைக்கானவை அமைந்திருந்தன. வேந்தனும் அவன் பின்னவரும் வீரர்க்குரிய வேட்டையாடத் தொடங்கினர். வேட்டையினால், யானைகளும் சிங்கங்களும் புலிகளும் மான்களும் ஓநாய்களும் செந்நாய்களும் கரடிகளும் பன்றிகளும் மற்றும் எத்துணையோவகை விலங்குகளும் மாண்டன. அப்பொழுது பகலிற் பாதியாயிற்று; வெங்கதி

ரோன் தன் வெயிலினால் வருத்தினன் அனைவரை யும். அத்தருணத்தில், நரவாஹனதத்தன் இளைப் படைந்து மிக வருந்தினன்; தனக்குண்டான விடா யை ஆற்றக் கருதிக் காடுகாடாக அலைந்து தொலை தூரம் சென்றான். அங்கோரிடத்திற் பறவைகள் பலவகையானவை இருப்பதைக் கண்டு அவற்றை அடிக்க அவாக்கொண்டான். உடனே, வாயிற்குளி கைகளையும் கையிற் குழலையும் பூண்டு, புருவத்தை நெறித்து ஊதினன். அவன் ஊதஊதப் பறவை கள் தரையில் விழ்ந்து மாண்டன.

வேட்டையில் வேட்கைகொண்ட அவ்விளை ஞனுக்கு வேறொன்றும் புலப்படவில்லை. அவன் ஊதின குளிகைகளில் ஒன்று அவ்வழியே வந்த ஸித்ததாபஸிமீதில் விழுந்தது. அவள் தன் தவத் தின் பெருமையால் ஸித்திகளனைத்தும் பெற்றவள்: காலம்மூன்றினையும் அறிந்த மூப்புடைய மெய்ஞ் ஞானி. திடீரென்று குளிகை தன் மீது விழவே, வயது முதிர்ந்த அவ்வம்மை, 'என்? அப்பா! உனக்கு என்ன? செருக்கு இத்துணையா! கண்முன்னே இருப்பதைக்கூடக் காணமுடியாதா? சரிதான். துள்ளிய மாடு பொதிசுமக்கும். இதன் பயன் உனக்கு இப்பொழுதா தெரியும்? தெரியாது, பெண் கற்பூரிகை உனக்குப் பெண்டிரானல், அப்பொ ழுதேதான் தெரியும்.' என்று புன்முறுவல் பூத்து அமைதியாக வியம்பினள். இம்மொழி கேட்கும் முன்னமே தான்செய்த பெரும் பிழையைக்கண்டு நடுங்கினன் இளவரசன். இச்செய்தி கேட்கவே மெய்மறந்து அவளது தாள் தொழுது கும்பிட்டு எழு

ந்து, 'அம்மா! அடியேன் தங்களைப் பார்க்கவில்லை. நான் ஒரு பாவமும் அறியேன். விதிவசத்தினால் எனது குளிகை தங்கள் மீது பட்டது. அம்மா! நும்மடி பணிந்தேன்: அடியேனைக் காத்தருளவேணும், என் பிழையைப் பொறுத்து என்னை ரக்ஷிக்கவேணும்.' என்று கெஞ்சினான். அச்சிறுவன் தரையில் விழ்ந்து தண்டனிட்டதை நோக்கி அவன் இறைஞ்சுவதையும் கண்டு மனம் உருகி, 'அப்பா! குழந்தாய்! எனக்கு உன்மீது கோபஞ் சிறிதும் இல்லை.' என்று தணிந்துமெலிந்த குரலுடன் இயம்பி, முகமலர்ச்சியுடன் பலவாருக இளவரசனுக்குச் சமாதானம் சொன்னாள் அத்தாவதக்கிழவி. கொஞ்சம் நேரம் அவளது மொழியைக் கேட்டுத் தெளிந்தமனத்தனாய் அக்கிழவி உண்மையிலேயே கோபமற்றவள் என்று கண்டு, 'அம்மா! தாங்கள் கற்பூரிகை என்றீர்களே; அவள் யாவள்? அம்மா! அடியேனிடத்திற் தங்களுக்கு விசுவாஸமுண்டானால், அவள் இன்னாள் என்பதைச் சொல்லவேணும். அவளது வரலாற்றைக் கேழ்கவேணுமென்று எனக்கு மிக்க ஆவலாயிருக்கிறது. சொல்லுங்கள். அம்மா!' என்று இளவரசன் மிகப்பணிவுடன் இறைஞ்சினான்.

இவ்வண்ணம் இறைஞ்சும் இளைஞனையும் அவன் கொண்ட அவாவையும் நோக்கி ஆர்வம்மிகுந்து, 'அப்பா! இப்பெருங்கடலுக்கு அப்பால் ஓர் பெரிய நகரம் இருக்கிறது. அதன் பெயர் கற்பூரஸம்பவம். அந்நகரின் பெருமையும் புகழும் எல்லோர்க்கு தெரிந்தவை. அந்நகர்க்கு ஒரு அரசன் இருக்கின்

ருன். அவன் பெயர் கற்பூரகன்: அப்பெயர் அவன் ஒருவனுக்கே தகும். அவன் குமரி ஒருத்தி இருக்கின்ருள். அவளது பெயர் கற்பூரிகை: அவள் இவ்வுலகினுள்ள கன்னிகையர்க்கெல்லாம் திலதம் போன்ற ஓர் மங்கையர்க்கரசி. அத்தீவில் இருக்கும் அவளைத் தன்னிடத்தில் உண்டான இலக்ஷ்மியை ஹரி அபஹரித்தாரே, இரண்டாவது கன்னிகையான இவளை அவரோ இன்னும் யாரோ கொண்டு ஓடிப் போவார்.' என்று பயந்து கடல் அவளைத் தனது நடுவே வைத்துக் கட்டுங்காவலுமாகக் காப்பாத்துகிறது என்றே எண்ணுகின்றேன். இவ்வளவு அழகுள்ள அம்மாதரசிக்கு புருஷர்கள் என்ருல் வெருப்பு மிகும். அவள் புருஷர்கள்மீது கொண்ட பகையை நான் என்ன சொல்வேன்!' எத்துணையோ பெயர் விரரும் சூரரும் வித்தகருமாகச் சென்று அவளது மனத்தைக் கலைக்கத் தங்களால் இயன்றமட்டில் முயன்று பார்த்தனர். கல்லேனும், ஐய! ஒருகாற் கரையும்; அவளது கல்லான நெஞ்சம் இளகவில்லை. அவளுக்கு உண்டானபகை நீங்கினலல்லவோ அவள் ஆடவனை மணஞ்செய்து கொள்வது? ஆகையால், அவள் இன்னும் கன்னிகையாகவே இருக்கின்ருள். நீ, அந்நகர்க்குச் சென்று,அவளுக்கு எதிர்ப்பட்டால், அவள், உனது வடிவழகைக்கண்டு மோஹித்து உனது சாதுரியத்திற்குத் தோற்று, உன்னை மணஞ்செய்து கொள்வாள். ஆகையாற், குழந்தாய்! நீ அத்தீவுக்குச் செல்க. உன்னை அவள் காதலிப்பாள். நீ அவளை உன்னடியாளாகப் பெறுவாய் என்பதற்கு ஐயம் எள்ளளவும் இல்லை.ஆனல்,

நீ செல்லும் வழியில் உள்ள காடுகளில் உனக்கு உண்டாகும் கஷ்டங்களையும் இடையூறுகளையும் இன்னவை இவ்வளவானவை என்று சொல்லவே முடியாது. அவற்றைக் கண்டு நீ பயப்படவேண்டாம்: தைரியத்துடன் மேன்மேலும் செல்க. உனக்கு அவை எல்லாம் க்ஷேமமாகவே முடியும். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்'. என்று இளவரசனுக்கு ஆசையுண்டாகும்படி இனிது கூறி, மாயமாக மறைந்திட்டனள் அத்தாவதக்கிழவி.

---

## இளவரசன் கற்பூரஸம்பவத்திற்குச் செல்லுதல்.

அக்கிழவியின் சொல்லைக்கேட்டு வீரனுண நரவாஹநதத்தனுக்கு மனத்தில் ஓர் அற்புதமான உர்ச்சாக முண்டாயிற்று. பெண்ணாசை என்பது எல்லோர்க்கும் உள்ளதேதான். போகும் வழியில் உண்டான இடையூறுகளை வெல்ல எவ்வளவு வீரமும் ஸாஹஸமும் வேணும்! இத்தகைய அரும்பெரும் காரியத்தைச் செய்து கன்னிகையையும் கைக்கொண்டால், அவனது புகழ் எவ்வளவு ஓங்கி விளங்கும்! இவையெல்லாம் மனத்திற் தோற்றவே, அவன் சட்டெனத் தன்பரியின்மீதுஏறி, அருகில் இருந்த கோமுகனை நோக்கி, 'வா. கற்பூரிகையிடம் போவோம். கற்பூரஸம்பவத்திற்குப் போவேன். அன்னாளைக்காண்பேன். இல்லையேல், நான் இமைப்பொழுதேனும் தரித்திருக்கவியலேன்.' என்றுஅவாமிகுந்து அறைந்தனன். இவ்வுரை கேட்டுக் கோமுகன் திடுக்கிட்டு, 'ஐயா! இது என்ன? நீங்கள் எங்கே? கடலா? அது

எங்கே? கற்பூரஸம்பவமா? ஏய்! அப்பா! அது எங்கே? உங்களையும் நினைத்து அவ்வழியையும் நினைக்கவா? அப்பெண்ணை இன்னுள் என்று கேட்டதுதானே? இதற்கா விண்ணிலிருந்து ஓடிவந்து மாலையிட்ட வித்தியாதரியைக் கைவிட்டு ஓடுவது? போகட்டும். மண்ணிலுள்ள இப்பெண்ணழகிக்கு மணத்தில் ஓர் ஆசையுண்டோ? அதுவும் இல்லை. இதற்கா நாட்டைவிட்டு நகரைவிட்டு வீட்டைவிட்டு ஓடுவது? ஐய! இச்சாஹஸம் வேண்டாம். வருக வீட்டிற்கே விரைந்து செல்வோம்.' என்று அமைதியாகக் குறிப்புடன் கூறினன். பெண்ணாசைகொண்ட பெருமானுக்குப் பக்கத்திலிருப்பவர்சொல் செவியிற்படுமா? படவேபடாது. ஆகவே, இளவரசன், 'தவமுள்ள அம்மூத்தவள் சொல் பொய்யாகுமா? மூத்தோர்சொல் வார்த்தை அமுதம். அக்கோமகளைக் கைக்கொள்ளாது தரிக்கமுடியாது.' என்றே இயம்பிப் பரபரப்புடன் பரியின்மீதேறிப் பிரயாணமானன். அமைச்சனுக்கு அவன் இயம்பியது இஷ்டமானதல்ல. ஆனாலும், 'அமைச்சன் அரசர்பால் நின்று அவர்க்கு உதவுவதே தான் கடமை.' என்று உணர்ந்தவன் கோமுகன்: தன்னிறைவன் செய்வது தவருனல், அமைச்சன், அதனை எடுத்துரைக்கலாமேயன்றி, மற்று என் செய்யலாம். கோமுகன் அவ்வண்ணஞ் செய்தும், இளவரசன் அவன்மதியைக் கேட்கவில்லை. பின்னும், தன் நண்பனை இறைவனை விட்டிருக்க மனமில்லாமல் கோமுகன் அவன்பின்னே தானும் தன் புரியின்மீதேறிச் சென்றான். இவையெல்லாம் நிகழவே, மாலைப்பொழு தாயிற்று.

கானகத்தில் ஒருபால் இவ்வண்ணம் நிகழ, மற்றொருபால் வேந்தன் வத்ஸராஜன், வேட்டையாலுண்டான விடாயைத்தீர்த்து, நகரத்திற்குப் போனான். அரசன் போகும் வழியில் மருபூதி படையுடன் செல்வவதைக் கண்டு தன்புதல்வனும் அப்படைநடுவே இருப்பதாக எண்ணித், தன் நகர்க்கு ஏகினான்.

வத்ஸராஜன் நகரஞ் சேரவே, இருதிறத்தோரும் இளவரசன் திரும்பி வரவில்லை என்று செவ்வேயறிந்துகொண்டனர். திடீரென்று வந்த விசனத்தினால் எல்லோரும் வாய்திறவாது மௌனமாக நின்றனர். பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் அரசனும் மருபூதி முதலான இளவரசின் நண்பருமாக ரத்நப்பிரபையின் மாளிகைக்குச் சென்றனர். அங்கு அரசன் செயலொன்றும் அறியாது நின்றான். அவளது மாளிகையில் என்ன செய்வான் அவன்? பாவம்! மருமகளோ இம்மண்ணுலகின் ஓர் மாதல்ல. அவள், தனது உற்றாரையும் உரமுறையோரையும் விண்ணுலகையும் விட்டுத், தன் புதல்வனையே கதியாகவெண்ணித் தானாகவந்து மணஞ் செய்துகொண்டவள். அவளுக்கு மணமாகி வெகு காலமும் ஆகவில்லை. அவளுக்கு இளவரசனான தன் காதலனையன்றி மற்றையரிடத்திற் சிறிதேனும் பழக்கமில்லை. இத்தகைய இளம் மாதினிடத்தில், 'நாங்கள் பெரும் படையைக் கூட்டிக் கொண்டு வேட்டையாடப் போனோம். உன் கணவன் காணமற்போனான்.' என்று சொல்வது எப்படி என்று மனத்திற் சிந்தையுற்றான். சிறிது நேரமாகவே, அவள் அரசன் சன்னதியை யடைந்தனள்; அரசனும் தன் மனத்தை உறுதிப்படுத்திக்

கொண்டு நடந்ததை இயம்பினான். அவ்வெவ்வுரை கேட்டு, அம்மாது, மனமிழந்து செயலொன்றும் அறியாது, சிறிதுநேரம் நின்றாள். பின்னர், தன் மனத்தில் உண்டான கவலையைத் தீர உதறித் தியானஞ் செய்தனள். உடனே, அவளது வித்தையின் வலிமையினால் அவள் தன் கணவனது வரலாறு இன்னதென்று கண்டுணர்ந்து, தன்னருகில் நிற்கும் தன் மாமனை நோக்கினள். அவன் தன்னருயிர்மைந்தனை இழந்து தள்ளாடி நின்றனன். மாமன் தளர் வெய்தி ஏங்கிநிற்பதைக் கண்டு, 'பிரபுவே! அபாயம் ஒன்றுமில்லை. அடிவியில் ஓர் தாவதக்கிழவி அவரைக் கண்டனள். அவள் கற்பூரிகை என்னும் ஒரு பெண்மணியின் மாட்சிமையை அவருக்கு உரைத்தனள். அதுகேட்டு அவர் கற்பூரிகையைக் கைக்கொள்ளக் கோமுகனுடன் சென்றனர். என்னிறைவர் விரைவில் வந்திடுவார். வெற்றியுடனே வந்திடுவார். அவருக்குக் குறைவொன்றும் இல்லை. கவலை தினையவளும் வேண்டாம். என் வித்தையால் நான் இச்செய்தியைக் கண்டறிந்தேன். இதிற் சந்தேஹலேசமேனும் இல்லை.' என்று ஆறுதல் உரைத்தனள்.

பிறகு, அவள் தன் விச்சைகளில் ஒன்றைச் சிந்திக்கவே, அது, அவள் முன்னே வந்து அவளாணையைப் பெற்று, அவளது கணவனுக்கு வழியில் வேண்டிய உதவிகளைப் புரியச் சென்றது. இப்பெருமாட்டி கற்பென்று கடைப்பிடித்தது, என்னே! பாருங்கள். தன்மணாளன் மற்றொருத்தியைத் தேடிச் செல்லுங்கால் அவனுக்கு உதவிபுரிவதே தன் கடமை என்று உணர்ந்தவள்: எவ்விதத்தினாலாவது கணவனுக்கு

இதம் செய்வதே கற்புடைமை என்று கற்பைக் கடைப்பிடித்தவள் ரத்நப்பிரபை.

நகரத்தில் இவ்வண்ணம் நிகழ, இளவரசனும் அமைச்சனும் அன்றிரவெல்லாம் நெடுங்கானகத்தினூடே ஓயாது சென்றனர். மறுநாள் ஓர் அரும் பெரும் பாலைவனத்தைக் கிடந்து சென்றனர். செல்லுகையில் அவரை வெங்கதிரோன் துன்னுவெயில் வறுத்தியது. ஆங்கு தளிரிளம் மங்கை ஒருத்தி இளவரசன்முன்னே நினறனள். அவ்வணங்கன்ன நேரியிழையின் இனியதோர் அழகை, என்னே நான் சொல்வது! அவ்வணங்கைக் காணவே, அவர் விடாயெல்லாம் தீர்ந்தது. மன்னவன் முன்னேநின்ற அம்மெல்லியல், 'இறைவ ! என்னை மாயாவதி என்பர். நான் விச்சைகளில் ஒருத்தி ; அன்னை ரத்நப்பிரபைக்கு ஆட்பட்டவள். அவ்வன்னையின் ஆணைக்கிணங்கியே இங்கு வந்தேன். நும்வழியே நும்முடனேசென்று மறைந்திருந்து நுமக்கு எவ்விதத்திலும் ஆள்ச்செய்வேன். இனிக்கவலையின்றி இவ்வழியே செல்லலாம்." என்று இனிதுரைத்து மறைந்தனள்.

பிறகு, அந்நெடுவழியே செல்லுமவரைப் பசியும் பிணியும் வறுத்தவே இல்லை. இளவரசன், 'இப்பேருதவி புரிந்தனள் அன்றோ என் செல்வக்காதலி?' என்று அவளைத் தன்னுள்ளே புகழ்ந்தவண்ணமாய் நெடு வழியே சென்றான்.

பகலெல்லாம் அவ்வண்ணமே சென்று, மாலைப் பொழுதில் நரவாஹனதத்தனும் கோமுகனும் ஒரு பெருந்தடாகத்தை அணுகினர். அப்பெருந்தடாகத்

தைக் கண்டவாறே அவர் வேட்கையெல்லாம், நீங்கியது. இவ்விருவர்க்குமேயன்றி அவர் ஏறிச்சென்ற பரிகளுக்கும் ஆநந்தமும் உர்ச்சாகமும் மிகுந்தன. இருவரும், பரியைவிட்டு கீழே இறங்கி, அந்த நின்மலமான ஓடையில் ஆசைதீர மூழ்கி மஞ்சனமாடினர். பிறகு, தமது மாலைக்கடன்களை முடித்து எழுந்து அப்பொழில்களுனுட் சென்று இனிய பழங்களும் காய்களுமாகக் கொணர்ந்தனர். அவற்றையே ஆகாரமாக உண்டு நீரை குடித்துத் தம்விடாயையும் கவலையையும் மறந்தே யொழிந்தனர். இவர் இங்ஙனம் செய்கையிற் பரிகளும் விடாயாறிப் புல்லை மேய்ந்துகொண்டிருந்தன. இரவு வரவே, குதிரைகளுக்கு வேண்டிய புல்லைச் சித்தஞ்செய்து அவைகளுக்கு இட்டு அவைகளை ஒரு மரத்திற் கட்டித், தானும் மந்திரியுடன் ஒரு பெரிய அடர்ந்த மரத்தின்மீது ஏறினன் நரவாஹனதத்தன். அவர் அம்மரத்தின்மீதே அவ்விரவில் உறங்கினர். இளவரசன், நடுநிசியிற் குதிரைகள் வெருண்டு கனைப்பதைக்கேட்டுத், திடுக்கிட்டு எழுந்து பார்த்தான். மரத்தின் அடியில் ஒரு பெரும் சிங்கம் நின்றது. உடனே குதிரையைக் காப்பாற்றுவதையே எண்ணிப் பரபரப்புடன் கீழே இறங்கினன். இளவரசன் மெய்ம்மறந்து இறங்குவதை நோக்கிய கோமுகன், 'என்ன? ஐயா! உடம்பையும் மறந்து மருள்க் கொண்டவன்போலச் செய்கிறீரே! சுவரை வைத்துக் கொண்டல்லவா சித்திரம் எழுதவேணும்? சரீரமல்லவா முதலில் யோசிக்கவேண்டியது! அதிலும், அரசர் ஆலோசியாமற் செய்யலாகாதே! என்ன?

ஐயா! எத்துணையோ பல்லும் நகமுமாக இருக்கிற இச்சிங்கத்துடன் நீர் என்ன சண்டைபோடுவதோ? நாம் நமது சரீரத்தைக் காத்துக்கொள்ள வல்லவா இந்த மரத்தின்மீது ஏறினது?' என்று தடுத்தனன். ஆனாலும் இளவரசன், அவனது சொல்லைச் சிறிதேனும் பாராட்டாமற் கீழே இறங்கி மரத்தினடியில் மறைந்து நின்று தன்கையிலிருந்த கூரிய சிறு கத்தியினால் அச்சிங்கத்தைக் குத்தினன். சிங்கத்தின்மீது பட்ட குத்து வலியதேயானாலும், சிங்கம், அதனை ஒரு பொருட்டாக எண்ணாது, இளவரசனது குதிரையைக் கொன்றதுமன்றிக் கோமுகனது குதிரையையும் கொன்றேயொழிந்தது. இளவரசன், சிங்கம் இங்ஙனம் செய்ததைக்கண்டு வியப்பும் விசனமும் கொண்டு, கோமுகனிடமிருந்து தன் வாளை வாங்கி, அதனால் அச்சிங்கத்தை இரண்டு துண்டாக வெட்டினன். பிறகு, வாளும் கையுமாக மரத்தின் மீது ஏறி இரவையெல்லாம் அங்கேயே கழித்தனன்.

காலையிற் கதிரவன் எழும்முன்னே எழுந்து, கற்பூரிகையையே நினைந்து விரைவாகச் சென்றான். அவன்பின்னே சென்ற கோமுகன், 'அந்தோ! ஈதென்ன கற்பூரிகை! ஈதென்ன கால்நடை! பரிகளுந்தான் போயினவே! இருக்கட்டும். பார்ப்போம். இவனது மனத்தை மாற்றுவோம்.' என்று எண்ணிப் பின்வருமாறு பேசினன். 'இறைவனே! இச்சமயத்திற்கு ஏற்பக்கதை ஒன்று சொல்லுகிறேன், கேட்கவேணும்'.

———

## பரித்யாகஸேனன் கதை.

இதோ! இந்த இடத்திற்குச் சமீபத்திற் தான் இருக்கவேணும் இராவதி என்று ஒருபெரிய நகரம். அது செல்வத்திலும் தேசுலும் அளகாபுரியை விஞ்சியது. அந்த நகரத்திற்கு மன்னவன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் பரித்யாகஸேனன். அவனுக்குத் தாரங்கள் இருவர். இவ்விருவரும் அவனுக்கு உயிருக்கு உயிரானவர். இவ்விருவரில் ஒருத்தியின் பெயர் அதிகஸங்கமை: அவள் அவ்வரயனது மந்திரியின் புதல்வி. இன்னும் ஒருத்தியின் பெயர் காவ்யாலங்காரை: அவள் ராஜவம்சத்திற் பிறந்தவள். என்ன இருந்தால், என்ன? அரசனுக்குப் பிள்ளையில்லை. ஆகையால், அந்த அரசன், தன் மனைவியர் இருவரையும் கூட்டிக் கொண்டு அடவியிற்சென்று, ஆகாரமில்லாமற் புல்லையே படுக்கையாகக் கொண்டு, அம்பிகையைக் குறித்து அருந்தவம் புரிந்தான். அம்மை பவானி, தன்னை அண்டினவர்கட்கு அருள்பொழியும் அன்னையானதால், அரசனது கனவிற் தோன்றி அவனுக்கு இரண்டு அற்புதமான பழங்களை யளித்தனள். பழங்களை யளித்ததுமன்றி, 'அரசே! உமக்குப் புதல்வர் இருவர் உண்டாவார். அவர் மிக்க வீரராக இருப்பார்.' என்றும் இயம்பி மறைந்தனள். மறுநாட்காலையில் அரசன், எழுந்து தன் கையிலிருக்கும் பழங்களைக் கண்டு, ஆராத மகிழ்ச்சி கொண்டான். தான் கண்ட கனவை அரசியர்க்கு இயம்பி அவ்விருவரையும் மனங்குளிரச் செய்தான்.

பிறகு, மூவரும், மஞ்சனமாடி பார்வதியைப் பூசித்துப் பாரணையையும் பண்ணித் தமது விரதத்தை முடித்தனர்.

அன்று இரவு அதிகஸங்கமை என்னும் அரசியை யணுகி, அப்பழத்தில் ஒன்றை உண்ணும்படி நியமித்தனன் அரசன். அவளும் அந்தப்பழத்தை உண்டனள். அவளது தந்தை அரசனது மந்திரிகளில் முக்கியமானவன். ஆகையால், அரசனுக்கு அவ்வரசியின்மீது நேசம் மிக உள்ளது. ஆனது பற்றியே, இரவெல்லாம் அவளுடன் கூடவே இருந்தனன். அரசன் தான் தூங்கும்பொழுது இரண்டாவது பழத்தைத் தனது தலையின் கீழே வைத்திருந்தான். அந்தப் பழத்தை அவன் தனது இளையதாரத்திற்குத் தருவதாக நிச்சயித்திருந்தான். பிறகு அரசன் அயர்ந்து உறங்குவதைக் கண்டு, அதிகஸங்கமாதேவி, 'ஏன்? எனக்கே தான் மணிகள் போல இரண்டு பிள்ளைகள் பிறந்தாலாகாதோ?' என்று எண்ணி, அரசன் தலைமாட்டிலிருந்த இரண்டாவது பழத்தையும் தின்றனள். மங்கையர்க்குச் சக்களத்தியின்மீது பொறாமையும் பகையும் இயற்கையில் உள்ளவையே தான்.

அரசி, காலையில் அரசன் எழுந்து பழத்தைத் தேடுவதைக் கண்டு, 'இரண்டாவது பழத்தையும்நானே தான் உண்டேன்.' என்றனள். இவ்வெவ்வுரை கேட்கவே, அரசனது மனங் குன்றியது. ஆகையால், அவன், அவளது வீட்டைவிட்டு வெளியே சென்று பகலெல்லாம் எப்படியோ போக்கிப், பொழுது சாய்ந்த உடனே மற்றொரு மனையாளின் மாளிகைக்கு

ஏகினன். அரசனைக் கண்டதும் அவள், 'எனக்கு ஒரு பழம் உண்டே. இறையே! அதனைத் தந்திடலாகாதா?' என்று இறைஞ்சினள். அரசன் பரித்யாகஸேனன், கருணை மிகுந்து, 'ஐயோ! நான் என்செய்வேன்! நான் அயர்ந்து உறங்கினேன். உன் சக்களத்தி அதனையும் தின்றனளே! சக்களத்திப்போரினால் வந்த வினையன்றோ இது!' என்று மனம் தளர்ந்து இயம்பினான். அரசன் மனமுருகி இயம்பின அவ்வார்வச் சொற்கேட்டுத் தனக்கு மக்கட்பேறு இல்லாமற் போயிற்றே என்று மனம் நொந்து மாற்றமிழந்து மௌனமாக விருந்தனள் காவ்யாலங்காரை என்னும் பெருமாட்டி. நாட்கள் சில செல்லவே, அதிகஸங்கமாதேவி கருக் கொண்டனள். மாதங்கள் பத்து நிறையவும் அம்மஹிஷி புதல்வர் இருவரை ஈன்றனள். மக்கட்பேறு இல்லாது ஏங்கிக் கிடந்த அரசன் அரும் மகிழ்ச்சிக்கு ஆளாயினன். பரித்யாகஸேனன் புத்திரர் தோன்றினர் எனப் பொங்கிப் பெரும் விழாவொன்று கொண்டாடினான். பிறந்த குழந்தைகளில் மூத்தது வெகு அழகானது: அதன் கண்கள் நீலோற்பலம் போலக்கரியவை. ஆகையால், அரசன் அந்தக்குழந்தைக்கு இந்தீவரஸேனன் என்று பெயரிட்டான். அக்குழவியின் வடிவழகு மிக்க அற்புதமானது. இவ்வரசி, அரசன் இச்சையில்லாமலே பழத்தைத் தின்றதினால் உண்டானவனாதலால், அரசன் தனது இரண்டாவது புதல்வனுக்கு அனிச்சாஸேனன் என்று நாமகரணஞ் செய்தான்.

காவ்யாலாங்காரை என்ற இளையதாரம், தன் சக்களத்தி அடைந்த இப்பேற்றைக்கண்டு, பொ

ருமை கொண்டனள். அவள் வயிறு கொதிக்கவே, 'இருக்கட்டும்; இந்த மூளி எனக்கு உண்டாகவேண்டிய மகனை யன்றோ கெடுத்தனள்? இவள் தன் இரண்டு பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு வாழ்வதைப் பார்ப்போம். அப்படியா? எனக்கு இவள் செய்ததற்கு நான் எதிர் செய்யாமல் விடுவதா? அது எங்கே? இவள் பிள்ளைகள் பிழைப்பதைப் பார்க்கின்றேன்.' என்று எண்ணி, அவளது குழந்தைகளைக் கொலைசெய்யச் சமயமும் உபாயமும் தேடினாள். ஐயா! இவளது பகை என்னும் மரத்திற்கு விதை ஊன்றியாயிற்று. இனி அது வளர்ந்து படர வேண்டியதுதான். ராஜகுமாரர் இருவரும் வளர வளர இவளது பகையும் வளர்ந்தது.

அவர் இருவரும் குமரராகி, க்ஷத்திரியர்க்குரிய வித்தைகளை எல்லாம் பயின்று, மிக்கத் தேற்சியடைந்தனர். போர்க்குரிய வித்தைகளிற் தேற்சியடைந்தமையால், அவர்க்கு ஆணவம் மிகுந்தது. ஆகையால் அவர், இருவரும் தம் தந்தையையணுகி, 'அப்பா! நாங்கள் இருவரும் வாலிபர். ஜாதியில் க்ஷத்திரியர்; புயவலிமையுள்ளவர். போர்க்குரிய வித்தைகளிற் தேற்சியுள்ளவர். எங்களது வலிமையை வெளியிடாமல் இருக்க எங்களுக்கு மனமில்லை. கைகள் இருந்தாற் கைக்காரனாவானோ? கைகளின் வரிசைகளைக் காட்டினால் அல்லவோ கைக்காரனென்பது? இனி நாங்கள் சும்மாவிருப்பதில்லை. சும்மாவிருப்பதானால் இவ்வாண்மையினாற் பயனென்ன? இந்த குமரப்பருவம் வீணாகும். பருத்துத் தூண்போலத் திரண்டு உருண்ட இக்கைகளும் பயனற்ற

வை. ஆகையால், எங்களுக்கு விடை தந்தருள வேணும். நாங்கள் இருவரும், சென்று திக்குவிஜயஞ் செய்து, வருகிறோம்.' என்று வாதித்தனர். மன்னன் பரித்யாகஸேனன், தன் அருமைப் புதல்வர் சொன்ன விரவாதத்தைக் கேட்டு மனமகிழ்ந்து, அவர்களது சொல்லுக் கிணங்கினன். பின்னும், தன் அருமைப்புதல்வர் இருவரும் திக்குவிஜயத்திற்குப் புறப்படுவதற்குவேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் செய்வித்தான். 'ஐயன்மீர்! நாடொழிந்து செல்கின்றீர் இருவரும் நெடுவழியே செல்லுங்கால் அபாயம் வந்தவேளையில் அம்மை பவானியை ஆர்வத்துடன் எண்ணுங்கள். அவ்வம்மையின் இன்னருளால் உண்டானவர் அன்றோ நீவிர்?' என்று மனமுருகி மதிமொழிந்தனன். பின்னும், அச்சிருவர் இருவர்க்கும் பாட்டனும் மதிசேர் மந்திரியுமான பிரத்மஸங்கமன் என்பவனையும் அவர்க்குத் துணையாக அனுப்பினன் வேந்தன். கோமக்கள் இருவரும், தம் தாய்தந்தையரின் விடையும் வாழ்த்தும் பெற்று, சிற்றரசரும் நால்வகைப்படைகளும் பின்பட, கீழ்திசையை நோக்கிச் சென்றனர். அங்கு அவ்விரர் இருவரையும் எத்துணையோ அரசர் தகைந்து போர் புரிந்தனர். இந்தீவரஸேனனும் அவன் தம்பியும் தமது புயவலிமையினாலும் படையின் பெருக்கினாலும் அவர்கள் எல்லோரையும் புறங்காட்டச செய்தனர். கதிரவன் உதிக்கும் திசையிற் தமது புகழை விளங்கச் செய்து, தென்திசையை நோக்கிச் சென்றனர் கோமக்கள். தம் புதல்வர் வெற்றி பெற்றனர் என்ற செய்தியைக்கேட்டு அவர்

தாயும் தந்தையும் ஆநந்தமடைந்தனர். அவர் சிற்ற வையோ பொறாமையால் மண்டிக் கொதித்தனள். நீடித்தநாளாய்த் தன் சக்களத்திமக்களைத் தொலைக்கக் கருதிய அவள் இதே தன்னிஷ்டத்தை நிறைவேற்றச் சமயம் என்று எண்ணினள்.

அரசன் தன் குமாரர்க்குச் செய்தியனுப்ப தூதுவர்கள் அநேகரைத் திட்டஞ்செய்தான். அரசி காவ்யாலங்கரை அத்தூதுவறிற் சிலர்க்குப் பணங்கொடுத்து அவரைத் தன்வசமாக்கிக் கொண்டனள். பணந்தானே பரதேவதை! பணங்கொடுத்தது அரசி; அதைப் பெற்றுகொண்டது பேதையர். அவர்க்கு உண்மைதெரியாது. பாவம்! 'நமக்கு அரசியானால் என்ன? அரசரானால் என்ன? இட்டவேலையைச் செய்து வயிறு வளர்க்கிற நாம் தானே.' என்று எண்ணி, அரசி தங்கள்கையிற் கொடுத்த சீட்டுகளை, ரஹஸியமாகச் சிற்றரசர்க்குக் கொடுப்பதாகச் சபதம் செய்து, வாங்கிச் சென்றனர். ஒவ்வொரு சீட்டிலும் எழுதியிருந்தது அடியில் வருமாறு.

'இங்ஙனம்.

நமது நண்பர்—க்கு.

நும் புயவலிமையை மிக மெச்சினேம். தொன்றுதொட்டு நும் முன்னேரும் நீரும் நமது நாட்டரசர்க்குச் செய்த பேருதவிக்கு இசைந்ததே இங்ஙனம் நீர் நம் புதல்வர்க்குப் போரில் உதவியது.

ஆனல், அவர்கள்விஷயத்தில் இச்சமயம் ஆலோசிக்க வேண்டியது ஒன்று உண்டு. அவர்கள் செய்திகளை நன்னர் விசாரிக்குங்கால், அவ்விருவரும் நம் புதல்வர் அல்லர். தமக்கு உண்டான

வெற்றியாலும் போர்ப்பயிற்சியாலும் செருக்குக் கொண்டு நமக்கே தீங்கு செய்யக் கருதியிருக்கின்றனர். அவர்கள் அடைந்த வெற்றி அவர்புயவலிமையால் வந்ததல்ல. அது நீரும் நும்போல்வரான நம் நண்பர்களும் கொணர்ந்த வெற்றியேயன்றி வேறில்லை. ஆயினும், அவர் இருவருமாகக்கூடித், திசைகளை எல்லாம் வென்று திரும்பி வந்து, கிழவனான தம் தந்தையை ரஹஸியமாய்க் கொலைசெய்து, தாமே இந்நாட்டை யாளுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்திருக்கின்றனர். இனி அவர் இருவரும் நம்புதல்வர் அல்லர்.

இந்த ஏற்பாடுகள் நடந்தால், நம்முயிர்க்கு நஷ்டம் வருவது ஒரு பெரிய நஷ்டமல்ல. அதனால் ராச்சியத்தில் ஏற்படுங் கலகங்களும் போரும் எவ்விதமாகும் என்பது அரசிற்தேர்ந்த நுமக்கே விளங்கும். ஆகையால், அவ்விருவரையும், இராச்சியத்திற்கு துரோஹஞ் செய்பவர்களாக வெண்ணி, அவர்களை வதஞ்செய்வதே உசிதமென்று தீர்மானிக்கப்பட்டது.

இவ்விதமாக வெண்ணினால், அவரை வதஞ்செய்வதே உசிதமென்பது திண்ணம். இவ்விதமாகவே நம் சிற்றரசர் எல்லோர்க்கும் அறுதியிட்டிருக்கிறது. மற்றவரசருடன் கலந்து தீர வாலோசித்து அவ்விருவர்க்கும் தகுந்த தண்டனை செய்வீராக. இங்ஙனம் செய்து நமது நாட்டுக்குத் தீங்கு நேரிடாது காப்பது நுமது கடமை என்று அறிவிக்கலாயிற்று.

இங்ஙனம்

——— ——— ”

இவ்விதமான கட்டளைகள் வரைந்து அவற்றுள் ஒவ்வொன்றின் அடியிலும் அரசியே அரசனைப்போலவே கையொப்பம் இட்டனள்.

இக்கட்டளைகளை எல்லாம் அரசரின் சீட்டுகளை எடுத்துச் செல்லும் வேவுகாரன் ஒருத்தன்கையிற் கொடுத்தனள். அவன் தன் தொழிலில் அதிகப் பயிற்சியுள்ளவனானதால் எவ்விதமான ரஹசியத்தையும் வெளிவிடமாட்டான். வேவுகாரனும் அவனுட்களும் ராஜகுமரரது படைகளினுட் புகுந்து அச்சீட்டுகளைச் சிற்றரசர்களிடத்தில் அளித்தினர். அவர்கள் அனைவரும் நீதிவித்தகர்; அரசனுடைய ஆணையும் வெகு கண்டிப்பானது. ஆகையால், அன்று இரவிற் சிற்றரசர் எல்லோரும் ஏகாந்தமான ஓரிடத்திற் கூடினர். ராஜகுமாரர் இருவரும் நற்குணமுடையவர் என்று அவர்கட்குத் தெரியும். ஆகையால், அவர்கள் அவ்விருவர்க்கும் எவ்வளவோ விநயத்துடன் பணிகள் செய்தனர். இருந்தாலும், வந்திருக்கும் பழி மிகப்பெரியதானதால், அவர்கள் எல்லோரும் ராஜகுமாரர் இருவரையும் கொலைசெய்வதர்க்கே தீர்மானித்தனர். நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும். கைக்கெட்டினது வாய்க்கு எட்டாது.

சபையில் இருந்த சிற்றரசரில் ஒருவன், நடந்த செய்திகளை எல்லாம் ராஜகுமாரரின் மாதாமகனான அவ்வமைச்சனுடன் சொன்னான். செய்தியைக் கேட்டவமைச்சன், 'இது என்னமோ மோசம். அரசன் ஒரு பொழுதும் இப்படி எழுதமாட்டான். இச் சீட்டை யாரோ மோசமாக எழுதியிருக்கிறான்.

எப்படியானுல் என்ன? குழந்தைகளின் உயிரைக் காப்பதே நமது கடமை.' என்று எண்ணி, நடு நிசி யாயிற்றே என்று சிறிதும் நினைக்காமல், தன் பேரர் இருவரையும் எழுப்பிச் செய்தியைச் சொன்னுன். உடனே, மூன்று குதிரைகளைச் சித்தஞ் செய்யச் சொல்லி, குமரர் இருவரும் அமைச்சனும் அவற் றின்மீது ஏறி எங்கேயோ விரைந்து சென்றனர். நடுநிசியில் அவ்விருவரும் அவர்பாட்டனும் தம்முயி ரைக்காப்பாற்ற விரைந்து ஓடியதனுல், தாம் சென்ற வழி இன்னதென்று அறிந்திலர்.

மருநாட்காலையில் அம்மூவரும் விந்தியமலையின் அடர்ந்த காட்டின் நடுவே இருந்தனர். அவ்வடவி யில் வழிதடுமாறி அலைந்து திரிந்தனர். வெப்பம் மிகவே, அவர்கட்கு அரும் நீர்வேட்கையுண் டாயிற்று. அவர் ஏறிவந்த பரிகளோ பேரில் மிக்க விடாயுற்றவை: அவ்வளவு தூரம் ஓடி வந்ததினுல் உண்டான நோவும் நீர் வேட்கையும் தாங்கமுடியாமற் கீழே விழ்ந்து ஓர்இமைப்பொழுதி லேயே மாண்டன. அச்சிறுவரது வயது முதிர்ந்த பாட்டனே, நீர் வேட்கையினுல் நாவரண்டு தீரா நோவடைந்து பேசவியலாது தவித்துப், பிராணனை இழந்தான். சகோதரர் இருவரும் தமக்குண்டான அரும் விடாயால் அயர்வுற்று, 'ஐயோ! நம்முயி ரைக்காத்த நம்மருமைப்பாட்டன் நீர் வேட்கையால் வருந்திச் சாகையில் நாம் அவனுக்கு நீரூட்டி உதவவி யலவில்லையே! தவித்த வாய்க்குத் தண்ணீர் ஊற் ருத வரும்பாவியாளுேமே! பழி படைத்தோமே! பாவமே!' என்று எண்ணி, மௌனமாய் ஏங்கி

நின்றனர். ஆண்டாண்டு தோறும் அழுது புறண்டாலும் மாண்டார் வருவதில்லை என்பது துக்கம் வந்த சமயத்திற் றோன்றுது.

அவர் அரும் வீரரானதால் கொஞ்ச நேரத்திலேயே தமக்குண்டான அருந்துக்கத்தை உதறி, 'அந்தோ! இத்தீங்கெல்லாம் வந்தது நம் தந்தையால் அன்றோ? தமது இளையதாரத்தின் சொல்லால் அல்லவோ அவர் இத்துணை செய்தது? நாம் இவ்வளவு கஷ்டமடைவதும் சரியே தான். எப்படியாவது நமது சிற்றவை சந்தோஷமடைந்தாற் சரி; நம் தந்தை விசாரமின்றி இருக்கவேண்டும். தந்தை சுகமடைவதே மக்கள் அவர்க்கு செய்யும் பேருதவி. உலகனைத்தையும் ஈன்ற உமையை வேண்டியன்றோ அவர் நம்மை யடைந்தது? அந்த உமையின் அடியையே பற்றி நாமும் உய்வோம்.' என்று ஆர்வத்துடன் எண்ணித் தம் பாட்டனைவிட்டு அகன்று நெடுங்கானகமே சென்றனர். இங்ஙனம் அவர் துயரம் நீங்கவே, அவர்க்கு ஓர் அற்புதமான உர்ச்சாகமும் வலிமையும் தோன்றின. 'விந்தியாடவியின் நடுவில் பவானியின் கோயில் ஒன்று உண்டே. அங்கேயே செல்வோம்.' என்று உறுதியுடன் இருவரும் மெய்ம்மறந்து சென்றனர்.

வழியில்லாத அவ்வடவியில் வெகு தூரம் சென்றதும் அங்கோர் நற்றாமரைக்கயற்றைக் கண்டனர். அக்கயற்றின் அருகே மலையின் சார்பிற் புள்ளுரையும் சோலைகளும் பூங்கமலவாவிகளுமாக விருந்தன. இவ்வண்ணம் அழகுமிகுந்த அத்தலத்தில் ஓர் பைம்

பொழிலின் நடுவே கோயில் கொண்டிருந்தனள் பங்கயக்கண் அம்மை பவானி. மனிதரே இல்லாத அவ்வடவியின் நடுவே நின்று அருள் பொழிந்திடும் அவ்வம்மையைக் கண்டவாறே, அவரைப்பிடித்த பீடையெல்லாம் தொலைந்தன. உடனே, அவ்விருவரும் அவ்வோடையில் நீராடி அவ்வம்மையை நாடி உலக வழக்கையெல்லாம் அகற்றித் தவம் புரியலாயினர். இவர்செய்தி இங்ஙனமிருக்க, சிற்றரசரைச் சிறிது நோக்குவோம்.

சிற்றரசர் எல்லோரும் தம்படை யிருக்கும் இடத்திற் றேடினர்; கோமக்களையும் அவர் பாட்டனையும் காணவில்லை. தாம் தேடினதுமன்றி தம்மாட்களை அடவியெங்கும் தேடும்படி ஏவினர். காணமற் போனவர் போனவரே. தமது முயற்சிஎல்லாம் வீணனது கண்டு, படைகளுடன் நகரத்திற்குச்சென்று அரசனுக்குத் தாம் பெற்ற ஆணையைக்காட்டி நடந்த வரலாற்றையும் இயம்பினர். இங்ஙனம் திடீரென்று தனக்கு வந்த விதியைக் கண்டு, அரசன் திடுக்கிட்டு நடுங்கி, ‘ஆகா! இவை நான் எழுதின ஓலைகள் அல்லவே யல்ல. ஈதேதோ அற்புதம்! ஈதேதோ இந்திரஜாலம்!! நீங்கள் அவரைக்கொன்றே இருப்பீர்கள்! அவர் இருவரும் பிழைத்தது அவர் புண்ணியமே!!’ என்று மெய்ம்மறந்து கூச்சலிட்டான்.

பிறகு, சினமிகுந்து, ‘மூடர்காள்! உங்களுக்குப் புத்தியில்லையா? நான் அஷ்டகஷ்டங்களும் பட்டுப் பெற்ற என் பிள்ளைகளையா நானே கொலைசெய்யச் சொல்வது!! இது எங்கே யேனும் உண்டா?’ என்று அறைந்தான். உடனே, எல்லோரையும் நிரவிசா

ரித்து ஓலைகள் எல்லாம் பொய்யெனக்கண்டுகொண்டான். ஓலை எழுதினவனை வரவழைத்து, அவனுக்கு மரணதண்டனை விதித்தனன். ஓலைக்கு முதற்காரணமான தனது தாரம் காவ்யாலங்கரையைப் பூமியின் அடியில் ஓர் சுரங்கத்தில் அடைத்தனன், ஆம்; இவளைத் தண்டிக்கவேண்டியதுதான். இவள், நல்லது கெட்டது ஆலோசிக்காமல் பெரும் பொய்யான ஓலைகள் எழுதி, அவ்விருசிறுவரையும் கொலைசெய்ய முயன்றனளன்றோ? கோமகருடன் சென்று அவர்களைக் கொலைசெய்ய முயன்று, திரும்பிவந்த சிற்றரசரை அவரதிகாரத்தினின்று நீக்கி, அவ்வதிகாரத்தைப் பிறர்கட்கே ஈந்தனன் அரசன். எவர்களை எவ்வளவு தண்டித்தால் என்ன? காணுமற்போன பிள்ளைகளோ வரவில்லை. ஆதலால், அரசனும் அவர் தாயும், மிக்க மனவருத்தங்கொண்டு ஏங்கி, அம்பிகையையே சரண''''க நண்ணி, இருந்தனர்.

விந்தியாடவியின் நடுவே கோயில் கொண்ட உமாதேவி, தன்னையே சரணுக வடைந்து அருந்தவம் புரியும் இந்தீவரஸேனனையும் அவன் தம்பியையும் கண்டு, அருள்சுரந்து அவர்கள் கனவிற் தோன்றினள். அயர்ந்து கிடக்கும் இந்தீவரஸேனனுக்குப் பட்டாக்கத்தி ஒன்றை அளித்து, 'குழந்தாய்! இந்தக்கத்தியின் மஹிமையினுல் நீவிர் இருவரும் உங்கள் பகைவர் எல்லோரையும் வெல்லுவீர். மேலும், நீங்கள் வேண்டும் ஸித்திகள் எல்லாம் தடையின்றி உண்டாகும்.' என்று இனிது கூறி மறைந்திட்டனள். இக்கனவு காணவே, திடுக்

கிட்டு விழித்து எழுந்த இந்தீவரஸேனனுக்குத், தன் கையிலிருக்கும் கத்தியைக் காணவே, தான் கண்ட கனவெல்லாம் உண்மை தான் என்று நம்பிக்கை உண்டாயிற்று. உடனே, தன் தம்பியை எழுப்பி நடந்தவற்றை அவனுக்குச் சொன்னான். அவனும் அம்பிகை அருள்புரிந்தனள் எனக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தனன். மறுநாள் சகோதரர் இருவரும் பாரணைசெய்து தமது விரதத்தை முடித்தனர். தேவியைத் தண்டனிட்டு அவளருளால் அடைந்த கத்தியைக் கையில் ஏந்தித் தன் தம்பியுடன் சென்றான் இந்தீவரஸேனன்.

வெகு தூரம் சென்று அங்கோர் மாநகரத்தைக் கண்டான். அது ஓங்கி உயர்ந்த கோலமணி மேடைகளாலும் விமானங்களாலும் கோபுரங்களாலும் அட்டாலங்களாலும் நிறைந்தது. அவை எல்லாம் பொன்னாலமைந்தவை. இவ்வாநந்தக் காட்சியைக் காணவே வியப்படைந்து அது முடிகளையுடைய மஹாமேருவே என்று எண்ணினான். இவ்விதமான வியப்புடன் அந்நகரத்தை அணுகி, அதன் கோட்டைவாசலில் மிக்க பயங்கரமான ராக்ஷஸன் ஒருவனைக் கண்டு திடுக்கிட்டுச், செற்றுத் திகைத்து நின்றான். பிறகு, ‘பெரியவரே! இந்நகரத்திற்குப் பெயர் என்ன? இதன் அரசர் எவர்?’ என்று வினவினன். இம்மொழிகேட்டு அவ்வரக்கன், ‘இதற்குச் சைலபுரம் என்று பெயர். இதன் அரசர் யமதம்ஷ்டர் என்னும் அரக்கர். அவர் பகைவரை எல்லாம் வெல்லும் வலிமையுடைய அரக்கர் கோமான்.’ என்றனன். இவ்வுரைகேட்டு, இந்தீவர

ஸேனன் அவ்வரக்கனை வெல்லக்கருதி நகரத்திற் புகுவோம் என்று முயன்றான். அவ்வரக்கன் அவனுக்குத் தடைசெய்தான்: இந்தீவரஸேனன் அவனைத் தன்கத்தியினால் ஒரேவெட்டாக வெட்டி இரண்டு துண்டாக்கினான். பிறகு, அரசன்மாளிகைக்குள்ளே நுழைந்து பார்த்தான். அங்கு அழகிய கூடத்தில் ஒரு சிங்காதனத்தில் வீற்றிருந்தான் சூரனான யமதம்ஷ்டிரன் என்னும் அரக்கன். பருத்த தலையும் கருத்த முகமும் நெரித்தபுருவமும் சரிந்த உதடும் வெளுத்து நீண்ட பற்களுமாகவிருந்த அவ்வரக்கன் பயங்கரமானவன்தான்: அவனுக்கு இட்ட பெயர் தகுந்ததுதான். அவனது இடதுபுறத்திற் பூங்கொடிபோன்ற பெண் ஒருத்தி நின்றனள். வலது புறத்திற் செற்று வயதுள்ள மாது ஒருத்தி அழகும் அமைதியும் கொண்டு நின்றனள். இந்தீவரஸேனனுக்கு அம்பிகையளித்த கத்தியுள்ளவரையிற் பயமில்லை: ஆதலால், அவ்வரக்கனைப் போர்க்கு அழைத்தனன். அரக்கனும் போரில் மிக்க அவாவுடன் எழுந்தனன். பிறகு, நடந்த கொடும்போரில் இந்தீவரஸேனன் அவ்வரக்கனது தலையை வெட்டினான். வெட்டின தலை மறுபடியும் முளைத்தது. வெகுநேரம்வரையில் வெட்டவெட்ட அவன் தலை முளைப்பதைக்கண்டு வியப்படைந்து திகைத்தனன் கோமகன். அச்சமயத்தில் அவன் அருகில் இருந்த பெண், அவனைக் கண்டதுமுதல் அவன்மீது காதல் கொண்டமையால், அவனுக்குக் குறிப்பு ஒன்று காட்டினள். அதைக்கண்டு ராஜகுமரன் அப்பொழுது வெட்டின தலையை இரண்

டாகப் பிளந்தான். அவனது மாயைக்கு இப்படி வெட்டின் தலையைப் பிளப்பதேதான் எதிரானது. ஆகையால், அவ்வரக்கனது தலை மறுமடியும் முளைக்கவில்லை. இவ்விதமாக அவ்வரக்கன் மரித்ததைக் கண்டு அச்சிறுமியும் அம்மங்கையும் மகிழ்ச்சியடைந்தனர். பிறகு, இந்தீவரஸேனனும் அவன் தம்பியும் இனிதாக ஆதனத்தில் அமர்ந்தனர். இந்தீவர ஸேனன் அவ்விருவரையும் நோக்கிக் கேட்டனன். 'இங்கு காவலன் ஒருவன்தானே இருக்கின்றான். நீங்கள் பெண்கள் இருவர் தனித்திருக்கிறீர்களே! நீங்கள் இருவரும் யாவர்? இவன் மரித்ததைக் கண்டு சந்தோஷப் படுகிறீர்கள். இவ்வரக்கன் யாவான்? நீங்கள் சந்தோஷப்படுவது ஏன்?'

இம்மொழிகேட்டு, அச்சிறுமி சொல்லலாயினள். 'இந்த சைலபுரம் என்னும் நகரத்தில் வீரபுஜன் என்று ஒரு அரசன் இருந்தான். இதோ நிற்கிறாளே இவள் அவ்வரசனது ஒரே மனைவி. இவளது பெயர் மதனதம்ஷ்டிரை. அந்த அரசன் நல்ல சீலமுடையவன். இந்த அரக்கன் மிக்க மாயாவி. இவன் எங்கிருந்தோ வந்து அவ்வரசனைக்கொன்று தின்றனன். அவனது செல்வத்தை எல்லாம் கைப்பற்றிக்கொண்டான். இவள் அழகிற் சிறந்தவளாகையால், இவளை இவ்வரக்கன் விழுங்கவில்லை. பிறகு, தனது மாயையால் இந்நகரத்திற் பொன்மயமான மாளிகைகளை அமைத்து இவளையும் அடியாளாகச் செய்துகொண்டு பகைவரில்லாது பாங்காகத் தன்னிஷ்டப்படி வாழ்ந்தனன். நான் இவ்வரக்கனது தங்கை: என் பெயர் கட்கதம்ஷ்டிரை. தங்களைக்

கண்டவாறே தங்கள்மீது ஆராதகாதற் கொண் டேன். ஆகையாலேதான், இவன் மரித்ததைக் கண்டு இவளும் நானும் சந்தோஷம் அடைந்தோம். ஆர்யபுத்திரா! இதோ அடியேன் என் ஆர்வத்தா லும் அன்பினாலும் உமக்கு ஆட்பட்டேன். என்னை மணஞ் செய்து கொள்ளவேணும்.' என்னும் அவ ளது இன்மொழியைக் கேட்டு மகிழ்ந்து இந்தீவர ஸேனன் அவளை யாங்கே மணஞ் செய்துகொண் டான். இவ்விதமாக அச்சிறுமியை காந்தர்வமாக மணஞ்செய்துகொண்டு அந்நகரிலேயே இருந்தான் இந்தீவரஸேனன். உயிரைக் காப்பாற்ற நள்ளிருளில் ஓடின இந்தீவரஸேனனும் அவன் தம்பியும் உமா தேவியின் அருளால் அரியதோர் கத்தியைப் பெற்று அதன் மஹிமையினால் அவர்கள் வேண் டியவற்றையெல்லாம் அடைந்து சைலபுரத்தில் இனி தாகவிருந்தனர். அக்கத்தியின் அருளால் விசும்பிற் செல்லும் விமானம் ஒன்றையும் பெற்றனர்.

ஒருநாள் இந்தீவரஸேனன் தன் தம்பி அனிச்சா ஸேனனைத் தன்னருகில் அழைத்து, 'அப்பா! செல் வனே! நம் விமானத்தின்மீதேறி நமது ஊருக்குச் சென்று நம்பெற்றோரின் க்ஷேமத்தைக் கண்டு கொண்டு வா.' என்று ஏவினான். உடனே, அனிச்சா ஸேனன் அவ்விமானமேறி விரைவில் தங்களூரான இராவதிநகரஞ் சேர்ந்தான். இவனைக் கண்டவாறே இவனது தாய்தந்தையர் பெரும் மகிழ்ச்சியடைந்த னர். பகற்பொழுதெல்லாம் வெயிலில் வருந்திய சகோரங்களுக்கு வெண்மதியின் நிலவைக்கண்டால் மிக்கவாநந்தமாய் இருக்குமல்லவா? நிழலின் அரு

மை வெயிலில் வெதும்பியவர்க்குத்தான் தெரியும். அனிச்சாஸேனன் ஆர்வத்துடன் அவரடியில் வீழ்ந்து தண்டனிட்டனன். அவரிருவரும் தம் புதல்வனை அழுந்தத் தழுவிக்கொண்டனர்: உச்சிமோந்தனர். அவர் தம் புதல்வனான இந்தீவரஸேனனைக் குறித்து ஆர்வத்துடன் கேட்டதற்கு இளவல் அவன் க்ஷேமமாக விருக்கிறான் என்று இயம்பி அவரது மனத்தைக் குளரச்செய்தான். பிறகு, தன்பெற்றோர்க்குத் தனக்கும் தன் தமயனுக்கும் அரும் துயரம் வந்ததையும் தாம்பட்ட கஷ்டங்களையும் இறுதியில் இன்பமடைந்ததையும் நடந்தபடி எடுத்துரைத்தான். அவர்களும் இப்பெரும் துயரமெல்லாம் அவர்கள் துபாவியான சின்னம்மையால் விளைந்தது என்றனர்.

அரசனும் அரசியும் தம்புதல்வன் வந்தானே என்று ஆநந்தமடைந்தனர். குடிகள் எல்லோரும் நம்மரசர்க்குண்டான அருங்கவலை நீங்கியது என்று சந்தோஷம் அடைந்தனர்: நற்செய்தி கொணர்ந்த அனிச்சாஸேனனைப் போற்றினர். இவ்விதமாகச் சிலகாலம் தன் பெற்றோர்க்கு ஆநந்தமுண்டுபண்ணினான் கோமகன். இளைஞன் அங்கு ஓர் இரவிற் கெட்டகனவு ஒன்று கண்டனன். உடனே, 'அந்தோ! என் அண்ணனுக்கு ஏதோ பெரும் அபாயம் நேரிட்டது!' என்று எண்ணித் திடுக்கிட்டு எழுந்து, சைலபுரத்திற்குப் போகத் தீர்மானித்தான். இங்ஙனம் ஆகவே தன் தந்தையை யணுகி, 'எந்தாய்! நான் சைலபுரத்திற்குப் போகவேணும். என் அண்ணன் இந்தீவரஸேனனையுங்கண்டு, அவனுக்குத் தங்கள் க்ஷேமத்தைச் சொல்லுகிறேன். அவனை

இங்கே அழைத்து வந்து உங்கள் கவலையைத் தீர்க்கின்றேன். எனக்கு விடைதந்தருளவேணும்.' என்று கெஞ்சினுன். தமது செல்வக் குமாரனைக் கர்ண அவா மிக்கக்கொண்ட தாயும் தந்தையும் தடையின்றி விடையளித்தனர். அனிச்சாஸேனன் தாமதமின்றித் தன் விமானத்தின்மீது ஏறிச் சிறிது காலத்திலேயே சைலபுரத்திற்கு ஏகித் தன் மாளிகையினுட் சென்ருன்.

மாளிகையின் முதற்கட்டில் தன்னண்ணன் மதிமயங்கிக் கிடப்பதையும் அவனருகில் மதனதம்ஷ்டிரை கட்கதம்ஷ்டிரை இருவரும் குரல் விட்டுப் புலம்பிக் கொண்டு குந்தியிருப்பதையும் கண்டான். இக்காட்சியைக் கண்டதும், 'அந்தோ! ஈதென்ன!' என்று திகைத்து நின்ருன். இவனைக் கண்டு மதனதம்ஷ்டிரை என்பவள் கட்கதம்ஷ்டிரையைத் திட்டத்தொடங்கினள். ஆகையால், கட்கதம்ஷ்டிரை, நடுங்கி எழுந்து, 'ஐயனே! நீங்கள் ஊருக்குப் போன பிறகு, ஒரு நாள் நான் மஞ்சன மாடுவதற்காக இதோ இருக்கும் ஆற்றிற்குப் போனேன். வெகுநாளாகத் தமது தமயன் மீது காதல் மிகுந்த இவள், அவருடன் கூடி உல்லாஸமாக விருந்தனள். நான் மஞ்சனமாடி விரைவிலேயே மீண்டு வீடு சேர்ந்த பொழுது, இருவரும் உல்லாஸமாக விருக்கக்கண்டேன். உடனே, எனக்குச் சினமுண்டாயிற்று. கோபம் வந்தபடியால் முன் பின் ஆலோசிக்காமல், 'கட்டின பெண்டிரை மறந்து மற்றவளுடன் கூடி கும்மாளமாய் இருக்கிருரே! இதென்ன கொடுமை!' என்பதை மாத்திரம்

கிளைத்துச் சிந்தித்தேன். 'ஆகா! இக்கொண்டாட்டமும் வாழ்வும் அப்பாழான கத்தியாலல்லவோ வந்தவை? இருக்கட்டும்.' என்று எண்ணி, அக்கத்தியை எடுத்து நெருப்பிற் போட்டேன். இவர் அப்பொழுது தூங்கிக்கொண்டிருந்தனர். அனலிலிட்ட கத்தி கருத்து தன்னிறத்தை யிழந்தது: இவரும் இந்நிலையை அடைந்தனர். இதைக்கண்டு, 'ஐயோ நான் பழிபடைத்தேனே!' என்று எனக்கு அரும் துக்க முண்டாயிற்று. இவளுக்கும் என்மீதிற்கோப முண்டாயிற்று. ஆனாலும், எங்களாலாவது ஒன்றுமில்லை எனத்தேர்ந்து, எங்களுயிரை மாய்த்திடச் சித்தமானோம்: அத்தருணத்தில் நீங்கள் வந்தீர்கள், இவ்வளவுதான்:' என்று கண்ணுங்கண்ணீருமாக வியம்பினள். பிறகு, அக்கத்தியைத் தன்மைத்துனன் கையிற்கொடுத்து அவளைத் தரையில் விழ்ந்து தண்டனிட்டு, 'ஐயனே! நான் கொடிய அரக்கியேதான். என் சாதித்தொழில் என்னுயிர் உள்ளவரையில் ஒழியாது. ஆகையால், என் தலையை இக்கத்தியினாலேயே வெட்டி விடுங்கள்.' என்று கெஞ்சினள்.

இவ்வார்வச்சொற் கேட்டு அவளிடமிருந்து அக்கத்தியை வாங்கி, 'ஐயோ! அரும்பாவியானேனே! என்னருயிரான என்னண்ணன் இறந்தான் எனக்கண்டும் கல்லான என் நெஞ்சம் இருபிளவாகப் பிளக்கவில்லையே! இக்கத்தியைக்கொண்டே என்னுயிரையும் மாய்க்கிறேன்.' என்று குரல் விட்டுக் கதறிக் கத்தியையும் இளவல் உயரத்தூக்கினன். இது இங்ஙனம் இருக்க, ஆகாயவாணி ஒன்று எழும்பி, 'ஆகா! ஐயனே! அப்படி செய்யாதே. ராஜ

குமாரனை உன்னண்ணன் சாகவில்லை. தன் கத்தியைக்கனலிற்போட்டதினால் உமாதேவிக்குக் கோபமுண்டாகி இவனுக்கு இந்த மயக்கத்தைஉண்டுபண்ணினாள். இந்த கட்கதம்ஷ்டிரையும் பிழை செய்தவள் அல்லள். இவள், இப்பெண்டிர் இருவர்க்கும் உண்டான சாபம் போகுங்காலம் வந்தமையால்தான், இங்ஙனம்செய்தனள். இவ்விருவரும்உன்னண்ணனுக்கு முன் பிறப்பில் மனைவியர். இதையெல்லாம் நன்னர் அறிந்து, உமாதேவியையே சரணமாக அடைந்திடில், உன்னிஷ்டம் கைகூடும்." என்று இனிது கூறியது. இதனைக்கேட்டு ஆறுதல் அடைந்து தற்கொலை செய்து கொள்வதை நிறுத்தினன் அனிச்சாஸேனன். உடனே, நெருப்பிற் போட்டதனால் நிறமிழந்த அக்கத்தியை எடுத்துக்கொண்டு தன் விமானமேறி விந்தியாடவியிற் குடிகொண்ட அம்மையின் சன்னிதானத்தை அடைந்தான். அங்குச்சென்று ஆர்வத்துடன் அம்மையின் அடியில் விழுந்து தண்டனிட்டு, 'அம்மே! என்னாருயிர்த்தேவே! என்னைக் காத்தருளவேணும். என் சென்னியை நும் சன்னிதானத்திற் பலியாக வளிப்பேன்.' என்று மனமுருகிக் கெஞ்சி, ஆகாரத்தை யகன்று கொடுந்தவம் புரிந்தனன். இவ்விதமாகக் கொடுஞ் சபதஞ் செய்யவே, ஓர் ஆகாயவாக்குக் கிளம்பி, 'குழந்தாய்! வேண்டாம் இந்த ஸாஹஸம். உன் அண்ணன் பிழைத்தெழுவான். உன் கத்தி நின்மலமாகும். உனது பெரும் பக்தியைக் கண்டு மகிழ்ந்தேன்.' என்று அவனுக்கு வரம் அளித்தது. அவன் அவ்வம்மையை மூன்றுதரம் வலம்வந்து தண்டனிட்டனன்.

தெய்வத்தன்மையுள்ள இந்த வாணியைக் கேட்டுத் தன்கத்தியை நோக்கினன்; அது மாசற்று விளங்கியது. உடனே, தனது மனம் போனபடியெல்லாம் செல்லும் தன் விமானத்தின்மீதேறிச் சிறிது நேரத்திலேயே சைலபுரம் போய்ச்சேர்ந்தான் அனிச்சாஸேனன். மாளிகையில் இவன் நுழைந்தவாறே, மயக்கம் தெளிந்து எழுந்தனன் இந்தீவரஸேனன். தன் தமயன் பிழைத்தெழுந்ததைக்கண்டு ஆநந்தபரவசனாகி அவனை ஆர்வத்துடன் கட்டிக்கொண்டனன் இளவல். சற்று நேரத்திற்கெல்லாம் மனம் தெளிந்து அவனடியில் வீழ்ந்து அவன் பாதத்தைத் தழுவிக்கொண்டனன்: இங்ஙனமாகவே, தமது நாயகனைப் பிழைக்கச்செய்தபெரியோனைக்கண்டுஆர்வத்துடன், 'ஐயனே! நும்மருளால் அல்லவா எங்கள் நாதன் பிழைத்தெழுந்தது?' என்று இயம்பி, அம்மாதர் இருவரும் அவனைத் தண்டனிட்டனர். பிறகு, அனிச்சாஸேனன் அண்ணனுக்கு நடந்த செய்திகளைச் சொன்னான். அவனது மொழிகேட்டுத், தனக்கு அப்பேருதவி புரிந்த தன் தம்பியினிடத்தில் மிக்க அன்பும் ஆதரமுங் கொண்டு, அவன் இராவதி நகரத்திற்குச் சென்ற வரலாறு என்னவென்று வினவினான் இந்தீவரஸேனன். அனிச்சாஸேனன், அடிமுதற் றனது யாத்திரையின் வரலாற்றையெல்லாம் இயம்பித்தன் சின்னம்மை தான் இத்துணைத் துயரத்திற்கும் காரணம் என்பதை எடுத்துரைத்துத் தமது பெற்றோர் அவனைக் காணவேணும் என்று கொண்ட பேரவாவையும் அறிவித்தான். உடனே, இந்தீவரஸேனன் தனது கத்தியின் மஹிமையால் மிக்கப்பெரியதோர்

விமானம் ஒன்றைத் தருவித்தான். அதன்மீதிற் தனது தங்கமாளிகையையும் தன் பெண்டிர் இருவரையும் ஏற்றிக்கொண்டு வெகு சீக்கிரத்தில் இராவதி நகரம் போய்ச் சேர்ந்தான். இந்தீவரஸேனன் விமானத்தின்மீது வருவதைக்கண்டு வியந்து நகரத்தவர் அனைவரும் அண்ணார்ந்து பார்த்துநின்றனர். அனைவரும் ஆநந்தக்களிகூற ஆகாயத்தினின்று இறங்கினன் இந்தீவரஸேனன். பிறகு, அரசனது அரண்மனையிற் புகுந்து தன் தாயையும் தந்தையையும் கண்டான்: ஆர்வத்துடன் அவர்களைத் தண்டனிட்டான். தம்மருமைப் புதல்வனைக் காணவே, அவரது கண்களினின்று ஆநந்தநீர் ஆறாகப் பெருகியது. இனி இவ்வுலகில் இவனைக் காண்பதில்லை என்றே எண்ணித் துக்கம்மிகுந்து இருந்தனர் இவனது பெற்றோர். இப்படி துக்கத்தினால் பொசிங்கிய அவர் கண்முன்னே திடீரென்று அவன் வந்து நிற்கவே, அவர்கள், தமது தேகத்தை அவ்விருவரது தேகத்துடன் இனிப்பிரிய வொண்ணாது ஒட்டியே விடக் கருதிக், கெட்டியாய்த் தழுவிக்கொண்டனர். தாயும் தகப்பனும் பிள்ளைகள் இருவரும் வெகுநேரம் ஒரு தூண்போல அசைவற்று நின்றனர். அவர்கள் உடலே உருகிப் பெருகியதுபோல ஆநந்தநீர் பெருகி அவர்கள் பட்ட துக்கத்தீயை அணைத்தது. அவர் அங்கமெல்லாம் சிலிர்த்தது. இறுதியில் அவர் நால்வரும் பெருமூச்சுடன் தனியாகப் பிரிந்து மெய்ம்மறந்து சோர்ந்தனர். சிறிது நேரத்திற்கெல்லாம் தெய்வப்பெண்களைபோல அழகிய மருமகளிர் இருவரும் மாமனையும் மாமியையும் தண்டனிட்டனர். அவ்

விருவரையுங்கண்டு அரசனுக்கும் அரிசிக்கும் ஆநந்தம் மிகப்பெருகியது. இம்மட்டோ! அவன் கொணர்ந்த விமானத்தையும் தங்கமாளிகையையும் கண்டு அவர்க்கு ஆச்சரியமும் உண்டாயிற்று. அரசனும் அரசியுமேயன்றி குடிகள் எல்லோரும் இவ்வற்புதங்களைக் கண்டு ஆராக்களிகூர்ந்து, இவற்றிற்கெல்லாம் காரணமான இந்தீவரஸேனனையும் அவன் தம்பியையும் புகழ்ந்து போற்றிக் கொண்டாடினர்.

இவ்விதமாய்க் கொஞ்சகாலமான பிறகு, ஒரு நாள் தமதுதந்தை பரித்தியாகஸேனனிடத்தில் விடைபெற்று, இந்தீவரஸேனனும் அனிச்சாஸேனனும் மறுபடியும் திக்குவிஜயம் செய்யப் புறப்பட்டனர். இவ்விருவர்களும், அம்பிகையின் அருளாற் கிடைத்த கத்தியின் வலிமையினுற் சென்ற விடமெல்லாம் பூபாலரை முறியடித்து, அவர் காணிக்கையாகவும் கப்பமாகவும் அளித்த முத்துகளையும் பவளங்களையும் மணிமாணிக்கங்களையும் பொன்னையும் பொருளையும் பெரும் பொக்குஷங்களாகக் கைக்கொண்டு, அணிதேர்ப்புரவி யாட்பெரும் படையெல்லாம் பின்படர வகைவகையான வாச்சியங்கள் முழங்கத், தமது நகரத்திற்கு வந்தனர். இப்பெரும் படையால் எழும்பிய புழுதி அப்படைக்கு முன்னே சென்றது. இங்ஙனம் புழுதி சென்றது இந்தீவரஸேனன் வென்ற புவனியே எழுந்து, 'நான்தான் வெற்றிப் பொருள்களில் முதன்மையானது' என்று நடுங்கி நகரத்திற் சென்றதுபோல விருந்தது. தன் செல்வக்குமரர் கும்மாளத்துடன் வருகிருர் என்று கண்டு அரசன் பரித்தியாகஸேனன் அவர்களை எதிர்

கொண்டு சென்றான். அரசன் தன்புதல்வருடன் கூடி யரண்மனைக்குச் சென்றான். அங்கு அதிக ஸங்கமாதேவி தன்புதல்வரைக் கண்டு அடைந்த ஆநந்தத்திற்கு அளவில்லை. முன்நடந்த கதையை எல்லாம் நினைத்து அவ்வாநந்தத்தை ஊகித்திடுமின். இந்தீவரஸேனன் தன்னுடன் வந்த அரசர்க்கும் வீரர்க்கும் அரும்பெரும் பரிசுகள் அளித்தனன். அரசன் அற்றை நாள் ஓர் அற்புதமான பெரும் விழாக் கொண்டாடினான்.

மறுநாள் தான் ஜயித்த புவனியைக் கோமகன் தன் தந்தைக்குக் காணிக்கையாக ஸமர்ப்பித்தான். உடனே, திடீரென்று அவனுக்குத் தன்ஜாதி நினைவுக்குவந்தது. தனது உண்மையான ஜாதி நினைவுக்கு வரவே, அவனுக்கு அரும்பெரும் தூக்கத்தினின்று விழித்தாற்போல விருந்தது. ஆங்கே தன்தந்தையை நோக்கி, 'என் தந்தையே! எனக்கு என்ஜாதி நினைவுக்கு வந்தது. அதை நான் சொல்லுகிறேன்; கேட்கவேணும்' என்றான்.

இமயமலையின் தாழ்வரையில் முக்தாபுரம் என்று ஒருநகரம் உள்ளது. அங்கு முக்தாஸேனன் என்று ஒரு அரசன் உண்டு: அவன் வித்தியாதரர்க்கு இறைவன். அவனது மனைவியின் பெயர் கம்புவதி. அவ்விருவர்க்கும் பிறந்த நற்புதல்வர் இருவர் உண்டு. அவ்விருகுமாரர்களில் ஒருவன் பெயர் பத்மஸேனன்: மற்றவன் பெயர் ரூபஸேனன். பத்மஸேனனது அற்புதமான வடிவழகைக்கண்டு மோஹித்தனள் ஆதித்தியப்பிரபை என்னும் வித்தி

யாதரமாது. ஆகையாற், தானும் பத்மஸேனனைக் கணவனாக அவள் அடைந்தனள். அம்மங்கைக்குத் தோழி ஒருத்தி இருந்தனள்: அவள்பெயர் சந்திராவதி. அவள், தன் தோழி அடைந்த கணவன்மீதே காதல்கொண்டு, அவனையே மணஞ் செய்துகொண்டனள். இங்ஙனம் பத்மஸேனனுக்குப் பெண்டிர் இருவர் ஆயினர். இவர் இருவரும் அவனுடன் இனிதாக விருக்கமாட்டாமல் எப்பொழுதும் பொறாமை கொண்டு கலஹம்செய்தனர். அவனுக்கு இல்லறவாழ்க்கையிற் சிறிதும் சுகமில்லாமற் போயிற்று. ஐயா! களத்திரம் இரண்டானால் அப்பாவிக்குச் சுகமில்லை. ஆகையால், அவன், 'போதும் போதும், இத்துன்பம்: இது வீடல்ல: சுடுகாடு.' என்று வெருண்டு வீட்டை விட்டுத் தவம் புரியக் காட்டுக்குச் செல்ல நினைத்தான். ஆகையால், தன் தந்தை முக்தாஸேனனது விடைகோரினான். தந்தை தன்னாலியன்றமட்டில் அவனைத் தடுக்க முயன்றான். பிள்ளை தன் பிடிவாதத்தை விடாதது கண்டு சினம் மிகுந்து, 'துஷ்டா! நீ கானகம் போவதினாற் பயனென்ன? பூலோகத்திற்குப் போ. இதோ! உன்னருகில் இருக்கிற ஆதித்தியப்பிரபை; உனது மனைவி: சண்டைக்காரி; இவளும் அங்கே உன்னுடனே வருவாள். இவளது கொடுந்தொழிலிற்கு இசைந்தபடி ராக்ஷஸியாகப் பிறப்பாள். இன்னும் ஒருத்தி, இதோ இருக்கிறாளே, ராஜகுமரி, உனக்கு இஷ்டமான காதலி! இவள், என்ன? இலேசானவளா? இவளும் உன்னுடன் அங்கேயே வருவாள். உனக்கே பெண்டிர் ஆவாள். உன் தம்பி ரூபஸேனனுக்கு உன்னிடத்தில் ஆராத

அன்பு உண்டு. என்னிடத்திற்கூட அவ்வளவு அன்பு இல்லை. இவனும் உனக்குத் தம்பியாகவே உன்னுடனே வருவான். இரண்டு களத்திரங்களினால் உண்டாகும் துக்கத்தை நீ நிலவுலகிலும் சிறிது அடைவாய்.' என்று அறைந்து என்னைச் சபித்தனர். நான் அதன் முடிவைக் கூறவேணும் என்று கெஞ்சவே, 'அப்பா! நீ ஒரு ராஜாவுக்குப் புதல்வனாகப் பிறப்பாய். நீ புவனியெல்லாம் வென்று உன் தந்தைக்கு அளிப்பாய். அளித்தவுடனே, உனக்கு உன் ஜாதி நினைவுக்கு வரும். இவ்விதமாக உன் சாபம் நீங்கும். நீயும் இவர்களும் உங்கள் இயற்கையான சரீரத்தை அடைவீர்கள்.' என்று எனது பிதா அருள்கூர்ந்து உரைத்தனர். இவ்விதமான சாபத்தைப் பெற்று பத்மஸேனனும் மற்றவரும் மானிடவர்கள் ஆனார்கள். என் தந்தையே! நான் தான் அந்த பத்மஸேனன் என்பவன்: தங்களுக்குப் புதல்வனானேன். நான், இந்தீவரஸேனன் என்று பெயர் பூண்டு, நான் செய்யவேண்டியவற்றையெல்லாம் செய்தேன். இன்னும் ஒருவன் வித்தியாதர குமாரன் என்று சொன்னேனே: அவன் தான் இவன். அப்பொழுது ரூபஸேனன் என்று பெயர் பூண்டு, என் தம்பியாக விருந்தான்: இப்பிறவியில், அனிச்சாஸேனனாகி என் தம்பியாகவே யிருந்து, தன் கடன்களைக் கழித்தனன். எனக்கு முன் சன்மத்தில் ஆதித்தியப்பிரபை சந்திராவதி என்று இரண்டு தாரங்கள்: இதோ நிற்கிற கட்கதம்ஷ்டிரை மதனதம்ஷ்டிரை என்னும் இருவரும் அவ்விருவரேதான். ஐயனே! எங்கள் சாபம் முடிந்தது: நாங்கள் எங்க

ளுக்குரிய வித்தியாதரப்பதவியை யடைகிறோம்.' என்று இயம்பினான்.

உடனே, அவனும் அவன் தாரங்களும் அவன் தம்பியும், தங்கள் மனித உருவத்தை விட்டு, விசும்பிற் செல்லும் வித்தியாதரற்குரிய அமானுஷமான வுருங்கள் பூண்டனர்: எல்லோரும் விசும்பில் எழும்பி நின்றனர். அப்பொழுது பத்மஸேனன் இந்நிலவுலகிற் றனது பெற்றோர்களாக விருந்தவரை நமஸ்கரித்துத் தன் பெண்டிர் இருவரையும் மடியில்வைத்து தன் தம்பியுடன்கூட வித்தியாதரர்நகரஞ் சேர்ந்தான். அங்குச் சென்று தன் தாய்தந்தையரை மகிழச் செய்தான். பத்மஸேனனும் அவன் தம்பி ரூபஸேனனும் அவர்களது தாயின் கண்ணிற்கு ஓர் இன்னமுதாய்த் தோன்றினர். பத்மஸேனனது மனைவி ஆதித்தியப்பிரபை சந்திராவதியின்மீது பொறாமைகொண்டு போராடுவதை மறந்தே யொழிந்தனள். அதனால் பத்மஸேனன் பட்ட துன்பமெல்லாம் துலைந்தது.

இவ்வினிய கதையைச் சொல்லி கோமுகன் இளவரசனுக்கு வழியில் இன்பமுண்டாகும்படி செய்து, 'இறைவனே! இவ்விதமாய் மஹானானவர்க்கு துன்பங்கள் உண்டாகும். அத்துன்பங்கள் துலைந்து பெரும் வெற்றியுண்டாகும். புல்லியர்க்குத் துன்பமும் இல்லை; வெற்றியுமில்லை. தாங்களோ, ரத்நப்பிரபையின் வித்தியாசக்தியால் உதவி பெற்றுக் கற்பூரிகை என்னும் கோமகளை எளிதில் அடைவீர்கள்.' என்று இனிது கூறினன்.

---

எப்பொழுதும் இனிது கூறும் கோமுகனது இனிய கதையையும் இன்சொல்லையும் நரவாஹனதத்தன் கேட்டு மகிழ்வெய்தி வழிநடக்கும் விடாயைத் தீரமறந்தனன். இறுதியில் மாலைப்பொழுதில் இருவரும் ஒரு பெரிய நீர் ஓடையை அடைந்தனர். அது ஒரு தெள்ளுநீர் ஓடை: மிகவாழமானது. அதன் கரைகளில் தேமாமரங்களும் பிலாமரங்களும் மாதலைமரங்களும் அடர்ந்திருந்தன. அங்கு அன்னங்கள் அலாக்கள் காரண்டவங்கள் முதலான நீர்ப்பறவைகள் கூட்டங் கூட்டங்களாகக் கூடிக் கும்மாளத்துடன் கூவின. அவ்வோடையில் எங்கும் தாமரையும் அல்லியும் ஆம்பலும் நீலோற்பலமும் செங்கழுனியும் காயாவும் படர்ந்து அலர்ந்து பூத்திருந்தன. அதன் நான்கு புரத்திலும் புள்ளுரையும் சோலைகளடர்ந்த குன்றுகள் இருந்தன. அது அங்கங்களையும் ஐம்புலன்களையும் குளிரச் செய்யும் நன்பொழில்: இருவரும் அந்நீரோடையில் மஞ்சனமாடினர். பார்வதியின் பதியான பெருமானைப் பக்தியுடன் பூசித்தனர். அங்குள்ள நறுமணமுள்ள இனிய பழங்களை உண்டனர்: அவ்வினிய வாசமுள்ள தெள்ளிய தண்ணீரைப் பருகினர். தானும் கோமுகனுமாய்ச் சென்று மெல்லிய துளிர்களைக் கொணர்ந்து ஓர் இனிய பூமரத்தினடியில் பரப்பினன் இளவரசன். அன்று இரவெல்லாம் அச்சயனத்தில் இருவரும் படுத்து அயர்ந்து உரங்கினர். இவ்விதமாக ஈசனருளால் உண்டானவற்றையே பற்றி இன்பமடைந்தனன் வத்ஸராஜனது செல்வப் புதல்வன்.

## ராஜ்யதரன் கதை

மறுநாட் காலையில் எழுந்து தன் மந்திரி கோமுகனை நோக்கி, "நண்பனே! இரவு முடியும் வேளையில் யாரோ ஒருத்தி அணங்குபோன்ற இளம் வனிதை, வெள்ளைக் கலையுடுத்து, என் கனவிற் றோன்றினள். தோன்றியதுமன்றி என்னருகில் வந்து நின்று, 'கவலைப்படாதே. குழந்தாய்! நீ வெகு சீக்கிரத்திற் கடலின் கரையிலுள்ள காட்டின் நடுவே இருக்கும் அற்புதமான ஒரு நகரத்தை அடைவாய். அங்கிருந்து கஷ்டம் திளையளவேனும் இல்லாமலே கற்பூரபுரத்திற்குச் செல்வாய். அந்நகரில் கற்பூரிகை என்னும் ராஜகுமரியையும் எளிதிற் கைக்கொள்வாய்.' என்று இயம்பி மறைந்தனள். நானும் அக்கொடியிலேயே விழித்துக்கொண்டேன்." என்றனன். இவ்வுரை கேட்டுக், கோமுகன் அன்புமிகுந்து, 'இறைவ! தங்களுக்குத் தேவர் எல்லோரும் அருள் அளிக்கின்றனர். தாங்கள் செய்ய வியலாததும் உண்டோ? ஆகையால், தங்களெண்ணம் தடையும் தாமதமுமின்றி எளிதிற் கைகூடும்'. என்று இனிது கூறினன். உடனே, கோமுகனுடன் கூட அங்கிருந்து புறப்பட்டுத் தன்வழியே சென்றான் நரவாஹநதத்தன். வெகு தூரம் விரைந்து சென்று, கடற்கரையில் இருக்கும் ஓர் அருநகரைக் கண்டான். அதில் மலைமலையாக கோபுரங்கள் இருந்தன. அதன் அட்டாலங்கள் தான் எத்துணை? அதைச் சுற்றி இருந்த மதில்கள் தான் எவ்வளவு உன்னதமானவையோ! அதன் உள்ளே ஓங்கியுயர்ந்த மாளிகைகள் தான் எத்துணை? ஒவ்வொன்

றும தங்கமயமானது. இவ்வண்ணம் இருக்கும் அகன்ற அவ்வணி நகர், அரும்பெரும் முடிகளுடன் புவனியின் நடுவே நிற்கும், மாமேருவேதானாய், விளங்கியது.

அதன் உள்ளே புகுந்து அதன் அழகிய கடைவீதியிற் சென்றான். அங்கு மனிதன் ஒருவன்கூட இல்லை. கடையில் நடக்கும் கிரியைகளெல்லாம் கட்டைகளாற் செய்த யந்திரங்களே செய்கின்றன. ஒவ்வொரு கடையிலும் கிட்டங்கியிலும் வியாபாரிகள் உட்கார்ந்து தம தம தொழிற்களைச் செய்கின்றனர். வீதி யெல்லாம் ஆணும் பெண்ணும் சஞ்சரித்தனர்: கடைகளிற் சென்று கொள்வதும் கொடுப்பதுமாய் இருந்தனர். யானங்களும் பரிகளும் இன்னும் அரும்பெரும் அணி நகற்குரிய விதம் விதமான பண்டங்களும் கூட்டங்களுமாகவேதான் அவ்வீதியில் நிறைந்திருந்தன. அவ்வேராளமான கூட்டத்தில் பிரமன் படைத்தது ஒன்றுமில்லை: எல்லாம் யந்திரங்களேதான். அவை பேச வியலாதாகையால், அக்கடை வீதி சத்தமில்லாமல் அமைதியாக விருந்தது. இதை யெல்லாம் கண்டு இறும்பூதெய்தி, 'ஓகோ! இதென்ன கடைவீதி! ஈதென்ன யந்திரங்கள் !!' என்று எண்ணி, மேன்மேலும் நடந்து சென்று, இளவரசன் தன் நண்பனுடன் அரசனரண்மனையை யடைந்தான்.

அங்கும், எல்லாம் யந்திரங்களாகவேதான் இருந்தன. யந்திரங்களே யானைகளாகவும் குதிரைகளாகவும் நின்றன. அங்கு அரண்மனையிற் திரிந்த சேடியர் எல்லோரும் யந்திரங்களே. 'ஐயோ;

மங்கையர் தான் இப்படியானல், ஆடவர் என்னவோ? பார்ப்போம்.' என்று எண்ணிப் பார்த்தாலோ, போர்ச்சேவகரெல்லோரும் யந்திரங்களே: வாயிற்காவலரும் மனிசன் செய்த யந்திரங்களே! 'ஆகா! ஈதென்னமாயம்!! மாளிகையின் உள்ளேதான் யாராவது மனிசன் உண்டோ?" என்று உள்ளே சென்றுன்.

மாளிகையின் மத்தியில் மண்டபம் ஒன்று இருந்தது. அதன் நடுவில் அழகிய சிங்காஸனம் ஒன்று இருந்தது. உன்னதமான அவ்வாஸனத்தின்மீது இனிதமர்ந்திருந்தான் அற்புதமான புருஷன் ஒருவன். அவனைப்பார்த்தவுடனே, இளவரசனுக்கு, 'ஆமாம்; இவன்தான் இந்தக் கபடநாடகஸூத்திரதாரி' என்று தோன்றியது. இத்துணை யந்திரங்களின் ஸூத்திரமெல்லாம் இவன் கைக்குள்ளேதான் இருந்தது. ஐம்புலன்களையும் ஆட்டிவைக்கும் ஆன்மா உடலின் உள்ளே பதுங்கிக் கிடப்பதுபோல, இவ்வளவு யந்திரங்களையாட்டிவைக்கும் இவன் மாளிகையின் மண்டபத்தின் மத்தியில் அமர்ந்திருந்தனன். அவனை நோக்குங்கால், எண்ணிறந்த இவ்விந்தைகளெல்லாம் படைக்கும் திறமையுடைய தீரன்தான் இவன் என்றேதெளிவுறத்தெரியும். இங்ஙனம்வீற்றிருந்த இவன், தன்னருகில் வரும் இளவரசனை நோக்கி அவனது அற்புதமான வடிவழகைக் கொண்டு அவன் தகுந்த கனவான் என்று உணர்ந்து, எழுந்து மரியாதையாய் நல்வரவு கூறித் தன்னிடத்தில் வீற்றிருக்கச் செய்தான். இங்ஙனம் செய்து, அவனது

எதிரில் உட்கார்ந்து ஆர்வத்துடன், 'ஐயனே! தாங்கள் யாவர்? இதுவோ மனிசரில்லாத தேசம்: இங்கு வந்து தாங்கள் ஊன்வாட அலேவதற்குக் காரணம் என்ன? தங்களுக்கோ இதோ இவரைத் தவிர உதவி யாவரையும் காணேமே!' என்று அமர்ந்த இனிய குரலுடன் வினவினன். இவன் அற்புதமானவன்: ஆனாலும், இவன் மிகப்பணிவுடன் கேட்பதைக் கண்டு மனந்தெளிந்து, நரவாஹனதத்தன் தன் வரலாற்றையெல்லாம் சொல்லி, 'நீயார்? இதென்ன ஆச்சரியமான பட்டணம்!' என்று வினவினன்.'

உடனே, அவன் தன்வரலாற்றைப் பின்வருமாறு கூறினன்.

காஞ்சி என்று ஓர் அணி நகர் உண்டு. அது மிகப்பெரியது. அது அருநகருக்குரிய குணங்கள் எல்லாம் உடையது. இப்புவனி என்னும் மாதுக்கு அது காஞ்சியேதான். அந்நகர்க்கு அங்குள்ள சான்றோரே சிறந்த அணிகளாவார். அந்நகரில் அரசன் ஒருவன் இருக்கின்றான். அவன் பெயர் பாஹுபலன்: அவன்புகழ் உலகெல்லாம் பரவியது: அப்பெயர் அவனுக்கே தகும். அவன்பொக்குஷத்திலுள்ள லக்ஷ்மி நிலேயில்லாதவளே யானலும், அவன் தன் புயவலிமையாற்பெற்ற லக்ஷ்மி ஒரு நாளும் அவனைவிட்டு அகலாள். அவனது ராஜ்ஜியத்திலிருக்கும் தச்சர்களேதான் நானும் என்னண்ணனும். அஸுரத்தச்சனை மயன் கண்டறிந்த மரவேலேகள் சிற்பங்கள் யந்திரசாஸ்திரங்கள் இவையனைத்திலும் நாங்கள் சிறந்த தேற்சியுள்ளவர்கள். பிரபுவே! என் தமயன் பிராணத்ரன்

என்பவன். அவன் விலைமாதரின் வலையிற்சிக்கின வன்: அதுவேதான் அவனுக்கு வந்த கேடு. நான் இளையவன்: என்பெயர் ராஜ்யதரன்.

விலைமாதின் வலையிற்சிக்கின என்னண்ணன் எங்கள் தந்தையின் சொத்தையெல்லாம் செலவிட்டான். தான் சம்பாதித்ததையும் இழந்தான். 'ஐயோ! கூடப்பிறந்தவன் குடி யிழந்தானே!' என்று மனமுருகி, நான் என்பணத்தையும் அவனுக்கு ஈந்தேன்: அதுவும் போனவழி தெரியாமற் போயிற்று. அவனது செல்வம் அழியவே, அவனுக்கு வேசிமேலாசை மிக மிருந்தது. அவளோ பணமில்லாதவனைப் பிணமாக எண்ணினள். அவள் பொருட்டுப் பணம் சம்பாதிக்க ஒரு ஸூத்திரயந்திரம் செய்தான். அதன் நுனியில் மரத்தாற் செய்த இரண்டு அன்னங்கள் இருந்தன. இவ்வன்னங்களை இரவில் அவன் வெளியில் விடுவான். ஸூத்திரம் அவன்கையில் இருக்கும். அவை இரண்டும் பறந்துசென்று சாலகத்தின் வழியாக பொக்குஷத்தின் உள்ளே நுழையும். உள்ளே இருக்கும் பெட்டிகளை ஒவ்வொன்றும் தனது மூக்கினாற் றிறக்கும். திறந்து பெட்டியினுள்ளிருக்கும் விலையில்லாத அணிகளை மூக்கினாற் தூக்கிக்கொண்டு திரும்பிவரும். ஒவ்வொரு இரவும் இவ்விதமாக இரண்டு அன்னங்களும் அணிகளைக் கொள்ளையிட்டுக் கொண்டு வந்தன. இந்த அணிகளை விற்று என்னண்ணனும் விலைமாதும் தங்கள் இஷ்டப்படி வாழ்ந்தனர். இரவிற் திருடுவதும் பகலிற் செலவிடுவதுமாகவே வெகு காலம் கழிந்தது. நான் அதைக் கண்டு என்னண்ணனுக்கு, 'அப்பா! வேண்டா

மடா. வேசியர் நேசம் பொல்லாதடா. திருட்டுத் தொழில் நல்லதல்லடா. பலநாளைத்திருடன் ஒரு நாள் அகப்படுவான். வேண்டாமடா.' என்று என்னால் இயன்றமட்டில் எத்துணையோ தடவைகள் சொல்லியும் பயன்படவில்லை. செவுடன் காதிற் சங் கூதுவதே ஆயிற்று. அவன் தன்னிஷ்டப்படியே செய்தான். ஆசையின் பாசத்தில் அகப்பட்டவனுக்கு மேடுபள்ளம் தெரியுமா?

ஒவ்வொரு நாளும் காலையிற் பொக்குஷத்திற்குள் களவுபோயிருப்பதைக் கண்டு, அப்பொக்குஷக்காவலன் கதவுகளை எல்லாம் பார்ப்பான். அவற்றின் தாட்கள் இட்டபடியே இருந்தன. பொக்குஷத்தில் எலிப்பாழியேனும் கிடையாது. இதை யெல்லாம் கண்டு காவலன் கொஞ்சகாலம் சும்மாவிருந்தான். பிறகு, காவலன் தினந்தோரும் திருட்டுப்போவது அதிகமாவது கண்டு நடுங்கி, நடந்தவற்றையெல்லாம் அரசனிடத்தில் விண்ணப்பஞ் செய்தான்.

அரசன் அக்காவலனையும் பின்னும் சிலரையும் இரவில் பொக்குஷத்திற்குள்ளிருந்து உண்மையை அறியும்படி நியமித்தான். நடுநிசியில் என்னண்ணன் விட்ட இரண்டு அன்னங்களும், தம்பின்னாற் கயிற்றை இழுத்துக்கொண்டு, பொக்குஷத்தின் சாலகத்தில் நுழைந்தன. அவை இரண்டையும் கண்டு, காவலர் சும்மாவிருந்தனர். இப்பறவைகள், தம் பின்னுலிருக்கும் யந்திரத்தினுல் ஏவப்பட்டு, பொக்குஷத்தின் உள்ளிருக்கும் பெட்டிகளைத் துறந்து, அவற்றுள்ளிருந்த அணிகளை மூக்கினுல்

எடுத்துச்செல்லத் தொடங்கின. உடனே அவை இரண்டையும் உறுதியாகப் பிடித்துக்கொண்டனர் காவலர்: அவற்றின் பின்னாலிருந்த கயிற்றை அறுத்துவிட்டனர். கயிறு மாத்திரம் இருந்தால் என்னண்ணன்கதி அதோகதியேதான். அக்காவலாளர்க்கு அவ்யந்திரத்தின் சூழ்ச்சி இன்னதென்று தெரியாது. உடனே, காவலர் அந்த இரண்டு அன்னங்களையும் அரசருக்குக் காட்டக் கையில் எடுத்துச் சென்றனர்.

என்னண்ணன் அன்னங்கள் வருமென்று காத்திருந்தான். திடீரென்று கயிறு தளர்ந்தது. யந்திரம ஒடிந்ததுகண்டு உள்நடுக்கங்கொண்டு என்னிடம் வந்து, 'அப்பா! யந்திரம் ஓய்ந்தது. அறுந்த கயிறோ எங்கேயோ சிக்கிக்கொண்டது. இனி நாம் இங்கிருந்தால், நம் உயிர் போய்விடும்: ஓடியே போவோம். காலையில் அரசனாட்கள் நம்மிருவரையும் திருடர்கள் என்று பிடித்துக்கொள்வார். நாமிருவருந்தானே மாயாயந்திரக்காரர் என்று பிரஸித்தி பெற்றவர். நம்மையே தான் பிடித்துக் கொள்வார். என்னுடையது காற்று யந்திரம் ஒன்று இருக்கிறது தெரியுமா? அதன் தாளை ஒருதரம் அழுத்தினால் எண்ணூறு யோஜனைகள் போகும். அந்த விமானத்தில் ஏறிக்கொண்டு வெகுதூரம் போய்விடுவோம். நமக்குப் பரதேசமென்றால் மாத்திரம் சுகம் ஏது? துன்பமேதான் விளையும்: பாவமே செய்பவனுக்கும் இதமான மதியைக் கேளாதவனுக்கும் சுகமென்பது உண்டோ? பாவமே செய்வதிற் புத்தியைச் செலுத்திய நான்

உன்பேச்சை கேளாமற் போனேனே! அதன் பயன் இவ்வளவாகப் பெருகி, ஒருபாவமும் அறியாத உன்னையும்பிடித்ததே!' என்றுகண்ணும் கண்ணீருமாய் நெஞ்சுருகிச் சொல்லித் தன்குடும்பத்துடன் விசும்பிற்செல்லும் அவ்விமானம் ஏறினன். அவன் என்னுயிருக்கு ஆதாரமான என்னண்ணன். நான், அவன் சொன்னதைக்கேட்டு விமானத்தில் வெகு ஜனங்கள் ஏறியிருப்பதைக் கண்டு, அதன் மீது ஏறவில்லை. பிறகு, அவன் தன் விமானமேறி எங்கேயோ வெகுதூரம் சென்றுன். பிராணத்ரன் தான் அவன் எனக்கு: அவன் சென்ற பிறகு, 'ஐயோ! பொழுதுவிடியவும் அரசனுட்கள்வருவாரே!' என்று அஞ்சி நடுங்கி, என்னிடத்திலிருந்த ஒரு விமானத்திலேறி வெகு சீக்கிரத்தில் இருநூறு யோஜனை தூரம் சென்றேன். பின்னும் அவ்யந்திரத்தையே முடுக்கி இன்னும் இருநூறு யோஜனைகள் வந்தேன். வந்ததிற் சமுத்திரங் கிட்டியது எனக்கண்டு, விமானத்திலிருந்து இறங்கிக் கால்நடையாக நடந்து சூன்னியமாய் இருந்த இந்நகரத்தை அடைந்தேன்.

என் ஐயனே! இந்த மாளிகைக்கு வந்து சேர்ந்தேன். இதில் அரசற்குரிய ஆடையாபரணங்களும் படுக்கைகளும் மற்றும் அங்கங்கள் எல்லாமும் நிறைந்து விளங்கின. அன்று மாலைப்பொழுதில் அரசற்கேயுரிய இங்குள்ளதோட்டத்து வாவியில் நீராடி அங்குள்ள இனிய கனிகளைக்கொண்டே என் உண்டிகழித்து இம்மாளிகையின் நடுவேயுள்ள மெத்தன்ன பஞ்சசயனத்திற் படுத்தேன். ஒன்றியாகப் படுத்திருக்கையில், 'அந்தோ! பாக்கியமெல்

லாம் இருந்து என்ன? இங்கு ஒருவரும் இல்லையே! காலையில் எழுந்து எங்கேயாவது போய் விடுகிறேன். இனி அரசன் என்னைத் தண்டிப்பானோ என்றும் பயஞ் சிறிதும் இல்லையே! என்று எண்ணி விடா யால் அயர்ந்து உறங்கினேன்.

இரவின் முடிவில் தெய்வவுருவான புருஷர் ஒருவர், மயிலின் மீதேறிக், கனவில் என்னை யணுகி, 'குழந்தாய்! நீ இங்கேயே இருக்கக் கடவாய் நீ எங்குஞ் செல்லலாகாது. ஒவ்வொருநாளும் நீ உண் ணும் வேளை வந்தால், நீ இந்நகரத்தின் நடுவே இருக் கும் குன்றின் மீதேறிக் காத்திருக்க வேணும்.' என்று அறைந்து மறைந்து போனார். இவ்வற்புத மான கனவுகண்டு நானும் கண் விழித்துக் கொண் டேன். 'குமரக்கடவுளே தான் இந்தத் தெய்வத் தன்மையுள்ள நகரை அமைத்திருக்க வேணும்: இது உறுதியே தான். நான் முன்பிறப்பிற் பண்ணிய புண்ணியம் ஏதோ இருந்தமையால் தான், அவர் என்கனவிற்றோன்றி எனக்கு இப்பாக்கியம் அளித் தது. பிறகு எழுந்து, நான் இங்கு வசிப்பதினால் எனக்கு மேன்மையே உண்டாகும்.' என்று உறுதி கொண்டேன். பிறகு துயிலெழுந்து எனது காலைக் கடன்களை முடித்து, நான் உண்ணும் வேளைவரவே நகரத்தின் நடுவிலுள்ள மலைமீது சென்றேன். உடனே, என்னெதிரிற் பரப்பியிருந்த பொற்கலங் களில் தயிரும் பாலும் நெய்யும், வெண்ணெயும் கன்னலும் அமுதமுமாய் விழுந்தன; பின்னும் சோறும் நான் என்ன என்ன எண்ணினேனோ அவையெல்லாமும் கிடைத்தன. அதை யெல்லாம்

என்னுசை தீர உண்டு, ஐயனே! என் விடாயும் கவலையும் நீங்கி, நான் மனம் தெளிந்தேன்.

அன்றுமுதல் இன்றுவரையில் இந்நகரத்தி லேயே வாசமாய் இருக்கிறேன். ஒவ்வொரு நாளும் நான் சிந்தித்தவளவிலேயே ராஜபோகங்களெல் லாம் எனக்குக் கிட்டுகின்றன. பெண்டிர் பிள்ளைகள் முதலான பேறுமாத்திரம் நான் என்ன சிந்தித்தா லும் எனக்குக் கிட்டுவதில்லை. ஆகையாலே, எனக்கு வேண்டிய ஜனங்களை யெல்லாம் யந்திரமயமாயே செய்தொழிந்தேன். என் இறையே! இங்கு வந்தது முதல் ஒவ்வொன்ருக ஒரு இராச்சியத்திற்கு வேண் டியவையெல்லாம் செய்தேன். இதை எல்லாம் ஒரு விளையாட்டமாகவேகொண்டு என் விதிவசத்தினுல் எனக்குஉண்டான ராஜ்யதரன் என்னும் பெயரை, ஒருவாறு மெய்யாக்கினேன். பிரபுவே! தாங்கள் இன்றைக்கு இந்நகரத்திலேயே இருந்து விடாய் தீர்த் துக்கொள்ளவேணும். அடியேனும், என்னுல் இய ன்றமட்டில், தொண்டு செய்கின்றேன்.'

இங்ஙனம் இயம்பி அத்தச்சன் இளவரசனையும் கோமுகனையும் அம்மாளிகையின் தோட்டத்துக்குள் அழைத்துச் சென்ருன். இருவரும் அங்குள்ள வாவி யில் நீராடினர்: அதிற் பூத்த கமலங்களையேகொண்டு தளிர்சடையுடைய பெருமானைப் பூசித்தனர். உடனே தச்சன் அவரை ஆகாரம் செய்யநகரத்தின் நடுவே அழைத்துச் சென்ருன். அங்கு அவன் சிந் தித்தவாறே அமுதம் போன்ற பரிசுத்தமான அன் னங்களும் பணியாரங்களும் எங்கிருந்தோ கிடைத் தன. இளவரசனும் கோமுகனும் அவற்றை அவா

வுடன் உண்டனர். பிறகு, மூவரும் அவர் உண்ட விடத்தைச் சுத்தி செய்து தம் கைகளைக் கழுவித் தாம்பூலமும் நவின்றனர். சிறிது நேரத்திற்கெல்லாம் கொஞ்சம் கள்ளும் குடித்தனர். இவ்வண்ணம் நிகழவே, நரவாஹனதத்தன் தான் அந்நகரிற் கண்ட வற்றையெல்லாம் நினைந்து, 'சிந்தாமணி என்று ஒன்று உண்டு. அதுவேண்டியவற்றை யெல்லாம் வெட்டென வளிக்கும் என்று கேட்டது உண்டு. இந்நகரம் ஓர் சிந்தாமணியேதான்.' என்று எண்ணி வியப்பினால் நியானநிலையாக உட்கார்ந் திருந்தான். இரவு வரவும் ராஜ்யதரனது உதவியால் இருவரும் தம் கடன்களையும் உண்டியையும்கழித்து மெத்தன்ன பஞ்சசயனத்தை யடைந்தனர். இளவரசன் கற்பூரிகையை நினைந்து ஏங்கித்தூங்காம லிருப் பதைக் கண்டு, தச்சன் அதற்குக் காரண மென்ன வென்று வினவினான். கோமகன் தனது கதையை இயம்பி அதன் காரணத்தை வெளியிடவே, தச்சன் தன் சயனத்தை விட்டெழுந்து, 'ஐயா! தங்களுக்கு என்ன குறைவு? ஏன் தூங்காது விழித்திருக்க வேணும்? தாங்கள் காதலிக்கும் கட்டழகியைத் தடையும் தாமதமுமின்றி யடைவீர்கள். பெருந் தன்மையுள்ள திருவை லக்ஷ்மியைப்போல வனிதை யும் தானே வந்தடைவாள். இதை நானே என் கண் முன்னேயே கண்டேன். இதனைக் குறித்துக் கதை யொன்று சொல்லுகிறேன்: கேளுங்கள்.' என்று திரமாக வேந்தன்மைந்தனுக்கு ஆறுதல் உண்டாகு மாறு பின்வரும் வரலாற்றை இயம்பினான்.

---

## மானபரையின் கதை

நான் தங்களுக்கு காஞ்சிவேந்தன் பாதுபலன் என்று ஒருவன் இருந்தான் என்று சொன்னேனே; நினைவிருக்கிறதா? அவ்வரசனது மெய்க்காவலன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் அர்த்தலோபன். அவனுக்குப் பொருளினுள்ள பேராசையைக் கண்டே அப்பெயர் அவனுக்கு இடப்பட்டதென்னலாம். அவனது மனையாளின் பெயர் மானபரை; அப்பெயர் அம்மாதுக்கே தகும். அவள் மிக்க வடிவமுள்ளவள். அர்த்தலோபன், தனக்குண்டான பேராசையால், வியாபாரம் செய்யவேணுமென்று நிச்சயித்தான். சரக்குகளையும் பணத்தையும் தன் பணியாளரிடத்தில் ஒப்புவிக்க இஷ்டமில்லாததினால், தன் மனையாளையே வியாபாரஞ் செய்யும்படி கட்டளையிட்டான். அவளுக்கு வியாபாரம் செய்வதில் விருப்பமே இல்லை. ஆனாலும், அவள், கணவன் கட்டளையைச் செய்வதே தனக்குக் கடமை என்று எண்ணி, வணிகருடன் கூடிக் கொள்வதும் விற்பதுமாக விருந்தனள். இவ்வுத்தமியின் அழகையும் இவளது குரலின் இனிமையையும் வாய்மையையும் கண்டு எல்லோரும் இவளிடத்திலேயே வியாபாரம் செய்ய விரும்பினர். ஆகையாற், சிறிது காலத்திலேயே அவள் யானைகள் குதிரைகள் ஆடைகள் அணிகள் முதலான விலையுயர்ந்த சரக்குகள் விற்கத் தொடங்கினள். அவள் கணவன் ஒவ்வொருநாளும் அவளது சரக்குகள் ஒவ்வொன்றும் பெருகுவதைக் கண்டு பெருமகிழ்ச்சியடைந்தான்.

இப்படியிருக்கையில், அவ்வூருக்கு ஒரு வணிகன் வந்தான். அவன் எத்தேயத்தவனோ அத்தேசம் எங்குள்ளதோ ஒருவரும் அறியார். அவன் மிக்க செல்வமுள்ளவன்; அவன் பெயர் ஸுகதனன். அவன் குதிரைகள் முதலானவை விற்பவன். இப்பெரிய வணிகன் வந்தான் எனக் கண்டு, அர்த்தலோபன், 'பெண்ணே! நமது நகரத்திற்கு ஸுகதனன் என்று ஒரு பெரிய வணிகன் தனது சரக்குகளுடன் வந்திருக்கிறான். அவன் தொலை தூரத்திலிருந்து வந்திருக்கிறான், கண்ணே! அவன் இருபது குதிரைத் திட்டுகள் கொண்டு வந்திருக்கிறான். ஒவ்வொரு திட்டிலும் ஆயிரம் குதிரைகள் இருக்கின்றன. சீனதேசத்துப்பட்டு வஸ்திரங்களாம்; இரட்டை இரட்டையாக இருக்கின்றன. அவை என்னவென்று சொல்வேன் நான்! எத்துணை விதமானவையோ? எத்துணை தான் கொண்டு வந்திருக்கிறானோ? எண்ணவே முடியாது! சொல்லத்தான் முடியுமோ? முடியாது. ஆகையால், நீயே போய் நமது பட்டாடைகளிற் பதினாயிரம் கொடுத்துக் குதிரைகளில் ஓராயிரம் வாங்கிக் கொண்டு வா. நீ வந்தவுடனே, நான் நம்முடைய குதிரைகளில் ஆயிரத்தையும் வாங்கின குதிரைகளில் ஐந்தையும் ஓட்டிக்கொண்டு அரசனிடம் சென்று வியாபாரம் செய்கிறேன். என்ன நடக்கிறதோ பார்.' என்று ஆசைபெருகிப் பொழிய இயம்பினன். அவன் பணத்தில் ஆசைகொண்டவன்: அவனுக்கு பாவம் செய்வதில் அச்சம் சிறிதும் இல்லை. ஆகையாற், சொன்னது மாத்திரமல்லாது தனது பெண்டிரை இன்று

னென்று தெரியாத அவ்வணிகனிடத்திற்கு அனுப்பினான்.

என்ன செய்வாள் மானபரை? அவளுக்கு கதி வேறொன்றும் இல்லை: அவ்வணிகனிடம் சென்றாள். அவள் அவனெதிரில் நின்றவாறே, அவன் அவளது அற்புதமான வனப்பைக்கண்டு மோஹங்கொண்டான். ஆயினும், அம்மாதரசி குதிரைகளையும் ஆடைகளையும் கொண்டு அவனுடன் வியாபாரஞ் செய்யத் தன்னால் இயன்றமட்டில் முயன்றனள். அவன், அவளைத் தனியாக வழைத்துச் சென்று, 'என் கண்மணியே! நான் உனக்கு ஒரு துணியாவது குதிரையாவது விலைக்குக் கொடுப்பதில்லை. நீ என்னுடன் ஓர் இரவு கூடியிருந்தால், நூறு குதிரைகளும் ஐந்தாயிரம் ஆடைகளும் தருவேன்'. என்று காமத்தினால் மதியிழந்து தழுதழுத்த குரலுடன் கூறினான். அவனோ செல்வச் செருக்குடையவன். அவளோ வியாபார நிமித்தமாய் எல்லோருடனும் கலந்து கொள்வதும் கொடுப்பதுமாய்த் தடையின்றிக் கிரியைகள் செய்பவள். மடந்தயர் உலக வழக்கிற் தளையின்றிச் சேர்ந்தால் இவ்விதமாகவே நேரும் என்றால் ஒருவரும் விசாரப்படவேண்டியதில்லை. அழகிய மாதர் தளையின்றி வியாபாரங்களில் ஏற்பட்டு மனிதருடன் கூடினால், அவர்கள் மீது ஆடவர்க்கு ஆசையுண்டாவது இயல்பே.

இவ்விதமாய் அவன் சொன்னதைக் கேட்டுத் தனது கணவன் பேராசையினால் தன்னை அனுப்பினான் என்று கண்டு, 'நான் என் கணவனுடைய கட்டளையைப் பெற்று விடை கூறுகிறேன்' என்று

சொல்லி வீட்டிற்குத் திரும்பிச்சென்றாள். சென்று நடந்தவற்றை எல்லாம் தன் கணவனிடம் தெரிவித்தாள். அவன் கணவனல்லன்: அந்தப் பாவி பணத்திற் பேராசைகொண்ட இழிஞன். அவன் தன் மனையாள் சொல்வதைக் கேட்டு, 'என் செல்வி! ஒரு இரவில் ஆடையில் ஆயிரமும் குதிரையில் ஐந்நூறும் கிடைக்குமே யாயின், அதனால் குற்றமொன்றுமில்லை. ஆகையால், நீ இன்று அவனிடத்திற்கே போ. பொழுது விடியவும் சுகமாய்த் திரும்பி வருவாய்.' என்று மானமில்லாது கூறினன். அவனது புன்மொழிகேட்டு அவன் புண்ணியனென்றே அறிந்த அவளது மனத்திற் பெருங் கொழப்பமுண்டாயிற்று. மானத்தையே பிராணனாகக் கொண்ட அம்மாதரசி, 'அதுவும் அப்படியா? பெண்டிரை விற்றுப் பணம் சம்பாதிக்கும் பாவியா இவன்? இவனுக்கு மானம் உண்டோ? சீசீ!! இவன்முகத்தில் முழிக்கலாகாதே! பணத்தையே நினைந்து நினைந்து அதையல்லால் வேறில்லை என்னும் அரும் பாவியே தான் இவன். இவனைவிட, ஒரு இரவுக்கு நூறு குதிரைகளும் ஆயிரம் ஆடைகளும் கொண்டு என்னைக்கொள்ளுமவனே, மிக்க நல்லவன். அவனே பெரியவன்.' என்று ஆலோசித்து இவ்விழிஞனை விட்டால், 'எனக்குக்குற்றம் வராது' என்று உறுதிக்கொண்டு, அவனுணையைப் பெற்று ஸுகதனன்விடுதியை யடைந்தனள். அவள் மீண்டும் தன்னை அணுகினதைக்கண்டு அவளைக் கேட்டான் ஸுகதனன். அவள் தனது உண்மையை உணர்த்தவே, தான்

எண்ணியது நிறைவேறினது கண்டு, ஸுகதனன் தான் மிக்க பாக்கியவானென்று எண்ணினான்.

உடனே அவளது கற்பிற்கு விலையாக ஏற்பட்ட துணிகளையும் குதிரைகளையும் அவளுக்குக் கணவன் என்று பெயர் பூண்ட அப்பாவிக்கு அனுப்பினான். தான்வேண்டிய பெரும்பேறெல்லாம் உருவம் எடுத்து வந்ததாகவே எண்ணினான் ஸுகதனன் மானபரை தன்னை யடைவே. அவளுடன்கூடி அவ்விரவை இனிதாகப் போக்கினான். அர்த்தலோபன் மறுநாட்காலையில் அவளையழைத்து வரும்படி தன்னாட்களை அனுப்பினான். அவன் மானமிழந்த புன்னியன்; ஆணல்லன்; பணத்தில் ஆசை கொண்டபேடியே தான்.

மானபரை, அவன் அனுப்பிய ஆட்களைத் தன்னருகில் அழைத்து, 'ஐயன்மீர்! என்னை அவர் விற்றல்லவோ விட்டார்? நான் பிறர்க்கு விலைப்பட்டேனே! பிறர் மனைவியும் ஆனேனே! அவர்க்கு வெட்கம் சிறிதும் இல்லையே! அவர் அவ்வாறானால் நானும் அப்படியே ஆகவேணுமா? நீங்களே சொல்லுங்கள். இவ்வளவு ஆனபிறகு நான் செய்யக்கூடிய நலம் என்ன? ஆகையால், நீங்கள் திரும்பிப் போங்கள். என்னை விலை கொடுத்து வாங்கின பெருமானே எனக்குக் கணவன்.' என்று அவர்கட்கு மனத்திற்படுமாறு கூறினள். அவர்களும், அவ்வுரை கேட்டு மீண்டும் வீட்டிற்குச் சென்று, அர்த்தலோபனிடம் வரலாற்றைச் சொன்னார்கள். அவ்வாட்கள், செய்திகளைச் சொல்லுங்கால் அவ்விழிஞனது முகத்தைப்பார்க்க இஷ்டமில்லாத

தனல், முகம்வாடித் தலை குனிந்து நின்றனர். இம்மட்டோ! அவ்விழிஞன், பொருளையே பெரியதாகக் கருதிய அப்பாவி, அவளை வலிய விழுத்துவரவேணுமென்று எண்ணங்கொண்டான். அவனருகில் ஹூரபலன் என்று ஒருவன் இருந்தான். அவன் அப்பாவிக்கு நண்பன். அவன் நடந்தவற்றையெல்லாம் நன்குணர்ந்து, ' அப்பா! நண்பனே! அவளை ஸுசகதனனிடத்திலிருந்து உன்னாற் கொண்டுவர முடியாது. அவனோ பருத்த விரன்: அவனெதிரில் உன் வலிமை ஒன்றும் பயன்படாது. இம்மாதோ உன்னை விடுவதில் இஷ்டமுள்ளவள். இவளும் அவனுடன் சேர்ந்தனள். இதனால் அவன் தப்பாமல் மிக்க சூரனாவான். அவனே மிக்க வலிமையுள்ளவன்: அனேகம்பெயர் வீரர் அவனுடன் கூட இருக்கின்றனர். அவன் வலிமையும் தைரியமும் இல்லாமலா எங்கிருந்தோ இங்கு வந்திருக்கிறான்?. நீயோ, உனக்குண்டான ஆசையால், உன் பெண்டிரை விற்றவன். அவள் உன்னைவிட்டு அகன்றனள். உனக்கு மானக்கேடு வந்திருக்கின்றது. உனக்கு இவ்விஷயத்தில் உர்ச்சாகம் உண்டாகாது. ஊரார் உன்னை இகழ்வர்: நீ பலமில்லாத பேடி: உனக்கோ வலிமையில்லை: நண்பரும் இல்லை. இப்படி யிருக்க, நீ உனது பெரும் பகையாளியை வெல்லுவது எப்படி? இம்மட்டோ? 'நீ பணத்திற்குப் பெண்டிரை விற்றாய்! அரும் பாவஞ் செய்தாய்' என்று நம்மரசர்க்குத் தெரிந்தால், அவருக்குக் கோப முண்டாகும். இதை எல்லாம் ஓர்ந்துணர்ந்து நீ சும்மாவிருப்பதே நலம். இதற்குமேல் ஏதேனும்

செய்தாயேல், பழிக்கும் பரிகாசத்திற்கும் இடனு வாய்.' என்று மதி கூறினன். காலம் குருகும் போது நண்பரின் நல்வார்த்தை நெஞ்சத்திற் படாது என்று பெரியோர் சொல்வது வீணல்ல. தன் நண்பன் சொன்ன நன்மதியைச் சிறிதும் கேளாது கோபத்திற்கே ஆளாகித் தன்னாட்களைக் கூட்டிக்கொண்டு விரைந்து சென்று ஸுகதனனது வீட்டை முற்றுகை யிட்டுத் தகைந்தான். உடனே, ஸுகதனனுடைய படையும் அவனது நண்பரும் அவர்களது படைகளும் அவ்வீட்டிலிருந்து வெளிப்பட்டு அர்த்தலோபனது ஆட்களை முறியடித்தனர்.

அர்த்தலோபன், ஒரு நொடியிற் றனது முயற்சி யெல்லாம் முறிந்ததைக்கண்டு அங்கிருந்து ஓடி, அரசனை அணுகினன். அரசனடியில் வீழ்ந்து தண்டனிட்டு, 'ஆண்டவனே! என் மனையாளை ஸுகதனன் என்னும் வணிகன் அபகரித்துப் போனன்.' என்று முறையிட்டான். தான் செய்த தீயதொழிலைச் சொல்லாது மறைத்தான். தனது செங்கோன்மைக்குத் தவறு வருமே என்பதை எண்ணிக் கோபம்கொண்டு, அரசன் அவ்வணிகன் ஸுகதனனுடன் போர்புரிய முயன்றன். அப்பொழுது, ஸந்தானன் என்னும் மந்திரி ஒருவன் அரசனை நோக்கி, 'இறைவனே! அவ்வணிகனை எதோ பண்ணி வெல்லமுடியாது. அவன் ஒருவனல்ல: அவனுடன் அவன்நண்பர் பதினொரு பெயர் வந்திருக்கின்றனர். அவனிடத்திற் சிறந்த பரிகள் மாத்திரம் ஒரு இலக்ஷத்திற்கு அதிகமாகவே

இருக்கின்றன. இவன் இட்ட முறையின் உண்மையைத் தேவரீர் விசாரிக்கவில்லை. திடீரென்று காரணமில்லாமல் இப்பெரும் பழி பிறக்காது. ஆகையால், ஒரு தூதனை யனுப்பி அவன் பிதற்றுவது தான் என்னவென்று கண்டுகொள்ள வேணும்.' என்று விண்ணப்பித்தனன். மந்திரியினுரை கேட்டு, பாகுபலன், தூதுவனை அழைத்து, 'இதனுண்மையைக் கண்டு வா.' என்று கட்டளை யிட்டான். தூதன், அரசனுக்கு இணங்கி வணிகனிடம் சென்று வரலாறு என்னவென்று கேட்டான். அவ்வினவுக்கு ஸுகதனன் விடையளிக்கு முன்னமே, மானபரை தூதுவனுக்குத் தன்வரலாற்றை யெல்லாம் நடந்தபடி இயம்பினள். தூதுவன், திரும்பிச் சென்று, நடந்ததை அரசர்க்கு இயம்பினன். அவ்விந்தையைக் கேட்டு வியப்படைந்தான் அரசன். பிறகு வேந்தன், 'அவளது வடிவழகுதான் என்னவோ!' என்று எண்ணி, அர்த்தலோபனை அழைத்துக்கொண்டு ஸுகதனன் இருந்தவிடத்திற்குச் சென்றான்.

அரசன் தன்வீட்டிற்குவந்தான் என்று கண்டு, தரையில் வீழ்ந்து தண்டனிட்டான் ஸுகதனன். அரசன் அவனருகில் நின்ற மானபரையை நோக்கினன். அவள் இம்மண்ணுலகிலுள்ள மாதல்லள்: அணங்கேதான். அவளைப் பார்த்து அரசனுக்குண்டான வியப்பு இவ்வளவென்று சொல்ல முடியாது. அவள் அரசனைத் தண்டனிட்டனள். அவளை அரசன் கேட்டவாறே, அவள், அர்த்தலோபன் அங்கு இருந்ததை எண்ணாது, தன் வர

லாற்றையெல்லாம் உள்ளபடி இயம்பினள். அம்மாதின் மொழிகேட்டுத் திடுக்கிட்டுத் திகைத்தான் வேந்தன். பிறகு, சிந்தித்து அர்த்தலோபன் வாய்திறவாது மௌனமாக நிற்பதையும் கண்டு, அவள் சொல்வது உண்மை என்று உணர்ந்து, அரசன் அவளைநோக்கி, 'இனி நடக்கவேண்டியது என்ன?' என்று வினவினான். உடனே அவள் தன் மனத்திலோர் உறுதிகொண்டு, 'பிரபுவே! என்னைக் கட்டிய கணவன் என்னைக் காசுக்குவிற்றுவிட்டான். பிராணநாயகியைப் பிறர்க்கு விற்றபாவி இவன். பலமில்லாத பேடியேதான் இவன்: பேராசைக் கொண்டவன்: பணப்பேய் பிடித்தவன். இவனை நான்மீண்டும் அடைவது எப்படி?' என்றனள். இவ்வுரைகேட்டு அரசன், 'நன்னாரே சொன்னாய்.' என்று அவளுக்கு முகமன் கூறினான். இதையெல்லாம் கண்டு கல்லைபோலநின்ற அர்த்தலோபனுக்கு பெண் பொன் இவற்றின்மீது ஆசையும், வெட்கமும், மிகுந்தன. இவற்றால் மதியிழந்து, 'இறையே! இந்த ஸுகதனனும் நானும் படையின்றித் தனியாகப் போர்செய்ய வேணும். எங்கள் படைகளும் போர்செய்யவேணும்' என்று விண்ணப்பஞ்செய்தான். அதுகேட்டு ஸுகதனன், 'ஆனால், நாங்கள் இருவரும் போர்செய்கிறோம். எங்களது படைகள் போர்செய்ய வேண்டியதில்லை. போரில் வெற்றியடையுமவனே மானபரையை மனையாளாக அடைவான்.' என்றான். அரசன் இச்சொல்லுக்கு இணங்கவே, மானபரையின் கண்முன்னேயே இருவரும் பரிகளின் மீதேறிப் போர்களத்தை யடைந்தனர்.

உடனே, இருவரும் கொடும்போர் புரிந்தனர். அப்போரில் ஸுகதனன் அர்த்தலோபனைத் தரையில் வீழ்த்தினன். ஸுகதனன், நெறி தவறாது போர் செய்வானாதலால், அவனைக் கொல்லாது விட்டனன். மானமிழந்து தோல்வி யடைந்ததையும் எண்ணாது அர்த்தலோபன் மூன்று தடவைகள் அவனைத் தகைத்தான். இறுதியில் அர்த்தலோபனது குதிரை கீழே விழுந்து மாண்டது. ஸுகதனன் அவனைத் தன் வாளால் வெட்டினான். கைகால்கள் அசையாது தரையிற் கிடந்த அர்த்தலோபனை அவனது ஆட்கள் எடுத்துச் சென்றனர். பிறகு, அரசன் பாகுபலன், ஸுகதனனை புகழ்ந்துகொண்டாடி, அவனுக்குச் சிறந்த பரிசுகளும் அளித்தான். ஸுகதனன் அர்த்தலோபனுக்கு கொடுத்த பொருளை மீண்டும் அவனுக்கே அளித்தனன். அரசன் அர்த்தலோபன் அநியாயமாகச் சேர்த்த செல்வத்தை யெல்லாம் தன் பொக்கிஷத்திற் சேர்த்தனன். அவனுடைய வேலைக்கும் மற்றொருவனை நியமித்தனன். அரசன், இவ்வளவு செய்து மனத்திற் கவலைநீங்கி, மாளிகைக்குத் திரும்பிச்சென்றான். துஷ்டரைக்கண்டால், தூரவிலகவேண்டும். அவர்களுடன் உண்டான பற்றைத் திரவொழித்தால் அல்லது சான்றோர்க்கு மனத்திற் சாந்தி உண்டாகாது. மானபரையைத் தன் மனையாளாக அடைந்து போரிற் தன்பகைவனை வென்று பெரும்சுகம் எய்தினன் ஸுகதனன்.

இவ்விதமாய் மாதரும் செல்வமும் கையினாலாகாத இழிஞரை விட்டு நழுவி தைரியமும் நன்னெறியுமுள்ள பெருமானை நாடுவது நிச்சயமே.

ஆகையால், 'இறைவனே! தங்களுக்குச் சிந்தை சிறிதும் வேண்டாம். சுகமாக நித்திரைசெய்க. அவ்வேந்தர்மகள் கற்பூரிகையைத் தாங்கள் தாமதமின்றி எளிதில் அடைவீர்கள்' என்றான் ராஜ்யதரன். தச்சன் சொன்ன இவ்வினிய மொழிகேட்டு இளவரசன் நித்திரை செய்தான். கோமகன் கவலை நீங்கியது கண்டு கோமுகனும் உறங்கலாயினன்.

---

## நரவாஹனதத்தன் கற்பூரஸம்பவம் சேர்தல்.

மறுநாட்காலையில் எழுந்து கடன்களை முடித்து, உண்டியும் கழித்தான் கோமகன். அப்போது, மதிசேர் கோமுகன், ராஜ்யதரனை நோக்கி, 'அப்பா! ஒரு விமானஞ்செய். என்னிறைவர், அதன் மீது ஏறிக் கற்பூரஸம்பவத்திற்குச் சென்று, அம்மாதை மணம்புரியவேண்டும்' என்றான். மந்திரியின் இவ்வுரைகேட்டுத், தான் முன்னறசெய்த விமானத்தை அத்தச்சன் நரவாஹநதத்தனுக்கு ஈந்தனன். மனத்தைப்போல விரைவாக விசும்பிற் செல்லும் அவ்விமானத்தின்மீது தன் நண்பன் கோமுகனுடன் ஏறிக்கொண்டு அலைகடலை அரைநொடியிற் றாண்டிக் கற்பூரஸம்பவமென்னும் மாநகரை அடைந்தான் நரவாஹனதத்தன்.

அங்குச் சென்று இருவரும் பூமியிலிறங்கி அந்நகரிற் றம்மிஷ்டப்படி திரிந்தனர். வழியில் எதிர்ப்பட்டவர்களிடமிருந்து அதுதான் தாம் தேடிவந்த நகரம் என்று கண்டு மகிழ்ந்து, இருவரும் அரசனது அரண்மனைக்குட் சென்றனர். அங்கு ஓர் அழகிய

வீடு புலப்பட்டது. அதில் ஒரேகிழவிதான் குடியிருந் தனள். அன்றிரவில் அவ்வீட்டிற் தங்கியிருக்கக் கருதினர். அவ்வீட்டில் இருவரும் நுழைந்து தாம் வந்த காரியத்தை இயம்பவே, அவ்வம்மையும் மிக் கப்பணிவுடன், 'அப்படியே சரி' என்றனள். உள்ளே சென்று சிறிது நேரத்திற்கெல்லாம் மேல் நடக்க வேண்டியதற்கு வகையைக் காணக்கருதி, 'அம்மே! இத்தேசத்து மன்னவனது மகளுக்குப், பெயர் என்ன? அவளது வடிவழகு எவ்விதமானது? நாங்கள் இருவரும் விதேசிகள், எங்களுக்குச் சொல்லவேணும்' என்று கேட்டான் இளவரசன். உடனே, அக்கிழவி அவனது இனிய குரலைக்கேட்டு அவனது தெய்வத்தன்மையுள்ள வடிவழகையும் கண்டு, 'இறைவனே! அடியாள் சொல்லுவதைக் கேட்டருளவேண்டும். எல்லாவற்றையும் சொல்லுகி றேன்'. என்று இயம்பிப் பின்வருமாறு சொல்ல லானள்.

' இந்நகரம் கற்பூரஸம்பவம் என்பது. எங்கள் அர சர்க்குக் கற்பூரகன் என்று பெயர். அவராயுளில் வெகுகாலம் மக்களில்லாமற் கழிந்தது. அவர் தன் தேவி புத்திகாரியையுடன் கூடிச் சங்கரனைக் குறித் துக் கொடுந்தவம் புரிந்தார். மூன்று நாளைக்கு உப வாஸம் செய்து ஏங்கிக்கிடந்த அவர்மீதில் அர னுக்கு அருள் சுரந்தது. ஆகையால், அரன், அரச ருக்குக் கனவிற் தோன்றி, 'அரசே! எழுந்திடும். உமக்கு மகனைக்காட்டிலும் சிறந்தமகள் ஒருத்தி உண்டாவள். அவளது கணவன் வித்தியாதரர்க்கு அதிபதியாவான்.' என்று கட்டளை இட்டார்

உடனே, எழுந்து முகமலர்ச்சியுடன் தான் கண்ட கனவை அரசிக்கு உரைத்தனர் எங்கள் அரசர். பிறகு, இருவரும் மிக்கக் களிப்புடன் பாரணை செய்தனர். பிறகு கொஞ்ச காலத்தில் அரசி கருக்கொண்டனள். நல்ல தோர்நாளில் சுந்தரியைப் பெற்றனள். எம்மரசி அம்மகளின் மாட்சிமையால் அவள் பிறந்த கூடத்திலுள்ள விளக்குகள் எல்லாம் ஒளியிழந்தன. மக்கட்பேறு இல்லாது ஏங்கிக் கிடந்த அரசர், தனக்கு இவ்வணங்கு பிறக்கவே, மகிழ்ச்சிகொண்டு பெரும் விழா ஒன்று கொண்டாடினர். தானே தான் தன் புதல்வி என்று எண்ணி அவளுக்குக் கற்பூரிகை என்று பெயரும் இட்டார். அப்பெண் நாளொரு மேனியும் பொழுது ஒருவண்ணமுமாக வளர்ந்தனள். அவளது இன் முகத்தைக் கண்ட நகரத்தோர், முழுமதியைக் கண்டவாறே, ஆநந்தித்தனர். இப்பொழுது அவளுக்கு நல்ல யௌவனம் வந்தது. எங்கள் அரசரான அவளது தந்தை அவளுக்கு வதுவை செய்ய வேணுமென்று ஆசைப்படுகின்றார். அவளுக்கோ புருஷர் என்றால் வெருப்பாக விருக்கிறது. அவள் மிக்கப்பிடிவாதமுள்ளவள்: அறிவுள்ளவள். அவளுக்குவதுவைவேண்டாமென்றே தோற்றுகின்றது. என் மகள் ஒருத்தி இருக்கிறாள்: இவள் அவளுக்கு நேசமுள்ள தோழி. 'என்னடி! பெண்ணாய்ப் பிறந்து புருஷனைத்தேடி மணம் செய்து கொள்ளாமற் போனால், பிறந்ததற்குத்தான் பயன் என்ன?' என்று இவள் அவளைக் கேட்டாளாம். அதற்கு அவள் பின்வருமாறு மறுமொழி சொன்னாளாம்.

'அம்மா! நான் ஊரார் எல்லோரையும் போன்றவள் அல்ல. எனக்கு எனது முன்ஜன்மம் இன்ன தென்று செவ்வனே தெரியும். நான் புருஷரை இகழ்வதற்குக் காரணமுண்டு, அது முன்ஜன்மத்தில் நடந்தது: சொல்லுகிறேன் கேள்.

---

## கற்பூரிகையின் முன்ஜன்மம்.

கடலின் கரையிற் பெரிய சந்தனமரம் ஒன்று இருக்கிறது. அதன் அருகில் அலர்ந்து மலர்ந்த கமலங்களால் விளங்கும் பெரிய ஏரி ஒன்று இருக்கிறது. முன்ஜன்மத்தில், நான் எனது வினைப்பயனால் அவ்வோடையில் ஓர் பெண்ணன்னமாக விருந்தேன். நான் ஒரு ராஜஹம்ஸத்திற்கு மனைவியானேன். என்னுடைய கணவனுடன் அந்தப் பெரிய சந்தன மரத்திற்குடியிருந்து வாழ்ந்தேன்.

அங்கு வாழுங்கால் எனக்கு ஆண்பிள்ளைகள் பிறந்தனர். என்குழந்தைகளும் நானும் குடியிருக்கையிற், திடீரென்று அலையொன்று வந்தது. அதுசாதாரணமான அலையல்ல: அது என் பிள்ளைகளைக் கொண்டே போயிற்று. என்பிள்ளைகளை அலை இழுத்துப்போகவே, எனக்குச் சோற்றிலும் தண்ணியிலும் ஆசை யொழிந்தது. கண்ணும் கண்ணீருமாய்ப்புலம்பித் திரிந்தேன். இறுதியில், நான் அக்கடற் கரையில் இருந்த தூயதோர் சிவலிங்கத்தை யடைந்து அதன் எதிரிற் புலம்பிநின்றேன். அப்பொழுது, அந்த ராஜஹம்ஸம், என்கணவன், என்னை யணுகி, 'பெண்ணே! தெளிந் தெழுந்திடுக. என்ன? நீ போன பிள்ளைகளைக் குறித்துப் புலம்புகிறாயே?

நமக்கு இன்னும் குழந்தைகள் பிறப்பார்கள். உயிருடன் பிழைத்து இருந்தால், எல்லாம் கிடைக்கும்' என்று எனக்கு வேதாந்தம் ஓதினான். அவன்மாற்றம் என்னுள்ளே கூறிய வாளியைப்போலத் தைத்தது. அதுகேட்டு, "ஆகா! அப்படியா? ஆடவர்க்கு இரக்கமென்பது இல்லவே இல்லை. பாவிப் புருஷர்க்கு நெஞ்சம் கல்லேதான். பூப்போன்ற குழந்தைகள் போனாலும் துக்கமில்லையே! சீ!சீ! இல்லை; தம்மடியில் விழ்ந்து ஆட்செய்யும் மாதரிடத்தில் தான் கருணை உண்டோ? அதுவும் இல்லையே! இக்கணவனால் எனக்கு ஆகவேண்டியது என்ன? இந்தப்பாவி உடம்பினால் ஆவதும் உண்டோ?' என்று எண்ணி, அங்கு கோயில் கொண்ட அரனைத் தொழுது அவராருருவை ஆர்வத்துடன் என்மார்வத்தில் வைத்து, ஆங்கே என்கணவன் கண்முன்னேயே, எனது உண்மையான சாதி நினைவுக்கு வந்தமையால், நான் ராஜகுமரியாகலாம் என்று என்னுடம்பைக் கடலிற் போட்டொழிந்தேன்.

பிறகு, என்தோழீ! இப்பிறவியில் இப்படியானேன். முன்பிறப்பிற் பாங்கான பதியைத்தேடி மாலையிட்டு நான் வாழ்ந்தது எனக்கு இப்பிறவியிலும் மறக்கவில்லை. அதையெல்லாம் எண்ணியே தான் எனக்கு எந்தவரனிடத்திலும் மனம் கொள்ளவில்லை. எனக்கு வதுவைவேண்டாமென்றே தோன்றுகின்றது. நாம் நினைத்தபடியே யாகுமா? கடவுள் ஒருவர் இருக்கிறார். அவரிஷ்டப்படியே தான் நடக்கும்",

ஐயனே எங்கள் ராஜகுமரி என்பெண்ணுடன்

ரஹஸியத்தில் இப்படியே சொன்னாளாம். இதை யெல்லாம், வீட்டுக்கு வந்தவுடனே, என்பெண் எனக்குச் சொன்னாள். மைந்தா! நீ என்னைக் கேட்ட தற்கு நான் எனக்குத் தெரிந்ததை யெல்லாம் சொன்னேன். எமது மன்னவன்மகள் உனக்கே பெண்டிர் ஆவாள்; அதில் ஐயமே இல்லை. இவள் பிறக்கு முன்னேயே, பரமனுண சிவபிரான் இவள் வித்தியா தரர்களுக் கெல்லாம் அரசாகும் அம்மானுக்கே மனையாளாவாள் என்று அறுதியிட்டிருக்கின்றனர். அப்பெரும் பதவிக்குத்தகுந்த குறிகள் எல்லாம் உனக்கேதான் இருக்கின்றன. இதன் உண்மை உன் நுதிலதம் முதலானவற்றுலேயே புலப்படும். நீயாரோ! உன்னைக் கடவுள் அவளுக்கென்றே எங்கிருந்தோ கொணர்ந்திருக்கின்றனர். என்வீட்டிலேயே இரு: என்னதான் நடக்கிறதோ பார்ப்போம்' என்று இனிதுகூறிக் கோமகனை உண்டி கழிக்க அழைத்துச் சென்றனள் அக்கிழவி. இக் கதையைக்கேட்டு அக்கிழவி அளித்த ஆகாரத்தை யும் உண்டு, நரவாஹனதத்தன் அவ்விரவெல்லாம் அவ்வீட்டிலேயே கழித்தனன். கோமுகனும் தன் நண்புடன் கூடவே இருந்தான்.

## நரவாஹனதத்தன் கற்பூரிகையை மணம் புரிதல்.

மறுநாட்காலையில் கோமுகனுடன் தனியாகக் கலந்து ஆலோசித்தான் கோமகன். பிறகு, ஓர் துறவியின்வேஷம்பூண்டான் வத்ஸராஜனது மைந்தன். இளவரசன் சாமியாராகவே, அவன் அமைச்

சன் கோமுகன், அவனுக்குச் சீஷனுகி, அவன் பின்னே சென்ருன். சாமியார், 'என்னன்னமே! என்னன்னமே!' என்று கூவியழைத்துக்கொண்டே, அம்மாநகரின் வீதிகள் வழியே சென்று, மன்னவன் மாளிகையின் வாசலிலே நின்ருர். தளிரனம் சாமியார் ஒருவர், 'என்னன்னமே! என்னன்னமே!' என்று குரல்விட்டுக் கூவுவதைக் கேட்டு அந்நகரத்திலுள்ள எல்லோரும், பெரியோரும் சிறியவரும் ஆணும் பெண்ணும் பேதையரும் பாலகரும் வாசியற அவரைச் சுற்றித் திரள்திரளாகச் சென்றனர். அரண்மனையின் தோரணவாசலில் நகரத்தவர் எல்லோரும் வியப்புடன் நிற்பதையும் அவர்நடுவே சாமியார் ஒருவர், தலேயும் சடையுமாய், நின்று மணமுருகிக் கூவுவதையும் கண்டனர் கற்பூரிகையின் சேடியர். உடனே, உள்ளே விரைந்தோடிக் கற்பூரிகையைக் கூவியழைத்து, 'அம்மா! நமது தோரணவாசலில் துறவி ஒருவர் நிற்கின்ருர். அவர் வயதோ இளம் வயது. அவர்பின்னல் ஒரே சீஷன்தான் இருக்கின்ருன்: அவரழகுக்கு ஈடுமில்லே சோடுமில்லே. அவர், 'என்னன்னமே! என்னன்னமே!' என்று ஒரு மந்திரம் ஓதுகின்றனர். அம்மந்திரம் மாதரையெல்லாம் மோகிக்கச் செய்கிறது. அம்மா! அவர் அல்லும் பகலும் அம்மந்திரத்தையே ஓதுகின்றனர்.' என்று வியப்பினு லுண்டாகும் பரபரப்புடன் மொழிந்தனர். அக்கோமகள் முன்பிறப்பில் அன்னமாக விருந்தவள்: ஆகையால், சாமியார் என்னன்னமே என்கிருர் எனக்கேட்டு அவளுக்கு ஆசையும் ஆவலும் உண்டாயின. ஆகவே, அவள் தன் சேடி

யரைக்கொண்டு சாமியாரைத் தன்னருகில் அழைப்பித்தனள்.

சாமியார் அவளருகிலே தோன்றினர். அவள் அவரது அழகமைந்த மேனியை நோக்கினள். அவரது உருவம் இனிய அழகுடையது. அவர் பூண்ட வேஷம் அம்மேனிக்கு இசைந்திருந்தது. ஆகையால், அவர், அவள்கண்ணுக்குச் சங்கரனைப் பூசிக்க உருவமெடுத்து வந்த காமனே தானுய்த், தோன்றினர். அவரைக்காணவே, அவளுக்கு வியப்பு மிகுந்தது: அவளது கண்கள் அலர்ந்து மலர்ந்தன. அவரையே நோக்கி நின்று, 'என்ன இது? என் 'என்னன்னமே! என்னன்னமே!' என்று ஓயாது கூவுவது?' என்று தழுதழுத்த குரலுடன் வினவினள். அவள் இப்படி வினவினபிறகும் சாமியார், 'என்னன்னமே! என்னன்னமே!' என்று ஆர்வத்துடன் கூவிக்கொண்டே நின்றனர்.

அது கண்டு, அவரருகில் நின்ற கோமுகன் அவளுக்குப் பின்வருமாறு மறுமொழி கூறினன். 'அம்மா! தேவி! இவர்கதையை நானே சுருக்கமாய்ச் சொல்லுகிறேன்: கேட்கவேணும். இவர் இவரது வினைப்பயனால் முன்பிறப்பில் ஓர் அன்னமாக விருந்தனர். அப்பொழுது இவர் கடலின் அருகிலிருந்த ஒரு பெரிய ஓடையில் வசித்தனர். தனக்கு இசைந்த ஓர் பெண்ணை மணம் புரிந்தனர்: தன் மனையாளுடன் அவ்வோடையின் கரையில் இருந்த ஒரு சந்தனமரத்திற் குடியிருந்தனர். இவர் பிள்ளைகளை அக்கடலிலுண்டான பேரலை ஒன்று கொண்டு போயிற்று. அது ஈசனருளால் வந்ததேதான்.

ஆனால், இவர்மனையாள் தன் பிள்ளைகளை இழந்த விசனத்தினால் அங்கேயே தன்னுயிரை மாய்த்தனள். பிறகு, இவர்க்குத் தன்னுடம்பில் ஆசையொழிந்தது. 'என்ன? பாரைவிட்டு விசும்பிற் பறக்கும் பக்ஷியாய்ப் பிறந்து நான் அடைந்த பயன் என்ன? தாரத்தை இழந்த துக்கம் எந்தப்பிறவியிலும் உள்ளதேதான். நான் உண்மையில் ராஜகுமாரன். இப்புள்ளுருவைச் சட்டென வொழித்து ஓர் வேந்தனுக்கு மைந்தனுவோம்.' என்று எண்ணினார். உடனே, இவ்வுடலை நீத்து நான் ராஜகுமாரனாகப் பிறக்கவேணும்; இவளே எனக்கு அப்பிறவியிலும் மனையாளாக வேணும் என்று எண்ணிச் சங்கரனதுச் சிந்தையைதன்னுள் நாட்டித் துக்கத்தாற் பொசிங்கிய தன்னுடலைக் கடலிற் போட்டனர். அம்மா! தேவீ! பிறகு இவர் கதையைக் கேட்க வேணும். கௌசாம்பி என்று ஒரு அணிநகர் இருக்கின்றது. அவ்வணிநகர்க்கு அரசர் வத்ஸராஜன் என்பவர். இப்பிறவியில் இவர் அவ்வரசர்க்குப் புதல்வர்: இவருக்குப் பெயர் நரவாஹனதத்தன். இப்பிறவியில் இவருக்குத் தன் முன்ஜன்மத்தின் வரலாறெல்லாம் நன்னர் விளங்கும். இம்மட்டோ! 'இவர் வித்தியாதரராஜருக்கெல்லாம் இறைவர் ஆவார்' என்று இவர் பிறக்கையிலேயே ஓர் வாக்கு உண்டாயிற்று. இவர் நாள் ஒருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து இளவரசர் ஆனார். எங்கள் அரசர் மதனகஞ்சுகை என்னும்மாதரசியை இவர்க்கு மணஞ் செய்வித்தார். அம்மாதும் ஓர் அணங்கேதான். அவள் ஏதோ நிமித்தமாக

விண்ணுலகை விட்டு மண்ணில் அவதரித்திருக்கின்றனள். பிறகு, ரத்நப்பிரபை என்று ஓர் மங்கையர்க்கரசி தானுய் வந்து இவரை மணஞ் செய்துகொண்டனள். அவள் ஹேமப்பிரபன் என்னும் வித்தியாதரராஜனது செல்வப்பெண்மணி. என்ன பாக்கியம் இருந்தால், என்ன? என்ன நடந்தால் என்ன? இவர்க்கு ஒன்றிலும் விருப்பமில்லை. முன் பிறவியிலே தன் மனையாளான அவ்வன்னப்பெண்ணையே நினைந்து ஏங்குகின்றனர். நான் இவர்க்குக் குழந்தைப்பருவமுதல் ஆட்ப்பட்டவன். ஆகையால், இவர் இதனையெல்லாம் எனக்குச் சொன்னுர்.

சிலநாட்களுக்கு முன்னே இவர் வேட்டைக்குச் சென்ருர். வேட்டை முடிந்த பிறகு இவரும் நானும் மாத்திரம் அடவியில் அலைந்து திரிந்தோம். அப்பொழுது, ஈசனருளால் ஸித்ததாபஸி ஒருத்தி இவரைக் கண்டனள். அவள், பேசுகையில் இவர் மீது அருள்சுரந்து, 'மைந்தா! மன்மதன் தன் வினைப்பயனுல் முன்னொருகால் அன்னமாய் அவதரித்தான். அன்னவுருவமான அத்தேவன் கடற்கரையில் ஓர் சந்தனமரத்தில் வசித்தான். அத்தருணத்தில் அவனை மாது ஒருத்தி மணஞ் செய்துகொண்டனள். அவள் உண்மையிலே ஓர் தெய்வப்பெண்ணேதான்; விதிவசத்தினுற் சாபம் பூண்டு அன்னமானவள். அவரிருவர்க்கு முண்டான பிள்ளைகளை அலையொன்று கொண்டு போயிற்று. மக்களை யிழந்த வம்மாது துக்கத்தினுலே தன்னுயிரைத் துறந்தனள். மக்களையேயன்றி மனையாளையும் இழந்த அவ்வன்னம் தன்னுயிரை மாய்த்தது.

இறந்த அவ்வன்னம் அரனருளால் இப்பிறவியில் ஓர் கோமகனுயிற்று. மைந்தா! நீயே தான் அக் கோமகன். குழந்தாய்! உனக்கு உன் முன்ஜன்மம் நன்ணர் விளங்கும். அப்பா! உனக்கு முன் மனையாளாக விருந்த அப்பெண்ணன்னம் இப்பொழுது அக்கடற் கரையிலேயே ஓர் மன்னவனுக்கு மகளாக விருக்கின்றனள். அவள் பெயர் கற்பூரிகை: அவள் இருக்கும் அணிநகர்க்குக் கற்பூரஸம்பவம் என்று பெயர். அண்ணலே! விரைவில் அங்கே செல்க, அப்பெண் உன்னைக் காதலிப்பாள்: அவள் உன்னை மணம் புரிவாள்' என்று இனிது கூறி விசும்பில் எழும்பி மறைந்திட்டனள்.

கற்பூரிகையின் வரலாறு இன்னதென்று தெரியவே, என்னிறைவரான இவர் இந்நகரைக் குறித்துப் பிரயாணமானுர். நானும் இவருடன் வந்தேன். அம்மா! உங்கள்மீது இவர்க்குண்டான காதலால் இங்கு விரைந்து வந்தனர். இங்கு வருகையில் இவர் தன்னுயிரையும் ஒரு பொருட்டாக வெண்ணவில்லை. வரும் வழியில் இவர் கடந்த காடுகளுக்கோர் கணக்கில்லை. அம்மா! இவர்பட்ட கஷ்டங்களைத் தான் இவ்வளவானவை இவ்விதமானவை என்று இயம்ப வியலுமோ! இறுதியிற் கடற்கரையிலுள்ள ஓர் தேசத்தை யடைந்தனர். அங்கு ஹேமபுரம் என்று ஓர் அணிநகரம். அந்நகரிலுள்ள தச்சன் ஒருவன் ராஜ்யதரன் என்பவன். அவன், எங்கள் இருவரையும் உபசரித்து, எங்களுக்கு ஓர் யந்திரவிமானம் கொடுத்தனன். அவ்விமானத்தின்மீது ஏறி—'ஓ! அப்பா! அதென்ன் கடல்! அதென்ன் தாண்டுகிறது

எல்லாம் ஸாஹஸமேதான்!'. எப்படியோ இருவரும் இந்நகரை யடைந்தோம். அம்மா! தேவி! இவர் பட்டபாடெல்லாம் இதற்காகவே தான். அம்மா! இங்கு வந்தது முதல். 'என்னன்னமே! என்னன்னமே!' என்று கூவிய வண்ணமாய் வீதி வீதியாகத் தேடித்திரிந்து, உங்கள் சன்னதியை யடைந்தனர் எம்மிறைவர். கள்ளிருளிற் றடுமாறிய மாந்தர்க்கு இரவின் இறைவனான முழுமதியைக் கண்டால் அளவற்ற வாநந்த முண்டாகுமல்லவா? அவ்வண்ணமே உங்கள் திருமுகத்தைக் கண்டவாறே, இவர் பட்ட அரும் துயரெல்லாம் தொலைந்து இவருக்கு ஓர் ஆராதவாநந்தம் உண்டாயிற்று.

அம்மா! அகத்திற்கு வந்த அதிதியைபூக்கள் கொண்டு அர்ச்சிப்பது இயல்பே. தமது அகத்திற்கு அழையாது வந்த இவ்வதிதியைத் தாமும் தமது நீலோற்பலங்கள் போன்ற கண்ணேக்குகளால் அர்ச்சித்தல் வேண்டும்.'

கோமுகனது இனிதமைந்த இம்மாற்றங் கேட்டுத் தனது கதைக்கு அவன் இயம்பிய வரலாறு இசைந்ததே என்று அம்மாது கண்டுகொண்டனள். ஆகையால், அவன் எடுத்துரைத்த வரலாறு உண்மை என்று நம்பினள். 'அந்தோ! இப்பெருமானுக்கு என்பாலுள்ள அன்பை என்னே நான் சொல்வது! இவ்வன்பெல்லாம் வழலுக்கு இறைத்த நீரே யாகும் நான் எனக்குண்டான வெருப்பை விடாது இருந்தால்.' என்று ஆலோசித்து மனமுருகி அக்கோமகள் இளவரசன்மீது பேரன்பு பூண்டனள். அன்பு சுரந்து பெருகவே, 'ஐயனே! நான்

தான் அப்பெண்ணன்னம். எனது பாக்கியமே பாக்கியம்! முன்பிறவியிலேயே மாத்திரமல்லாது இப்பிறவியிலும் கூட என் பொருட்டன்றோ என்னிறைவர் வருந்துவது? என் இறைவனே! அன்பினாலும் ஆர்வத்தினாலும் அடியேன் நுமக்கு ஆட்பட்டேன். அடியாளை உகந்தருள வேணும்.' என்று நெஞ்சுருகிக் கண்பனிப்ப நின்று இறைஞ்சினள். பிறகு, நரவாஹனதத்தனுக்கு மஞ்சனமுதலானவை செய்வித்து, அம்மாதரசி அவனைப் போற்றினள். பின்னர், தன் சேடியரைக் கொண்டு நடந்தவரலாற்றைத் தன் தந்தைக்குத் தெரிவித்தனள். கற்பூரகனும், நடந்தது இன்னதென்று கண்டுணர்ந்து, தன்பெண்ணைக் காணக் கன்னிமாடத்திற்குச் சென்றான்

இல்வுலகில் கன்னிகைக்குத் தகுந்த வரன் இல்லாமல், கஷ்டங்கள் படும் தந்தையர் உளர். கற்பூரகன் அவ்விதமாய் வருந்தாது தன் பெண்ணிற்கு உண்டான அறியதோர் வெருப்பினால், மிகத் துன்பமடைந்தனன். அவளுக்கு மணத்தில் ஆசையின்மையினால் வந்தவரனெல்லோரும் சென்றனர். ஆகையால், அவனுக்குத் தன் மகள் மணத்தில் ஆசைகொண்டாற்போதும் என்றே ஏங்கினன். அவளுக்கு ஆடவன்மேல் அன்பு உண்டாகி அவ்வெருப்பு நீங்கியது கண்டு தான் பட்ட துயரத்தை அவன் மறந்தேயொழிந்தனன். கன்னிமாடத்தினுட் சென்று நரவாஹனதத்தனை நோக்கினன். அவனையும் நோக்கி, அவனது தளிரிளம் மேனியையும் அவனது இன்னுருவில்

இனிதமைந்த வித்தியாதர இலச்சணங்களையும் கண்டு, 'தாமதமானாலும் தகுந்தவனே தான் வந்து அடைந்தான் என்பெண்மணியை,' என்று எண்ணிக் கவலை இழந்தான் கற்பூரகன்: அம்மைந்தன் மருமகனானுனே என்று எண்ணித்தான் பெரும் பேறு அடைந்தான் எனத்தெளிந்தான். நெடுநாளாகக் காத்திருந்ததெல்லாம் இந்நன்மைக்காகவே தான் என்று ஆறுதலடைந்தான். பிறகு, நரவாஹனதத்தனுக்குத் தன் புதல்வியை முறைப்படி யளித்தனன். மணாளன் வன்னியை வலம் வருகையில் ஒவ்வொரு தடவையிலும் அவனுக்கு பொன்கற்பூரம் இவற்றின் மூன்று கோடிகளையும் காணிக்கையாக வளித்தனன். இவற்றின் குவியற்கள் மணமண்டபத்தின் மத்தியில் விளங்கின. இங்ஙனம் தேசுமிகுந்த இவற்றைப், பார்வதியின் வதுவைக்கு வந்திருந்த மேருவும் கைலையுந்தான் இவள் வதுவைக்கும் வந்தன வென்று எண்ணலாம். இம்மட்டோ! ஆர்வம் மிகுந்து அவ்வரசன் ஆடைகளும் அணிகளும் பூண்ட சேடிகளின் முப்பது நூறையும் அளித்தனன். இவ்வண்ணம் நரவாஹனதத்தனுக்கும் கற்பூரிகைக்கும் வதுவை நடந்தது.

பிறகு, மணாளனும் அவன்மாதும் சிலகாலம் உல்லாஸமாகவிருந்தனர். தரையில் முளைத்தெழுந்த ஓர் வஞ்சி, தளிரிளம் பூங்கொடியாகித், தழுவிக் கொள்ளத் தகுந்த மரமில்லாது தள்ளாடுகிறது. அக்கொடிக்குத் தேமாமரம் ஒன்று அகப்படவே, அதனை அகலாது அணைந்து தழுவுகின்றது. இங்ஙனமானால் அக்கொடி, குலுங்கப் பூத்துக் கும்

மாளமாக விருக்கும். வஸந்தகாலமும் வந்துதேமா மரமும் தேனொழுகப்பூத்து அவ்வினியகொடியும் அதனை அணைந்து நின்றால், அவ்விணையின் அழகைக் கண்டு அனைவர்க்கும் ஆநந்தமுண்டாகும். ஆங்கே, கற்பூரஸம்பவத்தில் அனைவர்க்கும், பூத்துத் தழைத்த தேமாமரமன்ன அவ்வரனும் தளிரிளம் வஞ்சியன்ன அவ்வதுவும் இணைபிரியாது இனிதிருக்கக் கண்டு, ஆநந்த மடைந்தனர்.

அங்கொருநாள் அப்பெரும்பேறு பெற்ற நரவாஹனதத்தன், ‘பெண்ணே! வா. நாம் இருவரும் நமது நகரான கௌசாம்பிக்குப் போவோம்’ என்று தன்காதலியான கற்பூரிகைக்குச் சொன்னான். இம்மொழிகேட்டுக் கற்பூரிகையும், ‘அப்படியானால், தங்களது விமானமேறி விசும்பிற் செல்லலாம். ஆனால், அதுமிகச் சிறியது, விரைவிற் செல்லாது. அதனைக் காட்டிலும் பெரியது ஒன்றைத் தருவிக்கிறேன். எங்கள் ஊரிற் பிராணதரன் என்று தச்சன் ஒருவன் இருக்கின்றான். அவன் விசும்பிற் செல்லும் விமானங்கள் செய்வதில் மிகத்தேர்ந்தவன்: அவன் எங்கேயோ தேசாந்தரத்திலிருந்து வந்தவன். அவனைக் கொண்டு சீக்கிரத்திலேயே பெரிய விமானம் ஒன்று செய்விக்கின்றேன்’ என்று இயம்பித் தன்வாசற்காவலனைக் கூவியழைத்து, ‘நீ விரைவிற் சென்று யந்திரங்கள் செய்யும் பிராணதரன் என்னும் தச்சனைக் கண்டு, நாங்கள் ஏறிச் செல்லத்தகுந்த பெரிய விமானம் ஒன்று செய்யும்படி திட்டம் செய்’ என்று கட்டளையிட்டனள். பிறகு தன்சேடிகளில் ஒருத்தியைத் தன் தந்தையிடம் அனுப்பித், தன் மணாளன்

தம் நகர்க்குச் செல்ல விருப்பமுற்றனர் என்பதை அறிவித்தனள். இங்ஙனம் அரசன் செய்தி கேட்டு அங்கு வருமுன்னே, நரவாஹனதத்தன், 'ராஜ்ய தரன் சொன்னானே, 'என் அண்ணன் அரசனிடத்தில் அஞ்சிக் காஞ்சியிலிருந்து ஓடினான்.' என்று, அவன் பெயர் பிராணதரன்தான். இவ்வூரிலிருக்கும் தச்சன் அவனே தான்.' என்று தன்னுள்ளே எண்ணினான். இவை யெல்லாம் இமைப்பொழுதிலேயே நிகழ்ந்தன: அரசனும் அதற்குள்ளே அங்கு வந்தான். அரசன் பின்னாலேயே வாசற்காவலனும் பிராணதரன் என்னும் தச்சனும் வந்து சேர்ந்தனர். தச்சன் அரசனருகில் வந்து, 'இறைவனே என்னிடத்தில் விமானம் ஒன்று இருக்கிறது: அது ஆயிரம் பெயர்களை ஏற்றிக் கொண்டு எளிதாய்ச் செல்லக் கூடியது.' என்று விண்ணப்பித்தனன். அரசன், 'அப்படியானாற் சரி.' என்று சொல்லி, அவனை விடை கொடுத்து அனுப்புமுன்னே, நரவாஹனதத்தன் அவனையழைத்து, 'என்ன? அப்பா! நீ ராஜ்யதரன் என்பவனது அண்ணனா? அநேக விதமான அரும்பெரும் யந்திரங்கள் செய்யும் தேற்சியுடையவன் நீதானா?" என்று அன்புடன் வினவினன். 'அண்ணலே! அண்ணன் தான் அவனுக்கு அடியேன். நுமக்கு இச்செய்தி தெரிந்தது எப்படி?" என்று பிராணதரன் கோமகனடியில் வீழ்ந்து தண்டனிட்டு மறுமொழி கூறினன். பிறகு, இளவரசன், தான் ராஜ்யதரனைக் கண்டவாறும் அவன் தனக்கு இயம்பிய வரலாற்றையும், வெளியிட்டனன்.

உடனே இளவரசன் தன் தம்பிக்கு நண்பன் எனக்கண்டு ஆர்வம் மிகுந்த அத்தச்சன் தனது பெரிய விமானத்தைக் கொணர்ந்தனன். பின்னர், தன் மாமன் கற்பூரகனது விடை பெற்றான் மருகன். மாமனும் அத்தச்சனும் அவனுக்கு பல மங்கலங்கள் செய்தனர். மணமகளும் மருமகனும் அந்தணர்க்கு ஆடைகளும் அணிகளுமாய் அரும் கொடைகள் அளித்தனர். பிறகு, கற்பூரிகையின் சேடியரையும் அரசன் விடுத்த வரிசைகளையும் விமானத்தின்மீது ஏற்றி ஆங்கே கற்பூரிகையையும் இனிதமரச் செய்து, அரசனுணையைப் பெற்ற பிராணதரனும், நரவாஹனதத்தனும் கோமுகனும் அவ்வரும் பெரும் விமானமேறிப் பிரயாணமாயினர். ஏறிச் செல்லுகையிற் பிராணதரனை நோக்கி, 'முதலிற் கிழக்கு சமுத்திரத்தின் கரைக்குச் சென்று ராஜ்யதரனைக் காண்போம். பிறகு, எங்கள் அரண்மனைக்குப் போவோம்' என்றான் இளவரசன். அவ்விமானம் ஆகாயத்திற் செல்லுகையில், அதற்குத் தடையொன்றும் இல்லாமையினால், அது அதிவேகமாய்ச் சென்று சிறிது நேரத்திலேயே கடலின் கரையை யடைந்தது. தன்னெண்ணம் கைகூடியதனால் உள்ளம் பூரித்த இளவரசன் மிக்க வின்பம் எய்தினன். இளவரசன் ஹேமபுரத்தை அடைந்தது ஒரு பெரும் விழாவாகவேதான் இருந்தது. இளவரசனைக் கண்டவாறே, ராஜ்யதரன் அவனைக் கும்பிட்டுக் குனிந்து நின்றான். தனக்கு உண்மையிலேயே பிராணதரனான தன்னண்ணனைக் கண்டு ராஜ்யதரன் ஆராக்களி கூர்ந்தனன். அவனுக்குப்பே

றெல்லாம் இருந்தும் பெண்டிர் இல்லை என்று முன்னம் அவன் சொல்லியதைச் சிந்தையில் வைத்திருந்த இளவரசன் அவனுக்குத் தன்னிடமிருந்த பணிப்பெண்டிரிற் சிலரை அளித்தனன். பிறகு, எப்படியோ ராஜ்யதரனைத் தன்னண்ணனை விடும்படி செய்து, தன் விமானத்தின்மீது ஏறி விரைவிற் கௌசாம்பி நகரஞ் சேர்ந்தான்.

கௌசாம்பி நகரத்தவர் திடீரென்று ஆகாயத்தில் அரும் காக்ஷியைக் கண்டனர்: சிறிது நேரத்திற்குப் பிறகு அது பெரும் விமானமென்றே தெளிந்தனர். ஓகோ! ஈதென்ன ஆச்சரியம்! என்று அதனைக்காண ஆவலுடன் ஓடிவந்து அண்ணார்ந்து நின்றனர். இறுதியில், விமானம் கீழே இறங்கவும் தம்மிளவரசனும் அவன் மனையாளும் பணியாளரும் பணிப்பெண்டிரும் வரிசைகளுடன் தரையில் இறங்கிச் செல்வதைக் கண்டு இறும்பூதெய்தி நின்றனர். நகரத்தவர் எல்லோரும் இளவரசன் வந்தான் எனக் கும்மாளம்போடுவதைக் கண்டு வத்ஸராஜன், தன் புதல்வனைக் காணச்சென்றான். அவனருகில் அவனது மஹிஷி வாஸவதத்தை, தன்னருமைப் புதல்வன் வந்தான் என்று ஆவலுடன், நடந்து சென்றனள். அரசி பத்மாவதியும் அவளருகிற் சென்றனள். அரசனது மருமகளிர் இருவரும் அவர்பின்னே சென்றனர். அவர்சேடியரும் அமைச்சரும் இறுதியிற் சென்றனர். அரசனும் அவனது உற்றாரும் அமைச்சரும் இங்ஙனம் கோலமாய்ச் சென்று நரவாஹனதத்தனை எதிர்கொண்டனர். தன் தந்தையைக் கண்ட

வாறே, தரையில் விழ்ந்து, தண்டனிட்டனன் இளவரசன்: அவன் மனையாளும் மாமனடிதொழுதனள். அரசன் தன் மைந்தன் ஏறி வந்த விமானத்தை நோக்கினான். அதனை நோக்கியவாறே, 'ஆமாம்', இவ்விமானம் இவனுக்குவாஹநம் ஆயிற்றே'! இவன் இனி விசும்பிற் செல்லும் வித்தியாதரர்க்கு இறைவன் ஆவான்.' என்றே அரசனுக்குத் தோற்றியது. இளவரசனது தாய் இவ்வளவு நாளாய் எப்படியோ தன் துக்கத்தை வெளிவிடாது இருந்தனள். இப்பொழுது திடீரென்று அவன் வரவே, அவள் கண்களில் நீர் தாரையாய்ப் பெருகியது. அவள் கண்ணும் கண்ணீருமாய்த் தன் மைந்தனைக் கட்டித் தழுவிக் கொண்டனள். நரவாஹனதத்தனது சிற்றவையான பத்மாவதியும் அவனைத் தன் மார்வத்தில் அணைந்து கொண்டனள். ரத்நப்பிரபையும் மதனகஞ்சுகையும் தம் கணவன்பாற் கொண்ட அன்பினாற் பொறுமை என்பதை அறிந்திலர். அவர் இருவரும் தம் கணவனது காலையும் அவனிதயத்தையும் ஒருவாறே கட்டியாய் அணைந்து தழுவினர். யௌகந்தராயணன் முதலான தன் தந்தையின் அமைச்சரையும் மருபூதி முதலான தன்னமைச்சரையும், அவர் தன்னைத் தண்டனிட்டு எழுந்த பிறகு, பரிசுகள் ஈந்து இளவரசன் இன்பமுறச்செய்தான்! அணிகள் எல்லாம் பூண்டு ஆர்கடலின் நடுவே நின்று வந்த அமுதத்திற்கு உடன் பிறந்தவள்போன்ற கற்பூரிகை அரம்பயர்போன்ற தன் சேடியர் நடுவே நிற்பதைக்கண்டு, அனைவரும் அவளை லக்ஷ்மியென்றே எண்ணினர்: அவளைப் புகழ்ந்து போற்றினர்.

அரசன் தன்னடியில் விழ்ந்து தண்டனிட்ட தன் மருமகளைக் கொண்டாடினன். பிறகு கற்பூரக னது பணியாளன் ஒருத்தன் அவ்வரும் விமா னத்தையும் தன்னரசன் வரிசையாக விடுத்த கோடிக்கணக்கான ஆடைகளையும் அணிகளையும் பொன்கற்பூரம் இவற்றின் குவியல்களையும் அரசன டியில் வைத்துத் தரையில் விழ்ந்து தண்டனிட்டு நின்றான். அரசன், தன் புதல்வனுக்கும் பெண்ணை யும் அளித்து இவ்வரும் பெரும் வரிசைகளும் விடுத்த அம்மன்னவனது மாட்சிமைக்கும் தன் பெருமைக்கும் ஏற்ப, அவனுக்குப் பரிசுகள் அளித் தனன். இறுதியில், நரவாஹனதத்தன், எந்தாய்! இவன் பிராணதரன் என்பவன்: எனக்கு இவ்விமா னம் அளித்துப் பேருதவி புரிந்தவன். என்று பிராணதரனைத் தன் தந்தைக்குத் தெரிவித்தனன். வத்ஸராஜன் அவனை நன்கு மதித்து அவனுக்கு அரும் பரிசுகள் அளித்தனன். இவரெல்லோரும் பரிசுகள்பெற்று அரசன் சபையிலிருந்து செல்லவே, கோமுகனும் இளவரசனும் அரசனில்லத்தோரும் மாத்திரம் அங்கிருந்தனர். அரசன், அவ்விருவரை யும் நோக்கி, 'இந்த ராஜகுமரியைக்கைக் கொண்டது எப்படி? நீர் இங்கு வந்தது எப்படி?' என்று வின வினன். அரசியரும் மருமகளிரும் இருக்கையில் அர சன் இவ்வண்ணம் வினவவே, கோமுகன், இருவரும் பறவைகள் வேட்டை யாடினது முதற் பிராணதர னைக் கண்டு விமானத்தையடைந்து திரும்பி வந்தது வரையில், விவரமாக வியம்பினன்.

'வேட்டை எங்கே? ஸித்ததாபஸி ஒருத்தி

தோன்றினளா? என்ன ஆச்சரியம்! கடற்கரையா? அங்கு யந்திரங்கள் செய்யும் ராஜ்யதரனென்று ஒரு தச்சனு! அவன் ஈந்தவிமானம் ஏறிக் கடலைக் கடந்திரா! அச்சோ! ஈதென்ன! கடலாவது கடக்கவாவது! அந்த விமானங்கள் செய்யும் மற்றொரு தச்சனைக் காணுவதா! இதையெல்லாம் நாமா செய்வது? இல்லை. இப்பெரும் பயனை எல்லாம் இனி இவனுக்கு உண்டாகும் பதவிக்கு ஏற்ப விதியன்றோ விளைவிக்கின்றது! என்று அங்குள்ள அனைவரும் வியப்பினால் மெய்ம்மறந்து இயம்பினர். பொறுமை என்பதே இல்லாத கற்பிற்சிறந்த பெண்மணியான ரத்நப்பிரபையை, 'இம்மங்கையின் விச்சையால் அன்றோ இவள்கணவன் நெடுவழியே செல்லுங்காற் சுகமடைந்தது?' என்று எண்ணிப் புகழ்ந்து போற்றினர். பிறகு, விசும்பில் வந்த விடாயெல்லாம் தீர்த்து நரவாஹனதத்தன் தன்பெற்றோரையும் மனைவியரையும் அழைத்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான்.

அரண்மனைக்குச் சென்று தனது பெருங்கோசத்திலுள்ள பொருள்களைப் பிராணதரனுக்கும் தன் மாமனது பணியாளனுக்கும் ஈந்து அவர் இருவரையும் ஆநந்தமுறச் செய்தான். பிறகு, அவர் இருவரும் உண்டனர்: இளவரசனது சன்னதியை யடைந்தனர். அப்பொழுது, பிராணதரன், 'இறைவனே! கற்பூரபுரத்தரசர் எங்களை விரைவிற் றிரும்பிவரும்படி நியமித்தனர். நாங்கள் சென்றால் அவர்க்குத் தம் புத்திரியின் செய்தி தெரியும். இதற்காகவே அவர் அப்படி ஆணையிட்டது. நாங்கள் விரைவிற் செல்ல

வேணும். பிரபுவே! கற்பூரிகையின் கைப்பட அவள் தந்தைக்குச் சீட்டு ஒன்று எழுதிவித்து, அதனை என்கையிற் கொடுக்கவேணும். எங்கள் அரசர்க்குத் தன் பெண்ணென்றாற் கண்ணேதான். இப்பொழுது அவரிதயம் பதைக்கும். இச்சீட்டைக் கண்டாலல்லது அவர் துய்யரம் நீங்காது. விமானத்தில் எறிச் சென்றாற் கீழே விழுவோமென்ற பயம் அவர்க்கு ஒருபொழுதும் இல்லை. அவர்க்குத் தன் பெண்ணை விட்டிருக்க முடியாது. அதிசினேஹம் பாபத்தை சங்கிக்கும். இதுவேதான் அவர் படும் துயரத்திற்குக் காரணம். அச்சீட்டுடன் என்னையும் இப்பிரதீஹாரியையும் விடைதந்து அனுப்புக. நாங்கள் இவ்விமானமேறிச செல்கின்றோம்.

ஆண்டவனே ! அடியேன் என் குடும்பத்தைக் கூட்டிக்கொண்டு விரைவில் மீண்டு இங்கே வந்து சேருகிறேன். என்னிளவரசே! என்னிறையே! நுமது தேனூரும் இத்திருவடித்தாமரையை விட்டகன்று நான் தரித்திருக்கவியலேன்.' என்று அடியில் வீழ்ந்து தண்டனிட்டனன். இளவரசன், அவன் சொல்வது உறுதியே எனக்கண்டு தன்காதலியை அச்சீட்டை எழுதும்படி சொன்னான்.

'எந்தாய்,

என்னைக்குறித்து எவ்வளவும் சிந்தை வேண்டாம். நல்ல நாயகனது இல்லத்தில் நான் இனிது வாழ்கின்றேன். பெருங்கடல்நடுவே அவதரித்து உத்தமமான புருஷனை (புருஷோத்தமனை) த் தேடியடைந்த தாமரைமகளைக் குறித்து விசனப்படு

வாரும் உண்டோ! எந்தாய்! என்னை எப்பொழுதும் மறவாது இருக்கவேணும். கற்பூரிகை.'

என்று ஒருசீட்டு வரைந்து பிராணதரன் கையிற்றானே கொடுத்தனள் கற்பூரிகை. பிறகு, வத்ஸராஜனது புதல்வன் தச்சன் பிராணதரனையும் பிரதீஹாரியையும் விடை கொடுத்து அனுப்பினான். அவர் இருவரும், அந்நகரத்தவர் எல்லோரும் அண்ணார்ந்து நிற்க, விசும்பிற் செல்லும் அவ்விமான மேறிச் சென்றனர். சிறிது நேரத்திலேயே கற்பூரஸம்பவத்திற்குச் சென்று அச்சீட்டைத் தம்மரசன் கற்பூரகனிடம் அளித்தனர். அரசன் அதைக்கண்டு ஆநந்தத்திற்கு ஆளாயினன். சில நாட்கள் கழிந்தபிறகு, பிராணதரன், அரசனானை யைப் பெற்றுப் பிரயாணமாகித் தன் தம்பி ராஜ்யதரனிடம் வந்து இனிதாக விருந்து, இறுதியில் நரவாஹனதத்தனது சன்னதியை யடைந்தான். இளவரசன், தனக்குப் பேருதவிபுரிந்த நண்பன் வந்தது கண்டு மகிழ்ச்சியடைந்து, அவனுக்குத் தன் மாளிகையின் அருகிலேயே சிறந்த மாளிகை ஒன்று ஏற்படுத்தினன்: அவனுக்குச் சிறந்த சம்பளமும் போகங்களும் ஈந்தனன்.

ஒவ்வொரு நாளும் இளவரசன்பொருட்டு அவன் விதம்விதமான விமானங்கள் செய்வான். அவற்றின் மீதேறி இளவரசன் தன் பெண்டிருடன் விசும்பிற் சென்று செழித்தோங்கிய இப்புவனியின் அழகையும் சுடரொளிபரந்த விசும்பின் விந்தையையும் கண்டு ஆநந்தம் எய்தினது மின்றி வித்தியாதரர்க்குரிய விமானப் பயிற்சியும் அடைந்தனன்.

புவனியெல்லாம் புகழ்பெற்ற வத்ஸராஜனையும் வாஸவதத்தையையும் தனது வீரத்தினாலும் அற்புதமான ஸாஹஸத்தினாலும் நல்லொழுக்கத்தினாலும் ஆநந்தமுறச்செய்து நரவாஹனதத்தன் நற்புதல்வன் ஆனான். தனது நல்லொழுக்கத்தினாலும் வாய்மையினாலும் வணக்கத்தினாலும் தனது உற்றாரையும் நண்பரையும் அமைச்சரையும் பணியாளரையும் ஊராரையும் இன்பமுறச் செய்து தன்னையே அவர் நண்ணுமாறு செய்தனன். ரத்நப்பிரபை மதநகஞ்சுகை கற்பூரிகை என்னும் தனது மனைவியர் மூவரையும் தனது இயற்கையான இனிமையால் இன்பமுறச் செய்து தானும் பேரின்ப மெய்தினன். கௌசாம்பியில் எல்லோரும் தம்மிளவரசனையும் அவன் பெண்டிரையும் அவர் சரிதையையும் கண்டு மகிழ்ந்து கழிந்தது காலமெனக் கண்டிலர்: எப்பொழுதும் ஆராதவின்பமெய்தினர்.

Commercial Press Madras, S. E.

# இங்கிலீஷ் புஸ்தகம்.

ஸ்ரீ பாகவதம் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு

12 ஸஞ்சிகைகளில் முடிவுபெரும். 3 ஸஞ்சிகைகள் இப்போதயார்—ஸஞ்சிகை 1-க்கு தபால் வி. பி. சார்ஜ் உள்பட கிரயம் ரூ. 1—8—0

மத்வ விலாஸ புக்டிப்போவில் பிரசுரிக்கப்பட்ட தமிழ் புஸ்தகங்கள்;

இராமசரிதமானஸம் என்னும் துளஸீதாஸ் ராமாயணம். ஹிந்தி பாஷையிலிருந்து ஸ்ரீமான் N. ஸ்ரீனிவாஸாசாரியார் B.A., L.T,. அவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

பாலகாண்டம் வால்யூம் 1 கிரயம் ரூ. 3—4—0

இக்கிரந்தத்தின் மகிமை வட இந்தியாவிலிருக்கப்பட்ட ஹிந்துக்களாலும் மேற்கத்தியராலும் விசேஷமாக புகழப்படுகின்றது.

ரத்நப்பிரபை என்னும் ஓர் நாவல் கதை.

ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸாசாரியார்-புராதன ஸம்ஸ்கிருத கிரந்தங்களிலிருந்து தமிழில் எழுதியது.

கிரயம் ரூ. 0-14—0.

---

ச்யவனோபாக்யானம். கிரயம் ரூ. 0—8—0.

இது அநேக புராணங்களிலிருந்து ஆராய்ந்து நீதி தர்மம் ஆசாரம் இவைகளை போதிக்கும் கதைகள் பாலர் பாலிகைகள் சிரியோர் பெரியோர் எல்லோரும் படித்தறிய சுலப நடையில் ஸ்ரீமான். C. R. ஸ்ரீனிவாஸய்யங்கார் B. A. அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

தபால் வி. பி. சார்ஜ் வகைரு பிரத்தியேகம்.

பாரிஜாதஹ ணம், சித்ரகேது- த்ருவசரித்ரம், பீஷ்மசரித்ரம்-இவைகள் அச்சிலிருக்கின்றன-இவ்விதமான கதைகளும் நாவல்களும் பல தயாருய்க் கொண்டிருக்கின்றன.

மேல்கண்ட புராண கதைகள்-நாவல்கள் தெலுங்கு பாஷையிலும் அச்சிடப்படுகின்றன:—

வேண்டிய புஸ்தகங்களுக்கும் இன்னும் மற்ற விபரங்களுக்கும் அடியில் கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

விலாஸம்:—

Pandit. T. R. KRISHNACHARYA,
Proprietor,
Madhva Vilas Book Depôt,
*31, Car St. Triplicane, Madras.*

பண்டிட் டி. ஆர். கிருஷ்ணசாரியார்,
மத்வ விலாஸ புக்டிப்போ
31, கெ. தேர் வீதி,
திருவல்லிக்கேணி, மதருஸ்.

PRINTED AT THE COMMERCIAL PRESS, MADRAS, S.E.